KZ:4:6
N50/
101492

தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—11

# சரபேந்திரர் வைத்திய முறைகள்

## மாடுகள், குதிரைகள், பறவைகள்.

## (லக்ஷணங்களும் வைத்தியமும்)

---

பதிப்பாசிரியர்

ஸ்ரீ A. கிருஷ்ணசாமி மஹாடிக் ராவ்சாஹேப் பி. ஏ.

அரண்மனை, தஞ்சாவூர்.

---

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாக கமிட்டியினருக்காக
கௌரவ காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

---

பதிப்பகம்

தொன் போஸ்கோ அச்சகம், தஞ்சை.

1950

விலை 2-0-0

TAMIL
101492
KZ:4:6
N50

# Preface

Among the many valuable manuscripts in the Saraswathi Mahal Library, Tanjore, dealing with various subjects are those relating to Veterinary Science. We have manuscripts on horses, elephants, cattle, birds and fowls, each a mine of information of practical value. The work published here is based on two Tamil manuscripts, one about cattle and the other about horses, supplemented by information culled from various other manuscripts on the same subject in Sanskrit and Marathi languages.

Breeding of cattle and horses, their characteristics and quality as indicated by bodily marks and treatment for their diseases are among the subjects dealt with in this work.

This work also contains recipes for the treatment of fowls.

Sri A. Krishnaswami Mahadik, the able Editor of this work, has been doing research in this section of the Library for a long time. His industry and keen interest in the subject have assembled together valuable pieces of information from various sources both from the Library and outside. Our thanks are due to him for the valuable work he has produced. We have no doubt that this book will be found very useful.

Tanjore,
24th Sep. 1950.

**S. GOPALAN.**
*Honorary Secretary,*
*Saraswathi Mahal Committee.*

# முன்னுரை

இந்த நூலில் மாடுகள், குதிரைகள் இவைகளின் லக்ஷணங்களும், வைத்தியமும், கோழிகளின் நோய்களுக்கான வைத்தியமும் அடங்கியிருக்கின்றன. சரஸ்வதி மஹாலில் இதைப்பற்றி உள்ள நூல்களைக் கொண்டும், வேறு பக்கத்தில் வைத்தியர்களிடம் கிடைத்த முறைகளைக் கொண்டும் இந்த நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

நமது புராதன வைத்திய நூல்களில் மிருக வைத்தியமும் பக்ஷிகளின் வைத்தியமும் அடங்கிய நூல்கள் பல இருக்கின்றன. 'ஸம்ஸ்க்ருதத்தில்' அசுவ சாஸ்திரம் 'சாலிஹோத்திரர்', 'வைசம்பாயனர்', 'நகுலர்', 'கணர்' முதலியவர்களாலும் கஜசாஸ்திரம், 'பாலகாப்பியர்' என்பவராலும் பசு சாஸ்திரம் கௌதம மகரிஷியாலும், ஸஹதேவராலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் அசுவசாஸ்திரம், கஜ சாஸ்திரம் இரண்டிலும் உள்ள நூல்களெல்லாம் இப்போது சரஸ்வதி மஹாலில் காப்பாற்றப் பட்டிருக்கின்றன. 'பசு சாஸ்திரத்தில் இப்போது 'ஸஹதேவ பசு சாஸ்திரம் மட்டில் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டு நமக்கு கிடைக்கிறது. கௌதம மஹரிஷியால் எழுதப்பட்ட விரிவான நூல் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் மாட்டு வாகடம்' என்ற பெயருடைய பல மாட்டு வைத்திய நூல்கள் தமிழில் அச்சிலும், ஏட்டுச் சுவடிகளிலும் தமிழ்நாட்டில் இருந்து வருகின்றன. எனினும் மாட்டு வைத்திய முறைகள் பெரும்பாலும் வைத்தியர்களின் குடும்பங்களில் குடும்ப இரகசியமாகவே காப்பாற்றப்பட்டு வருகின்றன. அம்முறைகளை யாவரும் அறிந்து பயனடைய அந்த வைத்தியர்கள் சம்மதிக்கவில்லை. இப்படியே இரகசியமாக இருந்து பல முறைகள் மறந்து போய்விட்டன. பாக்கியுள்ளவைகளையாவது தேடி அதற்காக வேண்டிய பொருட் செலவைப் பெரிதாக நினைக்காமல் பலரும் அறியும்படி பதிப்பிக்க வேண்டியது அவசியம்,

சரஸ்வதி மஹாலில் மாட்டு வைத்தியத்தைப் பற்றிய தமிழ்ச்சுவடி ஒன்று காப்பாற்றப்பட்டிருக்கிறது. வேறு சில தமிழ் வைத்தியச் சுவடிகளிலும் மாட்டு வைத்திய முறைக் குறிப்புகள் காணப்பட்டன. இவைகளைக்கொண்டும் தஞ்சை அரண்மனையில் நாளது வரையில் கையாளப்பட்டு வரும் முறைகளைக் கொண்டும் மாட்டின் லக்ஷணங்களும், வைத்தியமும் இந்த நூலில் திரட்டப்பட்டிருக்கின்றன.

குதிரைகளின் லக்ஷணங்களையும், வைத்தியத்தையும் பற்றி ஸமஸ்கிருதத்திலும், தமிழிலும், மஹாராஷ்டிர பாஷையிலும் எழுதப்பட்டிருக்கும் நூல்களுக்குக் குறைவில்லை. அவைகளில் அடங்கியிருக்கும் முறைகள் ஆயிரக் கணக்காக இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைமட்டும் இந்த நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கோழிகளின் நோய்களுக்கான மருந்து முறைகளை இந்நூற் பதிப்பாசிரியர் சரஸ்வதி மஹாலில் மஹாராஷ்டிர பாஷையிலுள்ள 'பக்ஷி லக்ஷண சிகிச்சா சாஸ்திரத்திலிருந்தும், வேறு தஞ்சை அரண்மனை முதலிய பல இடங்களிலிருந்தும் தேடிச் சேர்த்திருக்கிறார்.

இவைகளைத் திரட்டிச் சேர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. இந்நூற் பதிப்பாசிரியராகிய ராஜஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி மாஹாடிக் ராவ்சாயேப், தஞ்சை ராஜ குடும்பத்தாரைச் சேர்ந்தவர், பரம்பரையாக வைத்தியத்தில் ஈடுபட்டவர். அவர் இத்துறையில் பல வருஷங்களாகச் செய்த ஆராய்ச்சியின் பயனாக இந்நூலைத் திரட்டியுள்ளார். அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நூல் நமது நாட்டில் பலருக்கும் பயன் படுமென்று நம்புகிறோம். இதில் கண்ட முறைகளை அனுபவத்திற் சிறந்த வைத்தியர்கள் பரிசோதித்து அதன் பலா பலனைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சரஸ்வதி மஹால் } S. கோபாலன்
தஞ்சாவூர். }
21-9-50 } கௌரவ காரியதரிசி.

# மாடுகள், குதிரைகள், பறவைகள் லக்ஷணங்களும் வைத்தியமும்

# முகவுரை

எந்நாட்டினும் நன்றெனப் பன்னாட்டினர் போற்றிய பாரதப் பொன்னாட்டின் தென்பகுதியையாண்ட எண்ணறும் மன்னருள் முன்னவராய்த் திகழ்ந்த வேந்தர் மூவர் ஆவர். சேரனும், சோழனும், பாண்டியனுமாகிய அம் மன்னர் மூவரின் ஆளுகைத்திறனுக்குச் சான்றாய் 'சேரநாடு வேழமுடைத்து' 'சோழவளநாடு சோறுடைத்து' 'பாண்டிநாடு முத்துடைத்து' எனப் புலவர் பலர் புகன்ற புகழ்மொழியைச் சரித்திரங்கள் அன்று முதல் இன்றுவரை சாற்றி வருகின்றன. இம்மூன்றினுள் மானிடர் முதலாய் எல்லாப் பிராணிகளுக்கும் ஊணினையளிக்கும் ஒப்பற்ற உயர்வு சோழ நாட்டினிற்கே உரியது.

புண்ணிய நதியாம் பொன்னியின் தென்பாலமைந்துள்ள தஞ்சையம்பதியைத் தலைநகராகக்கொண்ட சோழவள நாட்டினில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்றமையால், அந்நாட்டு மக்கள்

'சுழன்றும் ஏர்ப்பினது உலகம் அதனால்—
உழந்தும் உழவேதலை'

எனும் தெய்வப் புலமை திருவள்ளுவரின் திருவாக்கினைக் கடைப்பிடித்து, சோழ மண்டலத்தை 'தென்னாட்டின் நெற் களஞ்சியம்' எனப் பலர் போற்ற உழு தொழிலினையே மேற்கொண்டுள்ளனர். உழுதொழில் கருவிகளான ஏரும் கலப்பையும் மாடுகளுமே அவர்களுடைய முக்கிய செல்வங்கள். இவற்றுள் உயிருள்ள மாடுகளைப் பேணிக்காப்பதே அவர்கள் தம் முதற்கடமையெனக் கருதுகின்றனர். ஆதலின் பண்டை நாளில் மாட்டினத்தைப் பற்றி ஆராய்ந்து நம் முன்னோர்கள் நூல்கள் பல இயற்றியிருக்கக்கூடும் எனும் திடமான நம்பிக்கைக்கு இடமிருப்பினும், இன்றைய உலகினில் பழமை மிகுந்த அத்தகைய நூல்கள் அகப்படுவது அரிதினும் அரிதாக இருக்கிறது. பால்காப்பிய முனிவரியற்றிய 'பாலகாப்பியம்' எனும் கஜ சாத்திரமும் சாலிஹோத்திரர் இயற்றிய

'சாலிஹோத்ரீயம்' எனும் துரக சாத்திரமும் எளிதில் கிடைக்கின்றன. ஆனால் கௌதம முனிவர் இயற்றியதாகக் கூறப்படும் 'கோஸம்ஹிதை' எனும் மாட்டினத்தின் சாத்திரம் மட்டிலும் எங்கு தேடினும் கிடைப்பதில்லை.

நம் தமிழகத்தையாண்ட வேந்தர் மூவர்போன்று, தஞ்சையையாண்ட அரசர்களில் சோழரும், நாயக்கரும், மராத்தியரும் முதலிடம் பெற்றுள்ளனர். அவர்கள் தம் தம் தாய்மொழியிடத்தும், கல்வி கேள்விகளிலும் மிக்க அன்பும், ஆர்வமுங் கொண்டிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாய் விளங்குவது இன்று நாம் கண்கூடாகக் காணும் தஞ்சை சத்திரபதி சரபோஜி மன்னரின் ஸரஸ்வதிமஹால் நூல் நிலையம் எனும் கலைக்கூடமே. இந்நூல் நிலையத்தில் ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில் இயற்றப்பட்ட ஓலைச்சுவடிகளும், ஏட்டுப் பிரதிகளும் உலகம் வியக்க ஆயிரக்கணக்கில் இருப்பதோடு மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத பல அரிய சாத்திர சாதனங்களும் உள்ளன. தோணியைச் செலுத்துவோனுக்குதவும் துடுப்பினைப் போன்று, இக்காலத்தில், ஓவியம், விஞ்ஞானம், பௌதிகம், சங்கீதம், மருத்துவம், சிற்பம், சரித்திரம் சோதிடம் மற்றும் பல துறைகளில் சலியாதுழைத்து வரும் ஆராச்சியாளர்களுக்கு இந்நிலையத்திலுள்ள நூல்கள் பெரிதும் உதவியாயுள்ளன.

சென்ற சில நூற்றாண்டுகளாகப் பெருகிவரும் நாகரீக வெள்ளத்தில் நம் நாட்டுப் பண்பாடுகளில் சில அமிழ்ந்திடினும், ஈடிணையற்ற காரணத்தால் சித்தவைத்திய முறை போன்ற பலகலைகள் பாதுகாப்பு எனும் நாவாயில் சீருடன் மிதந்து திகழ்கின்றன.

மக்களின் நலனையே பெரிதெனக் கருதி, செங்கோலோச்சிவந்த நம் நாட்டு மன்னர்கள் மாடுகளின் நலனையும் பாதுகாப்பான் வேண்டி, அவற்றின் உறுப்பிலக்கணத்தையும், மருத்துவ முறைகளையும் அனுபவம் முதிர்ந்த அறிஞர்களால் ஏடுகளில் எழுதப் பெற்றுச் சேமித்து வைத்துள்ளனர். ஆனால் ஸரஸ்வதிமஹால் நூல் நிலையத்தில் மாட்டினத்தின் சாத்திரங் கூறும் சுவடிகளோ, ஏடுகளோ தற்சமயம் அதிகமாக இல்லை.



தமிழகத்தில், தஞ்சையிலும் அதன் அண்மையிலும், மாட்டு வாகடத்தில் தேர்ந்த வல்லுனர் பலர் இன்னும் இருந்து வருகின்றனர். அவர்கள், தம் மூதாதையர்களால் தேடிவைக்கப்பட்டுள்ள விலங்குகளின் சாத்திரத்தை நன்கு கற்றுணர்ந்து மாடுகள் போன்றவையின் நற்குறிகளையும் தோற்றங்களையும் ஆராய்ந்து கூறுவதுடன், சிறந்ததான நாட்டு வைத்திய முறைகளைக் கையாண்டு மருத்துவமும் செய்து வருகின்றனர். ஆனால் அவர்கள் தம்மிடத்துள்ள விலங்கியல் சம்பந்தமான நூல்களைத் தம் தம் சொந்த நலனைக் கருதி அரியதோர் பொக்கிஷமாகத் தம்மிடத்தே வைத்துள்ளனரேயன்றி, உலக மக்களுக்கு உதவுமாறு புத்தக ரூபமாய் வெளியிட இசைவதில்லை. ஆதலால் உழுதொழிலையே வாழ்வாகக் கொண்ட நம் மக்களை ஊக்குவிக்க நம் இந்திய அரசாங்கமே பொருட் செலவைப் பொருட்படுத்தாது தனிப்பட்டவர் வசமிருந்துவரும் நாட்டுச் செல்வமாகிய மாடுகளின் சாத்திரங் கூறும் நூல்களைப் பொருள் கொடுத்தேனும் பெற்று ஒன்றாகத் தொகுத்துப் புத்தக ரூபமாய் வெளியிடும் பணியை ஏற்கத் தகுதி வாய்ந்தது. ஆயினும், மிக மிக எளியதும், சிறியதோர் காலத்தில் பயனளிக்க வல்லதும் ஒப்பற்றதுமான மாட்டினத்தின் நாட்டு வைத்திய முறை நூல்கள் கிடையாதிருக்கும் குறையைக் களைவான் வேண்டி, தஞ்சை சத்திரபதி சரபோஜி மன்னரின் ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் கிடைத்த வெகு சில ஏட்டுப் பிரதிகளையும், தஞ்சை அரசவமிசத்தினரால் கையாளப்பட்டு வரும் சிற்சில முறைகளையும், புராணங்களில் காணும் ஆதாரங்களையும், நமது இந்திய அரசாங்கத்தார் வெளியிட்ட சில பிரசுரங்களையும் கொண்டு விலங்கியலறிவின் தொடர்புள்ள 'மாடுகள், குதிரைகள், பறவைகள் இவற்றின் லக்ஷணங்களும் வைத்தியமும்,' எனும் இந்நூலைத் தொகுத்து வெளியிடத் துணிந்தனர்.

இப்புத்தகத்தில் மாட்டினத்தின் தேக அமைப்பும், வளர்க்கும் முறைகளும், நோய்காணும் விதங்களும், அந்நோய்களுக்கேற்ற நம் நாட்டு வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன. ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் பல்வேறு மொழிகளில் பல்வேறு அறிஞர்களால் இயற்றப்பட்ட குதிரைகளின் வைத்திய முறைகள் ஏறக்குறைய ஈராயிரத்துக்கும் அதிகமாயுள்ளன. அவற்றிலிருந்து அரியவையெனத் தோன்

றிய சில மருத்துவ முறைகளையும், பறவைகளில் கோழி இனம் சம்பந்தமான வைத்திய முறைகளையும் மராத்தியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து இப்புத்தகத்தில் சேர்த்துள்ளோம். இக்காலத்தில் மாட்டுப் பந்தயமும் சேவல் சண்டையும் காண்பது மிக அரிதாயினும், பந்தய மாடுகளையும், சண்டைச் சேவல்களையும் பயிற்றுவிக்கும் முறைகளும், வளர்க்கும் விதங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தே காணும் வைத்திய முறைகள் யாவும் மூலத்திலுள்ளவாறு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தை நாம் வெளியிட்டதன் நோக்கம் யாதெனில் உணவுப் பஞ்சம் எங்கும் மலிந்து கிடக்கும் இந்நாளில் உணவு உற்பத்தியைப் பெருக்க உயிர் நாடியாயுள்ள மாடுகளின் இனத்தை மக்கள் பெரிதும் காத்து வளர்த்தல் வேண்டும் என்பதேயாம்.

தஞ்சை சத்திரபதி சரபோஜி மன்னரின் நூல் நிலையத்தின் சார்பில் இப்புத்தகத்தைப் பிரசுரிக்க எமக்கனுமதியளித்தமைக்காக, நூல் நிலையத்தின் கௌரவ அலுவலாளரான திரு. S. கோபாலன் B. A., B. L., அவர்களுக்கும், நிர்வாகக் குழுவின் நிரந்தர உறுப்பினரான இளவரசர், ராஜாஸ்ரீ ப்ரதாபசிம்ம ராஜா ஸாகேப் அவர்களுக்கும், இன்னும் மற்ற உறுப்பினர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இப்புத்தகத்தைத் தொகுக்கச் சிற்சில மருத்துவ முறைகளை எமக்களித்துதவிய வைத்தியரும் தஞ்சை மராத்திய அரச வம்சத்தை சேர்ந்தவருமான ராஜேஸ்ரீ சந்தானராம் மாடிக் ராவ் ஸாகேப் அவர்களுக்கு யாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இப்புத்தகத்தை அச்சிட்டு வருங்கால் அச்சுத்தாள்களைத் திருத்தி உதவிய, நூல் நிலையத்தின் ஆராய்ச்சிப் பண்டிதர் திரு. K. வாசுதேவ சாஸ்திரி B. A. அவர்களுக்கும் எமதுநன்றி உரித்தாகுக.

தஞ்சாவூர்
10–8–50 } அ. கிருஷ்ணசாமி மஹாடிக்.



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை ... | iii to vi |
| 2. | பசுக்களின் உற்பத்தி ... | 1 to 3 |
| 3. | பசுக்களின் அங்கதேவதைகள் ... | 4 |
| 4. | பசுக்களின் மஹத்துவம் ... | 5 to 9 |
| 5. | பசு, எருமை இவைகளின் உபயோகங்கள் ... | 10 |
| 6. | பாலின் மேன்மை ... | 11 |
| 7. | பால், தயிர், நெய் இவைகளின் குணாகுணம் ... | 12 to 13 |
| 8. | காளைமாடு, எருமைக்கடா இவற்றின் உபயோகம் ... | 13 to 14 |
| 9. | உழவு மாடு, வண்டி மாடுகளின் உபயோகங்கள் ... | 15 |
| 10. | மாடுகளின் ஆயுள் ... | 16 |
| 11. | அவைகளின் பற்கள் ... | 17 |
| 12. | நல்ல தேக அமைப்புள்ள மாடுகள் ... | 17 |
| 13. | உசிதமில்லாத தேக அமைப்புள்ள மாடுகள் ... | 18 to 19 |
| 14. | மாடுகளின் நிறம் ... | 19 to 20 |
| 15. | நன்மை பயக்கும் சுழிகள் ... | 21 to 22 |
| 16. | தீமை பயக்கும் சுழிகள் ... | 23 to 25 |
| 17. | மாடுகள் சம்மந்தமான பழைய கொள்கைகள் ... | 25 to 27 |
| 18. | தென்னிந்திய மாட்டினங்கள் ... | 28 to 38 |
| 19. | எருமைகளின் பிரிவுகள் ... | 38 to 40 |
| 20. | மாடுகளை பராமரிக்கும் முறைகள் ... | 40 |
| 21. | தீனி முதலியன ... | 41 to 42 |
| 22. | குளிப்பாட்டும் விதி ... | 43 |
| 23. | மாட்டுக் கொட்டில் ... | 43 |
| 24. | சினைமாடு, கன்று இவைகளைப் பாதுகாத்தல்... | 44 |

பக்கம்

25. சினைப்படுவதின் அறிகுறி ... 44 to 45
26. கன்றுகளை காப்பாற்றும் விதம் ... 45 to 46
27. மாடுகளுக்கு ஏற்படும் நோய்களும், சிகிச்சையும்... 47
28. அழகிய திருச்சிற்றம்பலமுடையான் உருண்டை... ,,
29. அழல் வெக்கை நோய் ... ,,
30. அடித்தடித்துக்கொண்டு விழும் நோய் ... 48
31. அடைப்பான் ... ,,
32. அரணைக்கடி விஷம் ... ,,
33. அரணை (நாவரட்சி) ... 49
34. அஸ்மா உருண்டை ... ,,
35. ஆனைச்சொரி ... ,,
36. ஆனைச்சிலந்தி ... 50
37. இரைகொண்டு நிற்கும் நோய் ... ,,
38. இளங்(நெஞ்சுக்) கொடி விழுவதற்கு ... ,,
39. இளைத்த மாட்டிற்கு ... ,,
40. உடுக்கை நோய் ... 51
41. உதைத்துக்கொள்ளும் நோய் ... ,,
42. உள்ளடைப்பான் ... ,,
43. உயிந்த வியாதி ... 52
44. உப்பிசம் சகல விதத்திற்கும் மருந்து ... ,,
45. ஊதடைப்பான் ... ,,
46. எலும்புருக்கி நோய் ... 53
47. ஒட்டு நறுன் வியாதி ... ,,
48. ஒன்னரி நோய் ... ,,
49. கருநோய் ... 54
50. கண்டி நோய் ... ,,
51. கருவடி நோய் ... ,,
52. கண்பாராத பசுவிற்கு மருந்து ... 55
53. கழுத்துவலிக்கு பற்று ... ,,



பக்கம்

54. கண்ணில் பூ விழுவதற்கு ... 55
55. கரப்பான் நோய் ... ,,
56. கண்ணில் சாரைக்குருடு ... 56
57. கன்று கொள்ளாத மாட்டிற்கு ... ,,
58. கழிவெக்கைக்கு லேகியம் ... ,,
59. காசு நறுளி என்ற நோய் ... ,,
60. காமாலை நோய் ... 57
61. கால் நோய் ... ,,
62. கால் வீக்கம் ... ,,
63. கால்கள் தவளிக்கும் ... ,,
64. கிராணி நோய் ... 58
65. குண்டி நோய் ... ,,
66. குன்றிட நோய் ... ,,
67. குதிரை வலிப்பு நோய் ... ,,
68. குள நோய் ... 59
69. குழையடிக்க ... ,,
70. குளம்பு வளர்ந்துவரும் நோய் ... ,,
71. குடல் நோய் ... ,,
72. குன்னும் நோய் ... 60
78. குடல் வெக்கை ... ,,
74. கும்மட்டிக்காய் மருந்து ... ,,
75. ஷை மற்றொரு விதம் ... 61
76. கூடை நோய் ... ,,
77. கொல்லி நோய் ... 62
78. கொம்பனுர் நோய் ... ,,
79. கொல்லி தெறியன் நோய் ... 63
80. கொறட்டை வியாதி ... ,,
81. கொம்புடைந்ததற்கு ... ,,
82. சன்னி வியாதி ... ,,
83. சந்தடைப்பான் நோய் ... 64
84. சார நோய் ... ,,

| | | பக்கம் |
|---|---|---|
| 85. | சிரங்குபற்றின மாட்டுக்கு ... | 64 |
| 86. | சீதவெக்கை நோய் ... | ,, |
| 87. | சுழல் நோய் ... | 65 |
| 88. | சூலைக்கு உருண்டை ... | ,, |
| 89. | சூரை நோய் ... | 66 |
| 90. | செவிகண் நோய் ... | ,, |
| 91. | செருமல் நோய் ... | ,, |
| 92. | செருமி மயிர் நிற்கும் நோய் ... | 67 |
| 93. | செங்கலங்கலாக சாணமிடும் நோய் ... | ,, |
| 94. | சோகை நோய் ... | ,, |
| 95. | தண்ணீராகச் சாணிபீச்சும் நோய் ... | ,, |
| 96. | தளர்த்தியாய் சாணம் போடுவதற்கு ... | 68 |
| 97. | தவளை நோய் ... | ,, |
| 98. | தினசு பிடித்தல் ... | ,, |
| 99. | திகைத்து நிற்கும் நோய் ... | ,, |
| 100. | திருகு கல்லி உப்பு மருந்து ... | ,, |
| 101. | மற்றொருமுறை ... | 69 |
| 102. | தேங்காய் மசாலை ... | ,, |
| 103. | தொப்புள் வீக்கம் நோய் ... | ,, |
| 104. | தொண்டையடைப்பான் நோய் ... | ,, |
| 105. | நாரை நோய் ... | 70 |
| 106. | நீர்கழியாத நோய் ... | ,, |
| 107. | நீர்க்குன்னல் நோய் ... | ,, |
| 108. | நுரையாக வாயில் தள்ளும் நோய் ... | 71 |
| 109. | நொடி வியாதி ... | ,, |
| 110. | பயிரவ உருண்டை ... | ,, |
| 111. | பரைபோல் ஓடி திரியும் நோய் ... | 72 |
| 112. | பாயும் மாட்டுக்கு ... | ,, |
| 113. | பால் இல்லாத மாட்டுக்கு ... | ,, |
| 114. | பின்னடைப்பான் ... | ,, |
| 115. | புகைவைக்கும் மருந்து ... | 73 |





| | | பக்கம் |
|---|---|---|
| 116. | புஸ்டிக்கு மருந்து ... | 73 |
| 117. | புண், பூச்சி, புறை இவைகளுக்கு ... | ,, |
| 118. | பூமிண்ட நோய் ... | 74 |
| 119. | பூவாய் நோய் ... | ,, |
| 120. | பெருமருந்து லேகியம் ... | 75 |
| 121. | பெருஞ்சிலந்தி நோய் ... | ,, |
| 122. | பேதியாகும் மாட்டுக்கு மருந்து ... | 76 |
| 123. | மதம்பாயும் மாட்டிற்கு மருந்து ... | ,, |
| 124. | மலடு நீங்கிச் சினைப்பட மருந்து ... | ,, |
| 125. | மயிர் உதிரும் நோய் ... | 77 |
| 126. | மருக்காரை மசாலை ... | ,, |
| 127. | முன்னடைப்பான் நோய் ... | ,, |
| 128. | முலைக்காம்பின் வெடிப்பிற்கு மருந்து ... | 78 |
| 129. | முகம், மூக்கு, முதுகு இவைகள் அனல் பறியும் நோய் ... | ,, |
| 130. | முட்டிகள் வீங்கியதற்குப் பத்து ... | 79 |
| 131. | மூக்கு வியாதி ... | ,, |
| 132. | மூச்சு வியாதி ... | ,, |
| 133. | மென்னடைப்பான் வியாதி ... | ,, |
| 134. | மேயாத நோய்க்கு மருந்து ... | 80 |
| 135. | இரத்தவிருத்திக்கு மசாலை ... | ,, |
| 136. | ௸ மற்றொரு விதம் ... | ,, |
| 137. | இரத்த குன்னல் நோய் ... | ,, |
| 138. | வலி நோய் ... | ,, |
| 139. | வலிப்பு அடைப்பான் நோய் ... | 81 |
| 140. | வத்தலாயிருக்கும் மாட்டுக்கு ... | ,, |
| 141. | வல்லாரை நோய் ... | ,, |
| 142. | வசீகரம் மாட்டுக்கு ... | ,, |
| 143. | வரட்டுக் குன்னல் நோய் ... | 82 |
| 144. | வயிறு வீக்கத்திற்கு ... | ,, |
| 145. | வயிற்றுப்புழு ... | ,, |

| | | பக்கம் |
|---|---|---|
| 146. | வாயுவுக்கு மசாலை ... | 83 |
| 147. | ஷை மற்றொருவிதம் ... | ,, |
| 148. | ஷை ,, ... | ,, |
| 149. | ஷை ,, ... | ,, |
| 150. | வாய்க் கோமாரிக்கு மருந்து ... | ,, |
| 151. | விரைப்பான் வியாதி ... | 84 |
| 152. | விழுந்துகிடக்கும் நோய்க்கு மருந்து ... | ,, |
| 153. | விஷக்கடி மருந்து ... | ,, |
| 154. | விஷங்கள் சகலத்துக்கும் சஞ்சீவி ... | 85 |
| 155. | வெள்ளை உருண்டை ... | ,, |
| 156. | வெய்யில் காலங்களில் உஷ்ண சாந்திக்கு ... | ,, |


## வண்டிமாடுகள், பந்தயமாடுகள் இவைகளின் தனி மருந்து


| | | |
|---|---|---|
| 157. | ஓணான் மசாலை ... | 86 |
| 158. | ஷை மற்றொருவிதம் ... | ,, |
| 159. | ஆட்டுத்தலை மசாலை ... | 87 |
| 160. | அடைக்கலாங்குருவி மசாலை ... | ,, |
| 161. | கருங்கோழி மசாலை ... | ,, |
| 162. | கொடிவேலிக் கஷாயம் ... | 88 |
| 163. | சவாரி உருண்டை ... | ,, |
| 164. | "சம்ஸர்" உருண்டை ... | ,, |
| 165. | வண்டியில் ஓடும்பொழுது தளர்த்தியாக சாணம் போடுவதற்கு ... | ,, |
| 166. | நசியம் ... | 89 |
| 167. | மாடுகள் நிறம் கொடுத்து பளபளப்பாக ... | ,, |
| 168. | நாக்கில் தடவ (சாட்டு) ... | ,, |
| 169. | பிருந்து மசாலை ... | 90 |
| 170. | புஷ்டிக்கு ... | 91 |
| 171. | வண்டு மசாலை ... | |





| | | பக்கம் |
|---|---|---|
| 172. | விரைவாகச் செல்ல மருந்து ... | 91 |
| 173. | விரேசனத்திற்கு (பேதிக்கு) மருந்து ... | 92 |
| 174. | வெள்ளை உருண்டை சகல ரோகங்களுக்கு ... | ,, |
| 175. | வெண்ணை நாக்கில் தடவ (விரைவுக்கு) ... | ,, |


## குதிரைகளின் லக்ஷணங்களும், வைத்தியமும்


| | | |
|---|---|---|
| 176. | குதிரைகளின் பிறப்பு, வரலாறு ... | 93 |
| 177. | குதிரைகளின் உபயோகங்கள் ... | 94 |
| 178. | குதிரைகளின் பெருமை ... | 95 |
| 179. | வேத காலத்து குதிரைகள் ... | 96 |
| 180. | குதிரைகள் சிறகுகளை இழந்த வரலாறு ... | 97 |
| 181. | குதிரைகள் கெர்ப்பந்தரிக்கும் விதம் ... | 98 |
| 182. | சாத்விக, ராஜஸ, தாமஸ குணங்கள் ... | 99 |
| 183. | குதிரைகளின் வயது ... | 100 |
| 184. | பற்களினால் வயது அறியும் வழி ... | ,, |
| 185. | பற்களில் ஏற்படும் வயதுக்கேற்ற நிறம் ... | 101 |
| 186. | குதிரைகளின் தேக அமைப்பு ... | 102 |
| 187. | தேக அளவு முதலியன ... | ,, |
| 188. | தேக க்ஷேத்ரங்களின் பிரிவு ... | 103 |
| 189. | தேகத்தின் சுப லக்ஷணக் குறிகள் ... | ,, |
| 190. | தேகத்தின் அசுப லக்ஷணங்கள் ... | 104 |
| 191. | சிங்கிமஸ்தகி, காளிகா ... | 105 |
| 192. | குதிரைகளின் உயர்ந்த குணங்கள் ... | 106 |
| 193. | குதிரைகளின் சுப அசுப நிறங்கள் ... | ,, |
| 194. | நிறங்களின் அநேக பிரிவுகள் ... | 107 |
| 195. | நீலா, போர், சாரங்கம், ஜர்தா குதிரைகள் ... | ,, |
| 196. | முக்கியமாக விரும்பத்தக்க குதிரைகள் ... | 108 |
| 197. | மிகவும் விரும்பத்தகாத குதிரைகள் ... | 109 |

பக்கம்

198. பஞ்சகல்யாணி, அஷ்டகல்யாணி முதலிய குதிரைகள் ... 109
199. நகோரா, சூர்யகாந்தம், பிரஷுதம் முதலிய குதிரைகள் ... 110
200. திவாவைஜயீகம், நிசாவைஜயீகம் முதலிய குதிரைகள் ... ,,
201. கனகவட்டம், பட்டவர்த்தனம் முதலிய குதிரைகள் ... ,,
202. புரோத புண்டரீகம் என்ற குதிரை ... 111
203. தோஷமுள்ள குதிரைகள் ... ,,
204. கொழிகை, அஞ்சுகம், கத்திரி முதலிய குதிரைகள் ... ,,
205. கால்வளவன், திரிவாணி, காளிங்க குதிரைகள் ... ,,

## குதிரைகளின் குறிகளும், சுழிகளும், அவைகளின் அமைப்பும்

206. சிறந்த சுழிகளுடைய குதிரைகள் .. 112
207. சுழிகளின் சின்னங்கள் ... ,,
208. பத்து நல்ல சுழிகள் ... ,,
209. சுழிகளுக்குரிய தெய்வங்கள் ... ,,
210. இழிஞ்சல் சுழி, கொடிச்சுழி ... 113
211. தெய்வமணி, கண்டாபரணச் சுழிகள் ... ,,
212. த்ரேதாக்னிசுழி, மல்லிமொக்குச்சுழி ... ,,
213. ஸ்ரீவத்ஸவம், தாமரைச்சுழி, வேதப்பரி ... 114
314. முக்கூட்டுச்சுழி ... ,,
215. தீயச்சுழிகளுடைய குதிரைகள் ... 115
216. நாட்டளம், மாராணி, சிங்கி முதலியன ... ,,
217. துக்கச்சுழி, படைச்சுழி, விலங்குச்சுழி ... 116
218. பொன்னிப்பிடிசுழி ... 117
219. பூரான் சுழிகள் ... ,,



பக்கம்

220. குதிரைகளின் குரல், சப்தம் இவைகளின் லக்ஷணம் ... 118

## குதிரைகளுக்கு வரும் நோய் மருந்து முதலியன

221. அண்டசாலை நோய் ... 119
222. அண்டசூலை ... 120
223. அரணை கடிக்கு ... ,,
224. ஆகவிக சூலை நோய் ... ,,
225. ஆனைச் சூலைநோய் ... ,,
226. ஆணைமுடத்துக்கு ... 121
227. "இசுவு" நோய்க்கு ... ,,
228. இலத்திபோடாது, நீர்விடாததற்கு ... 122
229. உலத்தி சூலைநோய் ... ,,
230. ஒச்சாலை நோய் ... ,,
231. கஞ்சோக்கமென்ற நோய் ... 123
232. கத்த சூலைநோய் ... ,,
233. கம்பி நோய் ... ,,
234. கமரி நோய் ... 124
235. கண்ணில் புழுக்கடிக்கு ... ,,
236. கணுக்கால், முழங்கால் வீக்கத்துக்கு ... ,,
237. கபாலக்குத்தல் நோய் ... 125
238. கவ்வைசூலை நோய் ... ,,
239. கண்டனென்ற சூலை நோய் ... ,,
240. களிங்க நோய் ... 126
241. கால் சூலைநோய் ... ,,
242. காமாலை நோய் ... ,,
243. குத்தல் நோய் ... ,,
244. குளம்பு வெடிப்புக்கு ... 127
245. குளம்புக்குள் விரணம் ... ,,

பக்கம்


246. கோதா என்ற சூலைநோய் ... 128
247. குதிரைக்கு சகல நோய்களுக்கும் ... ,,
248. சரசாலை நோய் ... ,,
249. சயமென்றசூலை நோய் ... 129
250. சேம்பை நோய் ... ,,
251. சாணி அதிகமாக போடுவதற்கு ... 130
252. சிங்களத்து நோய் ... ,,
253. சுக்குனவி என்ற நோய் ... ,,
254. சுரநோய் ... ,,
255. சளிநோய் ... 131
256. சிலைக்கு வாதம் ... 132
257. சிரங்கு சொறி ... ,,
258. சுரசாலை நோய் ... 133
259. சூதச் சூலை நோய் ... ,,
260. செலவாய் நோய் ... ,,
261. செருமல் நோய் ... ,,
262. சோகு அண்டசாலை நோய் ... 134
263. தண்ணீர் குடித்தவுடன் காலைவெட்டி
விழும் நோய் ... ,,
264. தவளை நோய் ... ,,
265. தவன சூலைநோய் ... ,,
266. தாமசத்துக்கு மருந்து ... 135
267. திக்குச்சசாலை நோய் ... ,,
268. திமிர் நோய் ... ,,
269. திவ்வாள்ள (?) குரியல் நோய் ... ,,
270. தேவிச் சூலைநோய் ... 136
271. நடுக்கு சூலைநோய் ... ,,
272. நதன ஏரைநோய் ... ,,
273. பண்டித்துதல் பிடித்தல் ... ,,
274. பாரிச வாயுநோய் ... 137
275. பந்தவாய்வு நோய் ... ,,




பக்கம்


276. பாதாசத்து நோய் ... 138
277. பின்னீர்க்காலன் சூலைநோய் ... ,,
278. புழுக்கடிநோய் ... ,,
279. புழுக்கள் செத்து லத்தியுடன் விழ ... 139
280. மஞ்சள் நீர் அடிக்கடி வாயில் ஓடும் நோய் ... ,,
281. மந்தார சூலை நோய் ... ,,
282. மண்ணுசாலை நோய் ... 140
283. மன்னைச்சூலை நோய் ... ,,
284. இளைப்பதற்கும் இரத்த புஸ்டிக்கு மசாலை ... 141
285. வெயில் காலங்களில் கொடுக்கும் மசாலை ... ,,
286. காமத்தினால் இளைத்து போவதற்கு மசாலை ... ,,
287. குதிரையை தாஜாபடுத்த மசாலை ... 142
288. ஆண்குதிரை பெண்குதிரையைகண்டு
இச்சிக்க மசாலை .. ,,
289. பெண்குதிரை ஆண்குதிரையைகண்டு
இச்சிக்க மசாலை ... ,,
290. மயிர் சிலிர்த்து நிற்கும் நோய் ... 143
291. மறத்துத் தொங்குவதற்கு ... ,,
292. மாரண்டையிப்பிருதி ... ,,
293. மார்பிடிப்பு நோய் ... ,,
294. மூச்சடைப்புக்கு ... 144
295. மூலம் ஓடும்பொழுது வெளிப்படும் நோய் ... ,,
296. மிறைச்சூலை நோய் ... 145
297. யேதசூலை நோய் ... ,,
298. இரத்த பிரமிய சூலை நோய் ... ,,
299. இரத்த சூலைநோய் ... 146
300. இரத்தக் கத்தம் போக்கு ... ,,
301. இரத்தசுமான் என்ற நோய் ... ,,
302. லேப்பு அல்லது குதிரைக்கு தடவும் பத்து ... 147
303. வனசூலை நோய் ... ,,
304. வருணசூலை நோய் ... ,,

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 305. | வாய்க்குட்டத்திற்கு மருந்து | ... | 148 |
| 306. | விஷக்கடி | ... | ,, |
| 307. | விரைப்புநோய் | ... | ,, |
| 308. | வெடிசூலைநோய் | ... | ,, |
| 309. | வேகத்துக்கு (உஷ்ணத்தின்வேகம்) | ... | ,, |

## கோழிகளின் நோய்களுக்கு மருந்து முறைகள்

| | | | |
|---|---|---|---|
| 310. | அகிலி என்னும் வியாதி | ... | 1 |
| 311. | அக்டு, கத்திவிழுதல் (நெஞ்சின் சதை வற்றுதல்) | ... | ,, |
| 312. | அம்மை (சிறியது) | ... | 2 |
| 313. | அஜீரணம் வாயு உபத்திரவம் | ... | 3 |
| 314. | ஷை மற்றொருவிதம் மருந்து | ... | 4 |
| 315. | அஜப்கோலி உருண்டை | ... | ,, |
| 316. | இரைப்பு நோய் | ... | 5 |
| 317. | ஷைக்கு மற்றொருவித மருந்து | ... | ,, |
| 318. | எலும்பு, இரக்கை ஒடிந்தால் | ... | ,, |
| 319. | கண்ணில் பூ விழுந்தால் | ... | 6 |
| 320. | கண்ணில் காயம் ஏற்படுவதற்கு | ... | ,, |
| 321. | கழிச்சல் நோய் (வெள்ளைக் கழிச்சல்) | ... | 7 |
| 322. | கழிச்சல் (அதிகமான கழிச்சல்) | ... | ,, |
| 323. | கழிச்சல் (துர்நாற்ற கழிச்சல்) | ... | ,, |
| 324. | கருப்பு உருண்டை | ... | 8 |
| 325. | காலிலுள்ள தோல் உரிவதற்கு | ... | ,, |
| 326. | காலில் ஆணி விழுவதற்கு (தல்லி) | ... | ,, |
| 327. | குருப கோலி (உருண்டை) | ... | 10 |
| 328. | குருஜ் (இரக்கை விழுந்து முளைக்க) | ... | ,, |
| 329. | குருஜ் (அகாலமாக இறகுகள் விழுந்தால்) | ... | ,, |
| 330. | கொக்குநோய் (கொள்ளைநோய்) | ... | 11 |



| | | | பக்கம் |
|---|---|---|---|
| 331. | கொப்புளங்கள் (உடலில் ஏற்படும்) | ... | 11 |
| 332. | சகல வியாதிக்கு வெள்ளை உருண்டை | ... | 12 |
| 333. | சளிக்கு மருந்து | ... | ,, |
| 334. | சேவல் கோழிமேல் உட்காருவதற்கு | ... | 13 |
| 335. | தலைநோய் | ... | ,, |
| 336. | தயார்கோலி (உருண்டை) | ... | 14 |
| 337. | தீபானத்திற்கு | ... | ,, |
| 338. | தொண்டைப் புண்ணுக்கு (அகளிநோய்) | ... | 15 |
| 339. | தொண்டைப்புண் (மற்றொருவிதம்) | ... | ,, |
| 340. | நடுக்கல் வியாதி | ... | 16 |
| 341. | புண் (இரணங்களுக்கு) | ... | ,, |
| 342. | மற்றொருமுறை | ... | 17 |
| 343. | புஷ்டிக்கு | ... | ,, |
| 344. | பூச்சி (வயிற்றுப்பூச்சிக்கு) | ... | 18 |
| 345. | பூச்சி (பேன், சள்ளு) | ... | ,, |
| 346. | பெருக்க (உடல்) | ... | 19 |
| 347. | பருக்க, (உடல்) மற்றொருமுறை | ... | ,, |
| 348. | வாந்திக்கு மருந்து | ... | 20 |
| 349. | பிழை திருத்தம் | ... | 21 |

# மாடு குதிரைகளின் லக்ஷணங்களும் வைத்தியமும்

## நமது வேத சாஸ்திர புராணங்களின்படி பசுக்களின் உற்பத்தி வரலாறும், பசுக்களின் பெருமையும்.

### அத்தியாயம் 1.

உலகத்தில் பூமி, பசு, வாக்கு, (கல்வி) என்னும் இம்மூன்றும் பொதுவாக "கோ" என்று அழைக்கப்படும். அவை ஓரேபெயருள்ளதாக இருப்பதுபோல், ஓரே பயனளிக்கக் கூடியதாகவுமிருக்கின்றன. உயிரைக் காப்பாற்றும் ஆகாராதிகளைப் பூமியிலிருந்தும், தேகத்தைச் செவ்வனே வளர்த்து ஆரோக்கியந்தரும் அமிர்தமாகிய பாலைப் பசுவினிடமிருந்தும், மக்களிடத்திலுள்ள அறியாமை என்னும் இருளைப்போக்கும் வல்லமையைக் கல்வியிடமிருந்தும் அடைகிறோம். இம்மூன்றும் உலகிலேயே யாவற்றையும் விட மிகப்பெரிதாக எண்ணப்படுகின்றன. ஆகையால், இம்மூன்றில் ஒன்றாகிய பசுவின் உற்பத்தி, அங்கலக்ஷணம், அவை அளிக்கும் பயன், அவைகளைக் காப்பாற்றும் முறைகள் அவற்றிற்கு அணுகும் பிணிகள், அவைகளைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைகள், முதலானவைகளை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது.

நமது பழைய நூல்களில் பசுவின் உற்பத்தி பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. பிரம்ம லோகத்தில் கிருதயுகத்தினாரம்பத்தில் நான்முகன் உலக சிருஷ்டியில் ஈடுபட்டிருந்தார். படைப்புத் தொழில் மிகவும் சோர்வு தருவதாகையால் அவர் கவலையுற்று விளங்கினார். அப்பொழுது அருகில் வீற்றிருந்த சரஸ்வதிதேவி பிரமனை அமிர்தத்தை உட்கொண்டு களைப்பு நீங்கிப் படைப்புத் தொழிலில் உற்சாகத்துடன் ஈடுபடும்படி வேண்டிக்கொண்டாள். அவரும் அதற்கிசைந்து அமிர்தத்தைக் களிப்புடன் பருகித் திருப்தி அடைந்தார். திருப்தி ஏற்

பட்டதின் அறிகுறியாக அவர் வாயினின்று இனிமையான நறுமணம் ஏற்பட்டு, அதன்பலனாக அழகிய பெண்ணுருவங்கொண்ட சுரபி என்னும் பெயருடைய காமதேனு பிறந்தாள், பொன்போன்ற பசுமை நிறமும், வசீகரத்துடன் கூடிய அழகும் படைத்திருந்தாள்.

பிறகு பிரமன் ஒளி வீசும் மேனியையுடைய ஓர் சுந்தர புருஷனைத் தம் சக்தியாலும் தபோ பலத்தின் மேன்மையாலும் உலக க்ஷேமத்தின் பொருட்டுப் படைத்தார். இவ்வழகனுக்கு மார்த்தாண்டன் என்றும் சூரியன் என்றும் பெயர். இவ்விருவரும் பிரம்மலோகத்தில் வாழ்ந்துவந்தார்கள். வசீகரிக்கும் இளமைப் பருவமும் விரும்பத்தக்க மேனியுமுடைய சுரபியை மணந்துகொள்ள வேண்டுமென்று உள்ளூறக் காதல் கொண்டான் மார்த்தாண்டன். ஆனால் தன் காதலை வெளிப்படையாகக் காண்பிக்க முடியாதபடியால், மனக்கலக்கமும் ஏக்கமும் கொண்டவனாய் மிகுந்த துயரை அடைந்தான். உற்சாகமில்லாமல் தன் தேஜஸ் குன்றி வருத்தத்துடன் விளங்கும் சூரியனை பிரமதேவன் கண்டு, அவனுடைய துயரத்திற்குக் காரணம் யாதெனச் சிந்தனை செய்து, அதைத் தன் ஞான திருஷ்டியினால் அறிந்தார். புன்முறுவலுடன் மார்த்தாண்டனாகிய சூரியனிடம் அணுகி, "சந்தோஷத்துடன் சுரபியை மணந்து கொண்டு மூவுலகிற்கும் க்ஷேமத்தைக் கொடுத்துக் காப்பாற்றக் கடவாய்" என்று சொல்லி மனமாற வாழ்த்திப் பல வரங்களையும் அளித்தார்.

காமதேனுவாகிய சுரபி, உலகிற்குத் தாய் போன்று ஜனங்களைப் போஷிக்கக்கூடிய பல்வேறு பசுக்களையும் உற்பத்திசெய்தது. அப்பசுக்களிடம் சுரக்கும்பாலானது கடலில் உண்டாகும் அலைகள் போல் மேன்மேலும் உண்டாகி நுரை ததும்பப் பெரும் வெள்ளம் போல் ஏற்பட்டது. அப்பாலைக்குடித்த கன்றுகளின் வாயிலிருந்து வழிந்துவிழும் பால் நுரைகள் கீழே விழ ஆரம்பித்தன. வெள்ளிமலையாகிய இமயத்தில் தவம் செய்து கொண்டிருந்த சிவபெருமானுடைய உச்சந்தலையில் அவைகள் விழ, அவருடைய தவத்துக்குப் பங்கம் ஏற்பட, அவர் மிகுந்தகோபம் அடைந்து தனது நெற்றிக் கண்ணினால் அப்பொன்னிறக்கபிலைப் பசுக்களைப்பார்த்தார். பார்த்தமாத்திரத்தில் நெற்றிக்கண் ஜ்வாலையினால் எல்லாப் பசுக்



களும் அழிக்கப்பட்டு உலகஜீவனத்தின் அடிப்படையே மறைந்து போகும்சமயம் ஏற்படவே, பிரமதேவன், இனி தாம் சும்மாவிருத்தல் கூடாது, தமது உலகப்படைப்புக்கே இடையூறு வரும், என்று கருதி முக்கண்ணனை இறைஞ்சி, இப்பசுக்களின் குற்றத்தை மன்னித்து அவைகளை மேன்மேலும் ஜீவ்ராசிகளுக்கு நலத்தைக் கொடுக்கும்படி ஆசிர்வதிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

அவ்வமயம் பசுக்கூட்டத்திலிருந்து தப்பிப்பிழைத்த ஒரு விருஷபமானது பரமசிவனை வணங்கி மன்னிக்குமாறு மன்றாடி வேண்டிக் கொண்டதும், மஹாதேவரும் மகிழ்ந்து அவ்விருஷபத்தை வாகனமாகவும் கொடியாகவும் ஏற்றுக்கொண்டார். அக்காலத்திலிருந்து அவருக்கு இடபக் கொடியும் இடப வாகனமும் ஏற்பட்டு மஹாதேவர் பசுக்களுக்கே பதியாக விளங்குகிறார். அவருக்குப் பசுபதி எனப்பெயர் உண்டாகிப் பசுக்களுக்கும் அவருடைய அருள் ஏற்பட்டது. ஆனால் அவர் நெற்றிக் கண்ணின் சுடர், பொன்னிற மேனியுள்ள கபிலைப் பசுக்களைப் பலவர்ணப்பசுக்களாக மாற்றியது.

ஒரு சமயம் காமதேனுவும் மற்ற பசுக்களும் ஒற்றைக் காலால் நின்று கடுந்தவம் செய்து பிரமனை வேண்டிக்கொண்டதினால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கான கொம்புகளைப் பெற்றன. ஒவ்வொன்றுக்கும் எதற்கு எப்படி இஷ்டமோ அப்படிப் பலவிதமான கொம்புகளுமுண்டாயின. சுரபி, தான் செய்த பெருந்தவத்தினால் தேஜசுடைய பதினொரு புத்திரர்களை ஈன்றாள். இவர்களே வேதத்தில் புகழப்படும் ஏகாதசருத்திரர்கள் எனப்படுவர். ஏகாதசருத்திரர்களே சதருத்ரர்களுக்குக் காரணமானார்கள். பிறகு பூமிதேவியையும் பெற்றெடுத்தாள். சந்திரனையும், பிறகு மேதை, ஸ்ரீ தேவி, கீர்த்தி, சரஸ்வதி என்னும் நான்கு கன்னிகைகளையும் தபோ பலத்தால் சுரபி பெற்றாள். இந்த தேவதைகளை ஈன்றதுமன்றி அவளுடைய வழித்தோன்றல்களான பல அழகான பசுக்களையும் பெற்றாள். ஸுபகை, ரஸை, தேனு, அதாரிணி, ஸுரஸா, ததிக்ஷீரை, ஹரித்வரை, ருத்தி, ரேவதி, இந்திரை, கல்யை, மதுச்யோனத, குதாவதி, பிராணவதி, முதலிய நாற்பத்தொரு பெண்களைப்பெற்று யாவராலும் கொண்டாடப்

பட்டு வந்தாள். ரத்னமயமான கழுத்துடையதும், தாமரைக் கிழங்கின் நிறத்தையொத்துத் திரண்ட கொண்டையுடையதும், அழகானதுமான தக்ஷன் என்ற பெயரையுடைய ஓர் இடபத்தையும் ஈன்றெடுத்தாள். இவ்விடபமே முன் கூறிய சிவ்பெருமானுக்கு வாகனமாகச் சுரபியின் விருப்பத்தின் பேரில் பிரமதேவரால் கொடுக்கப்பட்ட விருஷபம் என்றறிக.

மூவுலகத்தின் நன்மையைக்கோரி அட்டதிக்குபாலர்கள் முதலான தேவர்களுக்குத் தன்மக்களைச்சுரபி அளித்தருளினாள். தேவ அரசனான இந்திரனுக்கு ஸுஷ்டுதையையும், யமனுக்குக் கபிலையையும் வருணனுக்கு ரோஹிணியையும், அளகாபுரி மன்னனான குபேரபகவானுக்கு சர்வகாமதுகையும் சுரபியானவள் கொடுத்தாள். இவற்றின் சந்ததிகள் உலக நன்மைக்காகப் பூமி முழுவதும் வியாபித்து அமிர்தமாகிய க்ஷீரத்தை ஜனங்களுக்கு நிறையக் கொடுத்துக் காப்பாற்றுகின்றன. உலகில் உதித்துப் பரவும் பொழுது இச்சந்ததிகள், பொன்னிறமும், வெள்ளி நிறமும் புரசம்பூ நிறமும், சந்திரகிரணம் போன்ற நிறமும், கரு நிறமும், பழுப்பு நிறமும், சிவப்பு நிறமும் நீல நிறமும, கபில நிறமுமாகத்தோன்றின. இப்படிப்பல நிறங்கொண்டு ஜனங்களுக்கு ஆகாராதிகளைக் குறைவின்றித் தந்து மக்களின் தேகாரோக்கியத்தைக் காப்பாற்றிவருகின்றன. யாவற்றினும் கபில நிறப்பசுதான் மிகவும் சிலாக்கியமானது என்று கூறப்படுகிறது.

பசுக்களின் அங்கங்களில் எல்லா உலகங்களும் தேவதைகளும் வசிப்பதாக எல்லா சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் முரண்பாடின்றிக் கூறப்படுகிறது.

கண்களில் சந்திரனும் சூரியனும், கண்களிடையில் பரமசிவனும், மூக்குத்துவாரங்களில் முருகனும் கணேசரும், மஸ்தகத்தில் தீர்த்த ராஜாவும், இரு கொம்புகளில் காலனும் இந்திரனும், மார்பில் திருமாலும், இடது முன்கண்டத்தில் (தாடையில்) கலைமகளும், கீழ்ப்பக்கம் ராகுவும், மேல்பக்கம் கேதுவும் முன்னங்கால் நடுப்பூட்டுக்கு மேல் அங்காரகனும், அதனடியில் சனீச்வரனும், அதற்கு மேல் சுக்கிரனும், சுக்கிரனுக்கு மேல் பக்கம் புதனும், கொண்டையில் பிரும்மாவும், அதன் கீழ்ப்பக்கம்



குருவும், வலதுகாலின் முன்பக்கத்தில் பைரவரும், இடது காலில் அனுமானும், வலதுகால் நடுப்பூட்டுக்குக் கீழ் விந்தியபர்வதமும், வயிற்றினிடையில் பூமிதேவியும், அடிவயிற்றில் சனக, சனந்தன, சனாதன, சனக்குமாரர்களும், மடிக்கு மேல் பக்கத்தில் க்ஷீரசாகரமும் பின்னங்கால் சப்பைக்கு மேல்பாகம் பரத்துவாசரும், பெண்குறியில் இலக்குமியும் அதன் கீழ் கங்காதேவியும், இடது பின்னங்காலில் துரோணாசல பர்வதமும், வலது பின்னங்காலில் மகேந்திரபர்வதமும், துடையில் நாரதரும், அடிச்சப்பையில் விச்வாமித்திரரும், வாலின் குஞ்சத்தில் நிதனரும் (யமன்), வால் மேல்பாகத்தில் நாகராஜாவும், மற்றுமுள்ள ஒவ்வொரு ரோமங்களிலும் சகல தேவர்களும் முனிவர்களும் வசிப்பதாகச் சொல்லப்படுகிறது ஆகையால் பசுக்கள் புனிதமான தன்மையுடையன என்று யாவராலும் பூஜிக்கப்படுகின்றன. ஓர் பசுவைப்பிரதக்ஷிணம் செய்து எல்லா உலகங்களையும் சுற்றிவந்த பலனை அடைந்து அகலியைக் கௌதம மகரிஷி அடைந்தகதை பிரசித்தமானது.

கைலாயத்தில் சிவபெருமான் முன்னிலையில் சதாகாலமும் விருஷபராகிய, நந்தீசர் காவல் காத்துக் கொண்டிருக்கிறார். அவருக்குத் துணையாகப் பக்கத்தல் கபில நிறமுள்ள நந்தை, கருநிறமான சுபத்திரை, வெண்ணிறமான சுரபி, தாமிர நிறமான சுசீலை, தூம்ர (புகை) நிறமுள்ள சுமனை, என்று ஐந்து பசுக்கள் வசித்து வந்தன. மகேசுவரர் உலகத்தில் உள்ள மக்களிடம் அன்புகூர்ந்து அப்பசுக்களை பூலோகத்தில் பிறக்கும்படி அருள்கூர்ந்ததினால்தான் அவைகள் பாற்கடலில் பிறந்து இவ்வுலகில் வாழும் எல்லா ஜீவர்களுக்கும் தாய்போல் பலவளங்களைக் கொடுத்து தேகத்தையும் வளர்த்து வருகின்றன.

முன்பு ஒரு யுகத்தில் அசுரர்களும் தேவர்களும் சேர்ந்து அமுதத்திற்காக வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் மந்தரம் என்னும் மலையை மத்தாகவும் உபயோகித்துத் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, அத்திருப்பாற் கடலினின்றும் கற்பக விருக்ஷம், ஐராவதம், கௌஸ்துபமணி, இலக்குமி, அழகிய அசுவம், காமதேனு, முதலியன உண்டானதாகவும், இவற்றுள் காமதேனு இந்திரனுக்கு அவனுடைய தவச்சிறப்பை மெச்சிக் கொடுக்கப்பட்டது என்றும் அக்காமதேனுவிடமாக

மானிடர், பறவை, விலங்கு, ஊர்வன, மரம்செடி முதலியவைகள் உண்டானதாகவும், தெய்வ மனித வகைகளுக்கு எல்லா சுகங்களும் அளிப்பதற்காகவே பிரம்ம தேவர் காம தேனுவை மானஸீகமாகப் படைத்து தேவேந்திரனுக்குக் கொடுத்ததாகவும் வேதங்கள், புராணங்கள் முதலிய நமது சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது.

பொதுவாக நோக்குங்கால் கடவுளால் புவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எல்லாவித ஜீவராசிகளிலும் பசுக்களே முதன்மையானவை என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இக்காரணம்பற்றியே பண்டைக்காலம் முதல் இந்துக்கள் பசுக்களை தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். அதை சேவிப்பவர்களுக்கு இம்மை மறுமையில் துக்கமே கிடையாது என்றும் நம்பப்படுகிறது. ஆயிரக்கணக்கான புராதன நூல்கள், இத்தகைய சேவையின் பலனைப் பற்றியும் பசுக்களைப் பூஜிப்பதினால் கிடைக்கும் நன்மையைப் பற்றியும் மிகுதியாகக் கூறியுள்ளன. பசுக்களைக் துன்புறுத்தினாலும் அலக்ஷியம் செய்தாலும் நரகவாசம் உண்டாகுமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இன்றும் நாளையும் பக்தியுள்ள இந்து காலையில் எழுந்தவுடன் பசுக்களைப் பார்த்து நமஸ்கரிக்கிறான். கெட்ட கனவு கண்டால் பசுக்களின் பெயரைச் சொல்லி வணங்கினால் எல்லாக் கெடுதிகளும் நீங்குமென்று நம்பப்படுகிறது. பசுக்கள் தெய்வத்தன்மை பொருந்தியவையானையால் ஆலயங்களில் நடக்கும் பூஜை சமயங்களில் பசுவையும் இடபத்தையும் ஆண்டவன் முன்னிலையில் நிறுத்தி ஆராதனை செய்கிறார்கள். இக்காலத்திலும் ஜனங்கள் தினம் தினம் பசுவைக் குளிப்பாட்டிக் குங்குமம் புஷ்பம் அணிவித்து வலம் வந்து வணங்குவதை நாம் காண்கின்றோம். அநேக தனவந்தர்கள் இல்லங்களில் தினம் அதைப் பூஜைசெய்கிறார்கள். அதனால் வற்றாத செல்வத்தையும் அனுபவிக்கிறார்கள், இன்னும் பலர் கொஞ்சம் புல்லையோ அகத்திக்கீரையையோ தினம் அல்லது குறிப்பிட்ட விசேஷ காலங்களில் பசுக்களுக்குத் தங்கள் கையால் கொடுத்து உபசரிப்பதை நாம் காண்கின்றோம். கோயில்களில் அபிஷேகத் திரவியங்களில் பசுவினிடம் உண்டான பால், தயிர், நெய் இவைதான் முதன்மை ஸ்தானம் பெற்று இருக்கின்றன. கிராமங்களிலும் பெரிய நகரங்களிலும் மாடுகுடிக்கத் தண்



ணீர்த் தொட்டி, குளம் முதலியவைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஊர் மாடுகளுக்காகப் பொலி காளைகளை அநேகர் வாங்கிக் கோவில்களுக்கு விட்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம். பசுக்களின் சாணம், இந்துக்களின் வீட்டில் எல்லாச் சடங்குகளிலும் சுத்தம் செய்வதற்காக உபயோகபட்டு வருகின்றது. குழந்தைகளில்லாத இந்துக்கள் குறிப்பிட்ட தினங்களில் பசுவைக் குளிப்பாட்டி அலங்கரித்து கிருஷ்ண பகவானுடைய பெயரை உச்சரித்து பிரதக்ஷணம் வந்து நமஸ்கரிப்பார்களானால் புத்திர சந்தானம் உண்டாகும் என்ற நம்பிக்கை இன்றும் நிலவிவருகிறது. மாட்டுக் கொட்டிலில் வாரம் இருமுறை சாம்பிராணி தூபம் போடுவதும் நம்மிடம் வழக்கமாக இருந்துவருகிறது. விலக்கான ஸ்திரீகள் மாட்டுக் கொட்டில் பக்கம் போவது பெரியத்தவறு என்றும் எண்ணப்படுகிறது. மேற்சொல்லியபடி பசுக்களின் தொண்டை ஆற்றினால் மக்களுடைய பாவம் நீங்கி, சகல விதமான கெடுதிகளினின்று விடுவிக்கப்படுவர், ஞான சித்தியை அடைவர், எந்தக் காரியமும் கைகூடி எல்லா விதமான செல்வங்களையும் அடைவர். அவர்களுடைய சந்ததிகள் க்ஷேமமாய் வாழ்வர், மக்கட்பேறு இல்லாதவர்கள் மக்கட்பேறு பெற்று தீர்க்காயுளுடன் வசிப்பார்கள், என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கன்று போடும் சமயத்தில் 'உபய தோமுகி' என்றுசொல்லப்படும் இருபக்கமும் தலை உடைய பசுவை தரிசித்து வலம் வந்துவணங்கிப் பிரார்த்தித்தால் சகல பாவங்களும் நீங்கிச் சுவர்க்கம் சேருவர் என்று கருதப்படுகிறது. பூமியில் பிறந்தது முதல் ஒரு புண்ணியமும் செய்யாத பாமரர்கள் கூடப்புண்ணிய லோகத்தை அடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதைத்தவிர பசுக்களைத்தானம் செய்தால் நானாவித இக பரசுகங்களையும் அடைவார்கள் என்று புராணங்களும் சாஸ்திரங்களும் கூறுகின்றன. கோதானம் செய்யும்பொழுது இன்னின்ன லக்ஷணம், வர்ணம், தேகஅமைப்புக் கொண்ட பசுக்களை இவ்வித காலங்களில் தானம் செய்தால் நன்மை பயக்குமென்று விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிரக பலம் குறையும் காலத்தும் கிரகபாதை ஏற்படும் காலத்திலும் வியாதிவந்தடையும் சமயங்களிலும் எந்தவிதமான பசுக்களை எந்தெந்த அலங்காரத்துடன் யாருக்கு எவ்விதம் தருதல்

வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. அவ்விதம் இன்றும் இந்துக்கள் பயபக்தியுடன் கோதானம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது யாவருமறிந்த உண்மையே. ஒவ்வொரு கிராமத்திலும் பசுக்கள் மேய்வதற்காகக் கிராமத்தைச் சுற்றிலும் 1 குரோசம் (கூப்பிடுதூரம்) வரையில் உள்ள இடத்தை இருபுறமும் உயரமான வேலி அடைப்பு அடைத்துப் புல் வளரவிடவேண்டுமென்று நமது தர்ம சாஸ்திரங்களும் அரசியல் நூல்களும் கூறுகின்றன. வட இந்தியாவில் ஸ்ரீ பரந்தாமனாகிய கிருஷ்ணபரமாத்மாவின் லீலை சம்மந்தப்பட்ட இடங்களாகிய மதுராபுரி, பிருந்தாவனம், கோகுலம், துவாரகை, பூரி முதலியபுண்ணிய ஸ்தலங்களிலும், அநேக பட்டணங்களிலும், பசுவை விரட்டுவதில்லை, அடிப்பதுமில்லை எவ்விதமான தீங்கு அவைகள் இழைத்தாலும் அவற்றை இம்சிக்காமல் விலக்கி அனுப்பிவிடுவார்கள். இவ்வாறாக இந்துக்களின் மனதில் ஒரு புனிதமான இடத்தை இப் பசுக்கள் அடைந்து இருப்பது வியக்கத்தக்கதல்ல. உலகிலுள்ள எவ்விதமான ஆகாரப்பொருளைக் காட்டிலும் பால், தயிர், நெய் இம்மூன்றைத்தான் நம்நாட்டு வைத்திய நூல்களும், மேல்நாட்டு வைத்திய நூல்களும் அதிசிரேஷ்டமாகக்கருதுகின்றன. மேற்கூறிய அனுபவ உண்மையினால், ஒருவன் பசு ரக்ஷித்தல் சம்மந்தமாய் எவ்வளவுக் கெவ்வளவு ஊக்கமும் அக்கரையும் காட்டி வருகிறானோ அவ்வளவும் அவனுக்குத் தனிப்பெருமையையும் நன்மையையும் கடைசியில் பரலோகத்திற்கான புண்ணியத்தையும் கொடுக்கும் என்பது நிச்சயம். பசுக்களை ஒழுங்கான முறையில் காப்பாற்றுவதால் மக்கள் அவைகளிடமுண்டாகும் ஆரோக்கியம் தரத்தக்கதான பால், தயிர், நெய் முதலான ஆகாராதிகளை அடைந்து தன் இனத்தாரின் உடல் நலனை அதிகரிக்கச் செய்கிறார்கள் என்பது பிரத்திக்ஷயமான உண்மை. இது பற்றியே நமது பெரியோர்கள் உலகத்தாருக்கு வாழி கூறுமிடத்து 'வாழ்க அந்தணர் வானவர், ஆனினம், என்றனர். இதன் பொருள் என்னவெனில், நமது மக்களுக்குக் கல்வியைக் கொடுத்து மனதைத் திருத்தும் அந்தணர்களும், பிணிவராமல் நமது உடலை வளர்க்கும் பாலைக் கொடுக்கும் பசுக்களும், நமது இடையூறுகளைப் போக்கி இஷ்டசித்திகளைக் கொடுக்கும் தேவர்களும் வாழட்டும் என்பதாகும்.



அநேக ஆயிரமாண்டுகளுக்கு முன் ஏற்பட்டு நாகரீகமடைந்த கிரேக்கர், அசீரியர், எகிப்தியர், ரோமர் முதலானவர்களின் புராண காவியங்களிலிருந்து அவர்களும் பசுக்களையும் இடபங்களையும் தெய்வமாகக் கொண்டாடிக் கோயில் முதலியவைகளையும் கட்டுவித்தார்கள், என்பது தெளிவாக விளங்குகிறது. ஆகையால் ஆதிகால முதற்கொண்டு, இந்துக்களிடை மட்டுமல்லாது, உலகத்தில் பழைமையாக ஏற்பட்டிருந்து இப்பொழுது அழிந்துபோன மேல்நாட்டுப் புராதன ஜாதியினரும், பசு, காளை, முதலானவைகளைக் காப்பாற்றி மேன்மையாக நடத்தி வந்தார்கள் என்றால், பசுக்களின் சிறப்பு எப்படிப்பட்டது என்பது சொல்லாமலே விளங்கும்.

புராணங்கள் கூறும் உண்மை எவ்விதமாயினும், நாம் நடைமுறையில் கண்கூடாகக் கண்டு நேரில் அனுபவிக்கும் உண்மையாதெனில், எல்லாவிதமான ஆகாராதிகளைக் காட்டிலும், பாலும் அதன் உபபொருள்களாகிய தயிர் நெய் முதலானவைகளும் நம் தேகத்தை நன்கு காத்து வருகின்றன என்பது தான். பாலில் எல்லாவிதமான புஷ்டி தரக்கூடிய சத்துக்களும் ஒருங்கே கூடியிருப்பதாக உணவுப்பொருள் நிபுணர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆகையினால் நாம் பசுக்களைக்காத்து அதனால் பிரதிப் பிரயோஜனமடைய வேண்டுமென்ற கொள்கையை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டு அங்ஙனம் நடந்தோமானால், நம் நாட்டில் சமீபகாலமாக வலிமையில் க்ஷீணமடைந்து வரும் பசுக்களை மறுபடியும் தேஜசுடன் கூடியதும் சர்வாபீஷ்டங்களைத் தரக்கூடியதுமான புராண காலத்துப்பசுக்களைப்போல் செய்யக்கூடும். என்ற நிச்சயத்தை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

## அத்தியாயம் 2.

# பசு, எருமை, இவைகளின் உபயோகங்கள்

பசுக்களினால் மானிடவர்க்கத்திற்குப் பால், தயிர், நெய் முதலிய ஜீவசத்துப் பொருள்கள் கிடைக்கின்றன. பால் மக்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். பாலில் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய போதுமான எல்லாவித ஜீவசத்துக்களும் உண்டென்பதை முன்பே கூறியுள்ளோம். சாதாரணமாக, சிசு பிறந்து இரண்டொரு வருஷங்கள்தான், தாய்ப் பாலில் வளர்ந்து வருகிறது. அதன் பின் குழந்தைகளைப் பசுவின் பாலில் வளர்க்கிறார்கள். நாகரீக முற்றிப்போன இக்காலங்களில், பழங்காலத் தாய்மார்கள் போல் இப்பொழுது முழு ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடமோ தாய்ப்பாலை உண்ணவிடுவதில்லை.' அதற்குள் பசும்பாலையும், பணக்காரர்கள் உலரவைத்து டப்பிக்களிலடைத்து வரும் பசுவின் பாலையும் கொண்டுதான் வளர்க்கிறார்கள். தாயில்லாக் குழந்தைகள் தாய்ப்பாலுக்குச் சமதையுள்ள பசும்பாலினால் வளர்க்கப்படுகின்றன*.

தாய் கர்ப்பிணியானதும் அவளும் அவளுடைய கர்ப்பத்திலுள்ள சிசுவும் பசுவின் பாலினால் வளர்ச்சி பெறுகின்றன. பாலானது தாயின் ரஸதாதுவில் சேர்ந்து குழந்தைக்குப் புஷ்டிதருகிறது. கர்ப்பிணிகளின் ஆகாரத்தில் முக்யத்துவம் பெற்றது பால், தயிர், நெய், வெண்ணெய் முதலியனவே. ஆகையால் கருவிலுள்ள சிசு, கரு உண்டானதிலிருந்து பாலினால் நல்ல வளர்ச்சி பெற்று வளரக்கூடியது.*

மக்களுக்கு உலகத்தில் எல்லாரையும் விடத் தாய்தான் சிரேஷ்டமானவள் என்று சகல நூல்களும் கூறுகின்றன.

* கர்ப்பிணியின் போஷணை விதியைப் பற்றி 'சரபேந்திரர் வைத்திய முறை—கர்ப்பிணி பாலரோக சிகிச்சை' (சரஸ்வதிமகால் 3-வது வெளியீடு) முகவுரையைப் பார்க்க.



இப்படிப்பட்ட தாயைவிடப் பசுவே மேலானது என்று வேதங்கள் கூறுகின்றன. ஒருவன் கர்ப்பத்தில் சிசுவாய் உருவெடுத்த காலமுதல் அவன் இறக்கும்வரையில் பசுக்களின் பாலினால் வளர்க்கப்படுவதால், சிலகாலம் உட்கொண்ட அன்னையின் பாலை விடப் பசுவின் பால்தான் அவனுக்கு இணைபிரியாத தாயாக விளங்குகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. சிசு பிறந்ததும் பசுவிடமுற்பத்தியான கோரோசனையையே முதல் மருந்தாகக் கொடுக்கிறார்கள். ஏனெனில், அது குழந்தைக்கு சகஜமாக வரக்கூடிய கபக்கட்டைப் போக்கி, அக்னிபலத்தைக் கொடுத்து, குரலைசுத்தப்படுத்தி, சரிவர மலத்தைக் கழிக்கும்சக்திவாய்ந்த, குழந்தைகளுக்கேற்ற சாந்தமான மருந்து. எவ்வளவு ஏழையானாலும் ஒவ்வொருவனும் பாலையாவது, பால் சம்மந்தப்பட்ட ஆகாரங்களையாவது உட்கொள்ளுகிறான். சில காலம் பால் அல்லது பால் சம்மந்தப்பட்ட ஆகாரங்களையே ஒருவன் சாப்பிடாவிடில், அவனுக்கு அநேக விதமான பயங்கர வியாதிகள் உண்டாகும் என்று ஆகாரசத்து ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகின்றனர்.

பாலின் மேன்மையை வைத்திய நூல்களிலும் புராணங்களிலும் வெகுவாக சிலாகித்திருக்கின்றனர். கறந்த சூட்டுடன் கூடிய பால் அமிர்தம் என்றும் கூறப்படுகிறது. அதை உட்கொண்டவர்களுக்கு மூப்புக் கிடையாது என்றும் சொல்லப்படுகிறது. சுரபி என்னும் தெய்வப்பசுவின் பாலை குடித்ததின் பயனாய் எல்லா தேவர்களும் மூப்பு, சாவு இல்லாத வரம் பெற்றார்கள். பராசக்தியாகிய பார்வதிதேவி பசுரூபமெடுத்துத் திருவானைக்காவென்னும் ஜம்புகேசுவரத்திலும், மதுரையம்பதியிலும் சிவபெருமானைப் பூசித்துப் பாலபிஷேகம் செய்வித்து, சித்திபெற்றதாக அவ்வூர்ப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பால் எவ்வளவு மகிமை வாய்ந்தது என்பது தெளிவாகிறது.

பசு என்பது பொதுச்சொல். பசு, என்றால் பசுக்களில் பெண் மாட்டிற்கும், எருமை என்றால் எருமையினத்தில் பெண் எருமைக்கும் பெயர். ஆண்மாட்டிற்குக் காளை, இடபம் என்றும், எருமை ஜாதியில் ஆணுக்குக் கிடா என்றும்

பெயர் வழங்கப்படுகிறது, பசுவின்பால் கோயில்களில் அபிஷேகத்திற்காகவும், நெய், கடவுள் சன்னிதானத்தில் விளக்கேற்றவும், உதவுகிறது. அநேக மருந்துகளில் பசுவின்பால், நெய், தயிர், வெண்ணெய், இவை உபயோகப்படுகின்றன. இவைகளுக்கு வியாதியைக்குணப்படுத்தும் சக்தியுமிருக்கிறது. நம்நாட்டுப் புராதன வைத்திய சாஸ்திரங்களில் பசுவின் பால் முதலியவைகளைப்பற்றிய குணதோஷங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஆயுர்வேத, சித்தவைத்திய முறைகளால் தயாரிக்கப்படும் பற்பம் முதலிய உயர்ந்த மருந்து வகைகள் செய்வதற்கு பசுவின்சாணம் புடம்போட வறட்டியாக உபயோகப்படுத்துவது ஓர் சிறந்த முறையாகக் கையாளப்பட்டு வருகிறது. மருந்துகள் செய்வதற்கு மிகுதியாகப் பசுவின் பாலைத்தான் கையாளுகிறார்கள். எருமைப்பால் கனமாகவும் தூய வெள்ளையாயும், பசுவின்பால் சிறிது பீத (மஞ்சள்) நிறங் கலந்ததாகவும் இருக்கும்.

பசுவின்பால் அநேக நோய்களைக் கண்டிக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வெண்ணிறப் பசுவின்பால் பித்த ரோகத்தையும், கருநிறப் பசுவின்பால் சிலேஷ்ம ரோகத்தையும், சிகப்பு நிறப் பசுவின்பால் வாதத்தாலேற்படும் ரோகத்தையும், காராம் பசுவின்பால் எல்லாவித சளி, பித்த, நயன ரோகங்களையும் நிவர்த்திக்கும் குணமுடையது. நடைமுறையில் காராம்பசுவின் பாலை அபிஷேகத்திற்குத்தவிர வீட்டில் உபயோகப்படுத்துவதில்லை. ஆனால் வைத்திய சாஸ்திரங்களில் அதை மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பசுக்களில் கபிலை நிறப்பசுவே சிறந்ததாக அகத்தியம் முதலிய சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பசுவின்பால் எல்லாவித ரோகங்களையும் போக்கக் கூடிய சக்தியுடையதாகக் கருதப்படுகிறது. கபிலை நிறமென்றால் மங்கலான பொன்னிறம் அல்லது கோரோசனை வர்ணமெனப்படும். பசுவின் தயிர், மோர், இவை, பித்தம், விக்கல், பேதி, கிராணி, தேகச்சூடு, வெட்டைச்சூடு, தாகம், சரிப்பின்மை, மந்தக் கோளாறு, இருமல் முதலிய வியாதிகளுக்கு ஏற்றது.

பசுவின் வெண்ணெய், மண்டைச்சூடு, கண் எரிச்சல், புகைச்சல், இவைகளுக்கும், புண்களை ஆற்றுவதற்கும் கண் அஞ்சனத்துக்கும் உபயோகப்படுகிறது. வெண்ணெயைக் கொஞ்சம், காலையிலும் மாலையிலும் சர்க்கரை



யில் கலந்து உண்டால் சகலவித நோய்களும் தீரும். பசுவின் நெய் எல்லாவிதக் குடல் நோய், குன்மம், பிரமேகம், புண், அஸ்திசுரம் முதலியவைகளைக் கண்டிக்கும். முக்கியமாக வெண்ணெயை ஆகாரத்துடன் கலந்து தினம் புசிக்கச் சகலவிதப் பிணிகளும் நீங்கி வனப்பு, சுறுசுறுப்பு, தீபனம், புஷ்டி முதலியவை உண்டாகும். "நெய்யில்லா உண்டிபாழ்" என்னும் தமிழ்ப் பழமொழி மிகப் பொருத்தமானது. மேலும் பசுவின் வயிற்றில் உண்டாகும் கோரோசனை சிறந்த மருந்துகளில் ஒன்றாகும்.

எருமைப்பால் வெண்மையாகவும் பசுவின் பாலைவிடக் கெட்டியாகவும் கொழுப்பு அதிகமுள்ளதாகவும் இருக்கிறது. சீக்கிரத்தில் ஜீரணமாகாது. குழந்தைகளுக்கு எருமைப்பால் அவ்வளவு சிலாக்கியமில்லை. இப்பால் வாதத்தை மிகப்படுத்தும். பால் கனமாக இருப்பதால் பலவித பானங்கள் செய்து குடிக்கப்படுகிறது. எருமையின் மோர் தாகத்தைக் குறைக்கும், சகலவித பேதிக் கிராணிகளையும் நாசம் செய்யும் குணமுடையது. எருமை வெண்ணெயும், நெய்யும் போஜனத்திற்கு மட்டும் நல்லது. மருந்துக்கும் பத்தியம் காப்பவர்களுக்கும் இவைகளைச் சேர்த்தல் தீமையன்றி நன்மை பயக்காதென்று கூறப்பட்டிருக்கிறது.

## காளைமாடு, எருமைக்கடா, இவற்றின் உபயோகங்கள்.

### 1. பொலிகாளைகள்

நம் நாட்டிலுள்ள கிராமங்கள், கோயில்களைச் சுற்றித் தான் உண்டாயின. கோயில் இல்லாத கிராமமே கிடையாது என்றும் சொல்லலாம். செல்வம், நாகரிகம், வளம் எல்லாவற்றிற்கும் கோயிலும் கோயிலைச் சுற்றியுள்ள கிராமங்களுமே பிறப்பிடம். பண்டைக் காலமுதல் இந்நாட்டில் சிறந்த இனக் காளை மாடுகளைக் கோயிலுக்கு விட்டு விடுவது வழக்கம். ஆலயங்களில் நடக்கும் பூஜை, புறப்பாடு முதலியவைகளில் கலந்துகொள்வதற்கும், அவ்வூரிலுள்ள பசுக்களுக்குக் காளைகளாகப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடனும், பொலிகாளைகளைக் கோயிலுக்கு விட்டு வந்தார்கள். இப்பொலிகாளைகளினால் பல்லாயிரக் கணக்கான பசுக்கள் பயன்பட்டுப் பசு இனம் விருத்திக்கு வந்திருக்கிறது. பரமசிவனுடைய வாகனம் ரிஷபமானதால் கோவில்காளைகளையும் இடபம் என்று கூப்பிடுகிறார்கள். இக்காளைமாடுகளை உழவு, வண்டி, ஏற்றம், முதலியவற்றிற்கு உபயோகப்படுத்துவது பொல்லாத பாபம் என்றும் பொலி உபயோகத்தைத் தவிர வேறு எவ்வித வேலைக்கும் பயன் படுத்தலாகாது என்றும்

சாஸ்திரங்களில் காணப்படுகிறது. அக்காலத்தில் பொலி மாடுகளுக்குத் தனி அந்தஸ்தும் செல்வாக்கும் இருந்தது.

இதைத்தவிர கிராமங்களிலும் நகரங்களிலும் அரசாங்கத்தார் அநேக பொலிகாளைகளைப் பொது உபயோகத்திற்காக வைத்திருக்கிறார்கள். மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு பொலி காளைகளின் பேரில் கவனஞ்செலுத்தி விருத்தி செய்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பசு இனங்கள் மிகப் பெருகி நாட்டுச் செல்வத்தையும் ஜனங்களின் சுகத்தையும் விருத்தி செய்யும். பொலி காளைகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவைகள் சுத்தமான இனத்தைச் சேர்ந்ததாகவும் நல்ல லக்ஷணமுள்ளதாகவும், விரை எடுக்காமலும் காய் பிடிக்காமலுமிருக்கிற காளைகளை விரும்பவேண்டும். சாதாரணமாக நாற்பதுக்கு மேல் ஐம்பது பசுக்களுக்கு ஒரு பொலிகாளை இருத்தல் தரமானது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்று அல்லது இரண்டு காளை இருக்கவேண்டியதவசியம். சிறிய கிராமத்தில் தனியாக வைத்துப் பராமரிக்க முடியாத சந்தர்ப்பங்களில் பக்கத்துக் கிராமங்களின் உதவியை நாடி ஒரு காளையை வாங்கிப் பொதுவாக உபயோகித்துக் கொள்வது நலம். அக்காளையானது பொதுச் சொத்தாக இருக்கும். வேண்டும்போது யாவருக்கும் பயனளிக்கும்.

நிறையப் பால் கறக்கும்படியான, பசுக்களுக்கும், உழவுக்கும், வண்டிக்கும், ஏற்ற காளைகளுக்கும் பொலிகாளைகளே காரணமாக இருப்பதால் பொலிகாளைகளை வாங்கும்போது சில விசேஷ அமைப்புக்களைக் கூர்ந்து கவனித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். முதலில் அக்காளை நல்ல வமிசத்தைச்சேர்ந்ததா என்பதை நிச்சயிக்கவேண்டும். திடமான முறுக்கேறிய சதைகளுடன் கூடிய முன்னங்கால், தோள் பட்டைகளும், சுத்தமான கால்களும், சிறிய இடுப்பும், உறுதியுடன் கூடியதும் வெடிப்பில்லாத குளம்புகளுடையதுமான பின்னங்கால்களும், இருக்கவேண்டும். காளைகளைக் குறைந்தது 2½ வருஷம் வரையில் உபயோகிக்கக்கூடாது. அப்படிச் செய்தால் சீக்கிரம் அதன் வளர்ச்சி குறைந்து, குட்டையாகவும் பின்னர் சரியான பலன் தரக்கூடாததாகவும்ஆகிவிடும். சாதாரணமாக 3½ யிலிருந்து 4 வருஷத்தில் காளை முறுக்கான பருவமடையும். அப்பொழுது வருஷம் 1-க்கு 60 திலிருந்து 80 முறை பணி செய்யக்கூடிய திறமை யுடையதாகும். சில காளைகள் 100



முன்றபணி செய்விக்கபடுகிறது. இது உசிதமில்லை. பொதுவாக கனத்த காளைகளைவிட மெல்லிய உடலையுடைய காளைகள் தான் பொலிதலுக்கு ஏற்றது. அதிகமான பொலிதலாலும் நெடுநாள் பொலிதலில்லாமல் இருப்பதாலும். அவைகளின் ஆயுளுக்கும் பீஜ நரம்புகளுக்கும் கெடுதி ஏற்படும். தினம் காலை மாலை ஒரு மணி நேரம் கட்டாந்தரை ரஸ்தாவில் நடத்தி உடற்பயிற்சி கொடுத்தால் உடலிலுள்ள அனாவசியமான கொழுப்புக் குறைந்து காளை சுறுசுறுப்பாகிப் பொலிதலுக்கு ஏற்றதாகும். சரியான உடற்பயிற்சி யில்லாவிடில், காளை மந்தமாகி, ஜீரண சக்தி குறைந்து பொலிதலுக்கு இணங்காததாகும். பொலிதலுக்குக் காளைகள் இரண்டரை வருஷம் முதல் எட்டு வருஷம் வரையில் பிரயோஜனப் படுகின்றன. ஒரு பொலிகாளையை ஒரே இடத்தில் மூன்று அல்லது நான்கு வருஷத்திற்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது. தன் வமிசத்துடன் சேர்ந்தால் இனம் கெட்டு பலவீனமான சந்ததிகளும், மலட்டுப் பசுக்களும், பொலிதலுக்குத் தகுதியற்ற காளைகளும் பிறக்கும். காளை மாடுகளுக்கு ஏற்பட்ட விதிகளே எருமைக் கிடாக்களுக்கும் பொருந்தும்.

## 2. இதர உபயோகங்கள்

பொலிகாளைகளைத் தவிர உழவுமாடுகளும் பாரம் சுமக்கும் வண்டிமாடுகளும் உண்டு. நம் நாட்டில் ஆகார உற்பத்தியைப் பெருக்கி மக்கள் திருப்தியுடன் வாழவேண்டுமானால் உழவுத் தொழில் உயர வேண்டும். காளைமாடுகள் நல்ல சக்தியுடையனவாயும் களைப்பின்றித் தொண்டாற்றும் வல்லமையுள்ளவையாகவும் இருந்தால்தான், உழவுத் தொழில் வளரும். உழவுக்கும் மற்ற உபயோகத்திற்குமான காளை மாடுகளின் விதையை அடித்துவிடுவது வழக்கம். அவ்வாறு காய் பிடித்தால் மாடுகள் வேலைக்குதவும். வண்டிகளில் சவாரிவண்டி, சுமைவண்டி, பந்தயவண்டிகளென்ற பிரிவுகளுமுண்டு.

நம் நாட்டு கிராமங்களில் மாட்டுவண்டிப் பந்தயம் நடத்துகிறார்கள். பந்தயத்திற்காகவே தனி ஜாதிமாடுகளை தயார் செய்து வைத்திருக்கிறார்கள். பந்தய வண்டிகளுக்கு 'ரேக்லா' வண்டி அல்லது கேணி வண்டி என்று பெயர். ஒரு காலத்தில் அநேக கிராமங்களில் இவ்வகைப் பொழுது-

போக்கு மலிந்து கிடந்தது. ஆனால் சிறிது சிறிதாக இக்கலை குன்றி க்ஷீணித்துவிட்டது. அத்துடன் "ரேக்லா" வுக்கென்றே உற்பத்தியாகும் தனி ஜாதி மாடுகளும் மறைந்து கொண்டு வருவது வருந்தத்தக்கது.

மாடுகளின் சாணம், மூத்திரம், இவைகள் வயலுக்குச் சிறந்த உரமாக உபயோகப்படுகிறது. எருவாராய்ச்சியாளர்கள் மாடுகளின் கழிவுப்பொருள் மிகவும் உயர்ந்த எரு என்றும் எளிதில் கிடைக்கக்கூடிய இவ்வுரத்தை மக்கள் சரியான முறையில் பயன் படுத்திக்கொள்வதில்லை என்றும் குறை கூறுகின்றனர். கிராமங்களில் அடுப்பெரிக்கச் சாணியாலான வறட்டியை உபயோகிக்கின்றனர். இவ்விதம் விறகுக்குப்பதிலாக உபயோகப்படுத்தாமல் நிலத்துக்கு எருவாகக் கொண்டால் வீணாகப் போகும் பொருளால் உணவுப் பொருள் உற்பத்தியை பதின்மடங்காக்கலாம்.

பசுக்கள் உயிருடனிருக்கும்பொழுது நமக்குப் பால், தயிர், வெண்ணெய், நெய், எரு, முதலிய சிறந்த பண்டங்களைக் கொடுத்தும் எருதுகள், ஏர், கபிலை ஏற்றம், சுமைவண்டி வாகனம் முதலியவைகளை இழுத்தும் பொறுமையாகச் சேவகம் செய்கின்றன. அவைகளிறந்த பிறகும் மனிதனுக்குப் பயன் படுகின்றன. அதன் தோல் பல வேலைகளுக்கும், எலும்பு சர்க்கரை சுத்தம் செய்யவும், நிலங்களுக்கு எருவாகவும், கொம்பு, குளம்புகள் பசை முதலியவைகளுக்கும், கொழுப்பு, மசை, மெழுகுவர்த்தி செய்யவும், உபயோகப்படுகின்றன.

---

## அத்தியாயம் 3.

# மாடுகளின் தேக அமைப்பு, லக்ஷணம், வர்ணம், சுழி, முதலியன.

மாட்டின் ஆயுள் சுமார் 20 திலிருந்து 22 என்று சொல்லுவதுண்டு. நான்காவது வருஷம் பூரண வளர்ச்சி பெற்று வேலை செய்ய ஏற்றதாகிறது. பன்னிரண்டு வருடம்



உழைத்து. அதன்பின் பலங்குன்றி விருத்தாப்பியம் அடைகிறது. மூப்படைந்த காளைமாடுகளிடம் வேலை வாங்கக் கூடாது.

### 2. பற்கள்

பிறந்த கன்றுக்கு இரண்டு பற்களுண்டு. முப்பது நாளுக்குள் 8 பற்கள் முளைத்து, எட்டு மாதம் கழித்து, இப்பாற்பற்கள் விழ ஆரம்பித்து, ஒன்றரை வருடத்தில் எல்லாப் பற்களும் விழுந்து விடும். இதற்குத்தான் பல் படாத கன்று என்று பெயர். இரண்டு வருடம் நிரம்பியதும் இரு பற்கள் வரும். பிறகு பிரதிவருஷத்திற்கு இரண்டு பற்களாக முளைத்து ஐந்தாவது வயதுக்கு எட்டுப்பற்களும் நிரம்பிவிடும். நான்கு பல்லுடைய மாடுதான் வேலைக்குத் தகுதியான முழு வளர்ச்சிபெற்றதாகும். ஆறுபல், எட்டுப்பல் வந்ததற்கு 'கடை உத்தமாடு' என்றும் வயது அடைந்தமாடு என்றும் பெயர். வயது பத்து நிரம்பியதும் பற்கள் தேய்வடைந்து குறைந்து கொண்டே வரும். அப்பொழுது கிழத்தனம் ஆரம்பித்து விட்டது என்று ஊகிக்கலாம்.

சிலர் பசுக்களின் கொம்புகளில் காணும் வரம்புகளைப் பார்த்து மாட்டின் வயதை நிர்ணயிப்பார்கள். ஒவ்வொரு கன்றின் ஈத்துக்கு ஒருவரம்புகட்டும் என்றும், அதிலிருந்து பசுவின் வயது என்னவென்று சொல்லக்கூடும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் வரம்புப் பரிக்ஷையினால் நிச்சயமாக மாட்டின் வயது சொல்வது கஷ்டம்.

காளைமாடுகளின் வயதைப் பல்லைபார்த்தும் குளம்பு வளர்ச்சியைச் சோதித்தும் சொல்லக்கூடும். பொலி காளை மாடுகள் இரண்டரைவயதுமுதல் சுமார் எட்டுவயதுவரையில் தான் பயனளிக்கவல்லது.

### 3. நல்ல தேக அமைப்புள்ள மாடுகள்

(1) மிருதுவான சிவந்த நாக்கு, அண்ணம், சிறிய நேராக உள்ள காதுகள், ஒடுக்கமாக நன்கு அமைந்த வயிறு, சிவந்த வலிவான குளம்புகள், வன்மை பொருந்திய மார்பு, கொழுத்த கொண்டை, மிருதுவான மயிர், மெல்லிய சிவந்த கொம்புகள்,

பூமிவரையில் தொங்கும் பருமனில்லா வால், சிவந்த கடைக் கண்கள், நிதானமான சுவாசம், பலமுள்ள தோள்பட்டைகள், சிறிய பின்துடைகள், மெல்லிய அலைதாடி முதலானவை இருந்தால் விரைவாய்ச் செல்லக்கூடிய நல்லமாடுகளாகும்.

(2) மாட்டின் இடப்பக்கத்தில் சுழித்த ரோமங்கள் இடம்புரியாகவும், (counter-clockwise) வலப்பக்கமுள்ளவை வலம்புரியாகவும், (clockwise) கனுக்கால்கள், மானின் கனுக் கால்களைப்போலவும் வெண்ணிறக் குளம்புகளும், வெண்ணிற வால்குஞ்சமயிருமுடைய மாடுகள் மிகச்சிறந்தவையாகும்.

(3) நீர்க்குமிழியொத்த கண்கள், வெடிப்பில்லாத குளம்புகள், அடர்த்தியாயுள்ள இமைமயிர்களுள்ள மாடுகள் சுலபமாக சுமைதாங்கும்.

(4) நாசியின் நுனிகளில் மடிப்புள்ளதாயும், பூனைமுகமும், மல்லிகை அல்லது தாமரைநிறம் உடம்பின் வலப்பக்கம் படர்ந்தும் உள்ளமாடுகள் அசுவவேகமுடையவை.

(5) காய்கள் சமமாக நீண்டு தொங்கிக்கொண்டும், வயிறு ஆட்டின் வயிறு போலவும், மார்பு குறுகியும், பின் பட்டை குறுகியுமிருந்தால் நிச்சயமாக நிறைய பளுவைத் தூக்கிக்கொண்டு குதிரைக்குச் சமமாக ஓடவல்லது.

(6) வெள்ளை மாடுகளுக்குப் பழுப்பு நிறக்கண்களும், தாமிர வர்ணக் கொம்புகளும், விசாலமாய வாயும் இருந்தால் அவைகளுக்கு 'அன்னம்' என்று பெயர். அதுக்ஷேமம், அதிருஷ்டம் இவைகளைத்தரத்தக்கது.

(7) பூமிவரையில் தொங்கும் வாலும். சிவந்தகண்களும், கொம்புகளும், விசாலமான கொண்டையும், வெண்ணிறம் மஞ்சள் நிறங்கலந்த மேனியுமிருந்தால் உடையோனைப் பெருஞ் செல்வனுக்கும்.

(8) நான்குகால்களில் ஏதேனும் ஒருகால் வெண்மையாயிருந்தாலும் அவைகளை நல்ல ஜாதி மாடுகள் என்று சொல்வார்கள்.

## 4. உசிதமில்லாத தேக அமைப்புள்ள மாடுகள்

(1) கண்களில் நீரும் பீளையும் வடிந்துகொண்டு அழுக் கடைந்த கண்களும், ஆட்டம்கொடுத்தும், சிவப்பும் கருப்பு நிறமுங் கலந்த கொம்புகளும், கழுதையின் நிறமும், நாலு,



ஏழு, பத்துப் பற்களும், தொங்கும் தலையும், தடித்த குட்டைக் கழுத்தும், வெடித்த குளம்பும், கறுத்து நீண்ட நாக்கும், குறுகிய கனத்த கணுக்கால்களும், மாபெருங் கொண்டையும், தெம்பில்லாத உடலும், இருக்கவேண்டிய எண்ணிக்கைக்கு மேலுள்ள உறுப்புகளும் அமைந்திருந்தால் தீமை பயக்கும் மாடுகளாகும்.

(2) பருத்து அதிகமாகத் தொங்கும் காய்களும், நரம்புகள் நிறைந்த மார்பும் கன்னமும், மூன்று தாரையாக மூத்திரம் பெய்வதும் உள்ள மாடுகள் பயனற்றவை.

(3) மேனிமுழுமையும் பழுப்பும் கருஞ்சிவப்பும், கருமையான நாக்கும், அண்ணமும், உதடுகளும், சதா பெருமூச்சு விடுதலும், உள்ளவை நல்ல மாடுகளல்ல.

(4) அளவுக்குமேல் சாணம் போடுவதும், மிகப் பெரியதான குறியும் கொம்புகளும், வெண்ணிற வயிறும், புள்ளியான் நிறமும் உள்ளவை கெட்டவைகள். அவைகள் வீட்டில் பிறந்தாலும் வைத்துக்கொள்ளத் தகுதியற்றவை.

(5) தேகமுழுவதும் புள்ளிகளும், கருஞ் சிவப்பு நிறமும், புகை வர்ணமும், பூனையின் கண்கள் போன்ற விழியுமிருந்தால், நன்மைதரக் கூடியதல்ல.

(6) சேற்றில் வைத்த கால் எவ்விதம் இழுக்கப்படுமோ அவ்வித நடையும், நடுக்கமுள்ள கண்களும், பலமில்லாத கழுத்துமுள்ள மாடுகள் பளுவை நன்கு சுமக்காது. சேவகமும் செவ்வனே செய்யாது.

## 5. மாடுகளின் நிறம்

மாடுகள் பல நிறங்கொண்டவை. அவைகளில் பிரசித்தமானவை சிவப்பு, மஞ்சள், வெண்மை, தாமிரம், கருப்பு, தூம்ரம் அல்லது சாம்பல் நிறம் என்பவையே. புராணங்களில் கூறப்படும் பசுக்களில் நந்தை கபில நிறமும், சுபத்ரை கரு நிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை தாமிரவர்ணமும், சுமனை தூம்ர வர்ணமும் உள்ளவை என்பது ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது.

யாவற்றிலும் கபில நிறந்தான் மிகவும் மேலானது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நதிகளில் கங்கை எவ்விதம்

உயர்ந்ததோ அவ்வாறு பசுக்களில் கபில நிறப்பசுக்கள் மேன்மையுடையன. தவிர 'இவ்வைந்தின் உபவர்ணங்கள் பல உள்ளன. புகைநிறம், தண்ணீர் நுரை நிறம், காற்றில் பறக்கும் தூசி நிறம், பொன்னிறம், வைக்கோல் போன்ற மங்கிய நிறம், பசுமை நிறம், வெள்ளைக்கம்பளி நிறம், இப்படி அநேகக் கிளைவர்ணங்களுமுண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட நிறங்களிருந்தால் அதற்கு 'மறை' என்றும்பெயர். கண், மூக்கு, கால்கள், கொண்டை, முதுகு, கணுக்கால் இவ்விடங்களில் மங்கின கருநிறமிருந்தால் 'மயிலை' விழுந்த மாடு என்று சொல்வதுண்டு. எருமைகள் சுத்தக் கருநிறமும், மங்கின கருஞ்சாம்பல் வர்ணமுமுள்ளவை.

## 6. மாடுகளின் சுழிகளும் அவைகளின் பலாபலன்களும்

மாடு வாங்கும்பொழுது சுழிகளைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். சுழிகளைப்பார்த்து, நல்ல சுழிகளில்லாவிட்டாலும், கெட்ட சுழிகளில்லாத மாடுகளாகத்தான் எந்த இந்துவும் மாடு வாங்குகிறான். கோயிலுக்கு விடும் மாடுகளுக்குச் சுழிபார்ப்பதில்லை. சாஸ்திரப்படி நோக்கின், கோவிலுக்கு விடும் மாடுகள் சுத்தமாகவும் எல்லாலக்ஷணங்களும் கூடியவையாகவும் இருத்தல் தேவை. ஆனால் நடைமுறையில் கெட்ட சுழிகளுள்ள மாடுகளைத்தான் நாம் பொதுவாகக் கோயில்களுக்கு விடுகிறோம். கோயில்களுக்குச் சுழி கெடுதி இல்லை என்ற கொள்கையினால் அப்படிச் செய்வதாகத் தெரிகிறது.

மாட்டு வியாபாரிகள் சில சமயங்களில் நல்ல ஜாதி மாடுகளுக்குக் கெட்டசுழிகளிருந்தால் அதை மறைத்து விற்பனை செய்ய அவ்விடங்களில் சூடுபோட்டுச் சுழிகளைத் தீய்த்து விடுவது வழக்கம். அனுபவசாலிகள் சீக்கிரத்தில் இதைக் கண்டுபிடித்து விடுவார்கள். மாட்டுச் சுழிகளால் மனிதனுடைய தலைச்சுழியை அழிக்கவோ மாற்றவோ முடியாது என்ற சித்தாந்தமொருபுறமிருக்க, யாவரும் மாட்டுச்சுழிகளால் வாங்குவோருக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்குப் பொதுவாக அஞ்சவேண்டியது அவசியமே என்பது அனுபவசாலிகள் கொள்கை. ஆகையால் கூடுமான வரையில் நல்ல சுழியுள்ள மாடுகளை வாங்குவதே உசிதம். தவிர பசுமாடுகளுக்கு அவ்வளவாகச் சுழித்தோஷம் பார்ப்பதில்லை. ஆயி-



னும் முக்கியமான சில மிகவும் கெட்ட சுழிகள் இல்லாமல் பார்த்து வாங்குவது நன்று.

## நன்மை பயக்கும் சுழிகள் :—

### 1. லக்ஷ்மிச்சுழி

கழுத்தின் ஒருபக்கம் கொஞ்சம் தள்ளியிருக்கும். இலக்குமி செல்வத்துக்கு உரியவளானதால் இந்தச்சுழி மிகவும் அதிர்ஷ்டமுள்ளது. இவ்விதச்சுழியுள்ள மாடுகிடைப்பதரிது. கிடைத்தாலும் விலையுயர்ந்தது. அதனால் உடையவனுக்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும்.

### 2. கோபுரச்சுழி

இதை ராஜாச் சுழி என்றும் சொல்வதுண்டு. கொண்டையின் மேலும், கொண்டையின் முன்புறம் எதிரே நின்று பார்க்கில் தெரியும்படியான இடத்திலும் அல்லது கொண்டை முடிந்து முதுகில் சேருமிடத்துலுமிருப்பது. ராஜாச்சுழியுள்ள மாடு மிகுந்த தனத்தையும் சகலசுகத்தையும் கொடுக்கும்.

### 3. தாமணிச்சுழி

முன்பாதங்களுக்கும் கழுத்துக்கும் இடையிலாவது இருபுறத்திலாவது இருக்கும். இது அலை தாடிகளிலிருப்பவை. 'தாவணி' என்பது மாட்டைப் பிணிக்கும் தாம்பு எனப் பொருள்படும். இச்சுழியுள்ள மாட்டை வாங்கினவன் அநேக மாடுகளுடையவனாய் வெகு சிறப்புடன் வாழ்வான்.

### 4. இரட்டைக்கவர்ச்சுழி

முன்னங்கால் தட்டினிருபக்கத்திலும் இரட்டைப்புரி போல் இருபிளவு இருந்தால் நன்மைதரும். ஒரு பிளவு ஒரு பக்கம்மட்டிலிருந்தால் வீட்டிலிருக்கும் எல்லா மந்தைகளும் அழிந்து மாட்டின் சொந்தக்காரனுக்கு மரணம் ஏற்படும்.

### 5. 'பாசிங்' சுழி

மகாராஷ்டிரர்கள் முதலியவர்களின் கல்யாணத்தில் பெண்களுக்கு நெற்றியில் சுட்டப்படும் 'பாசிங்' என்ற பூக்கொத்துப்போல் கண்களுக்கு மேல் நெற்றியிலிருக்கும். இச்சுழி இரட்டையாயிருந்தால் ஜோடிச்சுழி எனப்படும். இப்படிப்பட்டமாட்டினால் கல்யாணமாகாதவனுக்கு சீக்கிரம் விவாகம்நடக்கும். கல்யாணமானவர் வாங்கினால் இரண்டு மனையாள் ஏற்பட்டாலுமேற்படும். அல்லது மனைவியை இழந்து மறுவிவாகம் செய்துகொள்ள நேரிடும்,

### 6. பூரான்சுழி

பூரான்போன்ற மயிர்ப்பிளவு முதுகின்மத்தியில் இருக்கும். சுழி ஆரம்பித்து முன்பக்கம் தொடர்ந்து முடிந்திருந்தால் ஏறு பூரான் எனப்படும். இது செல்வத்தையும் அதிருஷ்டத்தையும் தரும். அதேசுழி ஆரம்பித்து வால்பக்கம் தொடர்ந்து முடிந்தால் இறங்குபூரானென்றுபெயர். மாடு வாங்கியவன் பரம ஏழையாவான்.

### 7. விபூதிச்சுழி

இருகண்களுக்கும் நடுவில் இரண்டுசுழிகள் இருபுருவக் கோடுகளின் கீழிருக்கும். இச்சுழி நன்மைதரும்.

### 8. ஏறுநாகச்சுழி

வாலின்மேல் சுழித்து முதுகுப்பக்கம் தொடர்ந்தால் நல்ல சுழி, அதேசுழி வாலின் கீழ்பக்கம் தரையைநோக்கித்தொடர்ந்தால் இறங்குநாகம் என்றுபெயர். அது கெட்டசுழி என்று சொல்வதுண்டு.

### 9. நீர்ச்சுழி

மூத்திரதுவாரத்திற்கு எதிரே காளைமாடுகளுக்குள்ளசுழி. இச்சுழியால் நீருறலும் ஆகும் ஆறுறலும் ஆகும். ஆற்றைப்போல் குடும்பம் பெருகினாலும் பெருகிவாழும். அல்லது சாம்பலைப்போல் வெந்து மடிந்து நாசமானாலுமாகும் என்று சொல்வதுண்டு. இச்சுழியால் பெரியநன்மையோ அல்லது



தீமையோ உண்டாகலாம். ஆகையால் சந்தேகாஸ்பதமாயுள்ளதாகையால் இதை விரும்பமாட்டார்கள்.

### 10. கொம்புத்தானுச்சுழி

இது கொம்புகளின் கீழ்ப்பக்கத்திலிருக்கும். இச்சுழியுள்ளமாடு நல்லமாடு. மந்தையிலுள்ள எல்லாமாடுகளும் சுகமாக இருக்கும். மாடுகளின் எண்ணிக்கையும் விரைவில் அதிகரிக்கும்.

## தீமை பயக்குஞ் சுழிகள் :—

### 1. அக்கினிச்சுழி அல்லது முக்கண்சுழி

இரு நேத்திரங்களுக்கு நடுவே மூன்று சுழிகள் முக்கோண வடிவமாயமைந்திருக்கும். சிவபெருமானுடைய மூன்று கண்களைக் குறிக்குமென்றும் மாடுடையோன் குடும்பத்துக்குப் பலவித இடையூறுகள் உண்டாகும் என்றும் சொல்வார்கள்.

### 2. குடைமேல் குடைச்சுழி

நெற்றியில் ஒன்றின்மேல் ஒன்றாயிருக்கும். இதற்கு இடிமேல் இடிச்சுழி என்றும் பெயர். இச்சுழியும் மிகவும் கெட்டது.

### 3. விலங்குச்சுழி

முன்னங்கால் பின்னங்காலின் பின்புறமும், அல்லது கணுக்கால்களிலாவது இருக்கும். இச்சுழியுள்ள மாட்டை வாங்கியவன் சிறையிலடைக்கப்படுவான்.

### 4. பாடைச்சுழிகள்

பின்பக்கம் வாலின் முன்பக்கமாவது பின் பக்கமாவது இருக்கும். இது மிகவும் கெட்டசுழி. இந்த மாட்டின் யஜமானன் சீக்கிரம் இறப்பான்.

### 5. பெண்டிழந்தான்சுழி

வாலின் உட்பக்கத்துக்கும் மலத்துவாரத்துக்கும் நடுவிலிருக்கும். ஒன்றல்லது இரண்டு சுழிகளாக இருக்கும். வீட்டின் யஜமானியைக் கொல்லும்.

### 6. நாகப்படச்சுழிகள்

தொடைகளின் பின் வளைவில் பாம்பு படமெடுத்ததுபோலிருக்கும். படம் மேல்பக்கம் தொடர்ந்தால் முன்னாகமென்றும், கீழ்ப்பக்கம் தொடர்ந்தால் பின்னாகமென்றும் பெயர். இவைகள் கெட்ட சுழிகளாம்.

### 7. தட்டுச்சுழி

இடுப்பு சேருமிடத்து முதுகில் இருக்கும். மாடு வாங்கியவன் எந்த வியாபாரம் செய்யினும் நஷ்டமடைவான்.

### 8. துடைப்பச்சுழி

வால் ஆரம்பிக்குமிடம் உள் பக்கம் இருக்கும். துடைப்பம் எவ்வாறு வீடுகளைச் சுத்தம் செய்யுமோ அவ்விதம் குடும்பங்களை சுத்தமாகத் துடைத்துவிடும்.

### 9. விறிக்கட்டு அல்லது புட்டாணிச்சுழி

இது இடுப்புக்கும் வால் ஆரம்பமாகும் இடத்திற்கும் மத்தியில் இருக்கும். இந்தச்சுழி யஜமானனுக்குக் கெடுதி செய்யும்.

### 10. ஏறுகட்டு, படைக்கட்டு சுழிகள்

இது உதட்டிலிருக்கும் கெட்ட சுழிகள். மந்தையிலிருக்கும் மாடுகளுக்கும் குடும்பத்துக்கும் கெட்டது.

### 11. வால்முடங்கிச்சுழி

இது ஒத்தைச்சுழி. வாலின் உள்புறத்திலிருக்கும். இதுவும் கெட்ட சுழி. குடும்பத்தை நாசம் செய்யும்.



### 12. கருநாகம்

கழுத்தைச் சுற்றிலும் மணிக்கயிறு அழகாகக் கட்டியதுபோலிருக்கும். இம்மாட்டை வாங்கியவன் பலவித கஷ்டங்களுக்குள்ளாவான். குடும்பத்திற்கும் கெடுதி.

### 13. எச்சுப்புள்ளி

மலத்துவாரத்துக்கும் வால் ஆரம்பிக்குமிடத்திற்குமிடையில் வெண்ணிறப்புள்ளி இருக்கும். இது வாங்கியவன் குடும்பத்துக்குக் கேடு உண்டாக்கும். அவனும் வியாதியால் பீடிக்கப்படுவான்.

### 14. மென்னிப் பிடிச்சுழி

கண்டத்தின் கீழ்ப்பக்கத்தில் இருமயிர்ப் பிளவுகள் மென்னியைப் பிடிப்பதாக விளங்கும். மாட்டின் சொந்தக்காரனுக்கு எப்பொழுதும் கஷ்டம் வந்துகொண்டிருக்கும்.

### 15. இறங்கு நாகச்சுழி

வாலின்மேல் சுழித்து கீழ்ப்பக்கம் தரையைத் தொடர்ந்து இருக்கும். இதுவும் கெட்ட சுழி.

### 16. இறங்கு பூரான்சுழி

பூரான் போன்ற மயிர்ப்பிளவு முதுகின் மத்தியில் ஆரம்பித்து வால்பக்கம் தொடர்ந்து முடியும். மாடு வாங்கியவன் பரம தரித்திரனாவான்.

## மாடுகள் சம்மந்தமான நம் நாட்டுப் பழைய கொள்கைகள் :—

1. மாடுகள் ஞாயிற்றுக் கிழமைகளில் கன்றுபோடக்கூடாது. அந்தமாடுகளை வைத்துக்கொள்ளக்கூடாது அப்படிச் செய்தால் சொந்தக்காரருக்குக் கெடுதி விளையும்.

2. வெள்ளிக் கிழமைகளில் எருமை கன்றுபோட்டாலும் குடும்பத்துக்கு ஆகாது.

3. இரட்டைக்கன்று போட்டபசுக்களும், பசு இனத்தைச் சேராத இதர விலங்குகள்போல் கன்றுகள் போட்டாலும் அவ்விதம்போட்டமாடுகளை வீட்டில்வைத்திருக்கக் கூடாது. குடும்பங்களிலிருந்தால் கேடுவிளையும்.

4. காரிகால் மாடுகபடுவிட்டால் ஒண்ணேகால்மாடு.

5. நாரைமாட்டுச் சேவகம் நரிச்சேவகம். வெய்யிலையும், மழையையும் கண்டால் நாரைமாடுகள் நரியைப்போல் பதுங்க எத்தனிக்கும்.

6. மாடுவாங்கத்தெரியாதவன் மட்டக்கொம்புமாடுவாங் கட்டும் என்பதினால் பின்பக்கம் சாய்ந்திருக்கும் கொம்புடைய மாடுகள் நல்லது.

7. நேர்க்கொம்பு, முன்படைக்கொம்பு, சுருட்டைக் கொம்புகளுடைய மாடுகள் நன்றாகஉழைக்கும். சுறுசுறுப்பாக இருக்கும்.

8. கொள்ளிக்கொம்பு, அதாவது, பார்வைக்கு சொத்தையாயும் பல இடங்களில் வெண்ணிறம் படர்ந்துமிருந்தால் நல்ல மாடுகளல்ல. கொம்பின் நுனியில் வெண்ணிறமிருந்தால்மிகக் கெடுதலானது. குடும்பத்துக்கே கொள்ளிவைத்து விடுமென்பர். (மரக்கொம்பு)

9. கொம்புகளின் நுனிகூர்மையில்லாது அகன்று இருக்கும் "பூம் கொம்பு" மாடுகளும் நல்லதல்ல.

10. எட்டுப்பற்கள் முளைக்கும் காலத்தில் ஆறுபற்களுடன் விளங்கும் மாடு மிகவுயர்ந்தது. அதை "ஆறுகட்டி வாழும்" என்ற பழமொழியினால் அறியலாம்.

11. ஏழுபற்களுடன் கூடியமாடு அதிர்ஷ்டமில்லாதது என்றும் மாட்டுயஜமானன் சீக்கிரம் இறப்பான் என்றும் சொல்லுவதுண்டு. இப்பல்லுக்கு 'நச்சுப்பல்லு' என்று பெயர்.



12. புதன், வெள்ளி இக்கிழமைகளில் மாடுகளை விற்கவும் கூடாது, வாங்கவும் கூடாது. எருமையினங்களை ஞாயிற்றுக்கிழமை வாங்கவும் கூடாது விற்கவும் கூடாது.

13. தலைக்கயிறு, தும்புக்கயிறு, கழுத்துக்கயிறு இவ்வகைகளை மாட்டுடன்கொடுப்பதில்லை. கொடுத்தால் செல்வங் குறையுமென்பார்.

14. புதிதாக வாங்கிய பசுமாடு வீட்டுக்கு வந்ததும் முதலில் ஜலம்விட்டு பின்சாணிபோட்டால் நல்லது. சாணி முதலில் போட்டால் கெடுதல். காளைமாடு வீட்டுக்கு வந்ததும் முதலில் சாணம்போட்டு பின்ஜலம் விடவேண்டும். ஜலம் முன் விட்டால் நன்றல்ல என்று சொல்லுவர்.

15. குறட்டைவிடும் மாடுகள் வீட்டிலிருந்தால் வீடு பாழாகும் என்பார்கள்.

16. மாடுகள் கொட்டிலில் நிற்கும்பொழுதும் நடக்கும் பொழுதும் யானையைப்போல் அசைந்தாடக்கூடாது. அப்பேர்ப்பட்ட மாடுகள் குடும்பங்களுக்கு ஆகாது. இவைகளுக்கு 'அசைமாடு' என்று பெயர்.

17. பழுவெலும்புகள் இருபக்கங்களிலும் குறைவாக இருந்தால் இளிச்சரகு என்றும் நல்லமாடு அல்லவென்றும் சொல்வார்கள்.

18. ஒருபக்கத்து விலா எலும்பு குறைவாயிருந்தால் 'குறைப்பழு' என்று சொல்வார்கள். இவ்வித மாடும் கூடாதது.

19. விற்றமாட்டை மறுபடியும் விலைக்கு வாங்கக் கூடாது என்று சொல்வதுண்டு. "செத்தமாட்டை வாங்கினாலும் வாங்கலாம், வித்தமாட்டை வாங்கக்கூடாது" என்ற சொல்லிலிருந்து இதை அறியலாம்.

20. மாடுகட்டும் முளையை அடுப்பெரிக்கக் கூடாது. எரித்தால் மாடுகள் விருத்தியாகாது. ஏனென்றால் கடவுள் கொட்டிலின் முளையிலிருந்து தரிசனம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

## அத்தியாயம் 4.

# தென்னிந்தியாவிலுள்ள மாட்டினங்கள்

1930-ம் வருஷத்திய கால்நடை புள்ளி விவரக்கணக்குப்படி தென்னிந்தியாவில் சராசரி இரண்டு கோடியே இருபது லக்ஷம் மாடுகளும் எருமைகளுமிருப்பதாக விவசாய இலாகா அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதைத்தவிர ஆட்டினங்களும் சுமார் இரண்டுகோடி யிருப்பதாகத் தெரிகிறது.

பண்டைக்காலமுதல் தென்னிந்தியாவானது சிறந்த ஜாதி, நிறையப் பால் கொடுக்கும் சக்தி, நெடுங்காலம் உழைக்கக்கூடிய திறம் இந்த குணங்கள் படைத்த மாடுகள் உற்பத்தியாகுமிடமென்று பெயர் பெற்றது. முக்கியமாக மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி, நெல்லூர், அனந்தபுரம், பெல்லாரி முதலிய இடங்களில் நடைபெறும் மாட்டுத்தாவணியிலிருந்து இந்நாட்டுச்சிறப்பு நன்கு விளங்கும்.

மாடுகளின் பிறப்பு, பருமன், கொம்புகளின் நீளம், பால் கொடுக்கும் திறமை, உழைப்புச்சக்தி முதலானவைகள் பெரும்பாலும் அவைகள் உற்பத்தியாகும் இடங்களின் சீதோஷ்ண நிலைமை, பூமிவளம், அங்கு கிடைக்கும் தீனிப்பொருள்கள் முதலியவைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்நாட்டுப் பழைய கொள்கை, பழக்கவழக்கங்களுக்குத் தக்கபடி மாடுகளுற்பத்தி சம்மந்தமான முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். விவசாயத்தில் ஈடுபட்ட நூற்றில் தொண்ணூற்றொன்பது தென்னிந்திய மக்களுக்குக் கால்நடை முக்கிய சாதனமானதால், கால்நடைகளின் தேவை எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது.

உழுதல், தண்ணீர் இறைத்தல், போரடித்தல், பரம்படித்தல், முதலியவைகள் மாடுகளின் உதவியால் நடக்கிறது. களத்திலிருந்து உணவுப்பொருள்களை விற்பனையிடத்திற்கு அனுப்புதல், பட்டணத்துக்கும் கிராமத்திற்கு மிடையே



யுள்ள போக்கு வரத்து, இவைகளுக்கும் மாடுகள்தான் உபயோகிக்கப்படுகின்றன. கால்நடைகளின்றி விவசாயம் நடைபெறாது. ஒரு விவசாயினிடமுள்ள கால்நடை, ஏர், முதலியவைகளை அளவுகோலாகக்கொண்டுதான் அவனுடைய செல்வத்தை நிச்சயிக்கமுடியும். அவனுடைய பூராவாழ்க்கைக்கும் கால்நடைகள்தான் ஆதாரம். ஆகையால் விவசாயத்தின் உயிர்நிலை கால்நடைகள்தான் என்று சொன்னால் மிகையாகாது.

தென்னிந்திய நிலங்களைப் பொதுவாகக் கரிசல் நிலம், சிவப்பு நிலம், கிணற்றுப்பாசன நிலம், ஆற்றுப்பாசன நிலம், என்ற நான்கு வகையாகப் பிரிக்கலாம். விவசாய வேலைக்குக் கரிசல் நிலத்தில் கனத்த மாடுகளும், செம்மண் அல்லது இலேசான நிலத்தில் விரைவில் செல்லக்கூடிய பலமுள்ள மாடுகளும், கிணற்றுப்பாசன நிலங்களில் நடுத்தரமான கட்டைகுட்டையான மாடுகளும், ஆற்றுப்பாசன நிலங்களில் இலேசானதும் சுமாரான கனமுள்ளதுமான மாடுகளும் எருமைகளும் உபயோகப்படுகின்றன.

### ஒங்கோல் மாடுகள்

ஒங்கோல் மாடுகள் நெல்லூர் வர்க்கத்தைச் சார்ந்ததாயினும் அவைகள் ஒங்கோல் மாடுகளென்றே அழைக்கப்படுகின்றன. ஒரு சமயம் அவ்வூர் விவசாயிகளை அப்போதைய அரசாங்கத்தார் துன்புறுத்தி வந்ததால் விவசாயம் சரியாக நடத்த முடியாது, மாடுகளை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடு பட்டார்கள். அதன் பலனாக உயர்ந்த ஜாதி மாடுகளை விருத்தி செய்து ராஜீய நெருக்கடி வரும்பொழுது தங்களுடைய மந்தைகளைப் பல ஊர்களுக்கு ஓட்டிச் சென்று அவைகளைக் காத்து விருத்தி செய்தார்கள். பிறகு நிலையான அரசாங்கம் ஏற்பட்டதும், அவர்கள் சாவதானமாக அநேக இடங்களில் சாசுவதமாகக் குடியேறினார்கள். அக்காலம் முதல் அவர்களுடைய தனிஜாதி மாடுகள் வெகுவாக வளர்ந்து அபிவிருத்தியடைந்தன. இப்பொழுது அவை இந்த ஜில்லாவிலுள்ள கருமஞ்சி, நீடமனூர், போந்தூர், ஜெயவரம், கரவாடி, கண்டகூர் முதலிய கிராமங்களில் இச்சாதியில் சிறந்த மாடுகள் கிடைக்கும்.

ஓங்கோல் ஜாதி மாடுகள் தான் தென்னாட்டின் சிறந்த மாடுகளாகும். சென்னைப் பட்டணத்தில் இந்த ரக மாடுகள் ஏராளமாக விற்பனையாகின்றன. நான்கு முதல் ஐந்து வயதில் பலனுக்கு வந்து இருவருடங்களுக்கொருமுறை கன்று ஈனும். ஐந்து ஈத்துக்குமேல் இச்சாதி பலன் படுவதில்லை. சராசரி, தினம் ஏழு முதல் எட்டு பவுண்டு பால், 250 நாள் வரையில் கொடுத்து மறுத்துப்போகும். காளைக்கன்றுகள் 2½ வருஷங்களுக்குப் பிறகு வேலைக்குப் பிரயோஜனப்படும்.

இம்மாடுகள் பார்வைக்கு அழகாயும் சாதாரண நீளமுடைய முகம் கறுத்த அகண்ட நாசி, மைமலை விழுந்த பிரகாசமான கண்கள், அடர்த்தியான புருவம், மத்திமமாக நீண்டு தொங்கும் காதுகள், பருமனுள்ள குட்டைக் காதுகள், திரண்டு முன்பின் ஆடும் கொண்டை, பருத்த குட்டைக் கழுத்து, கழுத்திலிருந்து வயிறுவரையில் கனத்து மடிந்துள்ள அலை தாடிகள், திரண்ட சதையுள்ள துடைகள், நீண்டு கனத்த உடல், வெண்ணிறம் அல்லது கருநிறங்கலந்த சாம்பல் வர்ணம், 56 முதல் 62 அங்குல உயரம், முதலிய லக்ஷணங்கள் கொண்டவையாக இருக்கும். பசுக்கள் கொம்பு கூர்மையாகவும், மெல்லியதாகவுமிருக்கும். தொப்புளினடியில் மடித்து தோல்தொங்கும். இப்பசுக்களில் சிகப்பு நிறங்கொண்டது சிறந்ததல்ல.

## 2. காங்கயம் மாடுகள்

இவைகள் 'கங்கா நாடு' 'கொங்குநாட்டு' மாடுகளென்றும் கூறுவதுண்டு. இவை கோயம்புத்தூர் ஜில்லாவின் தெற்கு, தென்கிழக்கு தாலுக்காக்களில் உற்பத்தியாகின்றன. இவைகளுள் பெரியதும் சிறியது என இருவகை மாடுகளுண்டு. தாராபுரம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு முதலிய தாலுக்காக்களில் சிறிய ஜாதி மாடுகளும், கரூர், அவனாசி, திண்டுக்கல் தாலுக்காக்களில் பெரிய இனத்தைச் சேர்ந்த மாடுகளும் கிடைக்கும். புகழ்பெற்ற சுத்தமான காங்கேய ஜாதிப்பெரும் மாடுகள் பாளையங்கோட்டை பட்டக்கார், கடியார் முனிஸீப் மணியக்காரர் குடும்பங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. திருப்பூர், கண்ணபுரம், மதுரை, அவனாசி இவ்விடங்களில் நடக்கும் பெரும் மாட்டுத் தாவணிகளில் இவைகளைக் காணலாம். ஹோசூர் அரசாங்



க'கால்நடை ஆராய்ச்சிப்பண்ணையிலும் காணலாம். இம்மாடுகள் கரிசல் நில உழவு, கபிலை ஏற்றம், வண்டி, முதலியவைகளுக்குப் பயன் படுகின்றன. இந்தமாடுகள் மலிவான தீனியால் ஜீவிப்பதாலும், கடுமையான உழைப்பாளியாதலாலும் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. இவ்விரண்டு வகை மாடுகளும், சுறுசுறுப்பும், பலமும், உள்ளவை. கனத்த குட்டைக்கால்கள் கொண்டவை. பெரும் ஜாதி மாடுகளுக்குத் தனியமைப்புடைய பெரிய கிளிக்கொம்புகள் பின் பக்கம் வளைந்திருக்கும். இம் மாடுகள் வெண்ணிற முடையவை.

சமமான பரந்த நெற்றி, அழகுடன்கூடிய கருமையான கண்கள், நிமிர்ந்த குட்டைக்காதுகள், ஒடுக்கமான கனத்த கழுத்து, சாதாரணமாக வளர்ந்த கொண்டை, மார்புவரையிருக்கும் மெல்லிய அலை தாடி, விரிந்து அகலமில்லா முதுகு, அடர்த்தியான குஞ்சமுடைய மெல்லியவால், தோல் மடித்துத் தொங்காத தொப்புள், பலமுள்ள சிறிய கால்கள் முதலியவைகள் இச்சாதி மாடுகளின் அங்க அடையாளங்கள். வெண்ணிறமும், கருமை சேர்ந்த சாம்பல் நிறமும், இவற்றின் வர்ணங்கள். கறுப்பு நிறம் படர்ந்த முண்டுகள், கணுக்கால்களுடையது. இவ்வினத்தைச் சேர்ந்த பசுக்கள் நல்ல கறவைப்பசுக்களல்ல. தினம் ஒன்றுக்கு 6 பவுண்டு பால் கொடுத்து 244 நாட்களில் மறுத்துப்போகும். எட்டு ஈத்து வரை கன்று போடும்.

## 3. அமிர்த மஹால் மாடுகள்

மைசூர் பிராந்தியங்களில் இவ்வகை மாடுகள்தான் மிகச் சிறந்தவை. கொல்லர், ஹல்லிகாரர் என்ற மலை ஜாதியினரால் மைசூரில் கொண்டுவரப்பட்டு, சித்தல்துர்க்கம், தும்கூர் ஜில்லாக்களில் விருத்தியானதாகச் சரித்திரம் கூறுகிறது.

விஜயநகர மன்னரின் ராஜப்பிரதிநிதியால் ஸ்ரீரங்கப் பட்டணத்துக்குக் கொண்டு வரப்பட்டுப்பின் அரசுக்குவந்த உடையார் வம்சத்து மைசூர் மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு, சிக்கதேவராயர் காலத்தில் அரசாங்க நிதியுதவியால் அமிர்த மகால் என்ற பெரிய ஸ்தாபனம் ஏற்பட்டது. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் பட்டாளப் போக்கு வரத்துக்காகக் கணக்கில்லா மாடுகளை உபயோகித்தார்கள். பெரிய பெரிய

பட்டாளங்களின் தளவாடங்களை இம்மாட்டு வண்டிகள் நூறு மைல் தூரம் இரண்டே நாட்களில் கடத்திச் சென்றிருக்கின்றன. இம்மாடுகளின் பெருமையையறிந்து ஆங்கிலேயர்கள் பம்பாய், ஆப்கானிஸ்தான், எகிப்து, முதலிய இடங்களுக்குப் பட்டாள உபயோகத்துக்காக இம்மாடுகளை அனுப்பிப் பெரும் புகழை அடைந்தனர்.

இம்மாடுகளைக் கொட்டிலில் அடைப்பதில்லை. தனியாக ஒதுக்கப்பட்ட பரந்த வெளிகளில் இயற்கையாகத் திரிந்து வாழ விடப்பட்டிருக்கின்றன. ஆகையால் இம்மாடுகள் அதிக வேகமும் இயற்கைச் சுறுசுறுப்பும் படைத்தவை. சுபாவத்தில் இம்மாடுகள் முரட்டுத்தனமாகவும், சாந்தமின்மையுமுள்ளவை. வெகு சிரமப்பட்டுப் பழக்கிவரவேண்டும். இளங்கன்றுப் பருவத்திலேயே இவைகளுக்குக் காய் அடிப்பது வழக்கம். 3 அல்லது 4 வருஷங்களில் விற்பனைக்குத் தயாராகும். ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் வெகு சுறுசுறுப்பாயும் கடினமான வேலை செய்யத்தகுதியுள்ளவையாயுமிருக்கும். பதினான்கு வயதுக்குப்பின் மூப்பு அடைய ஆரம்பித்து 18ல் இறக்கும்.

இவைகள் கறவைக்குச் சிறந்தவையல்ல. ஆனால் இவற்றின் பால் வெகு இனிப்பாகவிருக்கும். ஆறும் வயது முதல் கன்று போடும்.

நீண்ட உடல், 53 அங்குல உயரம், நீண்டு குறுகியதலை, குறுகிய நெற்றி, ஒளியுள்ள சிறிய கண்கள், நிமிர்ந்த சிறிய காதுகள், வலிவுள்ள நீண்ட கழுத்து, அழகான சிறிய கொண்டை, நீண்ட மெல்லிய வனப்புள்ள கொம்புகள், மெல்லிய குட்டையான அலைதாடி, விரிந்து பரந்த மார்பு, அகலமான சம முதுகு, குறுகிய துடைகள், சாட்டைவால், லக்ஷணமாக அமைந்த அதிக நீளமில்லாத கால்கள், பலமான சிறிய குளம்புகள், பட்டுப்போன்ற மிருதுவான மயிருள்ள தோல், நல்ல அமைப்புள்ள அங்கங்கள், கருநிறமுடைய கொம்பு, குளம்பு, வாய், இத்தகையலக்ஷணங்களும் கொண்டவை அம்ருத மஹால் ஜாதி மாடுகள்.



## 4. ஹல்லிகாரர் ஜாதி மாடுகள்

இவை மைசூர் பிராந்தியத்தைச் சேர்ந்தவை. முன் கூறிய ஹல்லிகாரரென்றும். மேற்கத்தி ஜாதியினர்தான் இவ்வகை மாடுகளின் உற்பத்திக்கும் அம்ருத மகால் மாடுகளின் உற்பத்திக்கும் காரணமானவர்கள். நீண்ட அழகான தலையும், நீண்டு மெலிந்த கொம்புகளும், கனமான சரீரமும், பார்வைக்கு அமிர்த மகால் மாடுகள் போன்ற தோற்றமும் இவைகளுக்குரிய லக்ஷணங்கள். மங்கிய சாம்பல்நிறமுடையவை. அதிக கொழுப்புச் சத்துடன் கூடிய இனிப்பான பால் கொடுக்கும். இந்த ஜாதியும் கறவைக்கு நல்ல பசுக்களில்லை. கஜலூ என்ற இனம் இவற்றுள் மிகவும் உயர்ந்தது பழகுமுன் முரட்டுத்தனமாயும், பழகியபின் அடங்கி உழைக்கும் குணமும் வாய்ந்தவை.

## 5. ஆலம்பாடி மாடுகள்

இவை கோயம்புத்தூர் ஜில்லா கொள்ளேகால் தாலுக்காவைச் சேர்ந்தவை. காவேரி ஜாதி மாடுகளென்றும் சொல்வதுண்டு. மிகுதியாக கங்கனஹல்லி கிராமத்தில் கிடைக்கும். பெங்களூர், மைசூர், கோலார் முதலிய ஜில்லாக்களிலும் வளர்க்கப்படுகின்றன. இவை பினாங்கு, ஜாவா, கொழும்பு, முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. உடபவானி, கொள்ளேகாலம், தென்ஹோசூர், தர்மபுரி, முதலிய இடங்களில் இந்த ஜாதியை வளர்த்துவருகிறார்கள். இவைகள் சாதுவாகவும் கடின வேலைகளுக்கு உதவக்கூடியவையாகவும் இருக்கும். கனத்தவாய், பரந்தநெற்றி, பருத்த குட்டைத் தலை, பருத்து நீண்ட அலை தாடி, நிமிர்ந்த நீண்ட வால், குட்டையான பெருத்த கழுத்து, சாட்டைவால், உறுதியுள்ள பருத்த கால்கள், இவைகள் இவற்றின் லக்ஷணங்கள். இவை சாம்பல், கருப்பு கலந்த சாம்பல், பழுப்பு நிறம், முதலிய வர்ணமுடையவை. பசுமாடுகள் வெண்ணிறம், வெள்ளையும் கருப்பும் சேர்ந்தமறை, வெண் புள்ளிகள் விழுந்த சிகப்பு, கெட்டிப்பழுப்பு, தசையின் நிறம், போன்ற வர்ணங்களைக் கொண்டவை. இந்த ஜாதிப் பசுக்கள் கறவைக்கு நல்லவை. பதினான்கு மாதம் அல்லது 18 மாதம் ஒருமுறை கன்று போடும்.

## 6. புலிக்குளம் அல்லது ஜல்லிக்கட்டு மாடுகள்

இவைகளுக்குக் கிழக்காடு மாடுகள் என்றும் பெயர். மதுரைக்குத் தெற்கிலும், தென் மேற்கிலும், பெரியாறு, கும்பம் முதலிய இடங்களிலும், இவை உற்பத்தியாகின்றன. பழங்காலத்தில் ராமனுதபுரம் சேதுபதிகளின் போக்குவரத்து உபயோகத்திற்காக ராமனுதபுரம் கொண்டுவரப்பட்டவை. விரைவாக வண்டிகளை இழுத்துச் செல்லும் திறமையுள்ளவை. ராமனுதபுரத்துக்கும் மதுரைக்கும் ரயில் பாதை ஏற்பட்ட பின் இம்மாடுகளின் அபிவிருத்தி குறைந்து, சில இடங்களில் பந்தயப்பொழுது போக்கிற்காக வளர்க்கப்படுகின்றன. இவைகளுக்குப் பாய்ச்சல் காளை என்றும் பெயர் உண்டு. இவை காங்கயம் சிறு ஜாதி மாடுகளின் வகையைச்சாரும். ஜாலி என்ற தோரண குஞ்சங்கள் கொம்பில் பந்தய சமயங்களில் கட்டப்படுவதால் ஜாலிகட்டு மாடு என்று இவற்றிற்குப் பெயர் வந்தது. இம்மாடுகளைக் கொழுக்கவைத்து முறட்டுச் சுபாவத்தை அடையும்படி செய்து, பந்தயங்களில் கொம்பில் பொன், அல்லது வெள்ளி நாணயங்களைக்கட்டி விறட்டப்படுவது வழக்கம். அப்போது கொம்பு, தப்பு, முதலியவைகளை ஊதி, இவைகளை வெறித்துப் பாயும்படி செய்வார்கள். கொம்பிலுள்ள வெகுமதிப்பணத்தை யார் அவிழ்க்கிறார்களோ அது அவர்களைச் சேர்ந்தது. அநேகர் இத்தகைய பயங்கரப் பந்தயத்தில் இறப்பார்கள். எவ்வளவு பேர்கள் காயமடைகிறார்களோ, அல்லது கொல்லப்படுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மாட்டின் பெருமையும் விலையும் அதிகரிக்கும். வரவர இவ்வினம் குறைந்துகொண்டு வருகிறது.

அகன்ற நெற்றி, சாதாரண முகம். அகன்று பின் பக்கம் வளைந்த கூரான கொம்புகள், சிறிய காதுகள், அழகான கண்கள், திரண்ட கொண்டை, அகன்று குட்டையான முதுகு, அடர்த்தியான குஞ்சமுடைய நீண்டவால், கனத்து அகன்ற குட்டைக் கால்கள், சாம்பல் நிறத்தில் பழுப்பு அல்லது கருப்புப் படர்ந்த நிறமுள்ள தேகம் முதலிய உறுப்புகள் இவற்றின் அங்க அடையாளங்கள்.



## 7. கப்பிலிய மாடுகள்

இவை கப்பிலிய கவுண்டர் சாதியினரின் கன்னட நாட்டு மாடுகள். தம்பிரான் மாடுகள் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இம்மாடுகள் கோபாலஸ்வாமி கோயில்களுக்கு விடப்பட்டு புனிதமான மாடுகளாகக் கருதப்படுகின்றன. இவற்றைப் பால் கறக்கமாட்டார்கள். ராஜபோகத்துடன் மாடுகளை உபசரிப்பார்கள்.

## 8. தஞ்சாவூர் மாடுகள்

கொம்புகள் தீய்க்கப்பட்டு, பாதிகாதுகள் துண்டிக்கப்படுவதால் இம்மாடுகள் தனி இனத்தைச் சேர்ந்ததாகப் புலப்படும். இவை பெரும்பாலும் சாகுபடி வேலைக்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. ஆறு மாதக்கன்றுகளாக இருக்கும் போதே காளைகளின் கொம்புமுளையைத் தீக்கோலால் தீய்த்து விடுவார்கள். இதைவிட காஸ்டிக் போடாஸ் (Caustic potash) என்ற 'கார' மருந்தைத்தடவினால் கொம்பு முளை வலியில்லாமல் தீய்க்கப்பட்டுக் கொம்பு வளராது. கன்று போட்ட இரண்டு மாதத்திற்குள் கொம்பு தீய்ப்பது தான் சிறந்தது. காயடித்து இவ்விதம் கொம்புகளைத் தீய்ப்பதினாலும் காதுகளை அறுப்பதினாலும் மாடுகளுக்குப் பலம், உழைப்பு சக்தி இவை அதிகரிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்படிச் செய்வது பார்வைக்கு அழகல்ல. இவ்வகை மாடுகள் ஏர் வேலைக்கும், வண்டிவேலைக்கும் ஏற்றவை. இவைகளுக்கு மோழை மாடுகள் என்று பெயர். இந்த ஜாதிப் பசு மாடுகள் நல்ல கறவை மாடுகள் அல்ல. சராசரி மூன்று சேர் பால் தரும். பசுமாட்டுக்குக் கொம்பு தீய்ப்பதில்லை. முதல் ஈற்றுக்கன்று ஐந்து வயதிலுண்டாகும். இரண்டு வருஷத்துக்கொருமுறை நான்கு அல்லது ஐந்துமுறை பலன் கொடுக்கும்.

தாழ்ந்த நெற்றி, அழகான கண்கள், காது அறுக்கப்பட்டு கொம்புகள் தீய்க்கப்பட்ட தலை, தடித்த குட்டைக்கழுத்து, சுமாரான கொண்டை, மெல்லிய சிறிய அலைதாடி, மிகவும் நீண்ட அடர்த்தியான குஞ்சம், பலமான குட்டைக் கால்கள், அழகான உறுதியுள்ள குளம்பு, 40 முதல் 48 அங்குலம் உள்ள தேக அமைப்பு இவற்றையுடையவை.

## 9. சிந்து மாடுகள்

இவைகள் தென்மேற்கு சிந்து மாகாணத்திலிருந்து கொண்டு வரப்படுகின்றன. இச்சாதி மிகச்சிறந்தது. கறவைக்கு மிகவும் உயர்ந்தது. பொதுவாகச் சிந்துமாடுகள் சிவப்பாக இருக்கும், மடி, மடிக்குமேல் வயிறு, அலைதாடி, இவைகள் வெண்ணிறமாக இருக்கும். வெண்ணிறம், சாம்பல் நிறமாக இருந்தால் சுத்தமான ஜாதி அல்ல. இவை பளபளப்பான ரோமங்களுடைய மிருதுவான தோலுடையவை.

கறவை மாடுகளில் சிந்துமாடுகள்தான் இந்தியாவில் புகழ்பெற்றவை. காளைகளைவிடப் பசுமாடுகள் அதிக விலையுள்ளவை. நெடுநாட்களுக்கு நிறையப் பால் கறக்கும் பண்பு உடையவை.

பரந்த நெற்றியும், பிரகாசமான கண்களும் அகன்ற மூக்கும், நீண்டு தொங்கும் காதுகளுடைய குட்டைத் தலையும், குறுகிய பருத்த கழுத்தும், கனத்த குட்டைக் கொம்புகளும், அழகாக அமைந்த கொண்டையும், அகலமான மார்பும், குறுகித்தொங்கும் துடைகளும், சதைப்பற்றுடன் மடிந்து நாபிவரை தொங்கும் அலை தாடியும், தரைவரை நீண்டு தொங்கும் மெல்லிய வாலும், வலுவான குட்டைக்கால்களும், சிறிய கால்களும், அழகாக அமைந்த சரீரம் முதலியவைகளும் சிந்து மாட்டின் அங்க லக்ஷணம். சுபாவத்தில் சாதுவானது. பசு மாட்டின் மடி பெரிதாயும் நீண்டும் தொங்கும். வனப்புள்ள நடையுடையது. உழைப்பில் மந்தமும் விரைவுமில்லாதது.

இவை கொழும்பு, மலேயா, சுமாத்ராதீவு, பர்மா, மெசபொடேமியா, போர்னியோ முதலான இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. பொலியுபயோகத்திற்குத் தென்னாட்டின் பல இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இரண்டரை வயதிற்குப் பின் பொலிதலுக்குதவும். தினம் 10 முதல் 12 பவுண்டு பால் கொடுக்கும். நான்கு அல்லது அதிகமானல் ஐந்து தடவை கன்று போடும். காளைமாடு ஆயிரம் பவுண்டு வரையிலும், பசுமாடு 750 பவுண்டு வரையிலும் கனமுள்ளது. மூன்று வயது நிறம்பிய பின் கன்று போடும். காளைகள் ரிஷபம் போல் விளங்கும்.



இவற்றில் உயர்ந்த இனங்கள் தென்னாட்டில் உள்ள சீதோஷ்ண நிலைமையினால் வெகு நாள் தங்குவதில்லை. கறவையும் குறைந்து விடுகிறது. சிந்து முதலிய ஜாதிகளை இந்நாட்டு மாடுகளுடன் சேர்த்துக் கன்றுகள் ஏற்படுத்துவது லாபகரமாக இருக்கிறது. சுத்த சிந்து மாடுகளும் தென்னாட்டில் அவ்வளவு தங்குவதில்லை. இவ்விதமான கலப்பு ரத்தமுள்ள மாடுகள் நல்ல பயன் அளிக்கத்தக்கவை. சிந்து மாட்டிற்கு வருகிற மடிசம்பந்தமான நோய்கள் இவைகளுக்கு அணுகுவதில்லை. சுத்தமான சீமை, சிந்து இவ்வகை மாடுகளைவிடக் கலப்பு மாடுகளுக்கு வியாதிகளைத் தாங்கும் சக்தி மிகுதியாக இருக்கிறது. சாவு எண்ணிக்கையும் மிகக்குறைவாக இருக்கிறது. இவை ஒன்றிரண்டு இரு முறை காளை விடுவதினால் சினைப்படுவதில்லை. மூன்று நடவை பலன் படுகிறது. இவை எல்லா மாடுகளையும்விட அதிக நாள் கறக்கக்கூடியவை. மறுப்பு நாட்கள் மிகக்குறைவானது. ஆனால் அவைகளுக்குத் தீனி நிறையத்தேவை. கொஞ்சம் குறைந்தால் உடனே பாலும் குறைந்து நோய் வாய்ப்படும். தீனியும் பராமரிப்பும் ஒழுங்காக இருந்தால் எல்லா இனங்களைவிட இவைகள் அதிகம் கறக்கும்.

### இதர ஜாதி மாடுகள்

**திருச்செங்கோடு மாடுகள்** சிறியதாயும், பருத்துக்கனமுள்ளதாகவும் இருக்கும். இம்மாட்டின் பூர்வீகம் தெரியவில்லை. மாடுகள் சிறிதாக இருந்தும் பெரும்மாடுகள் கறக்கும் பால் அளவு கொடுக்கும். சிலமாடுகள் எட்டுமுதல் 12 பவுண்டு பால் தினம் கொடுக்கும்.

### புங்கனூர் மாடுகள்

குட்டையாகவும் பருமனாகவும் அழகாகவு மிருக்கும். அவைகளைப் புங்கனூர் குட்டை என்றும் சொல்வதுண்டு. இம் மாடுகளும் 8 முதல் 16 பவுண்டு பால் வரையில் கொடுக்கும். இம் மாடுகள் மிகவும் பிரசித்தி பெற்றவை.

### தக்ஷிணி மாடுகள்

சிறியவையாய் இருந்தும் நிறையப் பால் கொடுக்கும் ஜாதியைச் சேர்ந்தவை. இவைகள் பத்ராசலம் முதலிய இடங்

களில் கிடைக்கும். இவை உழைப்புக்கும் தகுந்தவை. நீர் இறைத்தல், வண்டி, முதலிய கடினமான வேலைகளுக்கு நல்லவை. கர்னூல் ஜில்லாவில் 'துபட்' என்ற வகையும் கடப்பை, அனந்தபுரம், முதலிய இடங்களில் வேறு சிறிய ஜாதி மாடுகளும் உற்பத்தியாகின்றன.

## திருவண்ணாமலை மாடுகள்

சிவப்பு நிறமாகவும், சில சிகப்பு வெள்ளைப் புள்ளிகளுடையவையாகவும் ஒரே அளவுள்ளவையாகவுமிருக்கும். பெரும்பாலான மாடுகளுக்கு மயிலை விழுந்திருக்கும். நல்ல கறவை மாடுகளல்ல. வண்டிகளுக்குத்தான் மிகுதியாக உபயோகிக்கப்படுகின்றன.

## எருமைகளின் பிரிவுகள்

நமக்குப் பசு, காளை இவைகளுக்கு அடுத்தபடியாக எருமை மாடுகள் மிகவும் உபயோகமானவை. பால் முதலியவைகளைக் கொடுத்து, உழுதல், தண்ணீரிறைத்தல் முதலிய வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றன. தென்னிந்தியாவில் அநேக இடங்களில் விவசாயத்துக்கு இவைகளையே அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள், இவைகள் கறுப்பு முதல் கற்பலகை நிறம் வரையிலுள்ள எல்லாவித கரு நிறங்களிலும் காணப்படும். தென்னாட்டில் நான்கு வகையான சிறந்த எருமை ஜாதிகள் இருக்கின்றன. இவை நீலகிரி மலையிலுள்ள தோதவர்களிடமும், மலையாளக்கரையிலுள்ள தென்கன்னட பிராந்தியத்திலும், கஞ்சம் ஜில்லா மலைப் பிரதேசத்திலும், பர்லாகிமிடி சமஸ்தானத்திலும் உற்பத்தியாகின்றன. மிகச்சிறந்த எருமைக்கிடாக்கள், கஞ்சம், விசாகப் பட்டணங்களில் கிடைக்கும். நாட்டு எருமைக்கிடாக்களை இவ்விடங்களைத் தவிர வேறெங்கும் தென்னாட்டில் உற்பத்தி செய்வதில்லை. கறவைக்கு வேண்டிய எருமையே அதிகமாக வளர்க்கப்படுகிறது. கிடாக்களின் எண்ணிக்கையை எருமைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுபார்த்தால் கிடாக்களின் எண்ணிக்கை வருந்தத்தக்க குறைவாக இருக்கும். கணக்கில்லாத கிடாக்கன்றுகள் கவனமின்மையினால் வருஷாவருஷம் மாண்டுபோகின்றன. எருமைகள் மலையாளக்காடுகளிலும்



விசேஷமாக விருத்தி செய்யப்பட்டுவருகின்றன: சென்னப் பட்டணத்தில் செலவாகும் பாலில் பாதிக்குமேல் எருமைப் பாலாகும். கன்றின் ஊட்டலில்லாமலே எருமை பால் கறக்கும்; ஆகையால் கன்றுகளைக் கவனிக்காது விடப்படுவதால் நூற்றுக்கணக்கான கன்றுகள் இறக்கின்றன.

கோயம்புத்தூர் ஜில்லாவில் கிடைக்கும் எருமைகள் புகழ் பெற்றவை. அவற்றின் பாலைக்கொண்டு நெய், வெண்ணை முதலிய வியாபாரம் அதிகமாக நடக்கிறது.

## 1. நீலகிரி எருமை மாடுகள்

பூர்விக மலை ஜாதியினரான தோதவர்கள் இவ்வகை எருமை மாடுகளை உற்பத்தி செய்கிறார்கள். இவை மிக்க பலமுள்ளவைகளாயும், நீண்டும், திரண்டும் இருக்கும். அகண்ட மார்பும், பலமுள்ள குட்டைக் கால்களும், மிகவும் சிறிய கொண்டைகளும் உடையவை. முறட்டுத்தனமும், அன்னியர்களைக் கண்டதும் தலையைத்தூக்கிக் கொஞ்ச தூரம் முன் சென்று பாயும் பயங்கர குணமுடையவை. ஆனால் கறவைக்கு உயர்ந்தவை. பத்துமுதல் இருபது பவுண்டு பால் தினம் கொடுக்கும். தோதவர்களின் வாழ்க்கைச்சடங்குகளில் எருமைக்கு முக்கிய ஸ்தானம் உண்டு. குடும்பங்களில் குழந்தை பிறந்தாலும், விவாகம் நிச்சயிக்கும் சமயங்களிலும், வருஷாந்திர விழாக்களிலும், சாவு ஏற்படுங் காலங்களிலும் எருமைகள் சம்மந்தப்பட்ட சடங்குகள் நடத்தப்படுகின்றன. மலைப் பிரதேசங்களைத்தவிர வேறிடங்களில் இம்மாடுகள் பயன் அளிக்காதவை.

## 2. கஞ்சம், பர்லாகிமிடி, எருமைகள்

கஞ்சம், விசாகப்பட்டிணம் இவ்விடங்களிலுள்ள எருமைகள்தான் தென்னாட்டு எருமைகளில் முக்கியமானவை. பலமுள்ள பருத்த தேகம், சாம்பல் நிற மயிர், சிவந்த தோல், நெற்றி, முண்டு, கணுக்கால் இவ்விடங்களில் மஞ்சள்நிற மயிர், வளைந்த நீண்ட கொம்புகள், முதலிய உறுப்புக்கள் கொண்டவை. இவ்வூர் மாடுகளுள் தேசி, ஜீரங்கி, பெத்தகிமிடி என்ற மூவகை மாடுகளுண்டு. இவை வெளுத்த கருநிற முள்ளவை. இவைகள் தினம் 12 முதல் 18 பவுண்டு பால் கொடுக்கும்.

## தென் கன்னட எருமைகள்

மங்களூருக்கு சமீபத்தில் ஜைன பந்தர்கள் என்ற ஜாதியினரால் நல்ல ஜாதியான இவ்வகை எருமை மாடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வகை எருமைகளைப் பந்தய ஓட்டத்துக்கு உபயோகிக்கிறார்கள்.

## டில்லி, முர்ரா முதலிய எருமைகள்

தென்னாட்டு எருமைகளைவிட டில்லி எருமைகளும், கராச்சி முர்ரா எருமைகளும் கறவைக்கு மிகச் சிறந்தவை. ஆகையால் நம் நாட்டு எருமைகளைச் சிறந்தவைகளாகச் செய்வதற்காக அரசாங்கத்தார் அவ்விடமிருந்து அநேக எருமைகளைக் கொண்டுவந்து, மதராஸ், குண்டூர், பட்டாம்பி, கோயம்புத்தூர், கோயில்பட்டி தளிப்பரம்பா, ஹாகரி முதலிய இடங்களில் விவசாயிகளின் உபயோகத்திற்காக வைத்திருக்கிறார்கள். குண்டூரில் ஓர் பெரிய எருமைப் பண்ணையை நடத்தி வருகிறார்கள் இவ்வகை எருமைகளின் கொம்புகள் சுருண்டு இருப்பதால் இவைகளைச் சுருட்டை என்று சொல்லுவதுண்டு. தினம் 18 பவுண்டு பால்கொடுக்கும். கன்றுபோட்டு சராசரி 344 நாட்கள் வரை பால் கறக்கும். இந்நாட்டு எருமையுடன் சேர்த்ததனால் கலப்பு எருமைகள் அநேக இடங்களில் பரவ ஆரம்பித்துத் தற்சமயம் தென்னாட்டில் பல இடங்களில் இவ்வகை மிகுந்திருக்கிறது. இவ்விதக் கலப்பு ரத்தமுள்ள எருமைகள் தினம் 11 முதல் 14 பவுண்டு பால் கொடுத்து, 338 நாட்களுக்குப் பின் மறுத்துப்போகும். இவை நாட்டு எருமைகளைவிட மிகப்பெரிதாகவும் கனமாகவும் இருக்கும். சுருட்டை எருமைகள் பொதுவாக இந்தியா முழுவதும் பிரசித்தமானவை.

---

# அத்தியாயம் 5
# மாடுகளைப் பராமரிக்கும் முறைகள்

மாடுகளை எம்முறையில் காப்பாற்ற வேண்டுமென்பதும், அவ்விதம் காப்பாற்றினால் எவ்விதமான பலன் கிடைக்கு



மென்பதும் தெளிவாக நமது பழைய நூல்களாகிய வேதங்களிலும் புராணங்களிலும் பாரதம் முதலிய இதிகாசங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

## தீனி முதலியன

மாடுகளின் தீனி விஷயத்தில் முதல் கவனம் செலுத்த வேண்டும். சரியான தீனி, சரியான நேரங்களில், குறையாது கொடுத்தல் முக்கியமானது. காளை, உழவு, வண்டி முதலிய மாடுகளுக்கு சத்துள்ள தீனி வைத்தல் அவசியம். வேளா வேளைகளில் தீனியில்லாமல் வேலை வாங்கினால் மாடு கெட்டு வியாதி ஏற்படும். காளைமாடுகளைச் சரிவரப் போஷிப்பதற்கு அவைகளுக்குப் புஷ்டிதரும் தீனியைக் கொடுத்து வேலையில்லாத காலங்களில் போதுமான உடற்பயிற்சியும் கொடுத்தல் வேண்டும். அப்போது மாடுகள் சுறுசுறுப்பாயும் நோயில்லாமலும் இருக்கும். காலை மாலை இருவேளைகளிலும் அல்லது ஒரு வேளையாவது கட்டாந்தரையுள்ள பாதைகளில் அரைமணி நேரம் நடத்திக்கொண்டு வரவேண்டும். அப்படி தேகப் பயிற்சி தந்தால் ஜீரணசக்தி மிகுந்து, தீனியின் சத்து உடம்பில் ஊறி, மாடு திரண்டு கொழுத்தும் இருக்கும். கடலைப்பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, தவிடு, சிறு அளவு உப்பு, இவைகளை மாட்டின் பருமன், நிறை, உயரம் இவைகளுக்குத் தக்கபடி கொடுத்தால் மாடு ஆரோக்கியத்துடனிருக்கும். பொலி காளைகளுக்கு இவற்றுடன், கொள்ளும்; பருப்புக் குறுணையும் சேர்த்துக் கொடுத்தால் புஷ்டி குறையாமல் இருக்கும்.

பசு, எருமை இவைகளுக்குத் தக்கபடி தீனி வைக்க வேண்டும். மாட்டின் பருமன், உயரம் இவற்றை அனுசரித்துத் தீனி கொடுக்கவேண்டுமேயொழிய அவைகள் கொடுக்கும் பாலைப்பொருத்துத் தீனி வைப்பது சரியல்ல. செரிக்கும் அளவுக்குத் தீனி வைத்தால் பாலும் சரியாகக் கொடுக்கும். பசுமாடுகளுக்குக் குறிப்பிட்ட நேரங்களில் தீனி கொடுபடாவிடில் கறவை சக்தி பாதிக்கப்படும், சில மாடுகளுக்குக் கறக்கு முன்னும் சிலவற்றிற்குக் கறந்த பின்னும், மற்றும் சிலவற்றிற்குக் கறக்கும்போதும் தீனிவைப்பதுண்டு, இப்பழக்கம் மிகவும் கெட்டது. எல்லா மாடுகளுக்கும் ஒரேவிதமாகக்

குறிப்பிட்ட ஒரு சமயத்தில் தீனி கொடுப்பதுதான் மேலானது. வெவ்வேறு விதமான பழக்கமுள்ள மாடுகளுக்கு ஒரே சமயத்தில் தீனி வைத்துச் சில நாள் பழக்கினால் பின்பு சரியாய் விடும். பழக்கிவரும் நாள்களில் பால் குறையும் என்று பயப்படக்கூடாது.

கறவை மாடுகளுக்கு, எள்ளுப்பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை, சிறிய அளவு தவிடு, குறுணை, சிறிய அளவு உப்பு, உலோகசத்து (Mineral Mixture) இவைகளை நன்றாக ஆட்டுக் கல்லில் ஆட்டி, புளிக்காததும் சுத்தமானதுமான கழுநீரில் வைக்கவேண்டும்.

மறுப்பிலிருக்கும் மாடுகளுக்கு, ஒரு பங்கு கடலைப் பிண்ணாக்கு, அரைப்பங்கு பருத்திக்கொட்டை, இரண்டு பங்கு தவிடு, கால் பங்கு குறுணை, ஒரு பிடி உப்பு, இவைகளை ஊற வைத்துப் பிசைந்து காலை மாலை கொடுத்தல் வேண்டும்.

சில மாடுகள் இரண்டொரு கன்று போட்டுப் பிறகு சினைப்படுவதில்லை. அப்படி இருக்கும் மாடுகளுக்குத் தகுந்த ஆகாரம் கொடுத்து மருந்து வகைகளைக்கொடுத்தால் சினைப் படும். மேலே சொல்லியபடி மறுப்புமாடுகளுக்குக் கொடுக்கும் தீனியைக் கொடுத்தல் மேலானது. நல்ல தீனியின்றி மருந்துகளினால் மட்டும் மலடைப் போக்கமுடியாது.

எல்லாவித மாடுகளுக்கும், புல், வைக்கோல் அல்லது அதற்குச் சமமான இதர ஆகாரமோ மிகவும் அவசியம். ஒவ்வொருமாடும் தினம் சுமார் 15 பவுண்டு வரை தின்னும். தொழுவம் நிறைய வைக்கோல் இருந்துகொண்டே இருக்கவேண்டியதில்லை. எந்நேரமும் மாடுகள் இவைகளை மென்று கொண்டே இருக்கும்படி போடவேண்டுமென்கிற அவசியமில்லை. மேய்வதற்குப் புல் தரையிருந்தால் மேய்க்கவேண்டும். பச்சைப்புல் மிகவும் அவசியம். மேய்ந்து வந்தால் வைக்கோல் தேவை குறையும். மேய இடமில்லாவிட்டால் பசும்புல்லை அறுத்துவரச்செய்து போடவேண்டும். கறவைப் பசுக்களுக்கு தினம் அகத்திக்கீரையைக் கொடுக்கவேண்டும். அது தேகத்திலுள்ள சூட்டைத்தணித்து, கெட்ட பூச்சிகளைக்கொன்று, ஜீரணத்தை அதிகப்படுத்தும்.



வெய்யிற் காலங்களில் சூட்டைச் சாந்தப்படுத்தவும், வெக்கை முதலிய நோய்கள் வராமல் தடுக்கவும் மாடுகளுக்குக் கம்பங்கூழ், பூசனித்துவட்டல், முதலியவைகளை ஒரு வேளை விதம் சில நாட்களுக்குக் கொடுத்தல் நல்லது.

## குளிப்பாட்டுதல் முதலியன :—

மாடுகளுக்குக் கால்களை தினந்தோறும் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். வாரமிருமுறை குளிப்பாட்ட வேண்டும். உழைக்கும் மாடுகளுக்கு வாரமொருமுறை நீச்சலடித்துக் கட்டவேண்டும். நீச்சலுக்குப்பின் ஒரு வேலையும் கொடுக்கக் கூடாது. மாடுகளை நன்றாய்த் தேங்காய் நார்ப்பையினால் தேய்த்து ரோமங்களை மிருதுவாக்கவேண்டும். உண்ணி, சரா உண்ணி, பேன், மாட்டு ஈ முதலியவைகள் பிடித்திருந்தால் அவற்றைச் சுத்தமாக நீக்கவேண்டும். கால் குளம்புகள் வெடித்து அதிகமாக வளர்ந்திருந்தால் அவைகளை உள்முனையில் படாமல் வெட்டிவிடவேண்டும். குளம்புகளை வெந்நீரில் உப்புச்சேர்த்து நன்றாக வாரமொரு முறை சுத்தம் செய்ய வேண்டும். வெந்நீரில் துணியை நனைத்துத் தூசி, முதலானவைகளைத் துடைத்து எடுக்கவேண்டும்.

## மாட்டுக் கொட்டில்

மாட்டுக்கொட்டிலைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் மாடுகளுக்கு ஒருவித நோயும் அணுகாது. பிணிகளுக்கு முக்கிய காரணம் அசுத்தமான மாட்டுக்கொட்டில்களே. கொட்டில்கள் மழையினின்றும் கடும் வெய்யிலினின்றும் மாடுகள் பாதிக்கப்படாமலிருக்கும்படி அமைக்கப்படவேண்டும். கொட்டில் நல்ல காற்றோட்டமாயும், வெளிச்சமுள்ளதாயுமிருக்க வேண்டும். சரியான முறையில் தொழுவங்களைப் பொருத்தி வைக்கவேண்டும். புல் அல்லது வைக்கோலைத் தொழுவங்களிலிருந்து மாடுகள் இழுத்து இறைக்கும்படி கட்டக்கூடாது. அடிதளவரிசை கெட்டியாகவும், மாடுகள் வழுக்கி விழாதபடி சுறசுறப்பாகவும் அமைக்கப்படவேண்டும். மூத்திரம் கொட்டிலிலிருந்து வெளியே சரிந்து விழும்படி தளவரிசை போட வேண்டும். அவைகள் வெளியே பாய்ந்து செல்லும்படியான சாக்கடைகளும் அவசியம் வேண்டும். போடும் சாணங்களை

அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும். மாடுகளை நெருக்கிக்கட்டக்கூடாது. கன்றுகளைத் தனியாக தூரத்தில் கட்ட வேண்டும். மாடுகளைக் கட்டவேண்டிய முளைகள் வடக்கு அல்லது தெற்கு முகமாய் இருத்தல் வேண்டும். துர்நாற்றமில்லாமல் கொட்டிலை தினம் கழுவவேண்டும். தினமும் அல்லது பிரதி செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் சாம்பிராணித் தூபம் போடவேண்டும். இத் தூபம் துர்நாற்றத்தையும் விஷக்கிருமி, கொசு முதலியவற்றை அகற்றுவதோடு மாட்டுக் கொட்டில் மங்களகரமாயும் நறுமணத்துடனுமிருக்கும்.

## சினை மாடு, கன்று, இவைகளைப் பாதுகாக்கும் முறை :—

பசு மாடு, எருமை முதலியவைகள் காளைக்குக் கத்த ஆரம்பித்த 10 முதல் 20 மணி நேரத்திற்குள் பொலிதலுக்கு அனுப்பப்படவேண்டும். சிலர் இதையறியாமல் இரண்டு நாள் பொறுத்துக் காளை விட எத்தனிப்பார்கள். இவ்வாறு செய்தால் பலன் ஏற்படாது. பிறகு 19 முதல் 22 நாளில் மறுபடியும் கத்தும். அந்நாட்களைக் கவனித்துச் சரியான காலத்தில் பொலி காளை விட்டால் சினைப்படும். சில பசுமாடுகள் சத்தம் போடுவதில்லை.

இக்காலங்களில் மாடுகள் நிம்மதியற்று, பரபரப்புடனிருந்தாலும், வாலை திருகித்திருகி பக்கங்களில் ஒதுக்கினாலும், கத்தினாலும், பக்கத்திலுள்ள மாடுகளின்மேல் ஏறினாலும் அல்லது வேறு மாடுகளை ஏறவிட்டாலும், மர்மஸ்தானம் கொஞ்சம் வீங்கி வழுவழுப்பான திரவம் கசிந்தாலும், அடிக்கடி சிறிது சிறிதாக நீர் விட்டாலும் மாடுகள் காளைக்குக் கத்தும்படியான சமயம் நெருங்கியதாக அறிந்து கொள்ளலாம். இச்சமயத்தை நன்றாக நிதானித்துக் காளையை விடவேண்டும். அநேகமாக எல்லா மாடுகளும் ஒரு தரம் பொலிந்தால் சினைப்படும்.

## சினைப்படுவதின் அறிகுறி

சினைப்பட்டுச் சில மாதம் அதன் அறிகுறிகள் தெளிவாக விளங்காது. சினை வளர்ச்சி பெறப்பெற மாட்டின் வயிறு இடப்பக்கம் பெருக்க ஆரம்பிக்கும். மடியும் பெருத்துக்



கொண்டுபோகும். குறியிலிருந்து திரவம் கசியும், கண்களைச் சுற்றி பயிலை விழும். வாலை நடுவில் வைத்துக்கொள்ளாமல் பக்கவெட்டில் வைத்திருக்கும். ஐந்தாம் மாதம் முடிவடைந்த பிறகு, குளிர்ந்த நீரைக்குடித்ததும் கர்ப்பம் இடது பக்கத்தில் புரள்வது நன்றாகக்கண்களுக்குப் புலப்படும். சினை இன்னும் அதிகமாக முதிர்ச்சியடைய அடைய, மடியில் சீயம் பாலைப் போல் பால் கொள்ளும். பின் தட்டு மூண்டுகள், குறி (கிடை) நாபி, இவை தளரும். கன்றுபோட, சில நாட்களுக்கு முன் பால் மடி தளர்ந்து தொப்புள் சுறந்துவிடும்.

அச்சமயங்களில் மாட்டைத் தனியாகக்கட்டிப் படுக்கைக்கு வைக்கோல் போட்டு வைக்கவேண்டும். அதிகமாக விரட்டக்கூடாது. அனாவசியமானவர்களை அதன் சமீபம் அணுகவிடக்கூடாது. அதைத் துன்புறுத்தி பயமுறுத்தலாகாது. கன்று போட்ட அரை முதல் நான்கு மணி நேரத்திற்குள் நஞ்சுக்கொடி விழும். அதற்குமேல் போனால் கால்நடை வைத்தியர்கள் உதவி பெறவேண்டும்.

## சினைமாட்டுத் தீனி

மாடுகள் சினையாயிருக்கும்பொழுது தீனி கொஞ்சம் அதிகமாகவே கொடுக்கவேண்டும். வயிற்றிலுள்ள கன்றின் வளர்ச்சிக்கு இது மிக உதவும். எள்ளுப்புண்ணாக்கு 2 பாகம், பருத்திக்கொட்டை ஒரு பாகம், தவிடு ஒரு பாகம் குறுனை இரண்டு பாகம், உப்பு ஒரு பிடி, உலோகசத்து (Mineral Mixture) இவைகளை அரைத்துப் போடவேண்டியது.

## கன்றுகளைக் காப்பாற்றும் விதம்

கன்று பிறந்ததும் அதன் மூக்கு, வாய் வழியாகக் காற்றை பலமாக ஊதினால் சுவாசக் குழாய்கள் சுத்தப்பட்டு நன்றாக மூச்சு விடும். தொப்புள் கொடியைக் கயிற்றால் கட்டி அரைத்த மஞ்சளைத் தடவவேண்டும். கன்றுக்குச் சீயம் பால் அதிகமாக விடக்கூடாது. விடாமலும் இருக்கக்கூடாது. இப்பாலில் விரேசனத்துக்குரிய பொருள் இருப்பதால் கன்றுக்கு பேதிக்கிக் கொடுத்ததுபோல் குடல் சுத்தியாகும். ஒன்றரை மாதம் வரை கன்றுக்குப் புல் போடக்கூடாது. பிறகு கொஞ்சம் கோதுமைத் தவிட்டைப் பதமாக வருத்து இளஞ்

குட்டுடன் கொடுக்கவேண்டும். இரண்டு மாதத்திற்குப்பின் சிறிய அளவில் கடலைப் புண்ணாக்கும், ராகி மாவும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். மூன்றாம் மாதத்திலிருந்து புண்ணாக்கு, கோதுமைத் தவிடு, அரைப்பிடி உப்பு கலந்து ஒருவேளை கொடுக்கவேண்டும். ஆறு மாதம் வரையில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்த வேண்டும். ஆறுமாதக் கன்றுக்கு 1 பங்கு புண்ணாக்கு, ½ பங்கு பருத்திவிதை, 1 பாகம் கோதுமைத் தவிடு, ஒரு பிடி உப்புங்கலந்து இரு வேளையுங் கொடுத்தால் வெகு சீக்கிரமாக வளர்ச்சியடைந்து பெருக்கும். தீனி வைப்பது தினமும் ஒரே சமயத்தில் வைத்தால் செரிமானம் கெடாமலிருக்கும். மண் முதலிய தேவையில்லாததைத் தின்னாமலிருக்க இரண்டு மாதம் வரை வாய்க்கு மிருதுவான கயிற்றுப் பையைக் கட்டிவைக்கவேண்டும். நிறைய தேகப் பயிற்சி அளிக்க வேண்டும். கன்றுகளைச் சரியானபடி காப்பாற்றாவிட்டால் வளர்ச்சி குறைந்து வியாதி வந்து குட்டையாக இருக்கும். ஆறு மாதத்திற்குப் பிறகுதான் நெல் தவிட்டைச் சேர்க்கவேண்டும்.

எருமைக் கன்றுகளைக் காப்பாற்றுவது வெகு சிரமமாகும், எருமைப்பால் தடிப்பாயும் கொழுப்பு பதார்த்தம் மிகுதியாகவும் இருப்பதால் கன்றுகளை அதிகமாக ஊட்டவிடக்கூடாது. கைப்பால் போடுவது மிகவும் நல்லது. பொதுவாகத் தாய்ப்பால் அவைகளுக்கு மிகுதியாக உட்கொண்டால் அஜீரணம் ஏற்பட்டுக் கழிச்சலுண்டாகும், எருமைப் பாலில் வெந்நீர் கலந்து கையினால் கன்றுகளுக்கு ஊட்டினால் சீக்கிரம் செரிந்து வளர ஆரம்பிக்கும். பசுங்கன்றுகளுக்குக் கொடுக்கும் அதே தீனியை அவ்வளவே கொடுத்தால் சீக்கிரத்தில் வளர ஆரம்பித்துப் பிழைத்திருக்கும்.

மாடுகளுக்கும் கன்றுகளுக்கும் எவ்வளவு தீனி வைக்கச் சொன்னாலும் அவைகளின் சொந்தக்காரர் தனது சொந்தப் பார்வையில் இவைகளைச் செய்யாது பணியாள் மூலியமாக எவ்வளவு செய்தாலும் பயன்படாது. தன் சொந்தப் பார்வையில், அக்கரையுடன் யஜமானன் செய்வதுபோல் பணியாட்கள் செய்யமாட்டார்கள். பெரிய குடும்பங்களில் இப்படிப் பராமுகமாக இருப்பதால்தான் நல்ல ஜாதி மாடுகள் அநேகம் இறந்தும் பிணி பட்டும், கேவலமான ஸ்திதியை அடைந்தும் வருகின்றன. உயர்ந்த ஜாதி மாடுகளை அவர்கள் நிறையப்



பணம் கொடுத்து வாங்கினாலும் அவர்களிடம் மாடுகள் விருத்தியடைவதில்லை. குடியானவனுடைய சொற்ப விலையுள்ள நாட்டு மாடுகள் வெகுநாள் ஜீவிக்கின்றன. இதற்குக் காரணம் குடியானவனுடைய சிரத்தையும் இவர்களுடைய அசிரத்தையுமே.

---

## 6-வது அத்தியாயம்

# மாடுகளுக்கு ஏற்படும் நோய்களும், அதன் சிகிச்சையும்

### 1. அழகிய திருச்சிற்றம்பலமுடையான் உருண்டை

ஆதண்டங் கொழுந்து, உப்பு, சங்கம் வேர், மிளகு இவைகளை அரைத்து அஞ்சனமாக இடுவது.

பருத்திவிதை, மிளகு, சிறு நீர், இவை சேர்த்து இடித்து நசியம் பண்ணுவது. (மர்தம், சன்னி, சளி முதலியவைகளுக்குப் பிரயோகிக்கலாம்.)

### 2. அழல் வெக்கை நோய்

மாடு சிவந்த நீர் விடும், உள் அழன்றிருக்கும், உடம்பெல்லாம் நெருப்பு சுட்டதுபோலிருக்கும். தீனி தின்னும்.

இதற்கு மருந்து:—

(1) தென்னம்பாளையும் பச்சை நெல்லிக்காயும் இடித்து, காடியில் இரண்டுநாள் ஊரவைத்து மறு நாள் எடுத்துப் பிழிந்து புகட்டவும். இதற்குச் சூடு  இருதலைச் சூடு.

(2) தென்னம்பாளை, அத்திப்பட்டை, வெதுப்படக்கி இவைகளைச் சமனாக இடித்துச் சாறுபிழிந்து, வகைக்கு எடுத்த சாறின் அளவு நல்லெண்ணெய் சேர்த்து இவைகளை ஒன்று கூட்டிக் காய்ச்சி, ஆரவைத்துப் புகட்டவும்.

(3) வெதுப்படக்கியும் ஒருபடி எள்ளும் சேர்த்து நன்ருயரைத்து மோருடன் புகட்டக் குணமாகும்.

(4) பெருமருந்து வேர், மாவலிங்கம்பட்டை, கொடிவேலி வேர், சுக்கு, சித்தரத்தை, கண்டந்திப்பிலி, மிளகு, யாளிவிரை இவை வகைக்குப் பலம் ஒன்று வீதம் கூட்டி அரைத்துப் புகட்டவும். நொய்க்கஞ்சி கொடுத்துவந்து 4-வது நாள் குளிப்பாட்ட வேண்டும்.

## 3. அடித்தடித்துக்கொண்டு விழும், விழியால் ஆவி புறப்படும்

இதற்கு மருந்து:—

வேலிப்பருத்தியிலை, உள்ளி, வசம்பு, சிறு நீர் விட்டரைத்துக் கொடுக்கத் தீரும். நொய்க்கஞ்சி, பழம் வைக்கோல் இவைகளைத் தீனியாகக் கொடுக்கவும்.

## 4. அடைப்பான் சகல விதத்திற்கும்

மருந்து:—

ஓமம், வசம்பு, மாவலிங்கம்பட்டை, வெற்றிலை, சுக்கு, சிற்றரத்தை, கண்டந்திப்பிலி, இவ்வேழு சரக்கையும் சமனாகச் சேர்த்து அரைத்து உருண்டை செய்து கொடுக்கவும். வெந்நீரிலும் கொடுக்கலாம். சகல அடைப்பான்களும் தீரும். தீனி நொய்க்கஞ்சி.

## 5. அரணைக் கடி விஷம்

உடம்பெல்லாம் தடிக்கும், மயிர் சிலிர்த்திருக்கும்.

இதற்கு மருந்து:—

1. அவுரிவேரரைத்துக் காடியில் கரைத்துப் புகட்டி மேலுக்கும் துவளையிடவும் குணமாகும். 2. பெருங்காயம் பலம் ஒன்றை வெந்நீரில் அரைத்துக் கலக்கிக்கொடுக்க தீரும்.



## 6. 'அரணை' அதாவது நாவரட்சி (தண்ணீர் குடிக்காது) நாக்கில் கறுத்த அடிநரப்பு பருத்திருக்கும்

இதற்கு மருந்து:—

முன் இரவு தீனி போடாமல் வைத்து மறு நாள் காலை நாக்கினடிப்பக்கத்திலுள்ள தடித்த கரு நரம்பை சுத்தமான பெரிய ஊசியினல் குத்தி ரத்தத்தை வெளிப்போக்கி, தேன், புளி, மஞ்சள், படிக்காரம், இவைகளை அரைத்து லேசாகத் தடவி, துணியால் நாக்கை கட்டிவைத்து, சில மணி நேரம் பொருத்து அவிழ்த்துவிட வேண்டும். அன்று முழுவதும் திரவ பதார்த்தத் தீனி வைக்கவேண்டும். வைக்கோல் மறு நாள் போடவேண்டும்.

## 7. 'அஸ்மா' உருண்டை

இது வாயு, வயிற்று வலி, கிருமி முதலியவைகளைப் போக்கும்.

இதன் முறை:—

ரஸகர்ப்பூரம், சுக்கு, மிளகு, ஓமம், கிராம்பு இவைகள் வகைக்கு விராகனெடை 1, கும்மட்டிக்காய் இருபது. இவைகளை ஒன்றுபட அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் உருண்டைகள் செய்து தண்ணீரில் கொடுக்கவும்.

## 8. ஆனைச் சொரி

ரோமம் படல் படலாக உதிரும். சொரி ஏற்படும். இளைக்கும்.

இதற்கு மருந்து:—

எருமை நெய் ஒரு நாழியும், பத்து எலுமிச்சம் பழச்சாறு, கருப்புகட்டி வட்டு பத்து, ஒரு உழக்கு உப்பு, ஒரு உழக்கு எள் இவைகளைச்சேர்த்து அரைத்துக் குழப்பி மூன்று நாள் உள்ளுக்குத்தரக் குணமாகும்.

## 9. ஆனைச் சிலந்தி


இதற்கு மருந்து:—

எட்டிக்கொட்டை கால் சேர், அடப்பன்பட்டை, (வாதா மரப்பட்டை) வேப்பெண்ணெய் வகைக்கு சேர் ஒன்று, இவைகளைச் சேர்த்து மூன்று நாளைக்கு ஒவ்வொரு வேளை கொடுக்கக் குணமாம். தினமும் குளிப்பாட்டல் அவசியம்.

## 10. இரைகொண்டு நிற்கும். வாய் நீர் விழும். பேயாது

இதற்கு மருந்து:—

வெதுப்படக்கி, சாணக்கி, நல்லெண்ணெய், இவைகளை யொன்றுசேர்த்தரைத்து மோரிலே குழப்பிக்கொடுக்கவும்.

எள்ளும் எண்ணெயும் கொடுக்கவும். 

சூலச்சூடு இவ்விதம் போடவும்.

## 11. இளங்கொடி (நஞ்சுக்கொடி விழுவதற்கு

மருந்து:—

1. நாகதாளியைப் பறித்து நல்லெண்ணெயில் கொடுக்கவும்.

2. பச்சை சந்தனம், வெங்காயத்தாள் சமனாய்ப் பசும் பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுத்தால் இளங் கொடி விழும்.

3. மூங்கில் இலை, பேய்க் கரும்பு, தருப்பைப்புல், இவை மேய்க்கக் கொடி விழும்.

4. கஞ்சியில், கருப்புட்டி, எள்ளு, வகைக்கு ½ சேர் கலந்து புகட்ட நஞ்சுக்கொடி விழும்.

## 12. இளைத்த மாட்டிற்கு

இளைத்துத் துரும்பாக இருக்கும் மாட்டுக்கு ஒரு வாரத்துக்கு நீராதாரத்துடன் நல்லெண்ணெய் சமனாய்க்



கூட்டி, அதில் ஒரு விராகனிடை கற்பூர சிலாசத்து கலந்து போடவும். தீனியும் சத்துள்ளதாக கொடுத்தால் தேறும்.

## 13. உடுக்கை நோய்

நான்கு கால்களும் துவண்டு கூட்டிவைத்து நிற்காது; தலையைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டிருக்கும், வாய் நீர் வடியும், நடக்காது, படுக்காது.

இதற்கு மருந்து :— 1. நிலப்பனங்கிழங்கு, பச்சைக் கொள்ளு இவைகளைக் காடியில் அரைத்துக்காடியில் கரைத்துப் புகட்டவும்.

2. எருக்க இலைச்சாறு ¼ படி, பிரண்டைச்சாறு ¼ படி, சுக்கு, ஓமம், கல்லுப்பு வகைக்கு மூன்று விராகனிடை இவைகளைச்சேர்த்து அரைத்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

## 14. உதைத்துக்கொள்ளும், ஓடி விழும், முதுகை நெளித்துக்கொள்ளும்.

இதற்கு மருந்து :—

பாதாள மூலிகை (நாய்க்குடை) யின் சத்தை உப்புடன் கூட்டிக் காடியில் புகட்டவும்.

கொன்றைக் கொழுந்தைக் காடியிலிட்டு நசியமிடவும். (மூக்கில் பிழியவும்) மறுநாள், சதுரக்கள்ளிச்சாறுடன், உள்ளிப்பூண்டு, வசம்பு, கோவையிலையையும் கூட்டி மூக்கில் பிழியவும்.

## 15. உள்ளடைப்பான்

வாயால் தண்ணீர்விடும், நாக்குத் தொங்கும், மயிர் சிலிர்த்திருக்கும், தூங்கும்.

இதற்கு மருந்து :—

(1) மிளகாய், வெற்றிலை இவைகளை உரலில் போட்டுத் துவைத்து உள்ளுக்குக் கொடுக்கக் குணமாகும்.

(2) பூவந்திக்கொட்டை விதையின் மேல்தோலை நீக்கி, அரைத்து வெந்நீரில் கரைத்துப் புகட்டவும்.

## 16. உயிந்த வியாதி

கண் குழிந்திருக்கும், காதுகள் தாழ்ந்து நிற்கும்.

இதற்கு மருந்து :—

தென்னைய வித்து நீர் வடித்துக்கொண்டு எண்ணெயுடன் கலக்கிப் புகட்டவும். இடது விலாவில் சுடவும்.

## 17. உப்பிசம் சகல விதத்திற்கும் மருந்து

வயிறு உப்பும், கத்தும், ஒரு நிலையில் நிற்காது காற்றுப் பிரியும், இரைச்சல் கேட்கும், மந்தம் ஏற்படும்.

இதற்கு மருந்து :—

(1) புதுப்பாண்டத்தில் 'கருநொச்சியிலையை அடைத்து அதன்பேரில் ஒருபடி உப்புக்கொட்டி, மேலும் எருக்கம் வேர் அடுக்கி, அதன்மேல் படி உப்பு போட்டு, அதன்மேல் குப்பைமேனியிலையைப் போட்டு, சட்டியால் மூடி, சீலைமண் செய்து அடுப்பிலேற்றி இரண்டு ஜாமம் ஒரே ஜாதி விறகால் எரித்து, ஆறவிட்டு எல்லாவற்றையும் பாண்டத்திலிருந்து எடுத்துத் தூளாக்கிக் குப்பைமேனிச்சாறு சமன் கொடுத்து வெய்யிலில் வைத்து நெய்யில் கலந்து கொடுக்க, சகல உப்பிசமும் தீரும். இது கைகண்ட மருந்து.

(2) ஆத்தியிலை, விடத்துத்தியிலை, காட்டுத்துவரை, வரட்பூலா, நாகல், நீர்ப்புலா, இலந்தை, கருவை, துடரி, கருவை இப்பத்தின் இளந்துளிர்களுடன், பெருமருந்து வேர், ஆவாரங்கொழுந்து, மாவலிங்கப்பட்டை இவை சமன் சேர்த்துக் காடி வார்த்து அரைத்து, கொப்பரை அளவு தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாள் கொடுத்தால் சகல உப்பிசமும், மந்தமும் பறந்துவிடும்.

## 18. ஊதடைப்பான்

வயிறு வீங்கும், மயிர்க்கால் சிலிர்த்து நிற்கும், தலை தாழ்ந்து நடுக்கும், புல் மேயாது, தன்னைத்தான் அறியாது.



இதற்கு மருந்து :—

வட்டத்துத்தியிலை, மிளகு, நெய் மூன்றும் அரைத்து மூன்று நாள் புகட்டவும்.

பூச்சு மருந்து :—

புத்து மண்ணையரைத்து, மேலே பூசவும்.

## 19. எலும்புருக்கி நோய்

இளைத்துக்கொண்டே சதை குறைந்து எலும்புகள் வெளித்தெரியும், சோர்ந்து வரும், சக்தியிராது, சாணத்துடன் விழும்பும் உதிரமாக விழும்.

இதற்கு மருந்து :—

(1) வில்வ வேரை அரைத்து வில்வக்காயளவு எடுத்து மோரில் குழப்பிப் புகட்ட வேண்டும்.

(2) விளுதிப்பட்டை, (பிச்சி) காரையிலை, ஆடு தின்டாப்பாளை இவைகளை, கொப்பரையளவு அரைத்து, ஓமம், பயறு, வெந்தயம், வகைக்கு 8 விராகனிடை மோரிலரைத்துச் சேர்த்து ஒரு வாரம் கொடுக்க தேறும், வெந்நீர் காட்டவும்.

(3) நெஞ்சிலேயிருந்து இரு புறமும், தலை உச்சியிலும்

 இப்படி சுடு போடவும், மருந்தும் கொடுக்கவும். குணம் ஒரு பக்ஷத்திற்குள் ஏற்படும்.

## 20. ஒட்டு நறுள் வியாதி

அருவருப்பாக மேயும். உலர்ந்துப் போம், இதற்கு நடு நெஞ்சில்  இப்படி மூன்றிடம் சுடு போடத் தீரும்.

## 21. ஒள்ளி நோய்

உடலெல்லாம் வெடிக்கும்—நடக்காது, உடம்பு உலர்ந்து போகும்.

மருந்து :—

அத்திச்சாறும் வசம்பும் கூட்டி அரைத்து ஒருபடி பசுவின் வெண்ணெயில் கலந்து கொடுக்கவும்.


இதற்கு நான்கு காலிலும் இறங்கச் சூடு போடவும்.

## 22. கருநோய்

வெய்யிலில் நில்லாது, நாய்போல் திமிரிமீறும். நீரில் போய் நிற்கும். இரு விலாப்புறமும் வீங்கும்-வயிறு வீங்கும். இதற்கு மருந்து :—

(1) உழக்கு மாட்டு வெண்ணெயில் உப்புச் சேர்த்துப் புகட்டவும்.

(2) பருத்தியிலைச் சாறு, மிளகுபொடி, சிறுமீன் கழுவு தண்ணீருங்கூடக் கலந்து வார்க்கவும்.

(3) செவியடியில்  இப்படி எழு சூடு போடவும். (இதற்கு இடது செவியில் சூட்டுக்கோல் காய்ச்சி ஊடுருவச் சுடவும்).

## 23. கன்றடி நோய்

கண் பூளை சாயும். மூக்கு வேர்க்கும், உதிரமாலிக்கும்.

இதற்கு மருந்து :—

அழிஞ்சில் வேரையரைத்துக் குருணி மோரில் புகட்டவும்.

## 24. கருவடி நோய்

உடம்பு கறுக்கும். உடல் வற்றும். மேய அறியாது. வாய் நாறும்.

இதற்கு மருந்து :—

(1) ஓரிலைத் தாமரையும், ஆமணக்கு வேரையும் அரைத்து பச்சைப் பாலில் கலந்து புகட்டவும்.



(2) விலாவில்  இப்படி 10 சூடு சுடவும்.

## 25. கன்பாராத பசுவிற்கு

ஊமத்தங்காய், வசம்பு, பூண்டு, கல்லுப்பு, இவையரைத்து எலுமிச்சங்காயளவு வெண்ணெய் சேர்த்துப் பிசைந்து உள் நாக்கில் தடவவும். கன்றுக்கு முகத்தில், வாலில் மேலிருந்து கீழ்ப்பக்கமாக தடவவும்.

## 26. கருந்து வலிக்குப் பற்று

விரளி மஞ்சள், மிளகுப்பொடி, வெண்ணெயில் கலந்து போடவும்.

விளக்கெண்ணெய் எருக்கம் பாலில் கலந்து பத்து போடவும்.. புளித்த தோசைமாவும் போடலாம்.

காயும் நல்லெண்ணெயில் துணியில் உப்பை பொட்டணமாக முடிந்து நனைத்து ஒத்தடம் கொடுக்க வலி எடுபடும்.

## 27. கண்ணில் பூ விழுவதற்கு

பழைய நத்தாங்கூடு கொண்டுவந்து தூளாக்கி கற்கண்டு தூள் சமனாக சேர்த்து ஒரு பணவெடை 3 நாள் கண்ணில் ஊதினால் பூ கரையும்.

## 28. கரப்பான் நோய்

புல் மேயாது, அசைபோடமாட்டாமல் தலை குத்திட்டு நிற்கும்.

மருந்து :—

நாரத்தை வேரும் சுக்கும் முலைப்பாலிலுரைத்து மூக்கில் நசியமிடவும், தீரும். இதற்குச் சூடு, தலைக்கட்டிச் (சுற்றி) வயிற்றைக்கட்டி (சுற்றிச்) சுடுவது.

## 29. கண்ணில் சாரைக்குருடு கண்தெரியாது தடுமாறும்

1. நாவற் பட்டையும், பேய்த் தும்பைச்சாறும் கலந்து கண்ணில் பிழியவும்.

2. இவ்விரண்டையும் அரைத்துக் காடியில் கலந்து புகட்டவும்.

3. விலாப்புறம் மூன்று சூடு போடவேண்டும்.

## 30. கன்று கொள்ளாத மாட்டிற்கு

ஆலம்பட்டைக் கரி, அத்திப்பட்டை, இவ்விரண்டையும் பசுவின் பாலிலரைத்து மாட்டின் மேலும், கன்றின்மேலும் தடவினால் கன்று குடிக்கும். மாடுகொள்ளும்.

## 31. கழி வெக்கைக்கு லேகியம்

ரத்தம், சீதம் விழும். சாணி பீச்சடித்து நாறும்.

1. கடுக்காய்ப்பூ, சிறு நாகப்பூ, இரும்பு, வெள் மிளகு, காட்டாத்திப்பூ, அரிசித்திப்பிலி, சுக்கு, கண்டத்திப்பிலி வகைக்கு ¼ சேர். பூண்டு ½ சேர், ஓமம் 1 சேர் இவைகளை 1½ சேர் நெய்யில் பதமாக வறுத்து இடித்துத் தூள் செய்து கொண்டு மாவலிங்கம் பட்டை 1 சேர், கொடிவேலி ¼ சேர் அரைத்து எல்லாவற்றையும் கலந்து லேகியமாகக் கிண்டி எடுத்துக்கொண்டு எலுமிச்சம்பழ அளவு, திரும்வரை தினம் கொடுக்கக் குணமாகும். அரிசி உடைத்துக் கஞ்சி கொடுக்க வேண்டும்.

## 32. காசு நறுளி என்ற நோய்

அருவருப்பாக மேயும். அசை போடாது.

இதற்கு மருந்து:—

கற்றாழைச்சாறும், தாளிச்சாறும், மோரும் உப்பு நீரில் கலந்து வார்க்கவும்.

உச்சந்தலையில் 'ஷ' என்று நான்கு சூடு சுடவும்.

## 33. காமாலை

கால் வீங்கும். முகம் உதிக்கும். வயிறு ஊதியிருக்கும்.

மருந்து:—

பச்சையரிசியரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டவும். இடது விலாவில் சூடுபோடவும்.

## 34. கால் நோய்

கால் வெடித்து முடங்கி நடக்கும். இதற்கு ஊமத்தை யிலையுஞ் சுண்ணாம்பும் அரைத்துப் பூசவும்.

## 35. கால்கள் நான்கும் வீங்கும். உடல் சொர்பி நிற்கும். சாணியும், தேகமும் நாறும்

1. கிலு கிலுப்பை இலைச்சாறு, பாதிரிப்பட்டை, மிளகு, வெள்ளைப்பூண்டு, வசம்பு இவைகளை அரைத்து மோருடன் கலந்து கொடுக்கவும்.

2. ஆவரையிலையை இரவு அடுப்பில் வேகவைத்துப் பிசைந்து மோருடன் புகட்டவும்.

3. பனைவெட்டு (வெல்லக்கட்டி) நான்கு, எள்ளும் எண்ணெயும் கூட்டிக் கொடுக்கவும்.

4. கொன்றைப்பட்டையை, மோர், பழங்கஞ்சி இவைகளில் பிழிந்து புகட்டவும். எள்ளும், எண்ணெயும் எலுமிச்சம்பழம் நாலும், சேர்த்துக்கொடுக்கவும்.

## 36. கால்கள் நான்கும் தவளிக்கும், கண்பீளை சாரும், வெகு உஷ்ணமாக சாணிபோடும்

நீர்ப்பூலாச்சாறும் வேப்பெண்ணெயும் கலந்து கொடுக்கவும்.

விஷ்ணு கர்ந்தைச்சாறு, மிளகு, உழக்கு (½ படி) நெய், சேர்த்தரைத்துப் பசுவின்பாலில் கொடுக்கவும்,

## 37. கிராணி நோய் (பலவித வயிற்றுப் போக்கு)

தலைச்சுருளியிலையை அரைத்துக் காடியில் கலந்து கொடுக்கவும்.

இருவிலாவில் $\begin{matrix}+ & +\\ + & +\end{matrix}$ இவ்விதம் சுடவும்.

## 38. குஸ்ரடி நோய்

நாக்கு நீட்டி நிற்கும். மேயாது. இதற்குக் கோவையிலையும் குன்றியிலையும் அரைத்துக் காடியில் புகட்டவும்.

## 39. நுன்றிட நோய்

இரைக்கும், நெஞ்சு அனற்பற்றியும். மூக்கில் கோழை விழும்.

மருந்து :—

குப்பமேனியிலை, வசம்பு, பூண்டு இவைகளைச் சேர்த்து மூக்கில் நசியமிடவும்.

## 40. குதிரை வலிப்பு நோய்

1. கண் சுருங்கி இருக்கும்.

மருந்து :—

(ஐங்காரமாகமருந்து) வெள்வெங்காயம், வசம்பு, மிளகு, வெள்ளெருக்குத் தண்டு. கள்ளியிலை இவைகளை நல்லெண்ணெயுடன் சிறு நீர் வார்த்து அரைத்துச் சிறு நீருடன் புகட்டுவது.

2. கர்ப்பூர வல்லியிலைச் சாற்றை நீருடன் கலந்து வார்க்கவும். இதற்குச் சூடு {-} இப்படி 4 சூடு போடவும்..



## 41. ஞள நோய்

(1) சுற்றித்திரியும்; சுழலும்; விழுந்து கிடக்கும்.

மருந்து:—

ஐங்காரமாக எருக்கம் பாலும், அதன் தண்டும், தழையுமாக நறுக்கி நீருடன் மூக்கில் நசியம் போடவும்.

(2) வேப்பம்பட்டை, காரைப்பட்டை இவைகளை நறுக்கி 'தெள்ளுபெய் நீருமாக' இரண்டு நாள் விடவும். ப 8 இப்படி 3 சூடு போடவும்.

குறிப்பு:— 'தெள்ளுபெய்நீருமாக' என்பதின் பொருள் விளங்கவில்லை.

## 42. ஞலழபாடிக்க, தண்ணீரோநிச்சொரிய

இலவும் பட்டை, ஒதியம் பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, மருதம் பட்டை, கருவேலம் பட்டை, நாவல் பட்டை, மயிர் மாணிக்கம், நறுந்தாளி, பெருந்துத்தி, பூலாவிலை, வரட் பூலா இலை, பொரிமாவு, இவைகளை ஒரு பானையில்போட்டு, குறுணிக்கஞ்சி (ஒரு மரக்கால்) வார்த்து இரவு முழுவதும் வேகவைத்து, குறுணி மோரில்கரைத்து, எலுமிச்சம் பழம் 5 இரண்டு நாழி (இரண்டு படி) பால், உழக்கு (¼ படி) எள்ளு, உழக்கு எண்ணெ, 4 இளநீர், இளம்பாளை ஒன்று, இவைகளைக் கெட்டியாக அரைத்து இளகக் கரையாமல் இறுகச்செய்து, இடவும்.

## 43. சுளப்பு வளர்ந்து வரும் நோய்

கருணைக் கிழங்கு, பெருகங் கிழங்கு, பசு மஞ்சள், மணத்தக்காளி, கோரோசனை, இவற்றையெல்லாம் காடி வார்த்தரைத்து மூன்று நாள் புகட்ட நிற்கும்.

## 44. குடல் நோய்

பசளைப் பழச்சாறுபோல் நீர் விடும்.

இதற்கு மருந்து :—

முடக்கத்தானிலை, உத்தாமணியிலை, தழுதாளையிலை, இவைகளை யிடித்துச் சாறுபிழிந்து வேப்பெண்ணெயும், காடியும் சாறுகளுடன் கலந்து புகட்டவும்.

மற்றொருவிதக் குடல் நோய் :—மாடுகளின் வயிறு இரையும், வயிறு உப்பும், அசை சரியாகப் போடாது. கழியும். சாணி பல நிறங்கொண்டதாக இருக்கும். படுத்துப்புரளும்.

மருந்து:—

வெதுப்படக்கி இலை, சங்கிலை, தழுதாளை இலை, குப்பைமேனி இலை, பீக்களாத்தியிலை, வசம்பு, சுக்கு, பூண்டு, மிளகு ஓமம், வகைக்குப் பலம் 1, அரிசி மாவு $\frac{1}{4}$ படி, இவைகளை நேக அரைத்து $\frac{1}{4}$ சேர் நல்லெண்ணெயும் சேர்த்து மத்தித்து நான்கு நாள் கொடுக்கக் குணமடையும்.

## 45. குன்னும் நோய்

நான்கு கால்களும் நடுக்கும் தீனி கொஞ்சமாகத் தின்னும்

மருந்து :—

குன்றிலைச் சாறும், பசுவின்பாலும் கலந்து கொடுக்கவும். குணமடையும்.

## 46. குடல் வெக்கை

குடல் இத்துவிழும், பெருமிரைச்சலுடன் கழியும்

இதற்கு மருந்து ;—

பிரண்டை ஒரு பிடி, மிளகாய் ஒரு குத்து இவ்விரண்டையும் நேக அரைத்துக் காட்டாமணி இலையுடன் கொடுக்கவும்.

## 47. கும்மட்டிக்காய் (ஜீரணசக்திக்கும், சுறுசுறுப்புக்கும்)

கஸ்தூரி மஞ்சள் சேர் அரை, கருஞ்சீரகம் சேர் $\frac{1}{4}$, கறி மஞ்சள் சேர் $\frac{1}{2}$, மிளகு சேர் $\frac{1}{2}$, சுக்கு சேர் $\frac{1}{2}$, சித்தரத்தை சேர் $\frac{1}{4}$, கண்டதிப்பிலி சேர் $\frac{1}{8}$, கோஷ்டம் பலம் 1, அரிசித்திப்



பிலி பலம் 1, ஜீரகம் பலம் 1, மகிஷாக்ஷிகுக்கில் (பூனைக் கண் குங்கிலியம்) பலம் 1, அக்கராகாரம் பலம் 1, ஓமம் படி 1, உப்பு படி $\frac{1}{2}$, தயிர் படி 1, இந்தச் சரக்குகளை இடித்துத் தூள் செய்து நான்காய்ப் பிளந்திருக்கும் 25 கும்மட்டிக்காய்களில் நிரப்பிப் பானையில் வைத்து மேலே தயிர் விட்டுச் சட்டியால் மூடி, வெய்யிலில் வைத்து ஒவ்வொரு கீத்தாய்க் கொடுக்கவும்.

### மற்றொரு வகை

சுக்கு, திப்பிலி, ஓமம், மிளகு, காட்டு சீரகம், கருஞ்சீரகம், ஓமம், வசம்பு, சதகுப்பை, குக்கில், சித்தரத்தை, குரோசாணி ஓமம், அக்கராகாரம், சித்திர மூலம், கொடிவேலி, பேரரத்தை, கார்போக அரிசி, வெம்பாலை, தேத்தாங் கொட்டை, வாலுளுவை யரிசி, ஆளிவிரை, கொத்தமல்லி, பொரித்த வெங்காரம், காயம், ஜாதிக்காய், ஜாதி பத்திரி, லவுங்கம், தாளிச பத்திரி, வகைக்கு விசஞ்சேர், இவைகளைப் பொன்னிறமாக வருத்து, மருதாணிப்பட்டை, மாவிலங்கப் பட்டை, முருங்கப்பட்டை, எருக்கம் வேர்ப்பட்டை வகைக்கு சேர் விசம் இவைகளை வருத்துக்கொள்ளவேண்டும். கஸ்தூரி மஞ்சள், போளம், (கரியாபோளம்) சிறு நாகப் பூ, இந்துப்பு, பூலாங்கிழங்கு, சடாமாஞ்சி, வால்மிளகு கோரைக்கிழங்கு, வகைக்கு விசம் சேர் இவைகளையும் செந்நிறமாக வறுக்க வேண்டும். புரசவிரை வெண்ணொவி, கருநாவி, எட்டிக் கொட்டை வகைக்கு சேர் வீசம் இவைகளைச் சாணத்தில் சுத்தி செய்து கொண்டு எல்லாச் சரக்குகளையும் தூள் செய்து வஸ்திரகாயம் செய்து 25 கும்மட்டிக்காய்களை நான்காய்ப் பிளந்து அவற்றில் திணித்து, தயிர் சேர் அரை, உப்பு படி காலே அரைக்கால் இவைகளை ஊற்றி நன்றாகக் கலந்து, புதுப் பானையிலிட்டு சூரிய வெப்பத்தில் வைத்து நாள் ஒவ்வொரு கீத்தாக இருவேளை கொடுக்கவும்.

## 48. கூடை நோய்

வயிறு வீங்கும், நடக்கமாட்டாது. பிரியிட்டு நிற்கும். கண் குழைந்திருக்கும், கால்கள் பின்னி நிற்கும்.

இதற்கு மருந்து:—

அமுக்கிராக்கிழங்கு, ஊமத்தை வேர் இவ்விரண்டையும் ஒரு கழஞ்சு எடுத்து, அரைத்து வசம்பு, வெங்காயம் இவைகளையும் அரைத்து சேர்த்துக் காடியில் புகட்டவும்.

குன்றியிலைச் சாற்றில் வெங்காயம், வசம்பு இவைகளைக் கூட்டி மூக்கில் நசியமிடவும்.

இரண்டு விலாவிலும்

பீ ப பூ ஙீ ஙீ ஙீ

என்று சூடு போடவும்.

## 49. கொல்லி நோய்

கன்னத்தில் வீங்கும், மயிரெழுந்து நிற்கும். நடக்காது.

மருந்து:—

நெய்யும் மிளகும் அரைத்துப் புகட்டவும். வீங்கின இடத்தில் உடனடியாக 6 இப்படி ஏழு சூடு சுடவும்.

## 50. கொப்பனூர் நோய்

தலையையும், முகத்தையும் தேய்க்கும், அழி மேய்ச்சல் மேயும்.

மருந்து:—

நல்லவேளை சமூலம், வெள்வெங்காயம், வசம்பு, இவைகளை நன்றாகத் தட்டி நசியமிடவும் இதற்குச் சூடு முதுகில் உச்சியிலே மூன்று சூடு சுடவும்.



## 51. கொல்லி தெறியான் நோய்

இந்த நோய் முற்றினால் 'சுழல் நோய்' 'அதர நோய்' உண்டாகும். முகத்தைத் திருப்பி மடித்து விழும். 'அதர நோய்க்கு' ஓடி விழும்.

இதற்கு மருந்து:—

வேப்பெண்ணை மூன்று விரலகலத் துணியில் நனைத்து மாட்டின் கொம்புகளில் சுற்றிக் கொளுத்தி விடவும், ஒரு நெல் கனம் கொம்பு வெந்ததும், அணைத்துவிடவும். கொம்பில்லாத மாட்டுக்கு வேப்பெண்ணெயைக் காச்சி உச்சந்தலையிலிடவும்.

## 52. கொறட்டை வியாதி

மூச்சு விடும்போது சத்தம் உண்டாகும். இலுப்பைப் புண்ணாக்கை, பசும்பாலில் கலந்து சுடவைத்து இரண்டு மூன்று ஞாயிற்றுகிழமைகளில் கொடுக்கக் குணமாகும்.

## 53. கொம்புடைந்த மாட்டுக்கு

ஆலம்பாலை உடைந்த இடத்தில் ஊற்றித் துணியால்கட்டி வைத்தால் குணமாகும்.

## 54. சன்னி வியாதிக்கும் பொதுவாகச் சகல வியாதிகளுக்கும்

வெள்ளைப் பாஷாணம், நெல்லிக்காய், கந்தகம், 15 நேர் வாளம், பெருங்காயம், குங்கிலியம், திப்பிலி, நீரடிமுத்து, பொன்னரிதாரம், இவைகளைத் தில்லம்பால் விட்டரைத்து, வேலிப்பருத்திச் சாற்றையும் விட்டரைக்கவும், வெள் வெங்காயத்தை அரைத்துத் தைலமிறக்கிக்கொண்டு, இந்த தைலத்தோடு அரைத்தவைகளை எல்லாம் சேர்த்துக் கிளறி, கொம்புச் சிமிழிலடைத்து வைத்துக்கொள்ளவும். வியாதியின் குணங் கண்டு ஒரு பணவிடை ($\frac{1}{10}$ விராகனிடை) வெற்றிலையில் வைத்துப் புல்லுடன் கொடுக்கவும். வெந்நீர்காட்டவும், நொய்க்கஞ்சிக் கொடுக்கவும்.

## 55. சந்தடைப்பான் நோய்

கால்கள் வீங்கி இருக்கும். மாடு குன்னிப்போகும். சரியாக நடக்காது. கழிச்சல் உண்டாகும்.

இதற்கு மருந்து :—

(1) எருக்கு சமூலம் பூவுடன் துவைத்துச் சாறு பிழிந்து உடம்பில் பூசவேண்டும். 2. கல்லுப்பை வேப்பெண்ணெயில் விட்டரைத்து வெந்நீரில் கலக்கித் கொடுக்கத் தீரும்.

## 56. சாரநோய்கொண்ட பசுவின் குணம்

கண் தெரியாது தடுமாறும், உடல் வற்றும் :

இதற்கு மருந்து :—

காவற்பட்டையும் பேய்த்தும்பைச் சாறும் துவைத்துக் கண்ணீற்பிழிந்து, அதையே காடியில் புகட்டவும். இதற்குச் சூடு பின் புறத்திலே பின்னீர் பத்திச் சூடு சுடுவது.

குறிப்பு :—

'பின்னீர் பத்தி' என்பதன்பொருள் விளங்கவில்லை.

## 57. சிரங்கு பற்றின மாட்டுக்கு

(1) சின்னி இலையை இடித்து தேகமுழுவதும் தடவவும்

(2) அரிசித்திப்பிலி பலம் 1. ஜீரகம் பலம் 1., மகிஷாக்ஷி * ('பூனைக்கண் குங்கிலியம்') குண்ணடை (கூர்தப்பனைக் கிழங்கு?) சேர்த்து அரைத்து மோருடன் கலந்து போடவும். கற்றுழைவேர் கொண்டுவந்து சிறுகச் சிறுக நறுக்கிச் சட்டியில் தட்டையாகப் பரப்பி, அதின்மேல் மருந்தைவைத்து அவித்துச் சிவந்தபிறகு எடுத்துச் சாறுபிழிந்துகொண்டு காசிடை ஏலமும் கூட்டி, பசுநெய் கற்றுழைச்சாறு இவைகளுடன் ஒன்றாய்க்கலந்து கொடுக்கவும்.



## 58. சீதவெக்கை நோய்

புல் மேயாமல் திகைத்து நிற்கும்; சீதம் சீதமாகச் சாணத்துடன் விழும். சோர்ந்திருக்கும்.

* (பூனைக்கண் குங்கிலியம்) குண்ணடை (கூர்தப்பனைக்கிழங்கு?)



இதற்கு மருந்து :—

கர்ப்பூரவல்லியிலைச் சாற்றைப் பசு வெண்ணெயில் கலந்து புகட்டவும். இதர்க்கு சூடு  இப்படி நான்கு சூடுகளும் கடைசியில் ஒரு  சூடும் சுடவும்.

## 59. சுழல் நோய்

சுழன்று திரியும், வாயில் நீர்பாயும். தன்னைத்தானறியாது, தீனி கொள்ளாது.

இதற்கு மருந்து :—

1. முன்னையிலையை யிடித்துப் பிழிந்து கொடுக்கவும் 2. பேய்த்தும்பைச்சாறும், குங்கிலியமும், எலுமிச்சம் வேரும் காடியில் அரைத்துப் புகட்டவும். 3. குப்பமேனியிலை வெள்ளையிண்டு இலை, கழற்சிக்கொடியிலை வகைக்கு ஒருபிடி, வெந்நீரில் அரைத்துச் சாறெடுத்து மிளகு, ஓமம், பூண்டு, வசம்பு, இவைகளில் விட்டரைத்துக் கலக்கி மூன்றுவேளை புகட்டத் தீரும். 4. இரண்டு விலாவிலும்  இப்படி 7 சூடு சுடவும்.

## 60. சூலைக்கு உருண்டை


(சூலை என்பது வாயுபிடிப்புக்கும் வயிற்றில் குத்துவலிக்கும் பெயர்.) சித்திர மூலவேர் விராகனெடை 2, பொரித்த வெண்காரம் பலம் 1, அபின் பலம் 1, இந்துப்பு பலம் 1, நெல்லிக்காய் கந்தகம் பலம் 1, பெருங்காயம் பலம் அரையே வீசம், குங்கிலியம் பலம் 2, கொண்டுவந்து. கந்தகத்தை

இரும்புக் கரண்டியில் போட்டு விளக்கெண்ணெய் இட்டு காய்ச்சக் கம்பிபோல் இளகும், இப்பதத்தில் சாணத்தைப் பள்ளம்செய்து அதில் ஊற்றி ஆறினதும், எடுத்துக் கொள்ளவும். எல்லா மருந்துகளையும் ஒன்றாகச் சேர்த்து, நேக அரைத்துச் சுண்டைக்காயளவு ஏழு நாளுக்கு மேய்க்கவும்,

## 61. சூரை நோய்

விழும், எழுந்திருக்கும், வாயில் நீர் விழும், வயிறு வீங்கும். கால்கள் நடுக்கும்.

மருந்து :—

எருக்கிலைச்சாறும் நல்லெண்ணெயும் சேர்த்து வார்க்கவும். இதற்குச் சூடு 

## 62. செவி கள்ள நோய்

அயர்ந்துபோம்.

இதற்கு மருந்து :—

(1) உப்பும், பிரண்டை வேரும் கரைத்துக் கள்ளிப்பாலுடன் கூட்டி, வயிற்றிற் கட்டவும். (2) தழுதாளை இலையை அரைத்துப் பத்துப் போடவும்.

## 63. செறுமல், சேது அல்லது சிறுமல் நோய்

இரு பற்களையும் கடிக்கும், பலகாலம் நீர்விடும், சிறுமிக் கொண்டேயிருக்கும்.

இதற்கு மருந்து:—

(1) இளம்பாளை. இலவம் பட்டை, ஓதியம் பட்டை, நாவல் பட்டை, அத்திப் பட்டை, கருவேலம் பட்டை, மயிர் மாணிக்கம், பெருந்துத்தி, நறுந்தாளி யிலை, பூலாவிலை, இவைகளை எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்று பாளைமூட்டி, எந்து எலுமிச்சம்பழச்சாறு, குறுணி பழங்கஞ்சி, வார்த்து இரவு அடுப்பில் வேகவைத்து மறுநாள் காலையில் இடித்து, மோர், பழங்கஞ்சி வகைக்குக் குறுணி வார்த்துப் பிழிந்து புகட்டவும்.



(2) புங்க இலை, புங்கவேர் வகைக்கு ஒரு பிடி எடுத்துப் பாலிலரைத்துப் புகட்டவும்.

(3) வெள்ளறுகு, காடி இவைகளை ஒன்றாக இடித்து, எல்லாம் சேர்த்து உள்ளுக்குப் புகட்டவும்.

(4) தும்பை யிலையை யிடித்துக் காடியில் புகட்டவும்.

(5) தூதுவளை சமூலத்தை இடித்துக் காடியில் பிழிந்து புகட்டவும்.

## 64. செருமி மயிர் நிற்கும், நடுக்குச் சாரைபோடும் நோய்

வியாதிக்கு மூன்றுநாள் முன்னிருந்து தீனி கொள்ளாது மேயாமல் நிற்கும்.

இதற்கு மருந்து :—

சங்கங்குப்பி இலைச்சாறு, இருநாழி எடுத்துக்கொண்டு, இலவம் தோல் ஒரு விளாங்காயளவு சேர்த்துப் புகட்டவும். உடம்பு, கால் இவைகளின்மேல் தடவவும்.

## 65. செங்கலங்கலாகச் சாணம் இடும் நோய்

கோதுமையை அரைத்து மோருடன் கலந்து கொடுக்கவும். இரண்டு புறத் தட்டில் ‘ ெ ள ’ இப்படிச் சுடவும்.

## 66. சோலை நோய்

மஞ்சள் சேர் ¼, ஓமம் சேர். 1, பூண்டு சேர் ½, கருப்புகட்டி வெல்லம்சேர் ½, வெங்காரம் பொரித்தது விராகனிடை ¼ இவைகளைச் சேர்த்து, அரைத்து ஒரு விராகனிடை பிரமாணம் ($\frac{1}{10}$ பலம்) உருண்டை செய்து உலர்த்திவைத்துக்கொள்ளவும்.

## 67. தண்ணீராகச் சாணி பீச்சும் நோய்

இதற்கு மருந்து :—

நறுந்தாளியிலையையும், பொரிமாவும் இடித்துக்கொண்டு, எள்ளுப் பொடி செய்துகொண்டு மோருடன் ஒன்றுகூட்டி.

நாக்கை வெளியே இழுத்து, வாய்க்குள் திணித்துப் புகட்டவும். (2) நறுந்தாளி, மயிர் மாணிக்கம், பூலாவிலை, இளம்பாளை, இவைகளையிடித்து, எள்ளு உழக்கு, நல்லெண்ணெய் ஆழாக்கு, பழங்கஞ்சி, காடி இவைகளுடன் கலந்து வடிக்கட்டிப் புகட்டவும்.

## 68. தளர்ந்தியாய்ச் சாணம் போடுவதற்கு

தழுதாளையிலையாவது, நுணாக் கொழுந்தாவது ஒரு பிடி அளவில் மேய்த்தால் உடனே நிற்கும், முதலிலை கை கண்டது.

## 69. தவளை நோய்

1. தவளையைப் போல் தத்தித்தடுமாறி நடக்கும், படுத்தால் எழுந்து நிற்க முடியாது, தொப்புள், மார்பு இவ்விடங்கள் கட்டிபோல் வீங்கும்.

இதற்கு மருந்து :—

இளநீரை 14 வராட்டியால் புடம்போட்டு, அப்படிப் புடமானதை உரலில் இடித்துப்பிழிந்து வடிக்கட்டிப் புகட்டவும். (2) கற்பூரவல்லியிலை, சங்கம் இலை இவைகளின் சாறு, மஞ்சள், கல்லுப்பு, மிளகு, ஓமம் வகைக்கு 2 விராகனிடை. ஷை சாற்றில் அரைத்து இருவேளை ஒரு வாரம் கொடுக்கவும்.

## 70. தினசு பிடித்தால்

மாட்டின்மேல், சள்ளு, உண்ணி, முதலியவைகள் பிடித்திருந்தால் ஒரு படி நல்லெண்ணெயை தேக முழுவதும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் துவளையிட எல்லாம் உதிர்ந்துவிடும்.

## 71. திகைத்து நிற்கும் மேயாது

கற்பூரவல்லியிலைச் சாற்றில் எண்ணெயைக் கலந்து புகட்டினால் குணமுண்டாகும்.

## 72. திருகுகள்ளி உப்பு மருந்து

திருகு கள்ளி சேர் 1. வசம்பு சேர் 1. ஓமம் சேர் 1, கள்ளியை சக்கரமாக அறுத்துக்கொண்டு, பாக்கிச் சரக்குகளை



நன்றாகத் தூள் செய்து ஷை சரக்குகளை எல்லாம் ஐந்து பங்காகப் பிரித்துக்கொண்டு, புதுப்பானையில் முதலில் ஒரு பங்கு கள்ளியைப்போட்டு, அதன்மேல் ஒருபங்கு தூள்களைப் போட்டு, இப்படி ஐந்தடுக்குத் திருகு கள்ளியும் ஐந்தடுக்குத் தூள்களையும் போட்டுச் சட்டியால் மூடி, வேகவைத்து, மெழுகு பதமாக வரும்பொழுது இறக்கி அம்மியில் வைத்து அரைத்து, $\frac{1}{2}$ படி கல்லுப்பும் சேர்த்து அரைத்து, புதுக்கலயத்தில் போட்டு வெயிலில் மூன்று நாள் வைத்துப் பலம் இரண்டு வீதம் கொடுக்கவும். வயிற்றுவலி, மந்தம் முதலியவை நீங்கும்.

## 73. மற்றொரு முறை

ஒருபடி திருகுகள்ளிச் சாற்றை $\frac{3}{4}$ படி உப்புச்சேர்த்துப் பதமாக காய்ச்சிப் பிறகு வால்மிளகு சேர் $\frac{1}{4}$, மஞ்சள் சேர் $\frac{1}{2}$, கருஞ்சீரகம் $\frac{1}{4}$ சேர், காட்டுசீரகம் $\frac{1}{4}$ சேர் நெய் சேர் $\frac{1}{2}$, இவைகளைச் சேர்த்தரைத்துக்கொடுக்கவும்.

## 74. தேங்காய் மசாலை


ஒரு தேங்காய்கொண்டுவந்து துவாரம்செய்து நீரைக் கொட்டிவிட்டு அதில் முக்கால்பங்கு வெந்தயம் நிறைத்து, துவாரம் மூடி சாக்கடைப் பக்கம் புதைத்து 8 நாள்பொறுத்து உள்சதையை எடுத்துக்கொண்டு அதனுடன் சுக்கு, அதிமதுரம், அமுக்கிருவேர், பெருமருந்துவேர், மிளகு இவ்வைந்தையும் அரைத்து எலுமிச்சங்காயளவு மாட்டுக்கு மூன்றுநாள் கொடுக்கவும். இதில் சுத்திசெய்த வீரத்தையும் சேர்த்துக் கொள்ளவும். ஜீரணசக்தி அதிகமாகி மாடு புஷ்டியாகும்.

## 75. தொப்புள் வீக்கம் நோய்

கொளுஞ்சியிலையை இடித்துக் காடியில் கலந்து புகட்டக் குணமாகும். தோன்றின இடங்களில் வீங்குவதற்கு கோழியாவாரை சாற்றைக் கொடுக்கவும்.

## 76. தொண்டையடைப்பான் நோய்

அலை தாடிகள் வீங்கும், தொண்டை வீங்கும், வாய்நீர் விழும், இடுப்பு சுருங்கும், வயிறு உப்பும். அகத்தியிலைச்சாற்

றில் ஓமத்தைக் கலந்துகொடுத்துவிட்டு, உடனே இரு விலாப்புறமும்  இப்படி குடுபோடவும். 2: மிளகு திப்பிலி, பூண்டு, ஓமம், சுக்கு, இவைகளை அவுரிச்சாற்றில் கலந்து உள்ளுக்குகொடுத்து வெளியிலும் தடவவும்.

## 77. நாரை நோய்

இரண்டு கன்னங்களும் வீங்கும், நிலையாய் நிற்கும், நின்றுற்போல் விழும்.

மருந்து:—

இலுப்பைப் புண்ணாக்கை நீரில் ஊறப்போட்டுக் கலக்கிப் புகட்டவும். மணிச்சூடாய்  ஆறு மணிச் சூடு போடவும்.

## 78. நீர் கழியமாட்டாது, சாணிபோடாது

இதற்கு மருந்து;—

தழுதாளையிலையில் ஆறு நாழித் தண்ணீர் வார்த்து இடித்து, வேகவைத்துக் கரைத்து வடித்து 1 நாழி நெய்யில் மூன்று நாளுக்கு வெல்லத்தையும் எள்ளையும் அரைத்துக் கொடுக்கவும்; குணமாகும்.

## 79. நீர்க்குன்னல் நோய் வாயிலிருந்து நீர்விழும் சாணம் இறுகும்

மருந்து: —

குன்றிமணியிலை, மிளகு, சுக்கு, பூண்டு, ஓமம், வசம்பு, இவைகளை ஒரேயளவில் எடுத்துப் பசுவின்பாலில் கலந்து மூன்றுபொழுது கொடுக்கக் குணமாகும். வெற்றிலைச் சாற்றில் மிளகு, அரிசித் திப்பிலி இவைகளை யரைத்துக் கண்ணில் போடவும்.



## 80. நுரையாக வாயில் தள்ளும்

இதற்கு மருந்து:—

கருகொச்சிச்சாறு, வேப்பெண்ணெய் ஒரு உழக்கு, திப்பிலி ஒரு கழஞ்சு, இவைகளை ஒன்றுகூட்டி அரைத்துப் புகட்டவும். இவைகளுடன் குப்பைமேனியைக்கூட்டி அரைத்துப் புகட்டவும்.

2. வெதுப்படக்கி, சாணாக்கி, மணித்தக்காளி, துளசி, வெண்ணொச்சி, கஞ்சாங்கோரை, கோழியாவாரையிலை, நல்லதும்பை, பேய்த்தும்பை, அரப்புக்கட்டி, உள்ளி, வசம்பு, ஓமம், மிளகு, சுக்கு, இவைகளை ஒன்றாய் அரைத்துப் புகட்டவும். இவைகளுடன் குப்பைமேனியைக் கூட்டி நசியமிடவும். சீக்கிரம் குணமாகும்.

## 81. நொடி வியாதி

மூச்சுவாங்கும், நாசி உலர்ந்திருக்கும், வயிறு ஊதிக் கொள்ளும். மூக்கு வீங்கும்.

இதற்கு மருந்து :—

மான்செவிக்கள்ளிவேரை இளவெந்நீரில் கலந்து புகட்டவும். இதற்குச்சூடு நடுமுதுகில் சுழியில்

 இவ்விதம் 3 சூடுபோடவும்.

## 82. பயிரவ உருண்டை, சுரம் சன்னிக்கு

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | 1 | வராகனெடை. |
| கண்டந்திப்பிலி | 1 | ,, |
| சுக்கு | 1 | ,, |
| அரிசித்திப்பிலி | 1 | ,, |
| வால் மிளகு | 1 | ,, |
| பறங்கிப்பட்டை | 1 | ,, |

எருமைப்பால், பெருமரத்துப்பால் திருகுகள்ளிப்பால், காய்ந்த பெருமருந்து இலைத்தாள், சங்கம்வேர், இல்லம்பால்

வகைக்கு ஒரு விராகனெடை. எல்லாவற்றையும் ஒன்று கூட்டித்தூள்செய்து பத்திரப்படுத்தி வைக்கவேண்டும், வேண்டும்பொழுது நெய்யுடன் கலந்து ஒருவிராகனிடை அளவு உருண்டைசெய்து கொடுக்கவேண்டியது.

## 83. பறைபோல் ஒடித்திரியும், கனைக்கும், உடல் வற்றும் சதாகனைத்துக் கொண்டிருக்கும்

*இதற்கு மருந்து :—*

கருவேலிலை உரித்த தேங்காயளவு அரைத்து உள்ளி, வசம்பு, இவைகளோடு காடியில் சேர்த்துக்கொடுக்கவும். மூன்றுமுறை கொடுக்கவும். பிறகு புளியில் காடியைச் சேர்த்துப் புகட்டவும். இந்த மருந்தையே நசியமாக மூக்கில்போடவும்.

## 84. பாயும் மாட்டுக்கு

1. பால்குரட்டிவேர் கையிலிருந்தால் பாயாது. 2. மூன்றுநாள் கண்ணில் நல்லெண்ணெ விட்டால் பாயாது.

## 85. பால் இல்லாத மாட்டுக்கு

பச்சைப்பயறு, கடலை, பருத்திக்கொட்டை, அகத்திக் கீரை, உளுந்து, தேங்காய்ப்புண்ணாக்கு, எள்ளுப்புண்ணாக்கு இவைகளில் ஏதேனும் இரண்டு மூன்று கலந்து வைக்கவும். உளுந்து, சோளம், அரிசிமாவு, பருத்திக்கொட்டை இவைகள் பாலை கெட்டிப்படுத்தும். பாலைப் பெருக்காது.

2. முலை சுரப்பான் கிழங்கு ½ தூக்கு, பனைவெல்லம், வெங்காயம், வகைக்கு 1 தூக்கு, சேர்த்துவைக்கவும். நாளைக்கு ஒரு வேளையாக மூன்று நாட்கள் கொடுக்கவும், பால் சுரக்கும் பாலும் விருத்தியாகும்.

## 86. பின்னடைப்பான்

வயிறு வீங்கும், மயிர் சிலிர்த்திருக்கும், தலைதாழ நடக்கும். மேயாது. சாணம் வறண்டு உலர்ந்து விழும்.



*இதற்கு மருந்து :—*

1. குருவிச் சேனை, ஓமம் இரண்டையும் துவைத்துப் புகட்டவும். 2. முன்னையிலை துவைத்துக் காடியில் கொடுக்கவும். 3. வெதுப்படக்கியிலை, சங்கங்குப்பியிலை, மிளகு இவைகளை அரைத்துக் கரைத்துப் புகட்டவும். 4. கும்மட்டிக் காய் லேகியம் கொடுக்கவும்.

## 87. புகைவைக்கும் மருந்து

உழக்கு மிளகை வறுத்துப் பொடி செய்து எண்ணெயில் விட்டுப் புகையிடவும்.

## 88. புஷ்டிக்கு மருந்து

1. பூசிணிக்காய், எள்ளு, பயறு, பருத்திக்கொட்டை இவைகளை ஒரு நாழி பச்சரிசி சேர்த்து அரைத்து வைக்கவும். ஒரு மண்டலங் கொடுக்கப் பலமுண்டாகும்.

2. மஞ்சள் பலம் 1. கடுகு ரோகிணி பலம் 1. கடுகு பலம் 1. பூண்டு பலம் 1. உப்பு படி 1. இவை ஐந்துவகை மருந்துகளையும் தனித்தனியே இடித்து வைத்துக்கொண்டு கும்மட்டிக்காயைப் பிளந்து அதில் கிரப்பிமோர் படி 1½ விட்டு 7 நாளைக்கு வெயிலில் வைத்து நாள் ஒன்றுக்குக் காலே ஒரு துண்டு கொடுக்கவும்.

## 89. புண் சகல வியாதிக்கும், புறவிருவலும், பூச்சி, இவைகளுக்கும்

1) காசிக்கட்டி, வெள்ளைக் குங்கிலியம், சுட்ட துருசு, வகைக்கு 1 விராகனிடை, மிருதார்சிங்கு ½ விராகனிடை, இவைகளைத் தேங்காயெண்ணெயில் அரைத்துப் போடவும்.

2) காசிக்கட்டி விராகனிடை 3. வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை 3. சுட்ட துருசு விராகனிடை 2. மிர்தார்சிங் விராகனிடை 1½. பூரம் விராகனிடை ½. இவைகளை வெண்ணெயிலரைத்துப் போடவும்.

3) மூங்கில் குருத்து, கஸ்தூரி மஞ்சள், சுண்ணும்பு, சமமாகக் கூட்டி அரைத்துப் புண்ணில் தடவப் புழு இருந்தால் விழும். புண்ணும் ஆறும். ஒதியம்பட்டையை வேகவைத்த நீரில் கழுவவும்.

4) கலியாண முருங்கையிலை, ஒட்டடை, புழம்புளி, வெல்லம், மிளகாய் விரை, சமனுய்க்கூட்டி அரைத்துப் புண்ணில் தடவ ஆறும்.

5) நல்லெண்ணெய் சேர் $\frac{1}{2}$, தூக்கு பல்லி (?), கடுக்காய், கள்ளிக்கொழுந்துச் சாறு, காட்டாமணக்குக் கொழுந்தின் சாறு, வகைக்கு $\frac{1}{4}$ சேர். இவற்றை எண்ணெயில் போட்டு, பதமாக இறக்கி வடித்து வைத்துக்கொள்ளவும். புரை ஓடின புண்ணுறுலும் துணியில் நனைத்துப் போட்டால் ஆறும்.

6) அவரையிலைச்சாறு சுண்ணும்பு கூட்டிப் போடவும்.

7) அத்தியிலைச் சாற்றைப் புண்ணின்மேல் பிழிந்து வேப்பெண்ணெய் அல்லது முந்திரியெண்ணெயைச் சீலையில் நனைத்துத் தடவவும். ஆறிவிடும்.

## 90. பூமிண்ட நோய்

நான்கு கால்களும் மாறிப்பாயும், குளம்பு வீங்கும், புல் மேயாது. இதற்கு முறை :— (1) முத்தருக்கஞ் செவிப்பூ, குங்கிலியம் இவைகளைப் பசு வெண்ணெயில்க் கலந்து புகட்டவும். தீரும்.

2) முதுகில் திமிலிலிருந்து இரு புறமும் புறங்கால் குதியளவும் சூடு வாங்கவும்.

## 91. பூவாய் நோய்

வெய்யிலில் நில்லாது, விழுந்து கிடக்கும். புல் மேயாது.

மருந்து :—

அத்திப்பட்டை, இலவங் கொழுந்து, வசம்பு, வெங்காயம் இவைகளை அரைத்து இள வெந்நீரில் புகட்டவும். தீரும்.

இதற்குச் சூடு  இப்படி எட்டுச்சூடு போடவும்.



## 92. பெருமருந்து லேகியம்

இது மிகவும் சிறந்தது. தீபனத்தில் சிறந்தது. சோகைக் குத்தகுந்த மருந்து. சகல ரோகத்திற்கும் நல்லது:—பெருமருந்து சமூலத்தை உலர்த்தித்தூள் செய்தது சேர் 1, முள்கறணை சேர் 1, பூண்டு பலம் 2, சுக்கு பலம் 1, கடுக்காய்த் தூள் சேர் $\frac{1}{2}$, மிளகாய்த்தூள் பலம் 4, சிற்றரத்தை பலம் 1, வசம்பு பலம் 6, மிளகு பலம் 1, கடுகு ரோகிணி, காயம் பலம் 2, உப்பு சேர் 1, செவ்வியம், கருஞ்சீரகம், யானைத்திப்பிலி, ஓமம், காட்டுச்சீரகம், அரிசித்திப்பிலி, குரோசணி ஓமம், கண்டந்திப்பிலி, வாயு விடங்கம், ஓமம், கஸ்தூரிமஞ்சள், உரித்த பூண்டு, வகைக்குப் பலம் ஒன்றும், கொத்தமல்லி, கழற்சிப் பருப்பு, வகைக்குப் பலம் 2, பொரித்தவெங்காரம், சடாமாஞ்சி.

இவை யெல்லாவற்றையும் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து, நெய்யும் கருப்புட்டியும் வேண்டிய அளவு சேர்த்துக் கிண்டி, லேகியம் செய்து வைத்துக் கொள்ளவும் அடிக்கடி வெய்யிலில் வைக்கவேண்டும். எலுமிச்சங்காயளவு தினம் கொடுத்தால் நல்லது. வேண்டும்பொழுது கொடுக்கலாம்.

## 93. பெருஞ்சிலந்தி நோய்

உடம்பெல்லாம் வீங்கும், தலையைத் தொங்கவிடும்.

மருந்து:—

சிலநாயனும், வெட்டைவாழிக்கட்டும், மோர், இதில் சேர்த்துத் தேங்காயளவு அரைத்து வெங்காயம், வசம்பு, சிறுநீருடன் கலந்து புகட்டவும்.

குறிப்பு :—

சிலநாயன், வெட்டை வாழிக்கட்டு என்பவை இன்னதென்று விளங்கவில்லை. இதே வியாதிக்கு பெருங் குறத்தை வேரையரைத்து மோரிற் கலந்து கொடுக்கும்படி சென்னை ஓரியண்டல் மானுஸ்க்ரிப்டு லைப்ரரி சுவடி D. 1980ல் காணப்படுகிறது.

## 94. பேதியாகும் மாட்டுக்கு

மொந்தன் வாழைப்பூ 3, வசம்பு விராகனெடை 1. தேன் வேண்டிய அளவு. பூவின் மேல் மடல்களை எடுத்துவிட்டு வசம்பைச் சுட்டுச் சேர்த்துத் தேன் விட்டுப் பிசைந்து, கொடுக்கவும். மூன்று பொழுது, தண்ணீர் காட்டவும். இது மிகவும் கைகண்டது.

## 95. மதப்பாயும், உடல்வற்றிவரும், நடக்காது, மேயாது

அத்தியிலைச்சாறு, ஆமணக்கெண்ணெய், உள்ளிப்பூண்டு, வசம்பு, சுக்கு, இவைகளைக் கூட்டிப்புகட்டத் தீரும்.

2. ஆமணக்கெண்ணெய், உப்பு, நாயுருவிவேர், வெங்காயம் சேர்த்துக்கொடுக்கவும்.

3. இலவம்பட்டை, அத்திப்பட்டை, மாம்பட்டை, மருதம்பட்டை, கருவேலம்பட்டை, நாவல்பட்டை, மயிர்மாணிக்கம், பெருந்துத்தியிலை, நறுந்தாளியிலை, பூலாவிலை, இரண்டு இளம்பாளை, ஐந்து எலுமிச்சம்பழச்சாறு, இவைகளைத் துவைத்து, இராவெல்லாம் அடுப்பிலேற்றி வைத்துக் குறுணி பழங்கஞ்சி வார்த்துப் பிழிந்து வடித்துப்புகட்டத் தீரும்.

4. பருத்தி விதை ஜலம் தெளிக்காமல் இடித்து, மிளகு, சிறுநீர், கூட்டி நசியம் பண்ணத்தீரும்.

## 96. மலடுநீங்கிச் சினைப்பட மருந்து

1. சுட்ட அரசம்பட்டை ½ தூக்கு. கதலிச்சாம்பல் ½ தூக்கு, காறக்கத்தரிக்காய் ஒரு தூக்கு; மேற்படிகாயை வேகவைத்துச் சாம்பலைச் சமனிடை சேர்த்து மூன்றுசேர் நெய்கலந்து, ஒருபடி கச்சாக்கருவாடு, தண்ணீர், கலந்து, தினம் வெய்யிலில்வைத்து, அந்தி சந்தி வேளைகளில் தேங்காயளவு கொடுத்து வெந்நீர்காட்டவும், மேய்ச்சலுக்கு விடாமலும் தண்ணீரில் அடிக்காமலும் இருந்தால், எட்டாம்நாள் கொழுப்புக்குவந்து காளைக்குக் கத்தும். மலட்டுமாடு காளை விழுந்ததும் நீர்விடும் குணமுடையது ஆதலால் சினைப்படுகிறதில்லை.



2. தென்னம்பாளை பலம் 1, ஜாதிக்காய் பலம் 1, ஜாதிபத்திரி பலம் 1, ஏலம், கிராம்பு, வகைக்குப் பலம் ½, இடித்து உள்ளுக்குக்கொடுக்க மலடு நீங்கும்.

3. ஆனைநெருஞ்சில், பாதாளமூலி, இவ்விரண்டும் அரைத்து உப்புக்கலந்து உள்ளுக்குக்கொடுத்து, 10 நாழிகை தண்ணீர் காட்டாமலிருந்தால் மலடு நீங்கும்.

4. ஆடுதீண்டாப்பாளை, கோரைக்கிழங்கு இவைகளை அரைத்து உப்புக்கலந்து கொடுக்கவும்.

5. அரப்பு பலம் 2, குப்பைமேனிசமூலம், காட்டுக்குரிஞ்சா வகைக்கு ஒருபிடி. அரைத்துத் தண்ணீரில் கலந்து கொடுக்க மலட்டுப் புழுக்கள் வெளிவரும். 10 நாழிகை கழித்துச் சுடுநீர் கொடுக்கவும்.

## 97. மயிர் உதிரும் மாடுகளுக்கு

1. கரி அத்திகாய் இடித்து விதையை நீக்கி, வேளைக்கு அரைக்கால்படி தூளை தவிட்டுடன் கொடுக்க உதிர்ந்தமயிர் விரைவில் வளரும். ஒருவாரம் கொடுக்கவும்.

2. தழுதாழை ¼ பலம் மஞ்சளுடன் இடித்து, ¼ சேர் விளக்கெண்ணெய் சேர்த்துக் கொடுக்கவும்.

## 98. மருக்காரை மசாலை (வயிற்றுக் கோளாறுகளுக்கு)

விதை நீக்கிய மருக்காரைக்காய் சேர் 1½, அரளி மொட்டு ¼ சேர், வெல்லம் ½ சேர், மஞ்சள் ¼ சேர், குடன் விராகனிடை ½. நல்லெண்ணெய், இவைகளைச் சேர்த்து லேகியம் செய்து கழற்சிக்காய்ப் பிரமாணம் கொடுக்கவும்.

## 99 புண்ணடைப்பான் நோய்

தொண்டை வீங்கும், மூன்று நாள் முன்னாக மேயாது, தேகமெல்லாம் நடுக்கமெடுக்கும். கண்களில் பீளைசாரும்.

1. கிராம்பின் தோலை யரைத்துச் சங்கங்குப்பி இலையில் பிசைந்து மோர் விட்டுக் கலந்து விளாங் காயளவு உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசவும்.

2. கோழி யவரைச்சாறும், ஆயக்காயும் சேர்த்துக் கொடுக்கவும்.

3. இதற்கு  இப்படி ஆறு மாலைச் சூடு போட வேண்டியது.

4 கும்மட்டிக்காய் லேகியம் கொடுக்கவும். குணமாகும்.

வேறுவகை:— முன்னங்கால் சந்தியில் வீங்கும். நடமாடாது, சிவந்த நீர் விடும்.

இதற்கு மருந்து:—

நெய், மிளகு, இலுப்பைப் பிண்ணாக்கு, இவற்றைக் கோழி யவரைச் சாற்றில் புகட்டவும்.

இதற்குப் பூச்சு மருந்து:—

நண்டு வளைமண்ணும், புத்துமண்ணும், நன்றாக அரைத்து தேகமெல்லாம் பூசவும்.

## 100. முலைக்காம்பின் வெடிப்பிற்கு

1. வெண்ணெயைத் தடவவேண்டும். 2. நல்லெண்ணெய் மஞ்சள் சேர்த்துப் போடவும். 3. விளக்கெண்ணெய் அடிக்கடி தடவ ஆறும்.

## 101. முகம், மூக்கு, முதுகு, வயிறு இவைகள் அனல்பறியும்

1. பெருமருந்து துவைத்த சாற்றில், உள்ளி, வசம்பு, ஆழாக்கு எண்ணெய் கூட்டி நசியமிடவும்.

2. இந்தச் சாற்றில், கடுகு, மிளகு, சாரணைவேர், இவை கூட்டி அரைத்து உள்ளே கொடுக்கவும்.

3. பாதக்குறடுகள் வீங்கினால் குருந்த இலையை இடித்துக் காடியில் கலந்து குறடுகளில் வார்க்கவும், அல்லது மூதலைக் கொடிச்சாற்றைக் காடியில் பிழிந்து அவ்விடம் போடவும்.



## 102. முட்டிகால் வீங்கியதற்குப் பத்து

இராச கத்தாழை, அத்திப்பட்டை, மகிழம்பட்டை, வேப்பம்பட்டை, நெல்லிப்பட்டை, இவைகளைத் துண்டங்களாக்கிப் பானையிலிட்டு இரண்டுபடி தண்ணீர்விட்டு வேகவைத்து, ஒரு படி தண்ணீராக்கி, அக் கஷாயத்தில் உளுந்துமாவு, கடுகுமாவு கரியப்போளம், இவைகளைப் போட்டுக் கிண்டி மூன்று பொழுது, பத்துப்போடவும்.

## 103. மூக்கு வியாதி

மூக்கில் கோழை பரியும் நிலத்தோடு முகத்தைத் தேய்க்கும்.

இதற்கு மருந்து:—

உப்பு 1 பிடி, கும்மட்டி மாதுளை பிஞ்சு, குங்கிலியம், இவைகளைச்சேர்த்து அரைத்து நசியமிடவும். இதனுடன் காடியை விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுக்க வியாதி குணமடையும்.

## 104. மூச்சு வியாதிக்கு மருந்து

ஓடினால் இரைக்கும். வேலைசெய்தால் இரைக்கும். மூச்சுப்பிடித்துமிருக்கும்.

முருங்கைப்பட்டை ½ விராகனிடை, நொச்சிப்பட்டை ½ விராகனிடை, மாவலிங்கப்பட்டை ½ விராகனிடை, எருக்கம் பட்டை ½ விராகனிடை, கண்டங்கத்திரி, சுக்கு, கண்டந்திப்பிலி, சிவகரந்தை, சிற்றரத்தை, அரிசித்திப்பிலி இவைகள் வகைக்கு 6 விராகனிடை, தாளிசபத்திரி விராகனிடை 3 இவைகளைத் தண்ணீர் விட்டரைத்து ஏழு உருண்டைசெய்து ஏழு நாட்களுக்குப் புகட்டவும். இது மிகவும் சிறந்தது.

## 105. மென்னடைப்பான் வியாதி

1. கும்மட்டிக்காய்லேகியம் கொடுக்கவும்.

2. சிறியாநங்கையிலை உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 106. மேயாது நிலத்தைக் குத்திநிற்கும் நோய்

நார்த்தம்வேர், சுக்கு இவைகளை முலைப்பாலிலரைத்து நசியமிடவும்.

## 107. இரத்த விருத்திக்கு மசாலைகள்

நத்தை படி $\frac{1}{4}$, கஸ்தூரிமஞ்சள் சேர் $\frac{1}{4}$, கருஞ்சீரகம் சேர் $\frac{1}{16}$, கருநொச்சிச்சாறு சேர் $\frac{1}{16}$, பூண்டு சேர் $\frac{1}{2}$, பொரித்த வெங்காரம் விராகனிடை $\frac{1}{8}$, நல்லெண்ணெய் சேர் $\frac{1}{4}$, விளக்கெண்ணெய் சேர் $\frac{3}{4}$; நத்தையை வேகவைத்துக்கொண்டு, அதில் மற்றவின் தூளைப்போட்டு நன்றாகக் கலந்து 8 உருண்டைகள் செய்து உலரவைத்து வேளைக்கு ஒன்றாக 8 நாள் கொடுக்கவும்.

## 108. இரத்தவிருத்திக்கு மற்றொரு மசாலை

கருநொச்சியிலை சேர் $\frac{1}{2}$. பூண்டு சேர் $\frac{1}{2}$. விளக்கெண்ணெய் சேர் 1. பொரித்த வெங்காரம் பலம் 1. கருநொச்சியின் நடுநரம்பு எடுத்துவிட்டு, வறுத்து அதில் பூண்டுசேர்த்து மற்றவைகளைக்கூட்டிப் பிசைந்து கொடுக்கவும்.

## 109. இரத்த குன்னல் நோய்

நீர் ரத்தம்போன்ற நிறமாகும். மங்கிய சிகப்பாகவுமிருக்கும். இரண்டு நாளுக்குபின் நடக்காது, மேயாது. கீழேவிழும், (இதற்கான மருந்துமுறை கிடைக்கவில்லை.)

## 110. வலி நோய்

நான்கு கால்நடையும் வீங்கும்.

இதற்கு மருந்து:—

விழுமிச்சாறும் உப்பும் சேர்த்துப் புகட்டுவது. பின் தட்டில் **8** இப்படி 10 சூடு சுடவும்.

குறிப்பு:—

நடை என்பது கணுக்கால் என்று தோன்றுகிறது.



## 111. வலிப்பு அடைப்பான் நோய்க்கு

| | |
|---|---|
| கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வால்மிளகு, மிளகாய், எருக்கம்பூ | வகைக்கு $\frac{1}{4}$ பலம் |

அரைத்து மூன்றுமாதப் பெட்டைக் கோழிக் குஞ்சை அறுத்து, கால்களை நறுக்கி யெறிந்து விட்டு, அதன் கல் மலங்களைப் போக்கி, அரைத்த மருந்தை உள்ளே நிறைத்து அப்படியே மாட்டின் வாயில் திணித்துக் கொடுக்கவும் வெந்நீர் காட்டவும்.

## 112. வத்தலாயிருக்கும் மாட்டுக்கு

பூசினிக்காய், எள்ளு, பயறு, பருத்திக்கொட்டை, பச்சையரிசி இவற்றைக் கலந்து ஒருமாதம் வைக்கச் சதை போடும்.

## 113. வல்லாரை நோய்

புல்லுக்கும் சிகைத்து நிற்கும்

இதற்கு மருந்து:—

வெந்நீரில் கோரைக் கிழங்கை உரைத்து, வெந்நீரில் 4 நேரம் புகட்டவும். தீரும். இதற்கு சூடு, தலையைக் கூட்டிச் சுடுவது. இரண்டு காலிலும் மூன்று சூடு சுடுவது.

## 114. வசீகரம்—மாட்டுக்கு

1. பெரியாநங்கை இலையை மேய்த்தால் உதைக்காமல் நிற்கும்.

2. சிறியாநங்கை இலையை மேய்த்தால் கன்றைச் சேர்க்காத மாடு கன்றைச் சேர்த்துக்கொள்ளும்.

3. அரியாநங்கை மேய்த்தால் மாடு சீறி மேலேவிழும். கையிலடங்காது.

4. ஆனை வணங்கிப்பூண்டை நீர்விட்டரைத்து மாட்டின்மேல் தெளித்தால் முட்டும் மாடுகள் முட்டாது. சாதுவாக இருக்கும்.

## 115. வரட்டுக் குன்னல் நோய்

மயிர் சிலிர்த்து இருக்கும். மேயாது. சரியாக அசை போடாது. சாணி இறுகி உலர்ந்து ஈரமின்றிக் கறுத்து இருக்கும். தீனி தின்னாது.

இதற்கு மருந்து.—

1. முற்றியதேங்காய் திருகினபூ, அரைத்த பசுமஞ்சள் தேங்காயளவு, ¼ படி நல்லெண்ணெயில் கூட்டிக் காட்டாமணியிலை ஒன்பதில் வைத்துச் சுருட்டிக் கொடுக்கவும். ஏழுபொழுது கொடுக்கவும்.

2. பெருமருந்துவேர், சுக்கு, கண்டந்திப்பிலி, பெருங்காயம், சித்தரத்தை வகைக்கு ¼ பலம் அரைத்து ஏழுபொழுது கொடுக்கத் தீரும்.

## 116. வயிறு வீங்கும், நடக்காது, கண் குழைந்திருக்கும்

இதற்கு மருந்து :—

அமுக்கிராவேர், ஊமத்தம்வேர், உள்ளி, வசம்பு, இவைகளை அரைத்துக் காடியில் புகட்டவும்.

2. குன்றியிலை வசம்பு சேர்த்து நசியம் போடவும்.

3. மிளகும் உழக்கு நல்லெண்ணெயும் ஆழாக்கு வெந்நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுக்க நன்றாகக் கழியும். பின்னும் பத்துகடுக்காயை வெந்நீரில் அரைத்துக்கொடுக்கப் பின்னும் கழியும். வெங்காரமும் 20 உள்ளிப் பூண்டும் அரைத்து, கடுகு, மிளகு, சுக்கு, ஓமம் இவைகளை விளக்கெண்ணெய் உரி (அரைப்படி) எண்ணெயில் குழப்பிப் புகட்டவும். நிற்கும்.

## 117. வயிற்றுப்புழு பூச்சிகள் விழ மருந்து

எலுமிச்சங்காய் 7, விளாங்காயளவு பழம்புளி, ஆமணக்கு இலை இவைகளைச்சேர்த்து அரைத்துப் புகட்ட, சாணியுடன் புழுக்கள் விழுந்துபோம்,



2. கொல்லன் கோவைக்கிழங்கைத் துவைத்துப் பசுவின் பாலில் கலந்து கொடுக்கவும்.

## 118. வாயுவுக்கு மசாலை

1. காய்ந்த பெருமருந்துஇலை, ஆதண்டையிலை, வெள்ளெருக்கம் பழுப்பு, பெருங்காயம், மஞ்சள், மிளகாய், இவை சமனிடை உத்தேசமாய்ச் சேர்த்து உரலிலிடித்து வைத்துக்கொண்டு எலுமிச்சங் காயளவு உருண்டை செய்து கொடுக்கவும்.

## 119. வாயுவுக்கு மசாலை மற்றொரு வகை

முட்டை போடும் பக்குவத்திலுள்ளகோழியைக் கொண்டுவந்து, அறுத்து, எலும்பும், கறியும் தனியாக்கி, மஞ்சள்சேர் ¼, கண்டந்திப்பிலி சேர் ¼, கார்போக அரிசி சேர் ¼, இவைகளைக் கறியில் போட்டு இடித்து உருண்டை பண்ணி மேய்க்கவும்.

## 120. வாயுவுக்கு மசாலை, மற்றொரு விதம்

தேங்காயில் துவாரமிட்டுத் தண்ணீரை ஊற்றி விட்டு, அதில் திருகு கள்ளிப்பால் பாதி நிரப்பி, கால் பாகம் கடுகு போட்டு, ஆக முக்கால் தேங்காய் நிரப்பியதும் துவாரத்தை மூடி, புளியம் பிராணியில் புடம் வைத்துப் பதமாய் வரும்பொழுது எடுத்து, அம்மியில் வைத்து அரைத்து மூன்று உருண்டை செய்து மூன்று நாள் கொடுக்கவும். நான்காம் நாள் குளிப்பாட்டவும்.

## 121. வாயுவுக்கு வேறுவித மசாலை

இஞ்சிச்சாறு, முருங்கைப்பூச்சாறு, தேன், வகைக்குச் சேர் ½, எடுத்துக்கொண்டு, அடுப்பில் சட்டி வைத்து ஒருவிராகனிடை சுத்தி செய்த வீரத்தை நடுவில் வைத்து, தீமூட்டி, இம்மூன்று சாறு தேன் வகையராவையும், மேல்விட்டு நன்றாய் மெழுகு பதம் வந்ததும் இறக்கிக்கொள்ளவும்.

## 122. வாய்க் கோமாரிக்கு மருந்து

வாயிலிருந்து நீர்வடியும், வாய்நாறும், மேயாது.

1. சிறுசின்னியிலையை நன்றாக இடித்துச் சாறுபிழிந்து காடியில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும்

2. மிகவும் கனிந்த மொந்தன் வாழைப்பழம் 10, சர்க்கரை, நெய், இவைகளை நன்ருகப் பிசைந்து கொடுக்கவும்.

3. மணித்தக்காளி அல்லது பொன்னுங்காணியிலை இரண்டுபிடி ஒரு வாரத்துக்கு மேய்க்கவும்.

## 123. விரைப்பான் வியாதி

நான்கு கால்களும் நிற்கமுடியாமல் இருக்கும், விழுந்து கிடக்கும், புரளும். சாணம் வழும்பு (mucus) போல் இருக்கும்.

மருந்து :—

மாவிலிங்கயிலையைத் துவைத்து இள வெந்நீரில் பிசைந்து பிழிந்து புகட்டவும். விலாவில் சுடவும்.

## 124. விழுந்து கிடக்கும், நீட்டி வலிக்கும்

பேய்த்தும்பைச் சாற்றில் உள்ளி, வசம்பு, இவைகளை அரைத்துக் காடியில் புகட்டவும்.

## 125. விஷக்கடி மருந்து

1. அரணை கடித்த மாட்டிற்கு, தடித்துக் கொண்டிருக்கும்.

இதற்கு மருந்து :—

அவுரிவேர் அரைத்துக் காடியில் கரைத்துப்போட்டு, மேலுக்குத் துவளையிடவும்.

2. பாம்பு கடியாளுல் வாய் நீர்விழும், செவிமயிர் கழிந்து விழும்.

இதற்கு மருந்து :—

முருங்கையிலை, பாகல் இலை, வசம்பு, உள்ளிப்பூண்டு இவைகளைத்தட்டிச் சிறு நீரில்கலந்து, மூக்கில் பிழிந்து ஊதவும். கொல்லன் கோவைக்கிழங்கு, கருணைக்கிழங்கு இவைகளை அரைத்துப் புகட்டவும்.



2. வேலிப்பருத்தி, பேய்பீர்க்கு, விழுதியிலை, சிறு குறிஞ்சா, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்து கோமூத்திரத்தில் கலந்து மேல் தடவவும்.

3. சிறியாநங்கைவேரை அரைத்துக் கொடுக்கவும்.

## 126. விஷங்கள்—சகல விஷங்களுக்கும் சஞ்சீவி

கந்தகம், ரசம், கல்நார், மனோசிலை, குருந்துருசு, வெள்ளை நாபி, நாடமிடுபிரிதி, வேப்பம் விதை, இவைகளோடு, சமனிடை நேர்வாளம் அதேயளவு எட்டிக்கொட்டை இவைகளைச் சுத்தி செய்து சேர்த்துக்கொண்டு எருக்கம்பால் விட்டரைத்து மூன்று மணி நேரம் பொறுத்து வேப்பெண்ணெய் விட்டரைத்து, மாட்டுக் கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு, வேண்டும்பொழுது ஒரு மிளகு அளவில் கொடுக்கத் தீரும். இது சகல நோய்களுக்கும் விஷத்திற்கும் கொடுக்கக் குணமாகும்.

## 127. வெள்ளை உருண்டை

பெருங்காயம் பலம் 1, பொறித்த எண்ணெய் வெங்காரம் பலம் 1, படிக்காரம் பலம் 2, குக்கிலுப்பு பலம் 1, இஞ்சி சேர் 1, ஆகியவைகளை நேக அரைத்து, கழற்சிக்காயளவில் உருண்டைகள் செய்து உலர்த்தி வைக்கவேண்டும். வேண்டும்பொழுது ஒரு உருண்டை கொடுக்கவும். இது மிகவும் சிறந்த மருந்து ; எளிதாயும் செய்யலாம், சகல வியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

## 128. வெய்யில் காலங்களில் குளிர்ச்சிக்காகவும், உஷ்ண சாந்திக்கும் மருந்து

வெய்யில் காலங்களில் வெக்கை முதலான வெதுப்பு நோய்கள் வராமலும் உஷ்ண சமனத்திற்கும் கொடுக்கின்ற இலைகள் :— நாட்டுத்துத்தியிலை, இலவம் இலை, கருநொச்சியிலை, கிளுவையிலை, பழம்பாசியிலை, இவைகளில் ஏதேனும் ஒரு வகை இலையை அந்தி, சந்தி இருவேளைகளுக்கு ஒரு வாரம் நான்கு பிடி கொடுத்தால் மிக்க குளிர்ச்சியைத் தரும்.

## அத்தியாயம் 7

# வண்டி மாடுகள், பந்தய மாடுகள் இவைகளின் தனி மருந்துகள்

பொதுவாகப் பசுமாடு, காளைமாடு இவைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் முன் அத்தியாயத்தில் விவரிக்கப் பட்டுள்ளன. இனி வண்டி மாடு, பந்தய மாடு, இவைகளுக் கென்று ஏற்பட்ட தனிப்பட்ட மருந்துகளை அவ்வப்போது வேண்டிய சமயங்களில் பிரயோகித்தும் சமன் படுத்துவதற் கான 'உத்தாரணமும்' கொடுத்தால் இம்மருந்துகள் விசேஷ பலனை அளிக்கவல்லது.

### 1. ஓணான் (சுறட்டு) மசாலை

சுறட்டு ஓணான் 20, மால்கொங்கணி விரை, தேஜோ வர்த்தியிலை, மதன காமாட்சிப்பூ, செண்பகமொட்டு, மகிழ மொட்டு, எட்டிக்கொட்டை இவைகளை இடித்துத் தூளாக்கி ஓணான் வயிற்றைக் கீறி கல்மஷங்களை நீக்கித் தூள்களை உள்ளே நிறைத்து, நல்லெண்ணெயில் வருத்துக்கொண்டு அம் மியில் வைத்து அரைத்து, உருண்டை கழற்சிக்காய் பிரமா ணம் செய்து, மூன்று நாள் கொடுக்கவும். மாடு விரைவாக வும்; சுறு சுறுப்பாகவும் ஆகும். மருந்தை வெய்யிலில் வைக் கவும்.

இதற்கு உத்தாரணம்:—எருமை வெண்ணெய்சேர் அரை 8 வேளை கொடுக்கவும்.

### 2. ஓணான் மற்றொரு விதம்

ஜாதிக்காய், கிரும்பு, ஜாதிப்பத்திரி வகைக்கு விராக னிடை 1, அபின். கையாந்தகரை, வெள்ளைச்சாறணை, ஆதண் டம் வேர், வகைக்கு ½ பலம், நத்தைச்சூரிவிதை 1, பொன் மஞ்சள் ஓணான் 1, இவைகளை முன் சொன்ன முறையைப் போல் பிரயோகிக்கலாம்.



### 3. ஆட்டுத்தலை மசாலை

ஆட்டுத்தலை 1, மிளகு பலம் ½, கண்டங்கத்திரி பலம் ½, பூண்டு பலம் 1. வெங்காயம் பலம் 2. கிரும்பு பலம் ¼, இந் துப்புப் பலம் 1, மல்லி பலம் 1, மஞ்சள் பலம் 1, கோதும்பை மாவு படி ½, உளுந்து படி ¼, நெய் பலம் 4, இவைகளைச் சேர்த்து வேகவைத்து வதக்கி எலும்பு நீக்கிக் கொடுக்கவும். இப்படி ஏழு நாள் கொடுக்கவும். பலமுண்டாகும்.

### 4. அடைக்கலாங்குருவி மசாலை

ஆண் அடைக்கலாங்குருவி 10, நத்தைச்சூரிவிதை விராக னிடை 1, தகர விதை விராகனிடை 1, நிலப்பனைக்கிழங்கு விராகனிடை 1, பூனைக்காலிவிரை விராகனிடை 1, ஜாதிலிங் கம்விராகனிடை 1, அபின் விராகனிடை ½. குருவிகளின் இற கைப் போக்கிக் கல்மஷமெடுத்துவிட்டு ஷை சரக்குகளின் தூள்களை இவைகளின் வயிற்றுக்குள் நிறைத்துப் பானையில் 2 படி பால் விட்டு பானைக்கு வேடுகட்டி அதன்மேல் குருவி களை வைத்து அவித்துப் பால் சுண்டின உடன் குருவிகளை எடுத்துக் கல்வத்தில் போட்டு பால் விட்டரைத்து, சுண்டக் காயளவு உருண்டை செய்து கொடுக்கவும்.

### 5. கருங்கோழி மசாலை

சாதிலிங்கம் விராகனிடை 2, அபின் விராகனிடை 4, வெங்காரம் பொறித்தது விராகனிடை 5, கிரும்பு விராக னிடை 10, முத்தக்காசு விராகனிடை 10, பூமிச்சக்கரைக் கிழங்கு விராகனிடை 10. வால்மிளகு விராகனிடை 5, கருஞ் சீரகம் விராகனிடை 10, கஸ்தூரி மஞ்சள் விராகனிடை 10, வால் மிளகு விராகனிடை 5, குக்கில் விராகனிடை 10, கொடிவேலிவேர் விராகனிடை 10, இந்துப்பு விராகனிடை 10, மிளகு விராகனிடை 5, திருகு கள்ளிப்பால் விராகனிடை 10, எட்டிக்கொட்டை விராகனிடை 10, இவைகளையெல்லாம் முருங்கப்பட்டைச் சாற்றிலரைத்துக்கொள்ளவும். கருங் கோழி இறகைப் போக்கிக் குடல் போக்கி வயிற்றுக்குள் ஷை சரக்கை வைத்துத் தைத்துக் கோழியை சட்டியில் போட்டு

அறுகம்வேர் கஷாயத்தை அதில் விட்டு அவித்து, இரண்டு ஜாமம் வேகவைத்து எடுத்துக் கல்லுரலில் போட்டு இடித்துக் கழற்சிக்காய்ப் பிரமாணங் கொடுக்கவும்.

### 6. கொடிவேலிக் கஷாயம்

திருகு கள்ளிப்பால், எருக்கம்பால், சித்திர மூலவேர், கண்டந்திப்பிலி, நன்னாரிவேர், சடச்சி வேர், நல்லம்பால், எருக்கம் பழுப்பு, வகைக்கு விராகனிடை இரண்டு, அதி மதுரம், பெரு மருந்து, கோஷ்டம், அபின், இலவங்கம், வகைக்கு விராகனிடை ஒன்று, இவைகளைச் சேர்த்து அரைத்துக் கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து ஏழு நாளைக்குக் கொடுக்கவும்.

(உ-ம்) சாண் நீள வாழைத்தண்டு.

### 7. சவாரி உருண்டை

படிக்காரம் சேர் ¼. இதைப் புதுச்சட்டியில் போட்டுப் பொரித்துக்கொண்டு, செப்புத் தாம்பாளத்தில் போட்டுச் செப்புச் செம்பினால், அப்பொரியை அரைத்து முதிய சாவல் இரத்தத்தை விட்டுப் பிறகும் அரைத்து, ½ விராகனிடை பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்திக்கொண்டு, வண்டியில் போடுவதற்கு முன் தினம் மாட்டுக்கு ஒரு உருண்டை கொடுக்கவும்.

(உ-ம்) தயிர் சாதமும் வெங்காயமும்.

### 8. 'சம்ஸர்' உருண்டை :

குப்பைமேனிச்சாறு படி ⅛, கும்மட்டிக்காய்ச்சாறு படி ⅛, எருக்கம்பழுப்புச்சாறு $\frac{1}{16}$ இவைகளைப் புதுச்சட்டியில் போட்டு அடுப்பில் வைத்திறக்கி, தயிர் சேர் ½ சேர்த்துகூடன் சேர் ½ சேர்த்து, கழற்சிக்காய் அளவு உருண்டைசெய்து 8 நாளைக்குக் கொடுக்கவும்.

### 9. வண்டியில் ஓடும்பொழுது தளர்ச்சியாக சாணம் போடுவதற்கு மருந்து

தழுதாழை யிலையாவது, நுணா இலைக் கொழுந்தாவது ஒரு பிடி விதம் மூன்றுவேளை கொடுத்தால் நிற்கும்.



### 10. நசியம் (சகல உபயோகத்திற்கும்)

பச்சைப் புகையிலைச்சாறு ¼ சேர், பச்சைமிளகாய்ச்சாறு சேர் ¼, நாய்ப்பால் சேர் ⅛, கழுதைப்பால் சேர் ⅛. வேப்பெண்ணெய் சேர் ½, எருக்கம் வண்டு 4. இவைகளைக் கல்வத்திலிட்டு சூரிய புடம் செய்தால் தூளாகும். வண்டியில் மாட்டை கட்டும்பொழுது நசியமிடவும்.

(உ-ம்) மூக்கை நன்றாகக் கழுவி விடவும்.

### 11. மாடுகள் நிறங்கொடுத்துப் பளப்பளப்பாக

செருச்சின்னியிலையும், உப்பும் சேர்த்து ஏழு நாளைக்குக் கொடுக்க மாடு நிறங்கொடுத்துப் பளப்பளப்பாக இருக்கும்.

### 12. நாக்கில் தடவ (சாட்டு)

நாக்கில் இவைகளைத் தடவினால் சுறுசுறுப்பாகி விரைவாக ஓடும்.

(1) மிளகு பலம் 1, உப்பு பலம் 1, தழுதாழை இலை பலம் 2, இவைகளை இடித்து ஏழு நாளைக்கு, காலையில் நாக்கில் தடவவும்.

(2) கரையான் பூச்சி 2, தென்னம்வண்டு 2, பறக்காக்கையின் கண்கள் 2, அதன் மூளை 2, கோரோசனை விராகனிடை 2 அபின் விராகனிடை 2, எட்டிக்கொட்டைப்பிசின் விராகனிடை 2, மலைவேம்புப்பிசின் விராகனிடை இரண்டு, இஞ்சி இலை சேர் ½, கசகசா சேர் ⅛. இவைகளைக் கல்வத்தில் போட்டு அரைத்துச் சட்டியிலிட்டு அடுப்பில்வைத்துச் சிவந்ததும் இறக்கி மாத்திரைகள் கடலைத் திட்டம்செய்து, வண்டியில் போடும்பொழுது உரைத்து மாட்டின் நாக்கில் தடவவும்.

(உ-ம்) தேங்காய்ப்பால் அல்லது வெங்காயச்சாறு கொடுக்கவும்.

(3) மதன காமாட்சி இலை விராகனிடை நான்கு, அபின் விராகனிடை 2, பொரித்த வெங்காரம் விராகனிடை 8, சுக்கு விராகனிடை 8, இவைகளை ஊமத்தைச்சாறுவிட்டு அரைத்துக் காயவைத்துப் பொடிசெய்து இரண்டு விராகனிடை எடுத்து நெய்யில் கலந்து நாக்கில் தடவவும்.

(4) அபின் விராகனிடை 1, மதன காமாட்சிப்பூ விராகனிடை 1. சுக்கு விராகனிடை ½, வெங்காரம் விராகனிடை 2, சர்க்கரை விராகனிடை ½, நெய் விராகனிடை ½, நெய்யில் மதன காமாட்சிப் பூவை வறுத்து மற்றவைகளை நெய்விட்டு அரைத்துச் சிமிழில்வைத்துக் கொள்ளவும் வேண்டும் பொழுது நாக்கில் தடவ மாடு விரைவாகும்.

## 13. பிருந்து (பருந்து) மசாலை

(1) நீள் விளக்..........., அபின், பொன்னரிதாரம், மதன காமாட்சிப்பூ, கடுகுரோகிணி, சடாமாஞ்சி, கோரோசனை, நருகுச் சூரணம், ரசம், இவை வகைக்கு விராகனிடை 1. ஆண் பருந்தைக் கொண்டுவந்து கால், மூக்கு இவைகளை நறுக்கி விட்டுக் குடலை நீக்கி இந்தச் சாமான்களின் தூளை நிரப்பி உள்ளுக்குக் கொடுக்கவும்.

(2) கொடிவேலிவேர் விராகனிடை 2, சாதிக்காய், சாதிப் பத்திரி, இலவங்கம், ஏலம், கரிமஞ்சள், சுக்கு, மிளகு, கஸ்தூரிமஞ்சள், தாளகம், லிங்கம், வீரம், கருநாவி வகைக்கு விராகனிடை 1 இவைகளைப் பொடிசெய்து பருந்தின் கல்மஷம் நீக்கி, அதில் நிரப்பித் தைத்து, திருகுகள்ளியைப் பானையில் போட்டு நீர்வார்த்து வேடுகட்டித் துணியில் பருந்தை வைத்து சட்டிமூடி வேகவைத்து எடுத்து நல்லெண்ணெயில் அதை வறுத்து அரைத்து உருண்டைசெய்து 3 நாளைக்குக் கொடுக்கவும்

(உ-ம்) வெண்ணெய்.

(3) எட்டிக்கொட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, காட்டு சீரகம், வாயுவிடங்கம், சடாமஞ்சி, சுக்கு, கடுகு, சாதிலிங்கம், பூரம், வீரம், அபின் வகைக்கு விராகனிடை 2, நல்லெண்ணெய் சேர் 1, மேற்படி வீரம், பூரம், சாதிலிங்கம், அபின் இவைகளைத்தவிர மற்றவைகளைப் பொன்னிறமாக



வறுத்துக்கொண்டு தூள்செய்யவும். முன் செய்தபடி பருந்தைத் தயார்செய்து தூள்களை நிரப்பித்தைத்து எண்ணெயில் வறுத்து அரைத்து உருண்டைசெய்து 3 நாள் கொடுக்கவும்.

## 14. புஷ்டிக்கு

(1) ஆண் சிட்டுக்குருவி 1. அக்கராகாரம், பச்சைக் கற்பூரம், சீனாக் கற்கண்டு, வால் மிளகு ஏலம் வகைக்கு விராகனிடை 2, இவைகளை வெற்றிலைச் சாறு விட்டரைத்துக் கொடுக்கவும்.

(2) மஞ்சள், கடுகு, கடுகுரோகிணி, பூண்டு வகைக்குப் பலம் 1, உப்பு படி ½, இவைகளை இடித்துத் தூளாக்கி 10 கும்மிட்டிக்காயைப் பிளந்து அதில் நிரப்பி மோர் படி 1½ யில் போட்டு வெய்யிலில் ஏழு நாளைக்கு வைத்து நாளைக்கு ஒரு கீற்றாகக் கொடுக்கவும்.

## 15. வஸ்று மசாலை

அபின், ரசசெந்தூரம், ரசம், லிங்கம், வகைக்கு ½ விராகனிடை. இவைகளைப் பொடி செய்து எருக்கம் வண்டு ஐந்தின் குடல் போக்கி மேற்படி தூளை நிரப்பி நல்லெண்ணெயில் வறுத்து, வேண்டிய எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு அரைத்து வேளைக்கு விராகனிடை 1 வீதம் மூன்று நாளைக்குக் கொடுக்க சீக்கிரம் விரைவாகும்.

## 16. விரைவாகச் செல்ல மருந்து

(1) கருநாவி விராகனிடை 1, அபின் விராகனிடை 2, சாதிக்காய் பலம் 1, மதன காமாட்சிப்பூ விராகனிடை 1, கருஊமத்தை வேர் பலம் ½, தேங்காய் 1, பால் சேர் ½.

(2) வெள்ளரிவேர், ஊமத்தைவேர், வகைக்கு ஒரு சாண் துண்டு எடுத்துச் சாராயத்தில் மூன்றுநாள் ஊறவைத்து, சாதிலிங்கம் விராகனிடை 3 எடுத்து வெங்காயச் சாற்றில் போட்டுக் கொதிக்கவைத்துப் பிசின் போலாகும்பொழுது இறக்கி, முன் ஊறவைத்திருக்கும் சரக்குகளை யெடுத்துக் கொதிக்கும் வெங்காயச்சாறுடன் சாராயத்துடன் போட்டு வேகவைத்து எடுத்து அரைத்து ஒரு விராகனிடைப் பிரமாணம் உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி வேளைக்கு ஒரு உருண்டை வீதம் மூன்று நாளைக்குக் கொடுக்கவும்.

(உ-ம்) வேளைக்கு $\frac{1}{4}$ சேர் வெண்ணெய் மூன்று நாள் கொடுக்கவும்.

### 17. விரேசனத்திற்கு (பேதிக்கு) மருந்து

புரசவிதையை சாணியில் ஊறவைத்து விராகனிடை $1\frac{1}{2}$ எடுத்து அரைத்துப் புகட்டினால் பேதியாகும். பச்சைத் தண்ணீர் காட்டவும். இருமாதமொருமுறை கொடுத்தால் மாடுகளுக்கு நல்லது.

### 18. வெள்ளை உருண்டை சகல ரோகங்களுக்கும்

பெருங்காயம், இந்துப்பு, படிக்காரம், பொரித்த எண்ணெய் வெங்காரம், இஞ்சி, தேன் வகைக்குப் பலம் 1 இவைகளை நன்றாக நேக அரைத்து கழற்சிக்காயளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும். வேண்டும் பொழுது ஒரு உருண்டை கொடுக்கவும். எல்லாவித வாயு, அசீரணம், மந்தம் இவை பறந்து போகும்.

### 19. வெண்ணெய் நாக்கில் தடவ (விரைவுக்கு)

நாகமல்லிவேர் $\frac{1}{2}$ சேர், அரளிவேர் சேர் $\frac{1}{2}$, கருஊமத்தை வேர் $\frac{1}{4}$ சேர், சிவதைவேர் சேர் $\frac{1}{2}$ இவைகளை நன்றாயிடித்து 4 சேர் பாலில் போட்டுக் காய்ச்சி வடிக்கட்டி அப்பாலில் மோரை விட்டு உரைக்குத்தித் தயிராக்கி அதை உடனே கடைந்து வெண்ணெய் எடுத்து, மிளகு பிரமாணம் காலையில் நாக்கில் தடவ மாடு விரைவாகும். கையில் அடங்காது.

---



# குதிரைகளின் லக்ஷணங்களும் வைத்தியமும்

## அத்தியாயம் 1.

### குதிரைகளின் பிறப்பு, வரலாறு முதலியன

கடவுளால் படைக்கப்பட்ட மிருகங்களில் மாடுகளுக்கு அடுத்தபடியாக அதிகமாக உபயோகப்படுவது குதிரை. இது மனிதனுக்குப் பல துறைகளில் பலவிதமாகப் பயன்படுகிறது. குதிரைகள் கூர்மையான அறிவு படைத்திருப்பதால் ஆபத்து ஏற்படக்கூடிய சமயங்களில் மனிதனுக்கு உற்ற துணையாக இருந்து காப்பாற்றக்கூடிய சக்தி வாய்ந்தனவாக இருக்கின்றன.

படைக்கப்பட்ட விலங்குகள் யாவற்றினும் குதிரைதான் மிகவும் அழகுவாய்ந்த சரீரவமைப்பு உடையது. வலிவுடன் வேலைகள் செய்வதற்கும், கடினமான உழைப்புக்கும் தகுந்த தேகமுடையவை. கடவுளின் படைப்பில் பல்லாயிர வகையான காட்டு மிருகங்களிருப்பினும், மனிதனுக்கு அடங்கி அவனுடன் பழகி அவனுக்குப் பெருந் தொண்டு செய்வன குதிரைகளே.

பண்டைக் காலம் முதல், போக்குவரத்து சாதனங்களுக்குக் குதிரைகள் உபயோகப்பட்டு வந்திருக்கின்றன. இயந்திர சாதனமில்லாதிருந்த காலங்களில் அவைகளே மிக விரைவாகச் செல்லக்கூடிய வாகனங்களாக விளங்கின. ரதம், தேர், வண்டி இவைகளுக்குப் பெரும்பாலும் குதிரைகள் உபயோகப்பட்டன. நெடுந்தூரம் செல்வதற்கும், மிகுதியான சுமை இழுப்பதற்கும் மாடுகளைவிடக் குதிரைகளே ஏற்றவைகளாதலால் அக்கால மக்கள் பல்லாயிரக்கணக்கான மைல்கள் குதிரைகளிலும், குதிரை வண்டிகளிலும் சவாரி செய்து வந்தனர்.

முன் காலத்தில் சாம்ராஜ்யங்கள் குதிரைகளின் பலத்தைக்கொண்டுதான் அமைக்கப்பட்டன. இரதப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை இவ்வகையான நான்கு படைகளில், குதிரைப் படைகள்தான் மிகவும் சிறந்தவையாக விளங்கின. மகாபாரத காலத்திற்கு முன்னரே குதிரைப் படை உன்னத நிலையை அடைந்திருந்தது. சத்திரபதி சிவாஜியும், நமது தேசத்தின் பெரும்பாகத்தை ஜெயித்த அவர் சந்ததியார்களும் குதிரைப் படையிலே பேர்போனவர்கள். ஆங்கிலேயரைப் படாதபாடுபடுத்திய ஹைதர் அலியின், வேகமான படை நடமாட்டமும் குதிரைப் படைகளின் உதவியினாலேயே ஏற்பட்டது. நமது நாட்டில் அந்நியர் படையெடுப்புகளைக் "குதிரைக்காரர் கலகம்", என்று வர்ணிப்பது வழக்கமாக இருந்து வந்தது. மோட்டார் படைகள் ஏற்பட்ட சமீபகாலம் வரையில் எல்லா நாடுகளிலும், குதிரைப் படையே சேனைகளில் முக்கிய அம்சமாக இருந்ததென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. பெரும் சாம்ராஜ்யங்களின் வெற்றி, தோல்வி, ஏற்றத்தாழ்வு இவைகளுக்குக் குதிரைப் படைகளே காரணமாக இருந்தது; அநேக நாடுகளின் சரித்திரங்களை அவை மிகவும் மாற்றியிருக்கின்றன.

ஒரு நாட்டின் சரித்திரத்தையே மாற்றக் கூடிய சக்தி, குதிரைப் படைகளுக்கு அமைந்திருந்ததால், அந்நாட்டு மக்களின் சுகம், துக்கம், வலிமை, வலிமையின்மை இவைகள் பெரும்பாலும் அவைகளால் பாதிக்கப்பட்டன. அக்காலங்களில் பலமில்லாதவன் சமூகத்திற்கே உதவாதவனாகக் கருதப்பட்டுக் கோழை என்று குற்றம் சாட்டப்பட்டான். குதிரை வீரன் குதிரையேற்றப் பயிற்சியால் அதிக பலமுள்ளவனாக விளங்கினான், அக்காலத்து மக்கள் நூற்றுக்கணக்கான மைல்களைக் களைப்பின்றி குதிரைமேல் ஏறிப் போய்க்கொண்டும், ஆயுதங்கள் சுமந்து போர்புரிந்தும் வந்தார்கள். குதிரையேற்றம் தெரியாத ஒருவீரனும் அக்காலத்தில் இருந்ததில்லை.

தற்காலத்திலும் குதிரைப்படை மிகுதியாக உபயோகப்படுகிறது. குதிரைகள், பந்தயம், குதிரையேற்றம் முதலியவைகளுக்கும் பயன்படுகின்றன. வண்டிகளுக்கும், பந்தயங்களுக்கும், அரசாங்க நிகழ்ச்சிகளிலும் இக்காலங்களிலும் குதிரைகள் உபயோகப்படுகின்றன. நம் நாட்டில் மாடுகள் உழவுக்குதவுவதுபோல் மேல் நாடுகளில் குதிரைகள் உதவுகின்றன. பொதுவாக அங்கே எல்லா கிராமங்களிலும் குதிரையை விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இயந்திர சாதனமில்லாத அநேக இடங்களிலும், இயந்திர சாதனம் சாத்தியமில்லாத இடங்களிலும் குதிரைகள் உபயோகப்பட்டு வருகின்றன. மேலும் மலைப்பிரதேசங்களில் குதிரைகள்தான் போக்குவரத்துக்கு முக்கியமாகப் பயன்படுகின்றன.



இவ்வாறு நமக்குப் பயன்படும் குதிரைகளின் பிறப்பு, வளர்ப்பு, நிறம், சுழி, நோய், மருந்து இவைகளைப் பற்றி தெரிந்துகொள்ளுதல் அவசியம். அப்போது அவைகளை நல்ல முறையில் காப்பாற்றி அதன் பயனை அடைய இலகுவாகவிருக்கும். நம் நாட்டில் உழவுக்கு வேண்டிய மாடுகள் கிடைப்பது அரிதாக இருக்கிற நிலைமையில், வண்டிகளுக்குக் குதிரைகளையே உபயோகிப்பதனால் வண்டி மாடுகளும் உழவுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கும். இந்த உத்தேசித்துத் குதிரைகளை நாம் அதிகமாக வளர்ப்பது நம் நாட்டின் வளத்துக்கு மிகவும் ஒத்தாசையாகும்.

அனாதிகாலமாக இந்தியர் குதிரையின் பெருமையை தெரிந்திருந்தார்கள். அவர்கள் குதிரை சாஸ்திரங்களில் வல்லுனர்களாக விளங்கினர். வேதங்களில் குதிரைகள் வெகுவாகச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. புராணங்களும் குதிரைகளின் மேன்மையைப்பற்றிப் புகழ்கின்றன. உலகம் பிறந்த காலமுதல் குதிரைகளிருந்ததாகச் சொல்லப்படுகிறது. புராணங்களில் கூறப்பட்டுள்ள "சாலிஹோத்ர முனி, நகுலன், சகாதேவன், மாலி", முதலியவர்கள் குதிரை சாஸ்திரங்களை இயற்றியவர்கள்.

குதிரைகள் மிகவும் புனிதமான பிராணிகள் என்றும், மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும் இந்துக்களால் மிகவும் பூர்வ காலத்திலிருந்து பூசிக்கப்படுகின்றன. யாகங்களில் அசுவமேத யாகமே மிகச்சிறந்தது. தேவர்களே அனேக தடவை குதிரை ரூபமாகப்

பிறந்ததாகவும் ஐதீகங்கள் உண்டு. ரோமர்கள், கிரேக்கர்கள் முதலான பண்டைக்காலத்திய மேல் நாட்டு மக்களாலும் குதிரைகள், "தெய்வக் குதிரைகள்," என்று பூசிக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் வீரர்களும் குதிரையைக் கடவுளாக மதித்து அதைப் பூஜித்தும், காப்பாற்றியும் வந்தார்கள். இந்துக்கள் வீட்டில் அனேக தடவை 'அசுவ பூஜை' செய்வதுண்டு. இராஜபுத்திரர், மகாராஷ்டிரர் இன்னும் மற்றை க்ஷத்திரிய வகுப்பினரும் குதிரை, வாள், கேடயம் முதலியவைகளைத் தங்கள் இனத்தின் சின்னங்களாகக் கொண்டு முக்கிய சடங்குகளில் அசுவபூஜை, குதிரையேற்றம் முதலியவைகளைச் செய்து வருகிறார்கள். பர்மா, ஜப்பான், சயாம் முதலிய நாட்டு அருக புராணங்களில் குதிரைகளை மிகவும் புனிதமானதென்றும், பூசிக்கத்தக்கதாகவும் கூறப்பட்டுள்ளது.

'சாலிஹோத்திர முனிவர்" செய்திருக்கும் அசுவ சாஸ்திரத்திற்கு "சாலிஹோத்ரியம்" என்று பெயர். அதை 10,000 டாக்களில் செய்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு பாண்டவர்களில் நகுலன், சகாதேவன் என்பாரும் இச்சாஸ்திரத்தில் நிபுணர்களாய் விளங்கிச் சிறந்த அசுவ சாஸ்திரங்கள் இயற்றியிருக்கிறார்கள்.

சர்வலோக சிருஷ்டி சமயத்தில் எழுவகைக் குதிரைகள் பிறந்தன அவைகள் (1) வேதம், (2) பிரம்மா, (3) அவரது தேவி, (4) அட்டதிக்குப் பாலர்கள், (5) திருப்பாற் கடலில் உண்டான நிதிகள், (6) கூகையின் அண்டம், (7) கர்ப்பம் இந்த ஏழு இடங்களில் உற்பத்தியாயின.

வேதத்தில் பிறந்த குதிரை சிவனுக்கும், பிரம்மாவின் கண்ணில் பிறந்த குதிரை ஆயனுராகிய தாத்தாவுக்கும், அக்கினியில் பிறந்த குதிரை சூரியனுக்கும் அட்டதிக்குப் பாலர்களிடம் பிறந்த குதிரைகள் அவரவர்களுக்கும், திருப்பாற் கடலில் பிறந்த குதிரை தேவேந்திரனுக்கும், கூகையின் அண்டத்தில் பிறந்த குதிரை இலட்சுமிக்கும், கெர்ப்பத்தில் பிறந்த குதிரை பூலோகத்திலுள்ள மானிடர்களுக்குமென்று ஏற்பட்டன. ஆதியில் இக்குதிரைகளுக்குச் சிறகுகள் இருந்தன.

மேலும் 24000 குதிரைகள் சிறகுகளுடன் உண்டாகிக் கந்தர்வர்களுடன் ஆகாயத்தில் வெகு உல்லாசமாகத் திரிந்து



கொண்டிருந்தன. இந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட திருப்பாற் கடலில் பிறந்த குதிரை அவனிடம் அடங்காது பிரயோஜனப்படாமலிருந்தது. கட்டுக்கு மீறி தேவர்களுக்கும், பூலோகத்திலுள்ள முனிவர்களுக்கும் அனேக துன்பங்களை விளைவித்து வந்தது. குதிரைகள் சிறகுகளுடனிருந்ததால், அவைகள் ஆகாய மார்க்கத்தில் சஞ்சரித்துக் கொடுமைகள் புரிந்தன. தேவர்களுக்கே இடையூறு ஏற்பட்டதால், தேவராசனாகிய இந்திரன் சாலிஹோத்ர முனி சிரேஷ்டரிடம் சென்று குதிரைகள் செய்துவரும் இன்னல்களைப்பற்றி முறையிட்டு, அவைகளை அடக்கி உலகத்திலுள்ளவர்களுக்கும் பயன்படும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். குதிரைகளின் சிறகுகளைத் துண்டித்துவிட்டால் அடங்கி நடக்குமென்று தெரிவித்து, அவ்விதமே பாணத்தினால் இறக்கைகளை வெட்டிவிடும்படி, அம்முனிவரை தேவேந்திரன் பிரார்த்தித்துக்கொள்ள, சாலிஹோத்ர முனிவர் இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, தனது மந்திர சக்தியாலும், தபோ பலத்தாலும் "இஷீகம்" என்னும் பாணத்தை செபித்து விட்டார். உடனே அப்பாணமானது இந்திரனுடைய குதிரையினுடையவும், ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த மற்ற எல்லாக் குதிரைகளுடையவும் சிறகுகளைத் துண்டிக்க, அவைகள் முனிவர் எதிரில் தலை கீழாக விழுந்தன. இறக்கைகளை இழந்து இரத்தம் தோய்ந்த உடல்களுடன், முனிவர் முன் காட்சியளித்து அவரை வணங்கி, இனி அவர் இடும் ஆணையை ஏற்றுக்கொண்டு அடங்கி நடப்பதாகத் தெரிவித்து, அவைகளையும், அவைகளின் குலத்தையும் காப்பாற்றியருளும்படி வேண்டிக்கொண்டன.

அம்முனிவர் அக்குதிரைகளின்மேல் இரக்கங்கொண்டு அவ்வாறே செய்வதாக வாக்களித்தார். அவைகள் இனி பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் எல்லா உலகங்களிலுள்ளவர்களுக்கும் உபயோகப்பட்டு சுகமாக வாழும்படி வரமளித்தார். சில குதிரைகளைத் தேவர்களுக்கு வாகனமாகச் செல்லும்படி ஏவினார். மற்றும் சில குதிரைகளை இதர உலகங்களுக்குச் சென்று வாழும்படி அனுப்பினார். அனேக ஆயிரம் குதிரைகளை அனேகவித வர்ணங்கள், இலட்சணங்கள், குணங்களு

டன் படைத்து பல இடங்களுக்குப் போகக் கட்டளையிட்டார். குதிரைகளை வளர்த்து அவைகளை உபயோகப்படுத்தும் முறைகளையும், அவற்றின் லக்ஷணங்களையும் அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளையும் குதிரைகளுக்கு உண்டாகும் நோய்களுக்கான மருந்து முறைகளையும் உலகத்தார் அறியும்படி விரிவான ஓர் நூலையும் இயற்றி, அக்குதிரைகளுக்கு அருள்புரிந்து அவைகளுக்கென்று குறிப்பிட்ட உலகங்களுக்குச் செல்லும்படி ஆக்ஞாபித்தார்.

அன்றுமுதல் குதிரைகள் யாவருக்கும் பயன்படும்படி ஏற்பட்டுப் பூலோகத்துக்கு வந்ததாகப் புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறாக வெண்ணிறக் குதிரை சந்திரனுக்கும், பொன்னிறக் குதிரை இந்திரனுக்கும், சிவப்பு நிறக் குதிரை ருத்ரனுக்கும், பச்சை நிறக்குதிரை சூரியனுக்கும், கருப்பு நிறக்குதிரை யமனுக்கும் ஏற்பட்டன.

## குதிரைகள் கெர்ப்பந்தரிக்கும் விதம்

உலகத்தில் உண்டான குதிரைகள் கெர்ப்பந்தரிக்கும் விதம் இருவகையானது. ஒன்று கண்பார்வை ஏற்பட்ட மாத்திரத்தில் கெர்ப்பம் உண்டாதல்; மற்றொன்று ஸ்பரிசமானவுடன் கெர்ப்பம் உண்டாதல். பஞ்ச பூதங்களாகிய அப்பு, தேயு, வாயு, ஆகாயம், பிருதிவி இவைகளின் கூறுகளில் குதிரைகள் பிறந்தன. அப்புவாகிய நீரில் பிறந்தவை கடுமையாகவும், தேயுவாகிய அக்கினியின் கூறில் பிறந்தவை நலமுடையதாயும், வாயுவாகிய காற்றின் கூறில் பிறந்தவை அரைக் கடுமையாயும், ஆகாயத்தின் கூறில் பிறந்தவை கையில் அடங்காதவையாகவும், பிருதிவியாகிய பூமியில் பிறந்தவை மந்தமாகவும் இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

கெர்ப்பந்தரித்த பதினொரு அல்லது 12ம் மாதத்தில் பிறந்த குதிரைகள் மத்திமமானவை. 12ம் மாதம் சென்று பிறந்த குதிரைகள் உத்தமமானவை. ஆண் குதிரைகள் பெண் குதிரைகளைவிட மேலானவை என்பர். பெண் குதிரைகள் போர், குதிரையேற்றம் முதலியவைகளுக்குச் சிறந்தவையன்று. குதிரைகளில் அலிபிறப்பது அரிது. பிறப்பினும் ஒன்றுக்கும் உதவாமலிருக்கும்.



சூரியன் உதித்த மூன்றரை நாழிகைக்கு மேலும், சூரியன் அஸ்தமித்த மூன்றரை நாழிகைக்கு மேலும் பிறந்தவைகள் எப்பொழுதும் உறங்கிய கண்களும், செவியும், பொருந்தியிருக்கும். படைக்கு ஏற்றவையல்ல. தண்ணீர் நிறையக் குடிக்கும்.

குதிரைகளின் குணங்களைப் பதினாறு விதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். சாத்வீக சுபாவம் 7 வகையும், இராஜஸ குணம் 7 வகை என்றும், தாமஸ குணம் இருவகை என்றும் வகுக்கப்பட்டிருக்கிறது. சாத்வீக குணமுடைய குதிரைகள் நல்ல ஞானம் படைத்தவைகளாயும், யுத்தமேற்பட்டால் வெற்றிபெறக்கூடியவைகளாயும் அப்பேற்பட்ட குதிரையின் பேரில் ஏறினவனுக்கு மிகுந்த செல்வம் கிடைக்கக்கூடியதாயுமிருக்கும்.

இராஜஸ குணமுடைய குதிரைகள் போரில் ஜெயமடையக்கூடியவைகளாயும், வேகமுடன் விரைவிற் செல்லக்கூடியவைகளாயும், அடக்கும்பொழுது அடங்கும் குணமுடையதாயும், பிறர்தடுக்கும்பொழுது நில்லாத குணமுடையதாயுமிருக்கும்.

தாமஸ குணமுடைய குதிரை மந்த புத்தியுடையதாயும் விரைவாகச்செல்ல இயலாததாயும், தளர்ச்சியான முதுகும், மூச்சு முடையதாயும், படைக்கும், போருக்கும் பிரயோஜனமில்லாததாயும் இருக்கும்.

# அத்தியாயம் 2

## குதிரைகளின் வயது, பற்கள், தேக அமைப்பு, வர்ணம் முதலியன

குதிரைகளுக்குப் பொதுவாக ஆயுள் 32 வருஷம். அவ்வயது பத்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகத்தையும் ஒரு 'தசை', யென்றும்; 'தசை' ஒன்றுக்கு 3 வருடம், 2 மாதம், 12 நாட்களென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

### வயதும் பற்களும்

குதிரையின் வயதை இருவிதமாகக் கண்டுகொள்ளலாம். உட்சின்னங்களான பற்களினாலும், வெளிப்படையான சின்னங்களாகிய தலை, உரோமம், சப்தம், சேஷ்டை, தோற்றம். மடிப்புகள், தோல்களின் அமைப்பு, குளம்பு, வலிமை, பீஜம், முதலியவற்றாலும் தெரிந்து கொள்ளலாம். குதிரைக்குட்டிகளுக்குப் பிறந்த இரண்டு மாதங்களில் சிறு பற்கள் முளைக்கும். நடுப்பல் மூன்றும் மாதமும், ஆறும் மாதம் 12 பற்களும், ஒரு வருடக் கடைசியில் எல்லாப் பற்களும் உண்டாகும். மூன்றுமாண்டில் கடைப்பற்கள் விழுந்து முளைக்கும்; நான்காமாண்டில் நடுப்பற்கள் விழுந்து முளைக்கும்; ஐந்தாமாண்டில் எல்லாப் பற்களும் முளைத்து வாய் நிறையப் பற்கள் இருக்கும். ஐந்தாமாண்டுத் தொடர்ச்சியில் எல்லாப்பற்களும் இருக்கும். அப்பொழுது பற்கள் நெய்யின் வர்ணமுடையதாக இருக்கும். எல்லா அவயமும் முதிர்ச்சியடைந்து சரியான இளம்பருவமடைந்து தேஜசுடன் எவ்விதக் காரியங்களையும் சரிவர செய்யக்கூடிய பூர்ண வளர்ச்சி பெற்று விளங்கும்.

ஐந்தாமாண்டுக்கு முன் இருக்கும் பற்கள் பால் பற்களெனப்படும். இவை மெல்லியதாயும் கூர்மையாயும், சமமாயும், பால்நிறங்கொண்டதாயும் விளங்கும். இக்குதிரைகளுக்கு 'சரளா'' வென்று பெயர். ஆனால் குதிரையின் பற்கள் ஐந்தாமாண்டின் துவக்கத்தில் நிறம் மாறுதலடைய ஆரம்பிக்கும். ஒவ்வொரு வர்ணமும் மூன்று வருட-



121492

மிருக்கும். இவ்வர்ணங்களைக் கொண்டும் குதிரைகளின் வயதைக் கண்டுபிடிக்கலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதாவது குதிரையின் பற்களினது சுபாவ நிறம் (பால் போன்ற 'சரள' நிறம்) மாறி வேற்று நிறங்கள் ஆரம்பித்த உடனே ஐந்து வயதென்றும், அதற்குமேல் தோன்றும் நிறமொன்றுக்கு மூன்று வருடமென்கிற கணக்கின்படிக்கும், வயதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

குதிரையினுடைய பற்களின் சுபாவ நிறமாறி கஸ்தூரி அல்லது புகை நிறங்கொள்ளில் அந்நிறத்துக்கு "காலிகா" வென்றும், அப்பொழுது குதிரைக்கு ஏழு அல்லது எட்டு வயது என்றும் அறியப்படும்.

பொன் அல்லது மான் நிறங்கொள்ளில் அதற்கு "அள்ளிகா" என்றும், அப்பொழுது குதிரைக்கு வயது 10 அல்லது பதினொன்றென்றும் அறிக.

சிவந்த பலகறை (சோழி) அல்லது கார் அரிசி நிறங்கொள்ளில் "குளிகா" என்றும் அப்பொழுது குதிரைக்கு வயது பதின்மூன்று அல்லது பதினான்கெனவும் அறியவும்.

தாம்பூலத்துடன் சேர்ந்த கத்தக்காம்பு நிறங்கொள்ளில் அதற்கு "காசா" என்றும் பெயர். அப்பொழுது குதிரையின் வயது பதினாறு அல்லது பதினேழு என்று அறிக.

ஈயின் நிறங்கொள்ளில் அந்நிறத்துக்கு "மச்சிகா" என்றும், அப்பொழுது குதிரையின் வயது பத்தொன்பது அல்லது இருபது என்றும் அறியவும்.

முத்துச்சிப்பியின் நிறங்கொள்ளில் "சிங்கா" என்றும் அப்பொழுது குதிரைக்கு வயது இருபத்திரண்டு அல்லது இருபத்து மூன்றென்றும், சொல்லலாம்.

பற்களில் சிதிலம் ஏற்பட்டுப் பக்கத்து மாமிசம் எடுபட்டு போனால் அந்த நிலைமைக்கு "சலிகா" என்றும், வயது இருபத்தைந்து அல்லது இருபத்தாறென்றும் குறிக்கப்படும்.

பற்கள் அசைவுண்டாகில் அந்த நிலைக்கு "லங்குணி" என்றும் வயது இருபத்தெட்டு அல்லது இருபத்தொன்பது என்றும் அறியவும்.

பற்கள் விழ ஆரம்பித்தால் "பெஸ்தி" என்றும் அப்பொழுது குதிரை முழு ஆயுளை அடைந்து விட்டது என்றும்; மரணத்துக்குகந்தான நிலையிலிருக்கிறது என்றும் கொள்ளவும்.

## தேக அமைப்பு, அளவு முதலியன

82 அங்குலம் உயரமுள்ள குதிரை உத்தமமானது. 74 அங்குலம் உயரமுள்ளது மத்திமம், 66 அங்குலம் உயரமுள்ளது அதமமானது; தேகத்தின் நீட்டளவு 160 அங்குலம் உள்ளதானால் உத்தமமான குதிரை. 100 அங்குலங்களானால் மத்திமம், 90 அல்லது அதற்கும் குறைந்த நீட்டளவு உள்ள குதிரைகள் அதமமாம். (1 அங்குலம் = $\frac{3}{4}$")

குதிரைகளின் முகம், மார்பு, இடை, இவைகள் 32 அங்குலமிருந்தால் உத்தமம். 30 அங்குலமிருந்தால் மத்திமம். 28 அங்குலமிருந்தால் அதமமான குதிரைகளாம்.

கழுத்து 56 அங்குல நீளமிருப்பது உத்தமமென்றும், 46 அங்குல நீளமிருப்பது மத்திமமென்றும், 36 அங்குல நீளமிருந்தால் அதமமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

கணைக்கால் 22 அங்குல நீளமிருப்பது உத்தமம். 18 அங்குலமிருப்பது மத்திமம். 14 அங்குலமிருப்பது அதமம்.

குளம்புகள் 7 அங்குல நீளமிருப்பது உத்தமம். 6 அங்குல நீளமிருப்பது மத்தியம். 5 அங்குலமிருப்பது அதமம்.

காதுகள் 7 அங்குலமும், தாடைகளின் உட்புறம் 6 அங்குலமும் இருக்கவேண்டும்.

வாயிலிருந்து வெத்திவாய்மட்டும் 32 விரல்களிருக்கவேண்டும். அதன்பின் கேசாந்தம் வரையில் 48 விரல்கள், முதுகு 30 விரல்கள், அதன் பின்புறத்தட்டு 30 விரல்கள், கோசஸ்தானம் 20 விரல்கள் இருந்தால் உத்தமம். இவைகளுக்குக் குறைவானால் மத்திமம், அதமம் என்று முறையே அறிக.



பொதுவாகக் குதிரையின் தேக அளவை நம்நாட்டு சாஸ்திரப்படி நாபியிலிருந்து நெற்றிவரையிலுள்ள உடலின் பாதி பாகத்தை "பூர்வார்த்தம்" என்றும், நாபியிலிருந்து மற்றைப் பின்பாதி பாகத்திற்கு "உத்தரார்த்தம்" என்றும் இருவகையாகப் பிரித்திருக்கிறார்கள். இவ்விரண்டையும் பத்து உட்பிரிவுகளாகவும் பிரித்திருக்கிறார்கள். அவைகளுக்கு "க்ஷேத்ரங்கள்" என்று பெயர். அவை பின்வருமாறு:—

1. மேல்தட்டிலிருந்து நெற்றி வரை.
2. நெற்றியிலிருந்து கழுத்து வரை.
3. கழுத்திலிருந்து புஜங்கள் வரை.
4. புஜங்களிலிருந்து அடிப்பக்கமாக ஆசனம் வரை.
5. மேல் உதடுகளிலிருந்து முகவாய்க்கட்டை வரை.
6. மார்பிலிருந்து மேல்பக்கமாக விலாவெலும்புகள் வரை.

7–10. முன்னங்கால்களிலிருந்து குளம்புகள் வரை—, என்று 10 உட்பிரிவுகள் அல்லது க்ஷேத்திரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## சுப அசுப தேக லக்ஷணக்குறிகள்.

### சுப லக்ஷணங்கள்.

1. குதிரைகளின் மார்பு நீண்டு அகன்று இருக்கவேண்டும்.

2. நெற்றி, இடுப்பு, இவைகள் பரந்து இருந்தால் மிகவும் புகழ்பெற்றவை.

3. முதுகு, இருகாதுகள், நாசியின் இரு துவாரங்கள், இவை சமனாக இருக்கவேண்டும்.

4. வால், அக்குள், பிடரிமயிர் இவைகளின் ரோமங்கள் நீண்டு மிருதுவாக இருக்கவேண்டும்.

5. முகம், கண்கள், தலை இவைகள் அழகாகவும், லக்ஷணமாகவும் இருத்தல் அவசியம்.

6. உதடும், நாக்கும் நன்றாகச் சிவந்து மடிப்பில்லாமல் இருக்கவேண்டும்.

7. பற்கள் நெருங்கியும், பழுமழுப்பாயும் வலிமையுள்ளவையாகவும், சமனாகவும் இருக்கவேண்டும்.

8. தாடைகள் பருத்திராமலும், நீண்டிராமலும் இருக்கவேண்டும்.

9. கழுத்து, துடை, முகம் இவைகள் நீண்டிருந்தால் எல்லா விதமான சுகங்களையும் கொடுக்கவல்லது.

10. கண்கள் ஒளியுள்ளவைகளாகவும், பான், யானை, கிரவுஞ்சபட்சி, ஒட்டகம், மயில் இவைகளின் கண்களைப் போலவுமிருக்கவேண்டும்.

11. செவிகள் குறுகியும், கூர்மையாயும், மெல்லியதாயுமிருக்கவேண்டும்.

12. கணைக்கால் விருத்தமாயும் அதிக மாமிசமில்லாததாயுமிருக்கவேண்டும்.

13. குளம்புகள் திடமான மண்டூகத்தை யொத்ததாயும் மழுமழுப்பாயும், வலியுடன் பருத்தும் இருக்க வேண்டும்.

14. அடிவயிறு தாழ்ந்தும், விருத்தமாயுமிருக்க வேண்டும். பீஜங்கள் வில்வக்கனி போலும் அளவு சமமாகவும் இருத்தல் வேண்டும்.

15. ஆண்குறி கறுத்திராமலும் குட்டையாயுமிருக்க வேண்டும்.

16. பெண் குதிரையின் குறியும், உதடும் அசைவற்றதாயும் நீண்டு பரந்து, ஒழுங்காயிருக்கவேண்டும்.

### அசுபலக்ஷணங்கள்

1. உச்சந்தலையிலோ, காதுகளின் அடியிலோ ஓர் விரற்கடை நீளம் துவண்ட தோல்மடி நீண்டு இருந்தால் கெட்ட குறி என்றறிக.



2. இருகாதுகளின் நடுவில் கொம்பு போன்றிருந்தால் இக்குதிரைக்கு "சிங்கிமஸ்தகி" என்றுபெயர். இது யஜமானருக்கு துக்கமளிக்கக் கூடியது. மிகக் கெட்ட குறியாகும்.

3. குளம்புகளில் ஐந்து நகம் போன்றிருந்தாலும், பூனையின் பாதங்கள்போல் இருந்தாலும், மாட்டின் குளம்புபோல் பிளவு பட்டிருந்தாலும் பிரயோசனமில்லாத குதிரைகள் என்றறிக. இவை விரும்பத்தக்கவையல்ல. யஜமானனுக்கு தனநாசம் ஏற்பட்டு அவனுடைய மனையும் பாழாகும்.

4. கழுதை முகங்கொண்ட குதிரையும், முதுகின்மேல் மிருகங்களுக்குண்டாகும் அகலமான கருநிறப் பட்டையுடையதும், தொங்கிய சிரசும், உதடுகளுமிருந்தாலும், கேடு விளைவிக்கக்கூடியவை. யஜமானருடைய குடும்பம் நாசமடையும்.

5. காதின் சமீபத்தில் மூன்று வர்ணங்களுடன், கழுதையின் காதுகள் போலிருந்தால், அரசனிடம் இக்குதிரை யிருப்பினும் அவன் இராச்சியமிழந்து பரதேசம் செல்லக் கூடியவனாவான்.

6. நாக்கு கருநிறமாயிருந்தாலும், கழுதையின் முதுகின் மேலுள்ள கோடுகளைப்போல் முதுகிலிருந்தாலும், மிகக் கேடு விளைவிக்கும். யஜமானன்; சகோதரர், முதலிய உறவினர்களுடைய பகைக்குக் காரணமாவான்.

7. நாக்கிற்கு மேலுள்ள தளமாகிய அண்ணத்தில் பல வர்ணங்கள் கலந்ததாயும், கருநிறங்கொண்டதாயுமிருந்தால் சிறந்த குதிரைகள் அல்ல. குதிரையின் யஜமானர் நிச்சயமாய் இறப்பார். வெள்ளை, மஞ்சள் அல்லது அழுக்கு நிறங் கொண்ட அண்ணமுடைய குதிரைகள் அவ்வளவாகக் கெட்டவையல்ல.

8. நாக்கு, உதடுகள் கருநிறமாக இருந்தால் சகல விதமான தோஷங்களுமுடையது. இவ்வகைக் குதிரைக்கு "காலிகா" என்று பெயர். இவைகளால் நினைக்க முடியாத கேடுகள் ஒருங்கே வந்துகூடும்.

9. குருடு, செவிடு, அங்கஹீனம், அதிகமான உற்ப்பு களுடன் கூடியிருப்பது, இவை விருப்பத்தகாத குதிரை களாகும்.

10. பீஜம், குறி, இவைகள் மிகவும் நீண்டும், பீஜம் சமமாகயிராமலும், ஒரே விதையாகவும் இருந்தால் உசித மற்றவை. இவைகளால் குதிரையின் யஜமானருடைய புத்திர, களத்திரர்களுக்கு அழிவு உண்டாகும்.

## உயர்ந்த குணங்கள்

தோற்றத்தில் குதிரை பர்வதம் போன்று அசையாமலும், நிதானமாகவும் இருத்தல் வேண்டும். தேவை ஏற்படும் காலங்களில் சிங்கத்தைப்போல் தாவி விரைந்து செல்லவேண்டும்.

கண்கள் அழகாயும், தாமரை மலரைப்போல் விரிந்து விசாலமாயும், ஒளியுடன் கூடி கூர்மையான பார்வையுடனும், முகமானது மலர்ந்து, புதுமணப் பெண்ணின் முகம்போலும் தோற்றமளிக்கவேண்டும். வேகத்தில் வாயு வேகத்தையும் மனோவேகத்தையும் ஒத்து இருத்தல் மிகவும் அவசியமானது.

## குதிரைகளின் சுப அசுப நிறங்கள்

அசுவத்தின் நிறங்கள் வெண்ணிறம், கருநிறம், சிவந்த நிறம், பச்சை நிறம், மஞ்சள் நிறமென்று ஐந்து வகையாக அசுவசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வகை நிறங்களில் ஒவ்வொன்றிலும் அனேக பிரிவுகள் உண்டென்றும் கூறப்பட்டுள்ளது.

1. வெண்ணிறங்களில், பாண்டு (yellowish white, மஞ்சள் நிறங் கலந்த வெண்மை), வெள்ளி, முத்து, பால், சந்திரன், சங்கு, வெண்பனி எனப் பலவகை.

2. கருநிறத்தில்—கிருஷ்ண வர்ணம், நீலவர்ணம், சியாம வர்ணம், எனப் பலவகைப் பிரிவுகள் உண்டு.

3. செந்நிறத்தில்—இளங்கதிரவன், செந்தாமரை, இரத்தம், மாணிக்கம், ரோஹிதம் (கலியாண முருங்கைப்பூவின் நிறம்) எனப் பலவகை வர்ணங்களாம்.



4.. பச்சை நிறத்தில், இலைவர்ணம், ஹரிதவர்ணம் என இரண்டு வகையுண்டு.

5. மஞ்சள் வர்ணத்தில் பீதம், கபிலம், ஹரித்ரா, கௌரா எனப் பல உட்பிரிவுகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு சொல்லப்பட்ட வர்ணங்களில் முக்கியமான சில வர்ணக்குதிரைகள் விரும்பத்தக்கவை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1. வெண்ணிறக் குதிரைகளைப் பொதுவாக, நீளா என்பர். அவைகள் சுத்த நீளா, துதியா நீளா (பால் வெண்மை), சன்ஜாப் நீளா (வஸ்திர வர்ணம்), ஹரியாநீளா (பசுமை கலந்த வெண்மை), சுர்காநீளா (வெளிர் சிவப்புக்கலந்த வெண்மை), மக்கஸ்நீளா (புகைநிறம்கலந்த வெண்மை), குல்ஹாரநீளா (உருக்கிய சர்க்கரை வர்ணம்), பிலோரிநீளா (ஸ்படிக வர்ணம்), பாகலிநீளா (வெண்மேகவர்ணம் கலந்த வெண்மை), கஹாகிநீளா (சாம்பல் நிறங்கலந்த வெண்மை) அம்பரிநீளா (ஆகாச நிறங்கலந்த வெண்மை) ஹிர்மஜிநீளா (வெண்மணல் நிறங்கலந்த வெண்மை), நுக்கராநீளா, எனப் பலவகைப்படும்.

2. செந்நிறக் குதிரைகளைப் பொதுவாக 'போர்' என்பர். அவை மாணிக்கபோர், கிர்மிர்போர் (Cochineal red) சித்ர போர், கர்ப்பூர்போர் (அழுக்கு வெண்மை கலந்த சிவப்பு), எனப் பலவகைப்படும்.

3, கருநிறத்திலுள்ள குதிரைகளுக்குப் பொதுவாக "சாரங்கம்" என்று பெயர். அவைகளில் முஸ்கி (சுத்தக் கறுப்பு), குமேயித் (Bay), தெளியாகுமேயித (Chestnut), போஹியாகுமேயித (Black Moho Flower) மாணிக்ககுமேயித (மாணிக்க நிறங்கலந்த கருப்பு), என்று பலவகைக் கருநிறக் குதிரைகள் கூறப்பட்டுள்ளன.

4. மஞ்சள் நிறக்குதிரைகளைப் பொதுவாக "ஜர்தா" என்பர். சுவர்ண ஜர்தா, வெள்ளிநிறங்கலந்த ஜர்தா, சந்தலி ஜர்தா (சிகப்பு சந்தனக்கட்டை வர்ணம் கலந்த ஜர்தா), (சம்மன்வெளிரான மஞ்சள்) குல்லதுரா ஜர்தா (Gold mohar

flower colour) வைடூரிய ஜர்தா, கபிலபிங்கள (Tawney) எனப் பலவகைகளாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

5. சுதாபச்சை நிறத்தில் 7 வகைக் குதிரைகள் சூரிய பகவானுக்கு வாகனமாக விளங்குகின்றன. உலகத்தில் இந் நிறத்தை அடிப்படையாகக்கொண்ட பலவர்ணங்கள் கலந்த குதிரைகள் காணப்படுகின்றனவே தவிர சுதா பச்சைக் குதிரைகள் கிடையாது.

ஐவகை நிறங்களை அடிப்படையாகக்கொண்ட பல்லாயிர வகைக் குதிரைகள் இருப்பினும் சில வர்ணங்கள்தான் சாஸ்திரங்களில் விரும்பத்தக்க வர்ணங்களாக எடுக்கப் பட்டுள்ளன. விரும்பக்கூடியதும் விரும்பத்தகாதது மானவைகளின் பலாபலன்களும் விரிவாகக் குறிக்கப்பட்டிருக் கின்றன.

## முக்கியமாக விரும்பத்தக்க குதிரைகள்

பல்லாயிர வகை நிறங்களுடைய குதிரைகளிருப்பினும் முக்கியமாக யாவரும் ஏற்கத் தகுந்தவை சில குதிரைகளே. அவையாவன:—

1. வெண்ணிறக் குதிரைகளில் முத்து, சந்திரன், பால், பனி, வெள்ளி, சங்கு, ஸ்படிகம் முதலிய நிறங்கொண்ட குதிரைகள் உத்தமமாம்.

2 கருமை நிறக்குதிரைகளில் கண்மை, குயில், நீருண்ட மேகம், கருவண்டு, இருள் முதலிய வர்ணங்கொண்டவை உத்தமம்.

3. செந்நிறக்குதிரைகளில் அரக்கு, மாதுளைப்புஷ்பம், இளஞ்சூரியன், மாணிக்கம், இரத்தம் இவைகள்போன்றவை உத்தமம்.

4. மஞ்சள் நிறக்குதிரைகளில் கோரோசனை, பொன், தேன், சந்தனம் இவை போன்றவை உத்தமமாம்.



## மிகவும் விரும்பத்தகாத நிறமுடைய குதிரைகள்

விரும்பக்கூடாத நாற்பது வகையில் முக்கியமாக கவனிக்க வேண்டிய "அக்ராஹிய" வர்ணமுடைய குதிரைகளாவன:—

கழுதையின்நிறம், காட்டுமுயலின்நிறம், நரியின்நிறம், பெருச்சாளியின் நிறம், காகத்தின் கழுத்திலுள்ள சாம்பல் நிறம், புகையின்நிறம், ஆகாயத்தின் நிறம், ஆந்தையின்நிறம் ஓநாயின் நிறம், பூசினிக்காயின் நிறம்.

வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள் இந்நான்கு நிறங் களில் ஒரே விதமான நிறங்கொண்ட குதிரைகள் மிகவும் சிரேஷ்டமானவை. ஒவ்வொரு தனி நிறங்களிலும் "பஞ்ச கல்யாணி", "அஷ்டகல்யாணி" என்று சேர்த்துவாய்ந்ததாய் மார்பிலும், நான்கு கால்களிலும், முழங்கால்வரையிலும், குஞ்சத்திலும், முகத்திலும், வெண்ணிறங்கொண்ட குதிரை கள் இராஜவாகனமென்றும், அஷ்ட ஐசுவரியங்களையும் கொடுக்ககூடியவையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சிவப்பு, கறுப்பு, மஞ்சள் வெண்ணிறங்கொண்ட குதிரை களில் பஞ்சகல்யாணி என்ற குதிரைகள் மிகவும் விரும்பத் தக்கவை. அவ்வாறு கிடைக்கும் குதிரைகள் உலகத்தில் வெகு சொற்ப எண்ணிக்கை யுடையன.

கறுப்பும் மஞ்சளும் கலந்த குதிரைகளுக்கு "கபீச" என்றும், வெண்மையும், சிவப்பும் கலந்த குதிரைகளுக்கு "காந்தி" அல்லது "பாடலம்" என்றும்; கருப்பும் சிவப்பும் சேர்ந்த குதிரைகளுக்கு "தூமர்" அல்லது "தூமரல" என் றும் பெயர். மஞ்சளும் சிவப்பும் சேர்ந்த குதிரைகளுக்கு "அருண" அல்லது "பால சூரியன்" என்று பெயர். தூய வெண்மையாயிருந்து நிர்மலமாகவும் கால்கள், குளம்பு, வால், பிடரி, காதின் உட்புறம், கருநிறங்கொண்டதாயும், முகவாய்க் கட்டை சிறியதாயும், அகன்ற நாசியும், பரந்தமேனியும் பல முள்ள கால்களும்கொண்ட குதிரையை "சியாமகர்ண" என் றும் கூறுவர். அப்பேர்ப்பட்ட குதிரைக்குச் சமமானவை கிடைத்தலரிது. அவைகள் போரில்பின்வாங்காதென உடை யோனைப் பெரும் பாக்கியவானும் எல்லாக் காரியங்களிலும்

வெற்றி பெறக்கூடியவனுகவும் சக்ராதிபதியாகவும் செய்யவல்லது.

தூய்மையான வெண்ணிறம் தேகமுழுவதும் வியாபித்திருக்கிற "நகோரா" என்று சொல்லப்படும் வர்ணமுள்ள குதிரைக்கு "சூரிய காந்தம்" என்று பெயர். இது சகல வேலைகளுக்கும் யோக்கியதை உடையது. தன் யஜமானனுக்கு என்றும் செல்வப் பெருக்கும், வெற்றியும் அளிக்கும்.

பொதுவாக எல்லா விதமான தூய வெண்ணிறக் குதிரைகளுக்கும் "பிரஷதம்," என்று பெயர். அவை யாவராலும் விரும்பப்படும். எல்லா சுகத்தையும் கொடுக்கவல்லவை.

வெண்ணிறம் அல்லது கருமை நிறம் வயிற்றிலிருந்து மார்புவரை யிருந்தால் நலமுடைத்து. வெண்ணிறம் மார்பிலிருந்தால் ஆனந்தம் கொடுக்கக்கூடியது. வெண்மையும், கரு நிறமும் சேர்ந்த குதிரை செல்வத்தைக் கொடுக்கவல்லது. முகம் மட்டிலும் வெண்னிறமாயிருந்தால் வெற்றிதர வல்லது. முதுகு வெண்ணிறமாயிருந்தால் லட்சணமானது. இடது பக்கத்தில் வெண்ணிறமாயிருந்தால் அழகான மனைவியையும், வலது பக்கத்திலிருந்தால் தானியங்களையும் கொடுக்கும். வெண்ணிற வால் குஞ்சமிருந்தால் வெற்றியுடையது.

குதிரையின் பின்புறம் இளஞ்சூரியனின் வர்ணமாயும், இடது பாகம் சந்திரனுடைய வெண்மையாயுமிருக்கும் குதிரைக்கு "திவாவைஜயீகம்" அல்லது பகல் காலங்களில் உபயோகப்படுத்தச் சிறந்த குதிரை என்று பெயர். சந்திரனுடைய வெண்மை நிறம் பின் புறத்திலும், இளஞ் சூரியன் நிறம் இடது பக்கத்திலும் இருந்தால் "நிசாவை ஜயீகம்" அல்லது இரவில் ஏறிச் செல்வதற்குச் சிறந்த குதிரை என்று பெயர்.

உடம்பெல்லாம் நெய், தேன், பொன் முதலிய நிறமும் பிடரிமயிர், வால் குஞ்சம், இவைகள் கருநிறமாகவுமிருந்தால் அக்குதிரைக்கு "கனக வட்டம்" என்றும் தொப்புள் இடத்தில் பொற்பட்டம், வெள்ளிப்பட்டம் போல் நிறமிருந்தால் அக்குதிரைக்கு "பட்டவர்த்தனம்" என்றும் பெயர்.



புரோதத்திலிருந்து (மூக்குத் துவாரங்களிலிருந்து) நெற்றிவரை வளர்பிறையைப் போலிருந்தால் "புரோத புண்டரீகம்" என்று பெயர். இந்நிறம் உள் பல் வரையில் அல்லது தலை, அல்லது தண்டை வரையில் இருந்தால் சிறந்த குதிரை எனப்படும்.

## தோஷமுள்ள குதிரைகள்

நெற்றிபெருத்து, முகம், கழுத்து, குறங்கெலும்பு, இவைகள் பெருத்து, மனோவேகமும், வெண்ணிறமும், கருநிறமும் கொண்ட குதிரைக்குக் "கொழிகை" என்று பெயர்.

மார்பு தளர்ந்து உடம்பெல்லாம் வேறொரு நிறமுடைய சட்டை போர்த்தது போல் இருப்பதற்கு "அஞ்சுகம்" என்று பெயர். நாக்கு வெளுத்தும், பெருத்தும், வீங்கியும், கண், வாய், விரை இவ்விடங்களில் கருநிறத்துடன் சங்கு நிறம் சேர்ந்திருந்தால், தோஷமுள்ள குதிரை என்றறிக.

கோசமும், மார்பும் நீண்டிருந்தால் "கத்திரி" என்று பெயர். அகாலத்தில் பல்விழுந்து, தட்டுமாறிப் பல் முளைத்து, தாமச புத்தியுடையதாய், வாய் நீண்டு, உடல் வேறு நிறத்துடன் கால் கருத்தும், வெளுத்தும் இருந்தால் "கால் வளவன்" என்று பெயர்.

உடம்பெல்லாம் ஒரே நிறமாய், முகம் கறுத்து, உடல், கால்கள், மார்பு நடுமுதுகு, கண், முதலிய இடங்களிலும் கறுப்பு இறங்கி ஒரு பக்கம் சாய்ந்து ஏறத்தாழ இருந்தால் அக்குதிரை ஆகாது.

வால், குஞ்சம், உச்சந்தலை, முதுகு இவைகள் அன்னுசிப்பூ வர்ணமுடையதாயிருந்தால் "கிரிவாணி" என்றும், இம் வயிறும் இந்த நிறமானல் பெரிய ஆபத்துகள் ஏற்படுத்தக் கூடியவை என்றும் சொல்லப்படுகிறது.

உதடு, நாக்கு, அண்ணம், இவைகள் கருநிறமாயிருந்தாலும், குருடு, செவிடு முதலிய குதிரைகளும் கெட்டவைகள். இவ்வகை அசுவங்களுக்கு "காளிகை" என்றுபெயர்.

## 3. அத்தியாயம்

# குதிரைகளின் குறிகளும் சுழிகளும் அவைகளின் அமைப்பும்

### சிறந்த சுழிகளுடைய குதிரைகள்

இருபது சுப சின்னங்களுடைய சுழிகள் உண்டு. அவைகள் மாடி (வீடு), தாமரை, சக்கரம், தோரணம், வில், கத்தி, சங்கு, வேதி (யாகமேடை), ஸ்வஸ்திகம், மீன், கலசம், வில்வமரம், பாதுகை, மாலைச்சூரியன், சரபம், வஜ்ராயுதம், கலப்பை, கதை, சந்திரன், ஏணிமரம், வைடூரியத்தின்வடிவு, அங்குசம், சாமரம், கொடி, ரதம், அரச இலை இவைகள் போன்ற சுப சின்னங்கள்.

இவ்விதச் சுழிகள் குதிரைகளின் தேகத்தின் பல உறுப்புகளில் உண்டு. எக்குதிரைக்குப் பத்து நல்ல சுழிகள் ஒருங்கே கூடியிருக்கின்றனவோ. அக்குதிரை எல்லாவற்றையும்விட மிகச்சிறந்தது. மார்பில் இரண்டும், உச்சந்தலையில் இரண்டும், காதுகளில் இரண்டும், காதுகளினடியில் இரண்டும், நெற்றியில் ஒன்றும், முக இறுதியில் ஒன்றும், இருந்தால் மிகவும் நல்லது.

முக இறுதியிலுள்ள சுழிக்கு தெய்வம் வாயு, நெற்றிச் சுழிக்கு அக்கினி, மார்பின் இருசுழிகளுக்கு அசுவினி குமாரர்கள்; உச்சந்தலைச் சுழிகளிரண்டிற்கு சந்திரன், சூரியன்; இரு காதுகளிலுள்ள சுழிகளுக்கு கார்த்திகேயன், விநயகர்; இரு காதுகளினடியிலுள்ள சுழிகளுக்கு சிவன், விஷ்ணு; இவ்வாறு, பத்து சுழிகளுக்கும் பத்து தெய்வங்கள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பத்து சுழிகளுடைய குதிரை தெய்வீகமான தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வாயுவின் சுழியில்லாவிடில் மரணமும், நெற்றிச் சுழியில்லாவிடில் துக்கமும், உச்சந்தலைச் சுழிகளில்லாவிடில் மரணமும், மார்புச் சுழியில்லாவிடில் சந்ததி நஷ்டமும், காதுகளின் சுழிகளில்லாவிடில் மனைவியின் மரணமும், வயிற்றுச் சுழியில்லாவிடில் சூலைநோயும், காதுகளடியிலுள்ள சுழிகளில்லாவிடில் தரித்திரமும் உண்டாகும்.



(1) முகவாய்க் கட்டையின் இருபுறமும் இருசுழிகள் கிளிஞ்சல் போன்றதாக இருந்தால் எல்லா சௌபாக்கியங்களும் அளிக்கும்.

(2) நெற்றியில் இருசுழிகள் ஒன்றன் மேல் ஒன்ருக இருந்தால் யஜமானன் எல்லாவிதமான செல்வமுமுடையவனாய் சுகமுடன் வாழ்வான்.

(3) மூன்று சுழிகள் நெற்றியில் முக்கோண வடிவமாய் கொடி போல் விளங்கினுல் வெற்றி, தனதான்யங்கள், லாபம், முதலியவைகளைக் கொடுக்கும்.

(4) கண்டத்தில் ஒரு சுழி யிருந்தால் அதற்கு "தெய்வமணி," "ஐசுவர்யம்," "கண்டாபரண" மென்று பெயர். இச்சுழியிருந்தால் எல்லாத் தோஷங்களும் பரிகாரமாகி யஜமானனுக்குக் கீர்த்தியும், வெற்றியும் உண்டாகும்.

(5) நெற்றியில் மூன்றுசுழிகள் வலமாகச் சுழித்து அடுப்புக்கட்டிபோல் அமைந்திருந்தால் அதற்கு "த்ரேதாக்னி" என்றபெயர். இவை மிகவும் சிறந்த சுழிகளெனப்படும்.

(6) நெற்றியில் நான்கு சுழிகள் சதுரம்போல அமைந்திருந்தால் ராஜப் பதவியை அளிக்கவல்லது.

(7) உச்சந்தலையில் மல்லிகை மொக்குப்போல் சுழியிருந்தால் மிகுந்த புத்தியுடைய குதிரையென்றும். வெற்றிதரக்கூடியது என்றும் அறியவும்.

(8) மார்பில் நான்கு சுழிகள் இருந்தால் இராஜபோகத்தையும், வெற்றியையும் உண்டாக்கும்.

(9) மார்பில் மூன்றுசுழிகள் கிளிஞ்சல் போன்று இருந்தால் யஜமானருக்கு வெற்றியளித்து சுகமாகத் தன்னிருப்பிடத்திற்கு அழைத்து வரும் சிறந்த தன்மையுடையது.

(10) சுழிகள் இருபுயங்களிலுமிருந்தால் அனேக அலங்காரங்களைத் தரவல்லது.

(11) சுழிகள் காதுகளிருபுறமுமிருந்தால் பாக்கியத்தையும், புத்திர சந்தானத்தையும் தரும்.

(12) மார்பில் 5 சுழிகள் (நான்கு மூலைகளில் நான்கும், நடுவில் ஒன்றும்) வலஞ்சுழியாக இருந்தால் "ஸ்ரீவத்ஸவம்" என்று பெயர். இது மிகச் சிறந்த சுழியாகக் கருதப்படுகிறது.

(13) நெற்றியில் நான்கு சுழிகள் அல்லது இரண்டு சுழிகள் தாமரைமலர் போலிருந்தால் இராஜவாகனமாகும். இதுவும் சிறந்த சுழி எனப்படும்.

(14) குடுமியடியில் ஒன்று, செவியில் இரண்டு, தனுவேராகிய பறவைச்சுழி மூன்று, கழுத்திலொன்று, இவ்வேழு சுழிகளும் வலமாகச் சுழித்திருந்தால் நல்ல சுழிகள் எனப்படும்.

(15) முகத்தில், கண்ணின் கடையில், கடைவாயில், காதுகளடியில், புயத்தில், பிடரிமயிருக்கு அந்தமாகிய மட்டித்தலத்தில், சுழிகள் வலஞ்சுழிகளாக இருந்தால் உத்தமமான சுழிகள்.

(16) நெற்றியின்மேல் ஒன்றன்மேல் ஒன்றாய் மூன்று சுழிகள் உண்டானால் வேதச்சுழி என்றும் அக்குதிரைக்கு "வேதப்பரி" என்றும் பெயர்.

(17) கடைவாயில் ஒருபுறத்தில் இரண்டு சுழிகளிலிருந்தால் நன்று.

(18) இவையின்றி நெற்றியில் இருசுழிகள் "8" இவ்வாறு இணைக்கப்பட்டு வலம்புரியாக விருந்தால் மிகவும் நன்று.

(19) நெற்றியில் மூன்று சுழிகள் முக்கூட்டாக இணைக்கபட்டுப் சுழித்திருந்தால் சுபம், வெற்றி, சுகம், இவைகளைக் கொடுக்கும்.

(20) நெற்றியில் மூன்று ரேகை சடைபோல் உண்டாகி இதனுடன் தெய்வமணிச் சுழியுமிருந்தால் எல்லாவகை அவகுணங்களும் தீரும்.

(21) அண்டத்துக்கும், கோசத்துக்கும் நடுவிலும், புறங்களிலும் 'கைத்தாளப்பலகை' என்னும் கனுக்காலிலும், முதுகிலும், மல்லிகைப்பூப்போன்ற நிறமும் வடிவுமுடைய சுழிகளுண்டாகில் அக்குதிரையுடையவன் பெரும் புகழுடையவனாவான்.



(22) காதுகளின் அடியில் இரண்டு சுழிகளிருந்தால் யஜமானன் எல்லாவித சுகமும் அடைந்து யாவராலும் கௌரவிக்கப்படுவான்.

## தீய சுழிகளுடைய குதிரைகள்

விரும்பத்தகாத தீய சுழிகள் 76 வகையாகும். இவைகளில் மிகவும் அசுபமான சில சுழிகளாவன:—

(1) தலையில் சுழியில்லாத குதிரைக்கு 'முண்டாகி' என்று பெயர்.

(2) அண்டத்திலும், கோசத்தினருகிலும் இருந்தால் "நாட்டளம்" என்றும்; "விருஷா வர்த்தம்" என்றும் பெயர்.

(3) நடுமார்பிலிருந்தால் "அதாவர்தம்" என்றும் "மாராணி" என்றும் பெயர்.

(4) கக்கத்தில் (அக்குள்) சுழியிருந்தால் "காகாவர்த்தம்," என்று பெயர்.

(5) நான்கு கால்களிலுமிருந்தால் "கீலா வர்த்தம்" என்று பெயர்.

இவ்வைந்து வகைசுழிகள் மிகவும் கெட்டவை. குதிரைகளை விற்போரும் அதைத்தீண்டார்கள்.

(6) உச்சியின் பக்கங்களிலுள்ள சுழிகளுக்கு "சிங்கி" என்றும் பெயர்.

(7) முதுகில் முன்பின் இருக்கும் சுழிகளுக்கு "யாமம்" என்று பெயர்.

(8) உச்சந் தலையில் கொம்பு போன்ற சுழிகளிருந்தால் 'சிருங்கி' என்று பெயர்.

(9) கோசத்தின் மேலிருக்கிற சுழிக்கு "துக்கச்சுழி" என்று பெயர். பெருந்துக்கத்தை விளைவிக்கக் கூடியது

(10) முழங்கால், புறங்கால் இவைகளிலுள்ள சுழிகளுக்கு "படைச்சுழி" அல்லது "விலங்குச்சுழி" என்று பெயர். இச்சுழிகளுடைய குதிரையின் யஜமானர் தோல்வியும், சிறைவாசமும் பெறுவான். இவை மிகவும் கெட்டசுழிகள் எனப்படும்.

(11) வயிற்றின் பக்கங்களிலுள்ள சுழிகளைத்தவிர ஒரு பக்கத்திலும், மயிரிருக்கும் புறத்திலும், சுழியுண்டானால் இவைகளை "லிங்காவர்த்தம்" என்றும் கெட்டசுழிகள் என்றும் சொல்வார்கள்.

(12) காதுகளின் மத்தியிலும், கண்களின் மத்தியிலும் சுழிகளிருந்தால் குதிரையுடைய வம்ச பரம்பரையும், தாய் வம்சமும் அழிந்துவிடும்.

(13) கண்களின் பக்கத்திலிருக்கும் சுழி மரணமுண்டாக்கும்.

(14) சுழி, கண்ணிமையிலிருந்தால் பயத்தையும், துக்கத்தையும் அளிக்கும்.

(15) முகவாய்க் கட்டையிலிருக்கும் சுழி அரசாங்க தண்டனையை அளிக்க வல்லது.

(16) சுழி புயங்களிலிருந்தால் பகைவனால் சிறைப்படும்படி ஏற்படும்.

(17) துடைகளுன் பக்கத்திலிருக்கும்சுழி மரணமுண்டாக்கும்.

(18) மூக்குத் துவாரத்தின்மேல் சுழியிருந்தால் சர்வகுலமும் நாசமடையும்.

(19) மூக்கின்மேல் அல்லது இடையில் சுழியிருந்தால் மின்னல் பாய்ந்து மரணம் அடையும்படி நேரும்.

(20) கண்ணினடியில் சுழி இருந்தால் அபாயம் விளையும்.



(21) கருதா (கழுத்தும், முதுகும் சேரும் இடம்) மேலிருந்தால் மிகதோஷமான சுழிகள் என்ப்படும். பரம ஏழையாவான்.

(22) சுழி, ஆசனத்திலிருந்தால் சோகம், மரணமுண்டாகும்.

(23) சுழி, முதுகின் மேலிருந்தால் எல்லா செல்வங்களும் இழந்து மரணமிலே ஏற்படும்.

(24) சுழி, இரு காதுகளினிடையிலிருந்தால் இக்குதிரையுடையோன் மின்னல் பாய்ந்தும், தன் பகைவனாலும் காதுகள் அறுக்கப்படுவான்.

(25) கழுத்தில் இரண்டு அல்லது ஒன்று, மென்னிக்கு சமீபமாக இருந்தால் இக்குதிரையுடையோன் பிச்சையெடுத்து வீடுவீடாய் அலைவான்; யாவராலும் அவமானப்படுவான்: துன்புறுத்தப்பட்டு இறப்பான். இதற்கு "மென்னிப்பிடிச்சுழி" என்றும் "கண்டாவர்த்தம்" என்றும் பெயர்.

(26) உச்சந்தலையில் சுழியில்லாக் குதிரைக்கு "மஸ்தக குன்யவாரு" என்று பெயர். இக்குதிரை ஒன்றுக்கும் பிரயோசனமாகாது. மகாதோஷமுடைய குதிரை எனக் கருதப்படுகிறது.

(27) கணுக்கால், குளம்பின் ஸ்தலங்களில் சுழியிருந்தால் குதிரை உடையோனைக் கேவலமான கீழ்த்தலத்திற்கு அனுப்பும். இவை மிகுந்த தோஷமுடைய சுழிகள் என்பார்கள்.

(28) புருவங்களின் மேலிருந்தால் துக்கம் ஏற்படும்.

(29) பூரான்போன்ற சுழிகள் வால், முதுகு, நெற்றி, முகம், கழுத்து இவைகளிலிருந்தால் மிகக்கெட்ட சுழிகள் என்றும், குதிரையுடையோனுடைய குலம் நாசமடையும் என்றும் கூறப்படுகிறது.

## குதிரைகளின் குரல், சப்தம், இவைகளின் லட்சணம்

இடி போன்ற சப்தம், புலியின் குரல், சிங்கத்தின் கர்ஜனை, கடலின் ஒலி, வெடிச் சத்தம், சங்கநாதம் சோலைக் குயிலின் சப்தம், இவைகள்போன்ற கனைப்புடைய குதிரைகள் மிகவும் சிறந்தவை. வெற்றியளிக்கக் கூடியவை.

ஆண் குரங்கு, யாளி, மாடு, மயில், அன்னம், மீன், ஆடு, வேதம் ஓதும் மறையோர்களின் குரல் இவைகளின் சத்தமுடைய குதிரைகள் நல்ல குதிரைகளாகும்.

குரவை, ஆந்தை, காகம், கழுதை, பேய், பூதம், பிசாசு பிடித்தவர்கள் இவைகளின் சப்தமுடைய குதிரைகள் ஆகாத குதிரைகள் எனப்படும்.

---



அத்தியாயம் 4.

# குதிரைகளுக்கு வரும் நோய் மருந்து முதலியன

## அண்டசாலை நோய்

குணம்:—

1. ஒருவிதை மேலும் மற்றொன்று கீழுமாகப் பருத்துத் தொங்கும். வீக்கமிருக்கும் அதை முகக்கும். காலைத்தூக்கி நிற்கும்.

மருந்து:—

மிளகு, வெள்வெங்காயம் (பூண்டு), சுக்கு, இவைகளை ஆமணக்கெண்ணெயில் பதமாய்க்காச்சி விரை ஊரும்படி தடவினால் குணமாகும்.

2. கையாந்தகரை, பெருங்காயம், இந்துப்பு, வெள்வெங்காயம், சுக்கு, வசம்பு இவைகளை ஆமணக்கெண்ணெயில் கூட்டிக் கொடுக்கவும்.

3. ஆட்டுப்புழுக்கை, கள்ளிச்சிறுய், வேப்பம்சிறுய் கருவேலம்பட்டை இவைகளைக் கூட்டிவைத்து நெருப்பிட்டுப் புகையை அண்டத்தில் காட்டவும்.

4. கழற்சிவேர், இலை, பருப்பு, முருங்கையிலை, வெங்காயம், வெள்ளாட்டுப் புழுக்கை இவைகளை வெள்ளாட்டுப் பாலில் குழப்பி கவளமிடவும்.

5. ஆமணக்கெண்ணெயை அண்டத்திலும், கீழ் வயற்றிலும் தடவி, ஆமணக்கிலையை நெருப்பில் வாட்டி வயிற்றில் வைத்துச் கட்டிவிடவும்.

## 2. அண்டநூலை

குணம் ;—

விரை வீங்கும், புல் தின்னாது தண்ணீர் குடியாது, லத்தி போடாது.

மருந்து :—

எள்ளுப் புண்ணாக்கை இடித்து வேலிப்பருத்தியிலையையும், வெள் வெங்காயத்தையும் கூட்டி உள்ளுக்குப் புகட்டவும்

## 3. அரணை கடிக்கு

மருந்து :—

(1) சோனைவாயிலையும், மஞ்சளும் நெய்யில் அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். உடலுக்கும் இடவும்.

(2) பேய்க்குமட்டிக்காயும், இலையும், எலுமிச்சையிலை, ஊமத்தையிலை, பிரண்டை வேர், தும்பையிலை செம்பொன்னெருஞ்சி வேர், செருப்படியிலை இவைகளை நன்றாக இடித்துத் துவளையிடவும்.

(3) முருங்கையிலை, வசம்பு. ஒரு உள்ளிப்பூண்டு, இந்துப்பு இவை எல்லாவற்றையும் தட்டி நசியமிடவும்.

## 4. ஆக விதநூலை

குணம் :—

மூறி நிற்கும், நிமிர்ந்து நிற்கும.

மருந்து : —

பிரண்டை வேரைத் துவைத்துச் சாறுபிழிந்து கொண்டு புளியிலைச்சாறு குருணியில் கலந்து கொடுக்கத் தீரும்.

## 5. ஆணைச்நூலை

மருந்து :—

குதிரை மூத்திரம், வெங்காயம், முன்னைக்கு, உகா வேர், உப்பிலிக்கொடி இவைகளைக்கூட்டி இடித்து ஒரு கவளம் கொடுக்கவும். இரசத்திற்கு கொல்லன் கோவை கிழங்கு,



கொடிவேலி வேர், வெங்காயம், சுக்கு, வெள் வெங்காயம், வசம்பு, ஓமம். கடுகு. மிளகு. உப்பு புங்கம்பட்டை., மாவலிங்கப்பட்டை குமிஞ்சா வேர், புனல் தண்டு, முருங்கை வேர், வெள்ளைக்கிழங்கு பொன்முசுட்டை வேர், கரைகொட்டி வேர், உகா வேர், ஆதளைக்கிழங்கு இவைகளை இரண்டு சேர் நல்லெண்ணெயில் கூட்டி வேகவைத்துக், கவளமிடவும்.

## 6. ஆணைமுடத்துக்கு

மருந்து :—

நீர்வள்ளிக்கிழங்கு துத்தம், துரிசு முருங்கைப் பட்டை, இவைகளை இடித்துக் கட்டவும்.

பொருக்கு ஆடாதொடையிலை. கள்ளியிலை, முடக்கத்தான், பெருதும்பை, துத்தியிலையும் பட்டையும், கொளுஞ்சியிலை நொச்சியிலை, சுக்கு, வசம்பு. வெள் வெங்காயம், ஓமம். உகாயிலை, இவைகளை எல்லாம் கூட்டி இடித்து அரைப்படி வேப்பெண்ணெயில் கவளமிடவும்.

இரசத்துக்கு:—

(1) புங்கம்பட்டை மாவலிங்கப்பட்டை இவைகளையிடித்து தயிரில் கவளமிடவும்.

(2) ஆலங்கொழுந்தும் விழுதும், ஒருபிடி இலந்தைக் கொழுந்தும் கூட்டியிடித்து வெண்ணெயில் கலந்து இடவும்.

## 7. 'இசுவு' கிடேசென்றுகல்நு வயிறு வீங்கி, மலசலம் கட்டப்பட்டு தீனியெடுக்காது படுத்து எழுந் திருக்கும்.

மருந்து :—

மாவலிங்கப்பட்டை, ஓமம், வகைக்கு விராகனிடை 9, இந்துப்பு, முள்ளி, வகைக்கு விராகனிடை 30, இவைகளைப் பொடி செய்து எலுமிச்சங்காய் பிரமாணம் வெல்லத்தில் உருண்டை செய்து மூன்று நாளைக்கு இருவேளை கொடுக்கத் தீரும்.

## 8. இலத்தி போடாது, நீர்விடாது வயிற்றில் வலி காணும்

மருந்து:—

(1) சுக்கு, மிளகு, பூண்டு வகைக்கு விராகனிடை 9, எடுத்துப் பொடிசெய்து வண்ணான் வெள்ளாவிவைத்த உவர்த் தண்ணீரில் ஒரு படி தண்ணீருள்ளுக்குக் கொடுக்கவும் குணமாகும்.

(2) பிரண்டையை பிடித்து ஒரு விளாங்காய் பிரமாணம் எடுத்துக்கொண்டு அதில் கால் ஆழாக்கு உப்பு சேர்த்துக் கலந்து நேக அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

(3) தும்பையிலையைப் பிடுங்கிவந்து அரைக்கால் ஆழாக்கு உப்புப் போட்டு வைத்து தேங்காய்ப் பிரமாணங் கொடுக்க குணமாகும்.

(4) அவரையிலையை இடித்து ஆழாக்கு உப்புச்சேர்த்துத் தேங்காயளவு கொடுத்தால் தீரும்.

## 9. உலந்திச் சூலை

தண்டைக் கிளப்பி நிற்கும், எழுந்திருக்கும், சாயும், ஒன்றும் செய்யாது கிடக்கும்.

மருந்து:—

கருப்புட்டியுடன் எருக்கிலைப் பழுப்பு இடித்து ஒரு தேங்காயளவு கொடுக்கவும்.

## 10. ஓச்சாலை

குணம்:—

எறிந்துவிழும், மரம்போல் அசையாது நிற்கும்.

மருந்து :—

நெய்க் கொட்டானிலை, குன்றிவேரும் இலையும், எருக்கம் பால் ½ படி, கள்ளிப்பால் ½ படி, இந்துப்பு, பெருங்காயம், துத்தம், துருசு, வெள்வெங்காயம், கஸ்தூரி மஞ்சள், சுக்கு, எலுமிச்சையிலை, இவைகளைச் சமனாய்க் கூட்டியிடித்து ஆமணக்கெண்ணெயில் கவளமிடவும், தீரும்.



## 11. ஊஞ்சொக்க மென்ற நோய்

தண்டை உள்ளே நெறித்துப் பின் குத்திப்பாயும்.

மருந்து :—

(1) பொரித்த வெங்காரம் (பொரிக்காரம்) பலம் ஒன்று, கிருமிசத்துரு (வாயுவிடங்கம்) பலம் 1, கடுக்காய் பலம் 1, அவுரியிலை, இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து இடித்துக் கழுவு நீரில் கவளமிடவும்.

(2) பால், தயிர், பனங்கற்கண்டு, மாதுளம்பழச்சாறு இவைகளை ஒன்றாய்க்கூட்டிக் கவளமிடவும்.

(3) கடுகுரோகிணி ½ பலம் அரைத்து நெய்யில் கவளமிடவும்.

## 12. கத்தசூலை நோய்

குணம் :—

சத்தம் போடாது. முக்கி முனகிக்கொண்டு அகலமாய்க் காலை வைத்துக்கொண்டு நிற்கும்.

மருந்து :—

(1) எலிப்புழுக்கை பிடி 1, வெத்திலைக்காம்பு 10, மிளகு 4, அரப்புக்கட்டி பாக்களவு. இவைகளை வெல்லத்துடன் சேர்த்து அரைத்துத் துணியில்தடவி கோசத்தின் முகத்தில் ஒத்தவும்.

(2) கீழ் வயற்றில், பக்கங்களில் வெண்ணெயைத் தடவி வெண்ணெயையும் காய்ச்சி ஒத்தடம் கொடுக்கவும்.

(3) பெரும் பூசணிக்காயை, சிறிய துண்டங்களாக அரிந்து வெள்வெங்காயத்தைச் சிறுக அரிந்து உள்ளே கொடுக்கத் தீரும்.

## 13. கர்ப்பி நோய்

குணம் :—

உள் நாக்கு வெந்தது போலிருக்கும். நான்கு கால்களை மாறிமாறிவைக்கும். சாளிக்கும். சாயும்.

மருந்து :—

கரத்தொட்டி இலை, உசிலம் இலை, பருத்தியிலை, துத்தியிலை, அத்தியிலை, கருப்புட்டி இவைகளை இடித்துத் தயிரில் கொடுக்கவும்.

## 14. குமரி நோய்

குணம் :—

முதுகு பாரிசங் கொஞ்சமிழுத்தாற்போல் நடக்கும்.

மருந்து :—

மஞ்சள், மகிஷாக்ஷிக்குங்கிலியம், வகைக்கு சேர் 3, வெந்தியம் சேர் 1½, ஆளிவிரை, அதிமதுரம், பூண்டு வகைக்கு பலம் 6, வெங்காரம், காயம் வகைக்கு தோலா 3, கத்தரிக்காய், பனவெல்லம் வகைக்கு பலம் 1½, நெய் சேர் 1½, இவைகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு ஒரு உடும்பைப் பிடித்து வயிற்றுக் கல் மஷங்களைப்போக்கி நெய்யில் அரை வேகலாய்ப் பொரித்துக்கொண்டு மற்ற சாமான்களை அதில் சேர்த்து நன்ருய்ப் பிசைந்து நாலுதுட்டு எடை உருண்டைசெய்து 20 நாளைக்கு இரு வேளை கொடுக்கத் தீரும்.

## 15. கண்ணில் புழுக்கடிக்கு

மருந்து :—

சீந்திலிலை, பலா இலை, துத்தம், துரிசு, உப்பு, கடல்நுரை இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துக் கண்ணிலிடவும்.

## 16. கணுக்கால், முழங்காலில் வீக்கம்

குணம் :—

நொண்டும்.

மருந்து :—

(1) கடுகு, கடுகுரோகிணி, கோஷ்டம், பொரித்த வெங்காரம், வகைக்கு துலாம் 4, காயம், தோலா 2, முருங்கப்பட்டை சேர் 3. இவைகளையரைத்து 1½ துட்டிடை உருண்டை செய்து கொடுக்கவும்.



(2) கறிமஞ்சள், ஓமம், பூண்டு, சேராங்கொட்டை (சுத்திசெய்தது) வகைக்கு சேர் ¼, காட்டுச்சீரகம், கடுகுரோகினி, கருஞ்சீரகம், ஸ்ரீபயி வசம்பு, ஆவாரம் விதை, ஊமத்தை விதை, வகைக்கு சேர் ⅛, வெங்காரம் தோலா ½, காயம் விராகனிடை 1, இவைகளைச் சிறுநீரில் அரைத்து மூன்று துட்டிடை உருண்டைசெய்து கொடுக்கக் குணமாகும்.

## 17. கபாலக்குத்தல் நோய்

மூக்கின் வழியாய் ரத்தம் விழும், நாற்றம் வீசும். மண்டையில் முழுத் தேங்காயளவு வீங்கி இருக்கும்.

மருந்து :—

(1) பன்றி நெய்யில் குங்குமப்பூ நசியமிடவும்.

(2) நன்னாரிவேர், விலாமிச்சவேர் இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் வேகவைத்து ஒத்தடம் கொடுக்கவும்.

## 18. கவ்வை நூலை நோய்

குணம் :—

வயிற்றை வளைந்து கடிக்கும், வயிற்றைப் பார்க்கும். வயிற்றைப் பார்த்துக் கொண்டே மிரளும்.

மருந்து :—

எருக்கிலை மொட்டு, பருத்தியிலை இவைகளையிடித்து 1 படி தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

## 19. கண்டனென்ற நூலை நோய்

குணம் :—

வாயில் வெண்நுரை தள்ளும், லத்தி, சத்தம் இவைகள் போடாது, புல் தின்னாது.

மருந்து :—

எருமைத் தொழுவிலுள்ள பண்ணையெடுத்து அரைத்து கருப்புட்டியும் கூட்டி தண்ணீரில் கலந்து கொடுக்கத் தீரும்.

## 20. களிகை நோய்

*மருந்து :—*

(1) முள்ளிப் பழச்சாறு, தயிர், நெய், மாண்டுப்பு, இவைகளை எல்லாம் கூட்டி நசியமிடவும்.

(2) உடலெலும்பைக் காச்சி கன்னத்திலும், தாடையின் இருபுறமும், நாசிக்கு மேலும், பிடரியிலும் சூடுபோடவும்.

## 21. கால் தூலை

*குணம் :—*

வயிறு ஊதியிருக்கும்.

*மருந்து :—*

சாரணைக் கிழங்கையரைத்து அரைப்படி தண்ணீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## 22. காமாலை

*குணம் :—*

உடம்பின் மேலெல்லாம் வெடிக்கும். புடைத்திருக்கும்.

*மருந்து :—*

(1) புற்றும் பழச்சோறு, விழுதியிலை பேய்த்தும்பை இலையும் வேரும், கொளிஞ்சியின் சமூலம், செருப்படியின் சமூலம், குன்றியிலை, கச்சாக்கருவாடு, பற்பாடகம், இவைகளை ஒன்றுகூட்டிக் கவளமிடவும்.

(2) கழுவு நீரில், வறட்டிச்சாம்பல், ஊமத்தை இலைச்சாறு இவைகளைக் கலந்து புண்ணில் போட தீரும்.

## 23. குந்தல் நோய்

*குணம் :—*

கழுத்தை நீட்டி நாட்டி இழுத்தாற்போலிருக்கும் வாய் நீர் வடியும்.

*மருந்து :—*

நாவல் வேர், பூளை வேர், கள்ளிக்கொம்பு வேர், செருமி, சவுக்காரம், நவச்சாரம் இவைகளை வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நெய், இலுப்பெண்ணெய், வகைக்கு



படி ஒன்று சேர்த்து வேர் வகைகளையும், மற்ற சரக்குகளையும் வேகவைத்துக் கவளமிடவும், தீரும்.

## 24. குளம்பு, பின்புறம் இவைகளின் வெடிப்புக்கு

*மருந்து :—*

(1) ஆதளைக் கிழங்கு, கொல்லன் கோவைக் கிழங்கு கோடைக் கிழங்கு, இருநாழி, துத்தம், துரிசு, சேங்கொட்டை, (சுத்தசெய்தது) வெள்ளைப் பாஷாணம், (சுத்திசெய்தது) எருக்கம்பால், கள்ளிப்பால் இவைகளை அரைத்துக் கட்டவும்.

*குறிப்பு :—*

சேங்கொட்டை சுத்தி செய்ய, அதன் மூக்கை வெட்டி சுண்ணாம்பு நீரில் ஊரப்போட்டு அலம்பி எடுத்துக்கொள்க. வெள்ளைப் பாஷாண சுத்திக்கு, அதைப் பாகல் சாற்றில் தொங்கவிட்டு ஒரு ஜாமம் எரிக்கவும்.

(2) கால்புண்ணுக்கு வேளைவேரும், சாதிக்காயும், கல் பிசின், கருவேலமரத்துக் காளான், பொன்மெழுகு, ஊசி இலை இவைகளை யரைத்து நெய்யில் குழைத்துக் கவளமிடவும்.

## 25. குளம்புக்குள்ளே விரணம்

*குணம் :—*

தண்ணீர் ஓடி, துர்க்கந்தம் ஏற்படும். உள்மூளை அழுகிப் போய் மாமிசம் கெட்டுப்போயிருக்கும், சிறு அசைவு கண்டாலும்-இரத்தம் வரும், குதிரை சவாரி செய்யாது, பூமியில் கால் தரிக்காது.

*மருந்து :—*

(1) ரூபார்பு (ரேவல்சினி, வரையாத்துக்கிழங்கு), பாப்பார முள்ளிவிரை, பேய்க்குமட்டி விரை, வகைக்கு தோலா 2, வெள்ளெருக்குவேர், கருவேப்பிலை, வகைக்கு தோலா 3, இஞ்சி, வத்தங்கிப் பட்டை வகைக்கு தோலா 2 நெய் தோலா 8; மேற்படி சாமான்களைப் பொடி செய்து நெய்யில் சேர்த்து ஆறு உருண்டை செய்து 3 நாளைக்குக் கொடுத்துப் பின் எலுமிச்சம் பழச்சாற்றில் மயில் துத்தம் தோலா 8 அரைத்து ஒருவாரம் வரை காயத்துக்குப் போடவும்.

(2) கடுகு, ஓமம், காட்டுசீரகம், வகைக்கு தோலா 2, வாயுவிளங்கம், மிளகு வகைக்கு தோலா 3, மிளகாய், மஞ்சிஷாட்சி, கடுகுரோகிணி, கழற்சிக்காய்ப் பருப்பு, கரிய

போளம், பாங்கிப்பட்டை, புகையிலை, வகைக்கு தோலா ½, திருதுகள்ளிக்கணு 30; இவைகளில் முதலில் கள்ளியை வைக்கோலிற் சுத்தி வதக்கிக்கொண்டு மற்ற சரக்குகளோடு சேர்த்தரைத்து இரண்டு துட்டிடை உருண்டை செய்து இரண்டு வேளை கொடுத்து, புண்ணில் மயில் துத்தம், பொரித்தப் படிக்காரம், வகைக்கு தோலா 8, இவையிரண்டும் பொடிசெய்து குளம்பின் காயத்துக்குள் மருந்தைப்போடவும்.

(3) காட்டாமணக்கின்விரை, பூவரசன்விரை, சேராங்கொட்டை, (சுத்திசெய்தது) கடுகுரோகிணி, மூங்கில்விரை, பேய்க்குமட்டி விரை, வகைக்கு சேர் கால், இஞ்சி சேர் ½, பொரித்தவெங்காரம் தோலா 2, பச்சரிசிமாவு, கோதுமைமாவு வகைக்கு சேர் ½ இவைகளை சிறு பிள்ளைகள் சிறுநீரில் அரைத்து இரண்டு துட்டிடை உருண்டைசெய்து நாற்பது நாளைக்கு இருவேளை கொடுத்துவரவும். பாஷாணம், மயில் துத்தம், கற்பூரம் படிக்காரம், அப்பளாகாரம் வகைக்கு தோலா 1½, கத்தக்காய்ப்பு தோலா 2, வங்காளக் கடுக்காய் தோலா 3, சேரங்கொட்டை 7, துவர் பாக்கு 7, இவைகளைச் சுட்டு சாம்பல் செய்து நிதமொரு தோலா தூளைக் காயத்தில் போட்டு சீலை கட்டினால் சொஸ்தமாகும்.

## 26. கோதா என்ற நூல் நோய்

குணம் :—

வாயிலும், நாசியிலும் தண்ணீர் வடியும். புல் தின்னாது.

மருந்து :—

புற்றுமண், மிளகு, இவைகளை அரைத்து உடம்பில் பூசி ¼ படி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

## .27. குதிரைக்கு சகல நோய்களுக்கும்

மருந்து :—

புற்றுமண், ஊமத்தையிலைச்சாறு, குதிரை மூத்திரம், எருமைச்சாணம் இவைகளையெல்லாம் கூட்டி வேது காய்ச்சி அடிக்கவும்,

## 28 சரசாலை

குணம் :—

புல் தின்னாது, தண்ணீர் குடியாது, கத்தாமல் லத்தி போடாது, நான்கு பாதங்களும் வீங்கும்.



மருந்து :—

விழுதிவேர், வெங்காயம், குப்பைமேனிச் சாற்றில் அரைத்துப் பூசிவிடவும்.

## 29. சயமென்ற நூலை

குணம் :—

வயிறு ஊதும், நிலை மேலே நிற்கும். செவி ஆடாது. தண்டு சுற்றாது.

மருந்து :—

புளியங் கொழுந்து, வேப்பங் கொழுந்து வகைக்கு ஒருபிடி தட்டி வெல்லத்தில் சேர்த்துக் கொடுக்கவும்.

## 30. சேம்பை நோய்

குணம் :—

புல் தின்னாது, தண்ணீர் குடியாது, நாசியில் நீர்வடியும்.

மருந்து :—

(1) தேனை எலுமிச்சம்பழச் சாற்றில் கலந்து நல்லெண்ணெயில் கூட்டி நாசியில் போடவும்.

(2) வெள்ளைப்பூண்டுத் தோல் பலம் கால் குளிமஞ்சள் பலம் கால், ஓமம் பலம் கால், பெருங்காயம் விராகனெடை இவைகளை நேக அரைத்து மிருதுவான கோணியில் தடவி, காய வைத்துத் திரிசெய்து கொளுத்தி அதன் புகையை ஒரு குழாய் வழியாகக் காலை, மாலை இரண்டு இரண்டு தடவை மூக்கிற் கொடுக்கத் தீரும்.

(3) வேகவைத்த மூன்று பெரிய உருளைக்கிழங்கைத் தோல் நீக்கி அரைப்பலம் பெருங்காயத்தை நேக அரைத்து அதனுடன் பிசைந்து மூன்று நாள் மாலையில் உருண்டை செய்து கொடுக்கத் தீரும்.

## 31. சாணி அதிகமாகப் போடுவதற்கு

மருந்து :—

ஊமத்தங்காயைப் பறித்து அதன் விதையைநீக்கி, மடிந்த பழங்கூரைக் கீற்றுச் சருகு எடுத்து, அதை முறித்து, விழும் தூளைத் தென்னியதாயெடுத்து ஊமத்தங்காயில் திணித்து அக்காயைக் கவளமிடவும், நிற்கும்.

## 32. சிங்கலாத்து நோய்

மருந்து :—

(1) கண்ணில் தண்ணீர் ஓடினால் உப்பைவாயில் போட்டு கொப்பளிக்கவும். அப்படி இல்லாவிட்டால் மனிதர் மலத்தை எடுத்துக் கண்ணில் இடவும்.

(2) கண்டங்கத்திரி சமூலமும், ஓமம், வசம்பு, வெள் வெங்காயம், வாயுவிடங்கம் கூட்டியிடித்து உருண்டை பண்ணி உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 33. சுக்குணவி என்ற நோய்

குணம் :—

புல் தின்னாது. தண்ணீர் குடியாது.

மருந்து ;—

சதுரப்பிரண்டைப்பொடி, அகில்கட்டைப்பொடி, சாயாம் பல்வேர், பாலைவேர், படிக்காரம் நாலிலொன்று, மிளகு, சுக்கு, ஓமம், கடுகு, வெள்வெங்காயம் வகைக்கு படி ¼, இவைகளை ஒரு படி நல்லண்ணெயில் கூட்டி வேகவைத்துக் கவளமிடவும். தீரும்.

## 34. சுரநோய்

குணம் :—

அண்டம் வீங்கும். நான்கு கால்களும் வீங்கும்.

மருந்து :—

நாவாலை (?) ஊமத்தையிலை விழுதுடன் அரைத்துச் சங்குச் சுண்ணாம்பு சேர்த்துக் கலந்து அண்டத்திலும் மற்ற வீக்கங்களிலும் பூசவும்.

குறிப்பு ;—

'நாவாலை' என்பது ஒட்டடையைக் குறிக்கலாம்.



## 35. சளி நோய்

குணம் :—

மூக்கில் நீரோடியடிக்கடி உட்கார்ந்துகொண்டு மூச்செறியும். முதுகில் பாரிசமிருக்கும். மூக்கில் சளியுறைந்து கட்டியாய் வெளுத்தோடி வந்து துர்க்கந்தமடிக்கும். சளி கெட்டியாயும், மஞ்சளாயும் ஓடிவரும், நீரதிகக் குழம்பாயும், சிவப்பாயும், துர்க்கந்தமாயும், இருக்கும். குதிரை மிகவு மிளைத்து வரும். தீனிமேல் வெறுப்பு ஏற்படும்.

மருந்து :—

(1) மஞ்சள், கோஷ்டம், கடுகுரோகிணி, மகிஷாட்சி, வகைக்கு தோலா 3, யாளிவிரை தோலா 2, வெங்காரம், படிக்காரம், காயம் வகைக்கு தோலா 1, இவைகளை முருங்கைப் பட்டைச் சாற்றில் மூன்று துட்டிடை உருண்டை செய்து மூன்று நாளைக்கு இரண்டு வேளை கொடுக்கவும்.

(2) கடுகுரோகிணி, திப்பிலி, காட்டுசீரகம், மிளகு, பூவரசங்கொட்டை, திப்பிலி, வகைக்கு தோலா 3, பூண்டு தோலா 6, வேளையிலை பிடி 3, இவையெல்லா மொன்றுயரைத்துத் தேனிற் கலந்து மூன்று துட்டிடை உருண்டைசெய்து இரண்டு வேளை கொடுக்கவும்.

(3) கறிமஞ்சள், வங்காள மஞ்சள், ஓமத்துன் மேலுமி, கோஷ்டம், திப்பிலி மூலம் வகைக்கு தோலா 1, பூண்டு தோலா 8, நொச்சியிலை பிடி 3, இவையெல்லாம் சேர்த்து தேன் விட்டுப் பிசைந்து மூன்று துட்டிடை உருண்டைசெய்து இரு வேளை கொடுக்க சொஸ்தமாகும்.

(4) கறிமஞ்சள், ஓமம், கடுகு, பூவரசங்கொட்டை, பூமிளகு, வசம்பு கழற்சிக்காய்ப் பருப்பு வகைக்கு தோலா 4, வெட்பாலையரிசி, மகிஷாட்சி, பரங்கிச்சக்கை, கோஷ்டம், திப்பிலி மூலம், கடுகுரோகிணி, பொரித்த வெங்காரம், வகைக்கு தோலா 2, காயம் தோலா 1, பூண்டு சேர் ½ கழனி வெளிநண்டு 60, இவையெல்லாம் சேர்த்து அரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து இரண்டு வேளையும் கொடுக்க சொஸ்தமாகும்.

## 36. சினக்கு வாதம்

குணம் :—

தன் உடலை பற்களால் அடிக்கடி கடித்துக்கொள்ளும்.

மருந்து :—

கறிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், மகிஷாட்சி, வாய்விளங்கம், மிளகு, கோஷ்டம், கடுகுரோகிணி, வாலுளுவையரிசி பூவரசங்கொட்டை இவைகள் வகைக்கு தோலா 8. பொரித்த வெங்காரம், பொரித்தபடிக்காரம், வகைக்கு தோலா 2, இந்துப்பு தோலா 6, காயம் தோலா $1\frac{1}{2}$ இவைகளை சங்கேசரிலைச் சாற்றிலரைத்து மூன்று துட்டிடை உருண்டைசெய்து ஏழு நாளைக்கு இரண்டு வேளையும் கொடுக்கவும்.

## 37. சிரங்கு சொறி

குணம் :—

அதிக சூட்டினுல் தேகமெல்லாம் வட்டை வட்டையாய் சிரங்கு ஏற்படும், ரோமமிருக்குமிடமெல்லாம் புண் ஏற்படும். ரோமம் உதிரும், உடம்பை தேய்த்துக்கொள்ளும்.

மருந்து :—

(1) கறிமஞ்சள், பெருஞ்சீரகம், சீரகம், ஓமம், ஏலம், சல்லாதுவிரை, வகைக்கு தோலா 3, வெடியுப்புதோலா 8, குலேபன்புஷ் தோலா 3, இவைகளை தேனிலரைத்து இரண்டு துட்டிடை உருண்டைசெய்து கொடுக்கவும். நந்தியாவட்டை இலை எருக்கிலை, வாழையிலை இவைகளைச் சமனுய்ச் சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கி வேப்பெண்ணெயிற் கலந்து சிரங்குமேல் பூசவும்.

(2) கோவைச்சாறு, உப்பு, இவையிரண்டும் சமனுய்ப் புடம் வைத்து, தேகமெல்லாம் பூசி உலர்ந்தபின் குளிப்பாட்டவும்.

(3) குங்குலியம் துட்டிடை, கத்தக்காம்பு, செந்தூரம், தாளிக்காத சுண்ணும்பு வகைக்கு விராகனிடை 2, நல்லெண்ணெய் படிகால் இவையெல்லாம் ஒன்ருய் சேர்த்தரைத்து காயம், புண்களின் மேலும் சிரங்கு சொறிகளின் மேலும் பூசிவரத் தீரும். கொள்ளு கட்டும்போது வேளைக்கு கால் படி பச்சைப்பயறு வேகித்துக் கூடச்கலந்து கட்டவும்.



## 38. சுரசாலை

குணம் :—

சுரமிருக்கும், உடம்பு சுடும், வாடியிருக்கும், புல் தின்னுது, தண்ணீர் குடியாது, கால்கள் வீங்கும், இலத்தி சத்தமிட்டுப் போடும்.

மருந்து :—

விழுதிவேர், வெங்காயம், குப்பைமேனிச் சாற்றிலரைத்துப் பூசவும்.

## 39. சூதச் சூலை

குணம் :—

வெறிகொள்ளும், மனிதரைக் கடிக்கும்.

மருந்து :—

பருத்திக் கொட்டைப் பருப்பு அரைத்து, ஒரு விளாங்காயளவு முருங்கப்பிசினில் காடி வார்த்து அரைத்து, காடியில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

## 40. செலவாய்

குணம் :—

வாயில் வெண்ணுரை தள்ளும்.

மருந்து :—

சங்கம் வேரும், மொட்டும் சேர்த்து இடித்து, சுக்கு, வெள்வெங்காயம், கருப்புட்டி இவைகளுடன் கொடுக்கத் தீரும்.

## 41. செருமும் வீங்கும்

மருந்து :—

(1) வேலிப்பருத்தியிலை, வெங்காயம், சுக்கு, மிளகு, இவைகளைக் கூட்டி நசியமிடவும். நிற்கும்.

## 42. செருமல் நோய்க்கு

மருந்து :—

(1) திப்பிலி $\frac{1}{2}$ பலம், எசயாந்தகரை 1 பலம், குப்பைமேனி 1 பலம், இவைகளை யிடித்து நல்லெண்ணெயில் கவளமிடவும்.

(2) திப்பிலி, கடுக்காய், நெல்லிப் பருப்பு, வெங்காயம் இவைகளைச் சமன் கூட்டி இடித்துப் பொடியாக்கித் தேனில் கவளமிடவும்.

(3) உகா இலை, சங்கு இலை இவைகளை இடித்து மெய்வழி (சிறு) நீரில் கவளமிடவும்.

## 43. சோகு அண்டசாலை நோய்

மருந்து :—

(1) மல்லிகை, நிலப்பனை, நல்லெண்ணெய், சுக்கு, வெள் வெங்காயம், கருப்புட்டி இவைகளைக் கூட்டிக் கவளமிடவும்.

(2) துத்தம், துரிசு, ஒரு உள்ளிப்பூண்டு, சுக்கு, மிளகு, இந்துப்பு, சாரணைக் கொழுந்து, நொச்சிக் கொழுந்து, தைவேளை, கோழிக்காரம், கொளிஞ்சியிலை, வெள்ளெச்சம், குப்பைமேனியிலை இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் கூட்டிக் கண்ணிவிடத் தீரும்.

## 44. தண்ணீர் குடித்தவுடன் காலைவெட்டி விழும்

குணம் :—

எழுந்து நிற்கும், கடல் ஓசை போலும் விட்டில் பூச்சியின் சத்தம் போலும் வயிற்றில் கேட்கும். வயிறு ஊதியிருக்கும்.

மருந்து :—

பேய்க்கொம்மட்டிக் காயைத் துவைத்து உபநயமாகக் கட்டவும்.

## 45. தவளை நோய்

மருந்து :—

வாகைப்பட்டை, வாகையிலை, முருங்கையிலை, மருக்காரை வேர், வெள் வெங்காயம், சுக்கு, பெருங்காயம், இந்துப்பு, வாயு விடங்கம், திப்பிலி, கருஞ்சீரகம் கடுகு இவைகளைத் துவைத்து, கோழி நெஞ்சை வேகவைத்து எலும்பை நீக்கி, சதையைக் கவளமிடவும்.

## 45. (A) தவன நூலை

குணம் :—

தண்டை ஒடுக்கும். நடக்காது.



மருந்து :—

வெள் வெங்காயமும் ஒருபிடி மிளகும் கூட்டி உழக்கு நல்லெண்ணெயில் கொடுக்கத் தீரும்.

## 46. தாமசத்துக்கு

மருந்து :—

இண்டங்கொழுந்து, சந்தனம், தயிர் இவைகளைக் கூட்டிக் கவளமிடவும்.

தூக்குப் போட்டு நிற்கச் செய்யவும். மறு நாள் நீர்புல் இலையும் தயிரும் விட்டுக் குளிர்ந்த தண்ணீரிலே அலசவும். இதற்கு நில்லாவிட்டால் நீர்ப்பூலா இலை, குளிர்தாமரை, புளியிலை, ஆவாரங்கொழுந்து, ஆத்தியிலை, உசில இலை, துளசியிலை, விளா இலை, தயிர், கருப்புட்டி, பெரும் பூசணிக் காயும், குடலும், சீரகம், இருநாழி, சிறு பயறு இவைகளை ஊறவைத்துக் கலந்து கொண்டு கவளமிடவும்.

## 47. திக்குச்ச சாலை நோய்

மருந்து :—

பன்றியின் பித்து, உகாய்ப்பட்டையும் வேரும், காஞ்சுரன்கொட்டை (எட்டிக் கொட்டை), மஞ்சணறிப் பட்டை, கருவேலம்பட்டை, ஆதளை எண்ணெய், முள்ளெலித்தோல், கடுகுரோகிணி, சுக்கு, வெள் வெங்காயம், சாதிலிங்கம், இவைகளையெல்லாங் கூட்டிக் கவளமிடத் தீரும்.

## 48. திமிர் நோய்

மருந்து :—

தலைச்சுருளி (பெருமருந்து), வள்ளிக்கொடி, கொடிவேலி சமூலம், வேம்பின் ஈர்க்கு, பேய்ப்பீர்க்குக்கொடி, பேய்ச்சுரை, துத்தம், துருசி இவைகளை வேப்பெண்ணெயில் வேகவைத்துக் கவளமிடவும்.

## 49. திவ்வாள்ள (?) தூரியன் நோய்

குணம் :—

இது பிடித்தால் இளைக்கும், சாயும்.

மருந்து :—

குரிஞ்சாவேர், வடக்கில் ஓடியிருப்பதை வெட்டிக் கொணர்ந்து, அரைத்து இளவெந்நீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## 50. தேவி என்கிற நோய்

குணம் :—

மடங்கிக்கிடக்கும். நெஞ்சில் நொந்தாற்போல் நடக்கும். நெஞ்சில் வலியிருக்கும்.

மருந்து :—

இலுப்பைப்புண்ணுக்கு ஒருபாக்களவு, முருங்கையிலை ஒரு பாக்களவு அரைத்து காடியில் கலக்கிக்கொடுக்கத் தீரும்.

## 51. நடுக்குநோய்

குணம் :—

சாயும், உலரும்.

மருந்து :—

புகை உரையும் (ஒட்டடை) வெள்வெங்காயமும் அரைத்துப் புளியைக் கரைத்து அந்தத் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## 52. நதன ஏரை நோய்

குணம் :—

நாலு காலும் மடக்கிக்கிடக்கும். எழுப்பினாலும் எழுந்திராது.

மருந்து :—

விழுதிவேரை அரைத்து, எலுமிச்சங்காயளவு இளவெந்நீரில் கொடுக்கத் தீரும்.

## 53. பண்டித்துதல் பிடித்தால்

குணம் :—

தொண்டை கட்டிக்கொண்டு குறட்டு குறட்டென்று சப்தம் கேட்கும்.



மருந்து :—

(1) குறிஞ்சா இலை, இதன்வேர், வெள்வேலம்பட்டை, சுடுதுருத்தியிலை (சித்திரப்பாலாவி), இவைகளைத் துவைத்து நல்லெண்ணெயில் கூட்டிக் கவளமிடவும்.

(2) சுண்டைக்காய் உவரிட்டத் தண்ணீரை இறுத்துக் கொண்டு, கஸ்தூரிமஞ்சள், துத்தம், துரிசு, கூட்டி நசியமிடவும்.

இதற்கு மாற்று :—

சீரகம், ஏலம், சந்தனம், பசுவின் பாலில் கூட்டி நசியமிடவும்.

## 54. பாரிசவாயு நோய்

குணம் :—

திடீரென்று நாலுகாலு மசையாமலிருந்தாலும் அல்லது ஒரு கால் அசையாமலும், தலையை சாய்த்துக்கொண்டும் இருந்தாலும் பாரிசவாய்வு என்று சொல்வது.

மருந்து :—

மஞ்சள் சேர் $2\frac{1}{2}$, குக்கில் பலம் $1\frac{1}{2}$, சாராயம் திரும் 8. மஞ்சளைப், பொடிசெய்து, குக்கிலைப் பொடித்து, சாராயம் விட்டுப்பிசறி 14 உருண்டைசெய்து ஏழு நாளைக்குக் காலை மாலை கொடுக்கக் குணம் காட்டும். ஆறின வெந்நீரை முதல் நாள், ஒருமூச்சு, இரண்டாம் நாள் இரண்டுமூச்சு, இப்படி மூன்று நாள் காட்டி நான்காம் நாள் வேண்டிய அளவு காட்டவும். கொள்ளை நீக்கிப் புல்லை மாத்திரம் தீனியப் போடவும், முட்டச்சாம்பலை உடல் முழுதும் பூசி, இருவரை விட்டு உடம்பை பிடிக்கச் சொல்லி, முதல் நாள், இரண்டாம் நாள் குதிரையை இரவில் படுக்கவிடாதபடி காத்து, மூன்றும் நாள் காலை மருந்துக்குப் பின் ஒருமைல் தூரம் உலாத்தவைத்துக் கட்டிவைக்கவும். இப்படி மூன்று நாள் செய்தால் வாய்வு பறந்து போகும்.

### (2) பந்தவாய்வினால் மூச்சு விடாமலிருப்பதற்கு

மருந்து :—

மஞ்சள் சேர் 10, நன்றாகப் பொடிசெய்து, நெய் சேர் 10, காயவைத்து கொதிக்கும்பொழுது பொடியைப் போட்டு ஒரு

பானையிலிறக்கிவைத்து இருவேளை விளாங்காய்ப் பிரமாணம் கொடுத்து வரவும். மருந்து கொடுக்கும் வலரயில் கொள்ளை நீக்கவும், வெந்நீர் ஆறவைத்துக் காட்டவும்.

(3) நடுக்கமேற்பட்டு, தோல் முறப்போலக் கெட்டியாகி உணர்ச்சியில்லாமல் செய்யும் வாய்வுக்கு

மருந்து :—

மிளகு, கடுகு, பூண்டு வகைக்கு தோலா 3, பொரித்த துரிசு, காயம், வகைக்கு தோலா கால், இவைகளைச் சாராயத்தில் ஊறவைத்து அரைத்து மூன்று உருண்டைகள் செய்து மூன்று வேளை மேய்க்க குணமாகும்.

## 55. பாதாசத்து நோய் (பாதரசத்து நோய் ?)

மருந்து :—

(1) உவர்மண், உப்பு இவைகளை அரைத்து பூசவும்.

(2) அவுரியிலை, சங்கம்வேர் இவைகளை அரைத்துப் பூசவும்.

## 56. பின்வீர்க்காலன் என்கிற சூலை நோய்

குணம் :—

பின்னங்கால் இரண்டும் இழுத்து நடக்கும். கத்தாமல் லத்தி போடாது.

மருந்து :—

புளியிலைச்சாறு, சுண்ணாம்பு, தெளிந்தநீரில் கலக்கி ஒரு படி கொடுக்கத் தீரும்.

## 57. புழுக்கடி நோய்

குணம் :—

தண்டை முறிக்கும். செருமிக்கொண்டு நிற்கும். சாணிக்கும். கீழ்வயிற்றை முகர்ந்து பார்க்கும். விழும். எழுந்திருக்கும்.



மருந்து :—

கொளிஞ்சியிலைச்சாறு 3 படியும், ¼ படி உப்பும கூட்டிக் கவளமிடத் தீரும்.

## 58. புழுக்கள் செத்து லத்தியுடன் விழுவ

மருந்து :—

(1) ஆறின வெந்நீரை உச்சி நேரத்தில் காட்டவும்.

(2) சிறு வழுதலைக்கொழுந்து, குப்பைமேனி, கையாந்தகரை, திருயிலை இவைகளை இடித்து கைவளிநீரில் (கழுநீரில்) கவளமிடவும்.

## 59. மஞ்சள் நீர் அடிக்கடி வாயில் ஓடும் நோய்

குணம் :—

வாயில் மஞ்சள் நீர் சதா ஓடும், அதிகமாக வியர்க்கும், வியர்வையில் சதா முழுகிக்கிடக்கும்.

மருந்து :—

பேக அல்வந்து, சுக்கு, திப்பிலி, வகைக்கு விராகனிடை 9. பசுவின் பால் சேர் 5. பாலைத்தவிர மற்றவைகளைப் பொடி செய்து பாலிற் கலந்து மூன்று நாளைக்குக் கொடுக்கத் தீரும். இந்த மருந்துக்குப் பத்தியமில்லை.

## 60. மந்தார சூலை நோய்

குணம் :—

மயிர் சிலிர்த்து நிற்கும். வாயில் நீர்வடியும். கண் மூடி நிற்கும். தலையைத் தரையில் குத்தி நிற்கும். புல் மேயாது. தண்ணீர் குடியாது, மயங்கி விழும், எழுந்திராது.

மருந்து :—

(1) புன் முருங்கை வேரை அரைத்து காடியில் கலந்து கொடுக்கவும்.

(2) கீழாநெல்லி, சாரணைக் கிழங்கு வகைக்குப் பிடி 1, குப்பைமேனி, விளாங்காயளவு, செந்தொட்டி, விஷ்ணுகிரந்தி,

மணிப்பிரண்டை வேர், கையாந்தகரையிலை, முருங்கையிலை, பாகல் வேர், வகைக்குப் பிடி 1. தாழை வேர் 3. மணிப் பிரண்டைக் கிழங்கு 3, சீந்தில் தண்டு சமூலம், சுக்கு, அதி மதுரம், கொத்தமல்லி, சதகுப்பை, வெள்வெங்காயம், ஈர வெங்காயம், மிளகு, வசம்பு, ஏலம், இவைகளைக் கூட்டி யிடித்து ஆமணக்கெண்ணெயில் குழப்பி யிடவும்.

(3) அடிவயிற்றில் வெண்ணெயைத் தடவி வைக்கவும்.

(4) இதற்கு ரசம்:— எலுமிச்சம்பழச்சாறு, உள்ளிப் பூண்டு, மிளகு, சுக்கு, பெருங்காயம் இவைகளை அரைத்துத் துணியில் கட்டி நசியமிடத் தீரும்.

(5) இதற்கு அஞ்சனம்:- பெருங்காயம், உப்பு, கோழிக்காரம், சவுக்காரம், மிளகு இவைகளை வெண்ணெ யில் உரைத்துக் கண்ணிலிடவும்.

## 61. மண்ணுசாலை நோய்

மருந்து :—

சாத்திரவேதி கல்நார், சாதிக்காய், தான்றிக்காய், நிலவேம்பு, கடுகுரோகிணி, மஞ்சாடி (குண்டுமணி), சிற்றரத்தை, அதிமதுரம், சவுக்காரம், கருப்புட்டி, சிற்றகத்தி யிலை, ஆடாதொடையிலை, நல்லெண்ணெய், மாங்கொட்டைப் பருப்பு, கடுக்காய், எலுமிச்சம்பழச்சாறு, கஸ்தூரிமஞ்சள் இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து அரைத்துக் கவளமிடவும்.

## 62. மன்னைச்சூலை நோய்

குணம் :—

நாக்கை நீட்டி நிற்கும். தொண்டை வீங்கும். கண் தெரியாமல் முகம் வீங்கும்.

மருந்து :—

மணிப்பிரண்டை வேரை யிடித்துச் சிறிது நேரம் வதக் கித் தொண்டையில் கட்டிவைக்கக் குணமாகும்.



## 63. இளைப்பதற்கும், இரத்த புஷ்டிக்கும் மசாலை

(1) கறிமஞ்சள், ஓமம், சவுக்காரம், பனைவெல்லம், அபினி வகைக்கு விராகனிடை 1, இவைகளை ஒன்றாக அரைத்து உருண்டை செய்து கொடுத்துவரவும்.

(2) மகிஷாட்சி, கறிமஞ்சள் வகைக்கு சேர் ½, குரோ சாணி ஓமம், மிளகாய், ஓமம், காட்டுசீரகம், கடுகுரோகிணி, கோஷ்டம், ஆளிவிதை, வாய்விடங்கம் வகைக்கு சேர் கால், பூண்டு சேர் ½, சவுக்காரம் சேர் கால், பொரித்த வெங்காரம் தோலா 8, இவைகளைப் பசுவின்பால் விட்டு அரைத்து மூன்று துட்டிடை உருண்டை செய்து 21 நாளைக்குக் கொடுக்கவும்.

(3) சுக்கு, திப்பிலி மூலம், காட்டு சீரகம் வகைக்கு தோலா 3, ஓமம், மகிஷாட்சி வகைக்கு தோலா 3, கருஞ்சீரகம் தோலா 6, இவைகளை அரை வறுப்பாக வறுத்துக்கொண்டு தேன்விட்டரைத்து மூன்று நாளைக்கு இருவேளையுங் கொடுக்க, நல்ல தீபனம் ஏற்பட்டு தீனி சரியாகத் தின்று புஷ்டியடையும்.

### (4) வெயில் காலங்களில் உஷ்ண சமனத்திற்குக் கொடுக்கும் மசாலா

கோஷ்டம், மிளகு, வகைக்கு தோலா 6, சுக்கு, இந்துப்பு, வகைக்கு தோலா 4, பூண்டு தோலா 3, தண்ணீர் விட் டரைத்து இரண்டு துட்டிடை உருண்டை செய்து மூன்று நாளைக்குக் கொடுக்கவேண்டும்.

### (5) காமத்தினால் அடிக்கடி களைத்துக்கொண்டு இந்திரியத்தை அடிக்கடி வெளிப்படுத்தி இளைத்துப்போம். அதற்கு மசாலை

வாழைக் கிழங்கு சேர் 1, எலுமிச்சம் விதை சேர் ¾, கத்தக்காம்பு சேர் ½, வெள்ளெருக்கன் பூ சேர் ¼, இவைகளை யரைத்து விளாங்காய் பிரமாணம் உருண்டை செய்து ஏழு நாளைக்குக் கொடுக்க வேண்டும். சிசினத்திற்கும் பீஜத் திற்குமிடையே இருக்கும் நரம்பிற்குச் சூடு போடவேண்டும்.

### (6) குதிரையை தாஜாபடுத்தவும் பலஹீனத்தைப் போக்கவும் மசாலா

விரையில்லாத கத்தரிக்காய், மஞ்சள், வெல்லம், நெய், வகைக்கு பலம் 14, சரக்குகளை யிடித்து நெய்யில் பிசைந்து எலுமிச்சங்காயளவு உருண்டை செய்து காலையில் மாத்திரம் கொடுத்து வரவும். இப்படி இருபது நாள் கொடுக்கவும்.

(7) திருவின தேங்காய்ப்பூ, நல்ல வெல்லம் இவைகளைப் பிசைந்து கொடுக்கவும்.

(8) வேவித்த பயறும் வெல்லமும் கூட்டிக்கொடுக்கவும்.

(9) அவலைப் பசும்பாலில் ஊறவைத்துக் கொடுக்கவும்.

(10) சிறுகீரையவித்துக் கொடுக்கவும். மேலே கூறிய 7, 8, 9-ல் எதையும் ஒரு மண்டலம் வரை கொடுக்கக் கிழட்டுக் குதிரையும் குட்டிக்குதிரையின் வலுவையடையும்.

### (11) குண்டு (ஆண்) குதிரை, மாதவான் (பெண்) குதிரை கண்டாசிக்க மசாலா

மிளகு, கோஷ்டம், மஞ்சள், வகைக்கு தோலா 2, பேரீச்சங்காய், மகிஷாட்சி, வெல்லம், வகைக்கு தோலா 1, காயம் விராகனிடை 1, கோழி முட்டையிற் கலந்து மூன்றுருண்டை செய்து மூன்று வேளை கொடுக்க இச்சையுண்டாகும்.

### (12) மாதவான் (பெண்) குதிரை குண்டைக்கண்டு இச்சிக்க மசாலா

கடுகுரோகிணி தோலா 3, மஞ்சள் தோலா 2, மகிஷாட்சி தோலா 1, காயம் தோலா 1, கத்தரிக்காய் சேர் ½ இவைகளைக் கத்தரிக்காயைத் தவிர மற்றதைப் பொடிசெய்து கத்தரிக்காய்க்குள் வைத்து நெருப்பில் வேவித்து மூன்று நாளைக்குக் கொடுக்கப் பெண் குதிரை மோகித்து ஆண் குதிரை மேல்விழும்.



## 64. மயிர் சிலிர்த்து நிற்கும் நோய்

குணம் :—

புல் தின்னாது நீர் குடியாது.

மருந்து :—

(1) குளக் கருவாட்டை இடித்து இள வெந்நீரில் கலந்து கொடுக்கத் தீரும். கருவாடு கிடைக்காவிட்டால்,

(2) தவிட்டை வறுத்து ஒரு பாக்களவு இலுப்பைப் புண்ணாக்கை அரைத்து நீரில் கலக்கிக் கொடுக்க விடும்.

## 65. மறத்துத் தொங்குவதற்கு

மருந்து :—

**(1)** செவ்வாலங்கொட்டை, எருக்கம்பால், வெட்பாலை அரிசி இவைகளை ஒரு படி எருக்கம்பாலில் அரைத்துப் புண்ணிலிடவும்.

**(2)** வெட்பாலை அரிசியை அரைத்து நெய்யிலே குழைத்துப் புண்ணிலிடவும். மாறும்.

## 66. மாரண்டைபிப்பிருதி (ஸிப்புருதி)

குணம் :—

இளைத்துப்போகும், செருமும், காலெடுத்து நடக்காது.

மருந்து :—

வயல் கொளிஞ்சி, புகையுரை (ஒட்டடை) இவைகளைச் சேர்த்துவைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க, விழும்,

## 67. மார்பிடிப்பு நோய்

குணம் :—

மார்பில் பிடிப்பு ஏற்பட்டு மூச்சுவிட சிரமப்பட்டு அந்த இடத்தைத் தொட்டாலும், அமுக்கினாலும் குதிரை நிலையில் நிற்காது.

மருந்து :—

வெல்லம் துக்காணியிடை 25, மிளகாய் துக்காணியிடை 4, கேழ்வரகுமாவு துக்காணியிடை 8. மிளகாயைத் தூள்செய்து கொண்டு மேற்படித் தூளை இரண்டு வகையிலும் கொஞ்சம் நீர்விட்டுப் பிசைந்து கொடுக்கவும். தீரும். பத்தியமில்லை.

## 68. மூச்சடைப்பு ஏற்பட்டுக் கழுத்து வீங்கும் நோய்

குணம் :—

கழுத்து வீங்கி மூச்சடைப்பட்டு வாயிலொருவித சத்த முண்டாகி அதிக உபத்திரவத்தால் குதிரை கஸ்தியடையுமா கில்குதிரையை மூன்று சாமத்தில் கொல்லும். உடன் பரி காரம் செய்யாவிடில் சொஸ்தமாகாது.

மருந்து :—

அப்பளாக்காரம், சவுக்காரம், மகிஷாட்சி வகைக்கு சேர் ¼, பொரித்த படிக்காரம், பொரித்த வெங்காரம், வகைக்கு தோலா 5, ஆளிவிரை, அபினி, வகைக்கு விராகனிடை ½, பனை வெல்லம் பலம் 6, எருக்கிலை 5, இவைகளைச் சேர்த்து அரைத்து மூன்று துட்டிடை உருண்டை செய்து முதல் நாள் ஒரு உருண் டையை வெந்நீரில் கரைத்து கொடுக்கவேண்டும், குதிரைக்கு ஆயுளிருந்தால் மருந்து உள்ளுக்குப் போய் வேலைசெய்யும்.

## 69. மூலம் ஓடும்பொழுது வெளிப்படும் நோய்

குணம் :—

ஓடிக்கொண்டிருக்கும்பொழுதாவது, லத்திபோடும் பொழுதாவது, காற்று பிரியும் பொழுதாவது மூலம் வெளித் தள்ளப்படும்.

மருந்து :—

பொரித்த வெங்காரம் துட்டிடை ½, கஞ்சா துட்டிடை 2. கஞ்சாவை செத்தை குப்பையில்லாமல் பொருக்கி வறுத்துக் கொண்டு வெண்காரத்துடன் சேர்த்து பொடிசெய்து மூலம் வெளிப்படும்பொழுது அதன் மேல் பொடியைத் தேய்க்க மூலம் உள்ளடங்கிபோகும்.



## 70. பிறைச்சூலை

குணம் :—

செவியும், உடலும், விரைத்துப் பல்லுங் கிட்டி, நாக்கும் உடலும் ஆட்டம்கண்டு தள்ளாடித் தன்னையறியாமல் விழும்.

மருந்து :—

ஆடுதீண்டாப்பாளை சமூலம், எருக்கம்பழுப்பு, கள்ளி, வகைக்கு ஒருபடி, உள்ளிப்பூண்டு 10, வசம்பு 4, கொத்தமல்லி, கடுகு, ஏலம், சீரகம், சதக்குப்பை, கடுகுரோகிணி, வகைக்கு ஒருபிடி, அதிமதுரம் ஒருபிடி, தான்றிக்காய் 5, கடுக்காய் 5, ஓமம் ஒருபிடி, மிளகு ¼ படி, வெடிக்கொம்பு 10, மாவலிங்கப் பட்டையும், கொழுந்தும், உகாய் வேரும் கொழுந்தும், நீர்ப் பூலா இலை, பொன்னாங்கண்ணி, சிறுபூளைச்சமூலம் வகைக்குப் பிடி 1, கருஞ்சீரகம் பிடி 1, ஆமணக்கெண்ணெய் ¼ படி, ஆம ணக்கிலை பிடி 1, இவைகளைக் கூட்டி இடித்துத் தூளாக்கி வைத்துக்கொள்ளவும். ஆமணக்கெண்ணெயில் கலந்து ஒரு விளாங்காயளவு உருட்டிக் கொடுக்கவும். இதற்கு வேது பிடிக்க :—

கள்ளிக்கொம்பு, எருக்கம் பழுப்பு, சங்கம் கொம்பு, திருத்துளாய், (துளசி) வாதாமடக்கி, கருந்தும்பை, கொளிஞ்சி, பெரும்பூளை, நொச்சி, இவைகளை நிறையத் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் குதிரையின் முதுகில் துணியைக் கட்டிப் பொறுக்கப் பொறுக்க இந்நீரை விடவும். பிறகு ¼ படி நெய் ¼ படி எலு மிச்சம்பழ ரசத்தையும் கலந்து வார்க்கவும்.

## 71. பேதுசூலை

குணம் :—

ஈகுமுறியும். எழுந்திருக்கும், சோம்பி நிற்கும்.

மருந்து :—

நொச்சிக் கொழுந்து, வெள்வெங்காயம், சாரணைக் கொழுந்து, மிளகு, வகைக்கு ஒருபிடி. இவைகளை நேக அரைத்துத் தண்ணீரில் கலந்து கொடுக்கவும். தீரும்.

## 72. இரத்தப் பிரமிய சூலை நோய்

குணம் :—

குதிரையின் மூக்கிலிருந்து நீர் இரத்தம்போல் சிவந்து, நிற்காமல் ஓடிவந்து கீழே விழும்.

மருந்து :—

வாழைக்கிழங்கின் சாறு சேர் 1, பசுவின் பால் சேர் ¼, இவையிரண்டும் கலந்து உள்ளுக்குக் கொடுத்து மூக்கிலுங் குத்தி வரவேண்டும். பிறகு முல்லையிலை பிடி 3, கத்தரிக்காய் 2, இவையிரண்டும் சேர்த்து நன்றாகத் துவைத்து மூன்று வேளைக்குக் கொடுக்க சொஸ்தமாகும். இதற்குப் பத்தியமில்லை.

## 73. இரத்தசூலை நோய்

குணம் :—

குதிரைக்கு நீரென்று இரத்தமாகச் சிறுநீர் காணப்படும்.

மருந்து :—

நற்சீரகம், பெருஞ்சீரகம், கொத்தமல்லி, வகைக்கு தோலா 2, நெல்முள்ளி தோலா 6, ரோஜாப்பூ தோலா 2, பொட்டுலுப்பு தோலா 1, இவைகளை நன்றாக நேகப் பொடிசெய்து இதனுடன் தேனை வேண்டிய அளவு கலந்து பிசைந்து மூன்று உருண்டை செய்து இடைவிடாமல் மூன்று நாளைக்குக் கொடுக்க நீர் சுத்தமாகித் தெளிவடையும்.

இதற்கு மூன்று நாள் கொள்ளை நீக்கி வேண்டிய புல்லைப் போடவும். ஆறின வெந்நீரைக் காட்டவும்.

## 74. இரத்தங் கத்தும் போக்கு

மருந்து :—

(1) புன்முருங்கையிலையும், மிளகு, ஏலம் வகைக்கு ¼ படி, செங்கழுநீர், கோஷ்டம், தான்றிக்காய் 3, ஒரு பிடி விலா, மிச்சம் வேர், வசுவாசி கழஞ்சு 1, கிராம்பு 5, நெய் கால்படி, பசுவின்பால் 1 படி, வட்டத்துத்தி (பொருக்கு) இவைகளைப் பசும்பாலில் அரைத்துக் கவளமிடவும்.

(2) நெல்லிப் பருப்பும் சந்தனமும் அரைத்துக் கீழ் வயிற்றில் கட்டவும்.

## 75. இரத்தசுமான் என்ற நோய்

குணம் :—

வாய், செவி, அண்டம் இவைகளினின்று நீர் வடியும். நீர் விடுவது இரத்தம் போலிருக்கும்.



மருந்து :—

முந்திரிகைப் பழம் பலம் 1, ஆடாதொடையிலை 1 பலம், அதிமதுரம் 1 பலம், சீந்தில் தண்டு பலம் 1, கடுகுரோகிணி பலம் 1, ஓமம் பலம் 1, சீனி பலம் 1, இவைகளை நன்றாய் இடித்துத் தேனில் குழைத்துக் கவளமிடவும் தீரும்.

## 76. 'லேப்பு' அல்லது குதிரைக்குத் தடவும் பற்று

(1) மனிதர் மூத்திரம், புற்றுமண், புளியிலை, உப்பு, இவைகளை ஒன்றுகூட்டி ஒருமிடாவில் போட்டுக் காய்ச்சிக் கொண்டு சூடுபெற அடிக்கவும்.

(2) உழமண், பச்சரிசி, உப்பு, வகைக்கு பட்டணம்படி 1, இவைகளைச் சேர்த்து ஒருமிடாவில் 6 படி ஜலம் விட்டு, மேற்படி சரக்குகளைப் போட்டு நன்றாய்க் காய்ச்சி அடிக்கவும்.

(3) கேழ்வரகு மாவு, புற்றுமண், வேகவைத்த கொள்ளுத் தண்ணீர், பட்டைச்சாராயம் வடித்த தண்ணீர், வெள்ளாட்டின் சாணி, வேப்பிலை, புளியிலை, வல்லாரையிலை, செம்பையிலை, உப்பு, கரியபோளம், மைதாலக்கடி இவைகளைப் பெரிய பானையில் போட்டுக் காய்ச்சி அடிக்கவும்.

(4) சிற்றாமணக்குக் கொட்டைப் பருப்பு ஒரு படியை, 5 படி தயிரிற் போட்டுக் காய்ச்சிச் சூடாய் அடிக்கவும்.

மேலே குறிப்பிடப்பட்ட லேப்புகளில் ஏதாவது ஒரு லேப்பு அடித்த மறுநாள் குதிரையை உப்புத் தண்ணீரில் கொண்டுபோய் நன்றாய் நீந்தடித்து வீட்டுக்குக் கொண்டுவந்து கொள் கட்டவும்.

## 77. வளசூலை

குணம் :—

தண்டை ஒடுக்கும், நடவாது.

மருந்து :—

வெள்வெங்காயம், மிளகு, பிடி 1, ¼ படி எள்ளெண்ணெயில் அரைத்துக், குழப்பிக் கொடுக்க நோய் தீரும்.

## 78. வாருணா சூலை

குணம் :—

மூக்கு முனகிக் கொண்டிருக்கும், லத்திபோடாது, போட்டால் சீதம் விழும்.

மருந்து :—

வெள்வேலம் பட்டைச்சாற்றில் கருப்புக்கட்டியைக் கரைத்து உள்ளே கொடுக்கத் தீரும்.

## 79. வாய்க்குட்டத்திற்கு

மருந்து :—

மாட்டிறைச்சி, வரகு சோறு, கடுகு, சீரகம் இவைகளைக் கூட்டிக் கவளமிடவும்.

## 80. விஷக்கடிக்கு

குணம் :—

பல்லுக் கிட்டிக் கிடக்கும், கால் விரைத்துக் கொள்ளும், கீழே விழுந்து எழுந்திருக்கும்,

மருந்து :—

முருங்கையிலை, உப்பு, மிளகு, இவைகளை யிடித்துக் கவளமிடவும்.

## 81. விரைப்பு நோய்

குணம் :—

விரைப்புக் கொண்டால் செவி ஆடாது, விரைத்துக் கொண்டிருக்கும்.

மருந்து :—

கடுக்காய், மிளகு, சுக்கு இவைகளோடு வறுத்த விட்டில் கலந்து விளாங்காயளவு கொடுக்கத் தீரும். குப்பைமேனி யிலையை அரைத்துத் துவளையிடவும்.

## 82. வெடிநூலை

குணம் :—

ஓடி ஒதுங்கித் திரியும், முதுகைத் தரையிலே ஊன்றிக் கொள்ளும்.

மருந்து :—

முட்டை நாக்கிலையும், வெள்வெங்காயமும் அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு உள்ளே கொடுக்கத் தீரும்.

## 83. வேகத்துக்கு (உஷ்ணத்தின் வேகம்)

மருந்து :—

சிவனார்வேம்பு சமூலம், வெள்ளைக் குங்கிலியம், இந்துப்பு, கருஞ்சீரகம், கொத்தமல்லி, பிரண்டையிலை, அவரையிலை, நொச்சியிலை, முசுமுசுக்கை, ¼ படி தேன், ½ படி நல்லெண்ணெய், இவைகளை நன்றாயிடித்து, சேர்த்துக் கவளமிடத் தீரும்.

முற்றிற்று

சுபம்.

---

# கோழிகளின் நோய்களுக்கு மருந்து முறைகள்

## 1. ருசிலி என்னும் வியாதி

வியாதியின் தன்மை :—

வாயின் உட்புறமும் வெளிப்புறமும் சிறு சிறு கொப்புளங்கள் ஏற்படும். வாய் நாறும், மந்தமாய் நிற்கும்.

மருந்து :—

ஷை சிறு கொப்புளங்களை உடைத்துவிட்டு அதன்மேல் வெங்காயச்சாறு எலுமிச்சம்பழச்சாறு வகைக்கு 1 விராகனிடை, 6 கிராம்புடன் சேர்த்து அரைத்துப் பத்துப்போடவும்.

## 2. அக்கி (நெஞ்சின் சதை வற்றுதல்) இதற்குக் கத்தி விழுதல் என்றும் பெயர் உண்டு

மருந்து :—

(1) நல்லெண்ணெய் ஒரு தோலா, ஏலம் 6 மணி, கஸ்தூரி 6 குன்றிமணி எடை, இவற்றை அரைத்துத் தீனியுடன் கலந்து 15 நாள் வரையில் தினம் ஒரு வேளை கொடுக்கவும்.

(2) கருங்கோழியின் ஐந்து முட்டைகளை நெய்யில் பொரித்து அந்த நெய்யைமட்டிலும் எடுத்துக்கொண்டு அதில் ½ தோலா, கற்பூரம் 4 குன்றிமணி எடை, கஸ்தூரி 4 குன்றிமணி எடை, இவைகளை, ஒன்றாகக் கூட்டி ஆகாரத்தில் கலந்து வைக்கவும். இது ஒரு வேளைக்கு. இப்படியே 15 நாளைக்கு தினம் ஒரு வேளை கொடுக்கவும்.

(3) ஆளி விரை எண்ணெய், ஏலம் 4 குன்றிமணி, கஸ்தூரி 4 குன்றிமணி இவற்றைக் கலந்து பதினைந்து நாட்கள கொடுக்கவும்.

(4) கரியபோளம், கிராம்பு 2, மால் கங்கணி 4 குன்றிமணி, நையாந்தரை ரசம் 4 குன்றிமணி, ஜாதிபத்திரி, இவற்றைப் பன்னீரில் நன்றாய் அரைத்து மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர வைத்து தினம் ஒரு மாத்திரையாக 15 நாள் வரையில் கொடுக்கவும்.

(5) நன்கு முற்றிய வாதாம் பருப்புகளை ஒரு பாலாடை அளவு முலைப்பாலை விட்டு நேவாக அரைத்து தினமும் கொடுக்கவும். இப்படியே 30 நாட்கள் வரையில் தினமும் காலையில் கொடுக்கவும்.

(6) சோற்றுக்கற்றாழையிலுள்ள சோற்றை நன்றாகச் சுத்தம் செய்து அதனுடன் வெங்காயத்தைச் சேர்த்து நன்றாக அரைத்து 45 நாள் வரையில் தினமும் காலையில் கொடுத்து வரவும்.

## 3. அம்மை (சிறியது)

பறவை மந்தமாயும், அதிகக் காய்ச்சலுள்ளதாகவும், சரியாகத் தீனியை உட்கொள்ளாமலு மிருக்கும். சிறகுகளில்லாத இடங்களிலும், கண்களின் இரெப்பைப் பக்கங்களிலும் அலகின் மேற்புறத்திலும், கொண்டையின் மேற்புறத்திலும், சிறகுகளின் உட்புறத்திலும் கால்களின் ரெப்பைகளிலும் கொப்புளங்கள் காணப்படும். அந்தக் கொப்புளங்களிலிருந்து மஞ்சள் நிறமான சீழ் வடியும்.

மருந்து :—

(1) மஞ்சள் பொடி கலந்த நீரில் கொப்புளங்களை சுத்தமாகக் கழுவி அவற்றின் மேல் கந்தக பஸ்பம் அல்லது வங்கபஸ்பத்தைத் தடவ குணமாகும்.

(2) ஆமணக்கு எண்ணெய், சீராகாரம், இவையிரண்டையும் சமனாகக் கூட்டி, உள்ளுக்குக் கொடுத்து அதையே வெளிப்புறத்திலும் தடவவும். பிறகு வெந்நீரில் சுடச் சுட ஒத்தடம் கொடுத்து உப்பை அரைத்து நுணுக்கி அவற்றின் மேல் தடவினால் அம்மைகள் உதிர்ந்துவிடும்.

(3) சுத்தஜலத்தை நன்றாகக் கொதிக்கவைத்து அதனுள் நுணுக்கிய உப்பைப்போட்டு, அந்த உப்பு நன்றாகக் கரைந்த பின் அந்த ஜலத்தால் நன்றாக ஒத்தடங் கொடுக்கவும். கொப்புளங்களிலுள்ள முளைகள் தானாகப் பிதுங்கி வெளிவரும்வரையில் ஒத்தடம் கொடுக்கவும். பிறகு நல்ல எண்ணெயைத் தடவவும்.



## 4. அஜீரணம், வாயு உபத்திரவம்

வயிற்றில் இரைச்சல் உண்டாகும். ஆகாரத்தைச் சரியாக உட்கொள்ளாது.

மருந்து :—

(1) சுக்கு, வசம்பு, சோம்பு இவற்றை வகைக்கு அரை தோலா நிறை எடுத்துக்கொண்டு அவற்றை இடித்து, வேக வைத்துப்பிறகு அரைத்து மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி, தினமும் காலையில் ஒரு மாத்திரை வீதம் 3 நாட்கள் கொடுக்கவும்.

(2) வெந்தயம் 3 விராகனிடை, சுக்கு 3 விராகனிடை, குன்றிமணி பருப்பு 6, திப்பிலி 3 விராகனிடை இவற்றை இடித்துப் பொடிசெய்து கீழே சொல்லப் பட்டுள்ள இலைகளின் சாற்றில், ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சாற்றில் அரைத்து, காயவைத்து கடைசியில் மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும்.

(3) திப்பிலி, மிளகு, நிலவேம்பு, திப்பிலி வேர், (கண்டந் திப்பிலி) அக்கரா காரம், வெந்தயம், பொரித்த வெங்காரம், இவற்றை வகைக்கு 1 வீசை எடுத்துக் கொண்டு, இடித்துப் பொடி செய்து நன்றாக வேகவைத்துக் கொண்டைக் கடலை அளவில் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி தினம் ஒரு மாத்திரை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும்.

குறிப்பு :—

முறை 2ல் சொல்லப் பட்ட இலைகளாவன

(1) நிர்குண்டி இலை (Vilex Negunda) (கருநொச்சி)
(2) முருங்கை இலை.
(3) சிவப்பு நாயுருவி இலை. (Red prickly chaff plant).
(4) கருஊமத்தை இலை.
(5) கையாந்தரை இலை.
(6) கத்திரியிலை.
(7) துளசியிலை.
(8) முலைப்பால்.

## 5. அஜீரணத்திற்கு மற்றோர் முறை

(1) பெருங்காயம், வெந்தயம், வாய் விடங்கம், சுக்கு இவற்றைப் பொடி செய்து தண்ணீர் விட்டரைத்துக் கொடுக்கவும்.

(2) ஓர் எலுமிச்சம் பழத்தின் மேல் தோலில் ஓர் துளைசெய்து அதன் வழியாய் உள்ளிருப்பதை எடுத்து விட்டு பழத்தின் மேல் மூடியை மட்டில் வைத்துக்கொண்டு அதனுள் சுத்தம் செய்த மிளகு, சிறு துண்டுகளாக நறுக்கிய சுக்கு இவைகளைப் போட்டு நிரப்பி, அந்த எலுமிச்சம் பழத்தை ஓர் இரும்புக் கம்பி உறியில் வைத்து, கரி நெருப்பின் மேல் நான்கு அங்குல உயரத்தில் உரியிலுள்ள பழம் நன்றாக வேகும் வரையில் தொங்க விடவும். பிறகு பழத்தினுள் போட்டுள்ள சுக்கு மிளகு இவைகளை மட்டிலும் எடுத்து ஒரு புட்டியில் பத்திரப் படுத்தி வைக்கவும். அஜீரணம் உண்டாகும் பொழுது இரு சுக்குத் துண்டங்களையும் இரண்டு மிளகையும் கொடுக்க குணமாகும்.

(3) சதாப்பு என்னும் செடியின் இலைகள், மிளகு, ஜீரகம், மிளகாய், உள்ளிப் பூண்டு இவற்றை நுணுக்கிப் பொடிசெய்து சுண்டக் காய்ப் பருமனுள்ள மாத்திரைகளாகச் செய்து அஜீரணம் உண்டாகும்பொழுது ஒவ்வொரு மாத்திரை வீதம் கொடுக்கவும்.

## 6. அஜும்கோலி (உருண்டை)

*மருந்து ;—*

கொடிக் கள்ளியை வாட்டிச் சாறு எடுத்து, ½ அல்லது ¾ சேர் சாற்றில் கீழே கொடுக்கப் பட்ட சாமான்களை அரைத்து மேய்க்கவும்.

*சாமான்கள் ;—*

கிராம்பு விராகனிடை 1, வெங்காரம் விராகனிடை 2, சீனக்கற்கண்டு விராகனிடை 3, ஏலம் விராகனிடை 1, கருப்புட்டி விராகனிடை 2.



## 7. இரைப்பு

பறவைகளுக்கு வெய்யில் காலங்களில் அதிகமான இரைப்பு ஏற்படும்.

*மருந்து :—*

(1) வெள்ளைக் கத்திரிக் காயின் மேல் தோல், அதன் வேர், இவற்றைத் தண்ணீரில் நன்றாய்க் கசக்கி அத்தண்ணீரை வடிக்கட்டி தினமும் காலையில் ஆகாரத்திற்கு முன் 5 நாட்கள் கொடுக்கவும்.

(2) புள்ளிமான் கொம்பைப் பன்னீரில் உரைத்து அரை விராகனிடை அந்த உரைத்த நீரைக் காலையில் கொடுக்கவும்.

(3) கார்போகரிசி ½ விராகனிடை, கற்பூரம் ½ விராகனிடை, இவையிரண்டையும் அரைத்து மாத்திரைகளாகச் செய்து தினமும் காலையில் ஒரு மாத்திரை கொடுக்கவும்.

## 8. இரைப்புக்கு மற்றொருவித மருந்து

(1) கோழி முட்டையின் வெள்ளைக்கரு நல்லெண்ணெய், மிளகு அளவில் அதிமதுரப் பால், இவற்றைக் கலந்து நீராட்டிய பிறகு கொடுக்கவும்.

(2) கையாந்தரைச் சாறெடுத்து நீராட்டிய பிறகு கொடுக்கவும்.

## 9. எலும்பு, இரக்கை ஒடிந்தால்

*மருந்து :—*

(1) நல்லெண்ணெயைக் காயவைத்து ஒடிந்த பாகங்களின் மேல் தடவி மூங்கில் சிம்புவைத்து, பட்டி கட்டவும்.

(2) மைலாலக்கடி, காசிக்கட்டி, மஞ்சள் வகைக்கு விராகனிடை 2, இவைகளை நீரில் அரைத்து ஒடிந்த இடத்தின்

பேரில்தடவி மூங்கில் சிம்பையும் வைத்துக் கட்டவும். மூன்று நாட்களுக்குப்பின் அவிழ்த்து மறுபடியும் இவ்விதமே கட்டவும். இவ்வாறு மூன்று முறை செய்தால் ஒடிந்த எலும்பு ஒன்று சேர்ந்து குணமாகும்.

பட்டி அவிழ்க்குமுன் வெந்நீரால் மேல் கட்டிய பட்டி முழுவதையும் நன்றாக நனைத்து வெகு ஜாக்கிரதையாக அவிழ்க்கவும். ஒவ்வொரு தரமும் புது மூங்கில் சிம்புகளை வைத்துக் கட்டவும்.

## 10. கண்ணில் பூ விழுந்தால், கண்ணில் படுதா உண்டானால்

'படுதா' என்பது மெல்லிய வெண்மையான ஜவ்வு கண் மேல் படர்ந்திருக்கும்.

மருந்து :—

(1) கற்பூரம் 2 குன்றிமணியெடை, சண்பகமொட்டு 2, இவைகளைப் பன்னீரில் நேக அரைத்து வடிக்கட்டிக் கண்ணி லிடவும். மூன்று முறை மூன்று நாளைக்குச் செய்யவும்.

(2) சிறுக்கற்கண்டைப் பொடித்து மூன்று நாள் கண்ணில் தூவவும்.

(3) குடுகட்டிப் பூண்டுப்பாலை ஒரு துளியிட சுகமாகும்.

## 11. கண்ணில் காயம் ஏற்படுவதற்கு

மருந்து :—

(1) கண் உடைந்து போனால் சிறுதுளி மனிதர் சுண்டு விரலின் ரத்தத்தைக் கண்ணில் விட்டுப் பட்டிகட்டவும்.

(2) கருவேல்முன் முற்றியது இரண்டை சிறு நீரில் அரைத்துக் கண்ணிலிடவும்.

(3) படிக்காரம் 4 குன்றுமணியிடையை எலுமிச்சஞ் சாற்றில் அரைத்துக் கண்ணிலிடவும். மூன்று நாளிடக் குணமாகும்.



## 12. கழிச்சல் நோய் (வெள்ளைக் கழிச்சல்)

குணம் :—

உக்கிரமாகச் சப்தித்துக் கொண்டு மலம் கழிக்கும். மலத்தில் சுண்ணாம்பு போன்ற வெண்மை நிறங்காணும். சோர்வுற்று சிலிர்த்த இறகுகளுடன் இருக்கும். நடக்க சக்தியிராது.

மருந்து :—

(1) எள் 3 விராகனிடையைத் தண்ணீரில் அரைத்து அல்லது மோரில் அரைத்து, வடிகட்டி உள்ளுக்குப் புகட்டவும். 7 நாள் கொடுக்கவும்.

(2) வெண்ணெய். அல்லது தண்ணீரை இறுத்து எடுத்த தயிர்க்கட்டியை மிருதுவான ஆகாரத்துடன் கலந்து 7 நாள் கொடுக்கவும்.

(3) வெங்காயத்தை அரைத்து விளக்கெண்ணெயில் கலந்து தினம் இரு முறை ஒருவாரம் புகட்டவும்.

(4) மோரை வேண்டிய அளவு கொடுத்துக் கொண்டிருக்கக் குணமாகும்.

## 13. கழிச்சல் (அதிகமான கழிச்சல்)

புலதடவை கழியும், சோம்பி நிற்கும்.

மருந்து :—

(1) சோப்பு 5 குன்றிமணியிடை, கரியபோளம் 8 குன்றி மணியிடை, இவைகளை ஒன்றாகக் கூட்டிக் காலையில் புகட்டவும். இவ்விதம் மூன்றுநாள் கொடுக்க சொஸ்தமாகும்.

(2) வெண்ணெய் அல்லது நெய் சிறிய அளவு தனியாகவோ அல்லது ஆகாரத்துடனாவது கலந்து கொடுக்கவும்.

## 14. கழிச்சல். (துர்நாற்றத்துடன் விழும்)

(1) கஸ்தூரி 3 குன்றிமணி, கரியபோளம் 2 குன்றிமணி, ஜாதிலிங்கம் 3 குன்றிமணி, உப்பு 2 குன்றிமணி, கல்கண்டு 16 குன்றிமணி, எலுமிச்சம்பழரசம் 5 சொட்டு, வண்ணாத்திப்பூச்சி 2, இவைகளை ஒன்றாகச் சேர்த்து நன்றாக

அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து உலர்த்தி ஆகாரத்திற்கு முன் ஒரு மாத்திரை தண்ணீருடன் சேர்த்து வார்க்கவும்.

## 15. கருப்பு தோலி ( கருப்பு உருண்டை )

ரூமாமிசிரி விராகனிடை $\frac{1}{4}$; நத்தைசூரி விராகனிடை
சாலாமிசிரி ,, $\frac{1}{4}$; பேதாருபருப்பு ,,
கருவாப்பட்டை ,, $\frac{1}{2}$; சோம்பு ,,

இவைகளை ஒன்றுகூட்டித் தண்ணீர் விட்டரைத்து குன்றி மணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை காலையில் மேய்க்கவும். ஒருவாரம் மேய்க்க மிகுந்த பலன் தரும். கோழிகளுக்குத் தெம்பு ஏற்பட்டு தேஜசுடன் விளங்கும், சேவலுக்கு வீர்யவிருத்தி ஏற்படும்.

## 16. கால் (காலிலுள்ள தோல் உரிய ஆரம்பித்து, புண் ஏற்பட்டால்

(1) பச்சை அருகம்புல் வேர் சின்னது 1, நெல் தானியம் 10, காசிக்கட்டி $\frac{1}{2}$ விராகனிடை, இவைகளை அரைத்து காகிதத்தில் தடவி கால்களின் மேல் சுற்றிப் பட்டிகட்டவும்.

(2) மைலாலக்கடி $\frac{1}{2}$ விராகனிடை, கடுக்காய் 2 விராகனிடை, நெல்லிக்காய் $\frac{1}{2}$ விராகனிடை, வெந்தயம் $\frac{1}{2}$ விராகனிடை, இவைகளை ஒன்றாய்க் கூட்டி நேக அரைத்துக் காலில் பத்துப்போட்டுப் பட்டிகட்டவும்.

இருதரம் இம்மருந்தை உபயோகித்தால் மேல் தோல் உறுதியாய்விடும். இரணமும் ஆறிவிடும்.

## 17. காலில் 'ஆணி' விழுவதற்கு

குணம் :—

காலின் அடியில் அதாவது உள்ளங்காலில் பெரிய கொப்புளங்கள் ஏற்பட்டு பிறகு ஆணியாக மாறிவிடுகிறது. கோழிகளுக்கு இவைகளிருந்தால் சரியாக நடவாது; சேவல், பெட்டைக் கோழிகளின்மேல் ஒழுங்காக உட்காராது.



மருந்து :—

(1) கடுக்காய், தான்றிக்காய், அபின், கற்கண்டு, இவைகளை, சிறு எடை, சமமாக எடுத்துக்கொண்டு சிறு நீரில் அரைத்து உள்ளங்காலில் தடவிப் பட்டிகட்டவும். இவ்விதம் மூன்று நாள் செய்யவும்.

(2) கடுக்காய், தான்றிக்காய், வகைக்கு $\frac{1}{2}$ விராகனிடை, நெல்லிக்காய் $\frac{1}{2}$ விராகனிடை, வெந்தயம் $\frac{1}{2}$ விராகனிடை, கடுகு $\frac{1}{4}$ விராகனிடை, கரும்வேலம்பட்டை $\frac{1}{2}$ விராகனிடை, சுர்மா என்னும் ( Antimony Sulphide ) அஞ்சனக்கல்லின் தூள் $\frac{1}{2}$ விராகனிடை, இவைகளைச் சிறுநீரில் அரைத்துத் தடவிப் பட்டிகட்டவும். மூன்றும் நாள் பட்டியை அவிழ்த்துப் பார்க்கக் குணமில்லாவிடில் மறுபடியும் அவ்விதம் செய்யவும்.

(3) மஞ்சள், வெங்காரம், உப்பு இவைகளைச் சிறுநீரில் அரைத்துத் தடவிப் பட்டிகட்டவும்.

(4) ரசம் விராகனிடை 4, சேராங்கொட்டைப் பருப்பு 4, இவைகளை ஒன்றாக அரைத்து ஒரு சிறிய துத்தநாகத் தகட்டின்மேல் தடவி, ஒரு மண்டலம் வரை தினம் காலில் வைத்துப் பட்டி கட்டிக்கொண்டுவந்தால் முளை வந்துவிடும்.

(5) ஆணியிலுள்ள சீழை நன்றாக அழுத்தி எடுத்துவிட்டு, அவ்விடத்தை நன்றாக மஞ்சள் கரைத்த நீரினால் சுத்தம் செய்யவேண்டும். அதன் பேரில் மஞ்சளை அரைத்து ஆமணக்கெண்ணெயில் குழப்பிப் பத்துப்போட்டுப் பட்டி கட்டவும். இரண்டு நாளுக்கு ஒருமுறை அவிழ்த்து மறுபடியும் கட்டவும் இவ்விதம் மூன்று அல்லது நான்கு முறை செய்ய உள் ஆணி எடுபட்டுவிடும்.

(6) மருதாணியிலை இந்துப்பு, கோழி முட்டையின் மஞ்சள் கருவு, இவைகளை ஒன்றாகக்கூட்டி அரைத்து உள்ளங்காலில் தடவி, பட்டி கட்டவும். கொப்புளத்தைக் கீறிச் சீழைச் சுத்தம் செய்த பிறகுதான் மருந்திட வேண்டும்.

## 18. குருபகோலி (குருப உருண்டை) சகல ரோகத்திற்கும் மருந்து

செய்யும் விதம் :—

சோம்பு, சித்தரத்தை, அதிமதுரம், ரவல்சீனி, அருசிப்பூ, வாலுளுவை, போஸ்த்துக்காய், ஜடாமாஞ்சி, சன்னலவங்கம், அக்ரோட்விதை, கோஷ்டம், கற்கண்டு, சாலாமிசிரி, கல்பாசி, வெண்ணைத் தாமரைப்பூ, கார்போக அரிசி, அக்கராகாரம், வால்மிளகு, கருவாப்பட்டை, தாளிசபத்திரி, பாதாம்பருப்பு, ஜாதிபத்திரி, வகைக்கு 2 விராகனிடை, இவைகளை ஒன்று கூட்டி தண்ணீர் விட்டரைத்துப் பெரிய மணித்தக்காளி போல் உருண்டைசெய்து உடனே உலரவைத்துக் கொள்ளவும். தாமதமானால் புளிப்பு வாசனை மாத்திரையில் ஏற்படும். வேண்டும்பொழுது ஒருமாத்திரை கொடுக்கவும்.

## 19. குநஜ (இரக்கை விழுந்து முளைக்கும் காலம்)

காலா காலத்தில் இறகுகள் சரியானபடி விழுந்து முளைக்க வேண்டும். அதற்கு மருந்து :—

(1) இரண்டு கோழிமுட்டையை நீரில் நன்றாக வேகவைத்து மஞ்சள்கருவை மட்டிலும் தீனியுடன் கலந்து கொடுக்கவும்.

(2) சூடான நெய்யுடன் தீனியைக் கொடுக்கவும்.

(3) ஆமணக்குச் செடிவேர் 1 விராகனிடை, கருஊமத்தைவேர் 1 விராகனிடை, வெந்தயம் 1 விராகனிடை, கருந்துளசி 1 விராகனிடை, சுக்கு 2 விராகனிடை, இவைகளை நேக அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலந்து கொண்டைக் கடலைப் பிரமாணம் மாத்திரைசெய்து உலர்த்தி வைத்துக் கொடுக்கவும்.

## 20. குநஜ (அகாலமாக இறகுகள் விழுந்தால்)

மருந்து :—

(1) திப்பிலியை வேகவைத்து அரைத்து இறகுகள் விழுந்த இடங்களில் பூச குணமாகும்.



(2) சுக்கு அவ்விதம் செய்து தடவவும்.

(3) வெள் வெங்காயத்தை (உள்ளிப் பூண்டு) நெய்யில் பொரித்து அந்த நெய்யை 5 நாளுக்குத் தீனியுடன் கொடுக்க குணமாகும்.

(4) மிஞ்சிய உள்ளிப் பூண்டை அரைத்து மேலுக்குத் தடவவும்.

(5) பசுவின் நெய்யை இருதரம் உருக்கி அதனுடன் சீமை ஜீரகம் தோலா 1, போட்டு உருக்கவேண்டும். பிறகு நெய்யை வடிகட்டி ஒரு புட்டிக்குள் காற்றுப் புகாதபடி பத்திரப் படுத்திக் கொண்டு, 15 நாளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக காலையில் தீனியுடன் கொடுக்க இறகுகள் ஒழுங்காக முளைக்கும்.

(6) பக்ஷியைக் குளிப்பாட்டி காலையில் வேப்பங்கொட்டையின் பருப்பு இரண்டை ஏழு நாளுக்குக் கொடுக்கப் புதிய இறகுகள் முளைக்கும்.

## 21. கொக்கு நோய் (கொள்ளை நோய்)

மருந்து :—

மேற்புறணி எடுத்த முருங்கைப் பட்டை பலம் 1, மிளகு பலம் $\frac{1}{8}$, மிளகாய் விதை பலம் $\frac{1}{8}$, பூண்டு பலம் $\frac{1}{8}$, பெருங் காயம் பலம் $\frac{1}{8}$, உருண்டை கர்ப்பூரம் பலம் $\frac{1}{8}$, இவைகளை நேகப் பசும்பால் விட்டரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

வேளைக்கு 1 மாத்திரை வீதம் நாள் ஒன்றுக்கு இருதரம் கொடுக்கவும். இவ்விதம் மூன்று நாள் கொடுக்க வியாதி சொஸ்தமாகும். வேண்டிய அளவு போரைக் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

## 22. கொப்புளங்கள் (உடலில் ஏற்படும்)

குணம் :—

கால்களில் பருப்போன்ற கொப்புளங்கள் உண்டாகும்.

மருந்து :—

வெடியுப்பை நீரில் கலந்து கடுதாசியின் பேரில் பூசவும். அதன்பின் கடுதாசியை எரித்து அதன் சாம்பலைச் சுத்தம் செய்த கொப்புளங்களின் மேல் பூசவும்.

(2) பனைவெல்லம், சுண்ணாம்பு, வெடியுப்பு, இவைகளை இஞ்சிரசத்தில் அரைத்து, சிறிய கடுதாசியின் மேல் பூசி அதை கொப்புளங்களின் பேரில் சுற்றிப் பட்டி கட்டவும். இரண்டு நாட்களுக்குப்பின் அவிழ்த்து, கொப்புளங்களை நன்ருக மஞ்சள் கலந்த நீரில் சுத்தம் செய்து, கொப்புளங்கள் ஆராமலிருந்தால் மறுபடியும் முன் சொன்னபடி செய்து பட்டி கட்டவும்.

## 23. சகலவித வியாதிகளுக்கும் வெள்ளை உருண்டை.

பெருங்காயம் பலம் 1, பொரித்த எண்ணெய் வெங்காரம் பலம் 1, படிக்காரம் 2 பலம், குக்கிலுப்பு பலம் 1, இஞ்சி சேர் 1 தேன் சேர் ½, இவைகளை ஏக அரைத்து கொண்டைக்கடலை பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைக்கவும். ஒருமாத்திரை காலையில் கொடுக்க சகல வியாதியையும் கண்டிக்கும்.

## 24. சளி (மார்ச்சளி, வாய்ச்சளி, தும்மல்)

(1) படிக்காரம் 4 குன்றிமணி, வேப்பெண்ணெய் 10 குன்றிமணி, இவைகளை நன்ருகக்கலந்து மூக்கில் நசியமிடவும்.

(2) பெருங்காயத்தைத் துணியில் முடித்து, நீரில் ஊற வைத்துச் சில துளிகளை மூக்கில் பிழியவும். ½ தோலா ஊறின நீரைக் கழுத்து, தலை, முதலிய இடங்களில் தடவவும்.

(3) கொன்றையிலையை வேப்பெண்ணெயில் பிழிந்து இரண்டையும் ஒன்றுபடக் கலந்து மூக்கில் விடவும். ஆகாரத்துடன் சிறிது வெண்ணெயைக் கொடுக்கவும்.

(4) அந்தி மந்தாரைப்பூவைக் கொண்டுவந்து அதன் சாற்றைப் பக்ஷியின் மூக்கில் பிழியவும்.

(5) மிளகு, சுக்கு, இவைகளை முள்ளங்கிச் சாற்றில் அரைத்து நன்ருக வடிக்கட்டி மூக்கிலிடவும்.

(6) நவச்சாரம் 1 விராகனிடை, இதை 4 விராகனிடை நெய்யில் அரைத்து நசியமிடவும்.



(7) இரு மூக்கிலும் ஒவ்வொரு துளி நல்லண்ணெயை விடவும்.

(8) தும்பை இலைச் சாற்றில் ஒரு துளி மூக்கில் நசியமிடவும்.

(9) அக்கராகாரம், துளசி, தூதுவளை இவைகளைச் சிறிது எடுத்து அரைத்து மனத்தக்காளி பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொண்டு பேய்க்கத் தீரும்.

மேடி மருந்துகள் நன்ருக மூக்கில் ஊடுருவி உள்ளே செல்வதற்கு, சிறிய குழாயைக் கொண்டு நசியமிட்டதும் ஊதவும்.

## 25. சேவல் கோழிமேல் உட்காருவதற்கு

மருந்து:—

ஆண் சிட்டுக்குருவி 1, அக்கரகாரம் விராகனிடை ¼, பச்சைக்கற்பூரம் விராகனிடை ¼, சீனக்கல்கண்டு விராகனிடை ¼, வால்மிளகு விராகனிடை ¼, ஏலம் விராகனிடை ¼, இவைகளை வெற்றிலைச் சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி ஏழுநாள் மேய்த்தால் சேவலுக்கு வீரிய விருத்தி ஏற்படும்.

## 26. தலைநோய்

தலையின் பாகம் பெருக்கும், கொடுத்த ஆகாரத்தை வாந்தியெடுக்கும், துர் நாற்றம் மிகுந்திருக்கும்.

மருந்து:—

ஆமணக்கு வேர் 1 விராகனிடை, கருஊமத்தைவேர் 1 விராகனிடை, துளசியிலை 1 விராகனிடை, சுக்கு 1 விராகனிடை, இவற்றை ஒன்ருகக்கூட்டி ஆட்டுப்பாலை விட்டரைத்து கொண்டைக்கடலையளவில் மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி தினமும் காலையில் ஒரு மாத்திரை விதம் 7 நாட்கள் வரையில் கொடுக்கவும்.

## 27. தயார் கோலி (உருண்டை)

மருந்து :—

அதிமதுரம் 1 விராகனிடை, அக்கராகாரம் 1 விராகனிடை, சித்தரத்தை 1 விராகனிடை, சோம்பு 1 விராகனிடை, வால்மிளகு, கிராம்பு, ஜாதிபத்திரி, மல்லி, அஜாசிப்பு 1 விராகனிடை, நத்தைச்சூரி 1 விராகனிடை, சாரப்பருப்பு, அக்ரோட், இஸ்போல்விரை, சுக்கு 1 விராகனிடை, கோஷ்டம் 1 விராகனிடை, ஜீரகம் 1 விராகனிடை, லவங்கப்பட்டை 1 விராகனிடை, ஏலம், ஜாதிக்காய், கசகசா, ஜடாமாஞ்சி 1 விராகனிடை, கார்போகரிசி 1 விராகனிடை, பிஸ்தா பருப்பு சாலாமிசிரி, ரூம்மஸ்தகி, கல்பாசி இவற்றை ஒன்றாகக் கூட்டி, தண்ணீர் விட்டு, சந்தனம்போல் அரைத்து பெரிய மணத்தக்காளி காயின் அளவில் மாத்திரைகளாக உருட்டி, உடனே உலர வைத்துக்கொள்ளவும். மாத்திரையில் புளிப்பு வாசனை வரக்கூடாது. ஆதலால் உடனே உலர வைக்க வேண்டும். தினமும் காலையில் 1 மாத்திரை விதம் 45 நாள் கொடுக்கவும்.

## 28. தீபனம்

மருந்து :—

(1) கஸ்தூரி 5 குன்றிமணி, கரியபோளம் 10 குன்றிமணி, கிராம்பு 15, சாதாலிங்கம் 4 குன்றிமணி, சுக்கு 10 குன்றிமணி எடை, கருஞ் செங்கொட்டையில் பாதி, இவற்றை இடித்து, நன்றாக வேகவைத்து சிறு மாத்திரைகளாகச் செய்து நாள் ஒன்றுக்கு ஒரு மாத்திரை விதம் 2 நாள் கொடுக்கப் பசி ஏற்படும்.

(2) பனை வெல்லம் 2 விராகனிடை, கற்கண்டு 1 விராகனிடை, உப்பு 1½ விராகனிடை, திப்பிலி 1 விராகனிடை, இவற்றை ஒன்றின்பின் ஒன்றாய் மைவாக அரைத்து இரவில் உலர்த்தி தீனிக்குமுன் காலையில் 4 நாள் கொடுக்கவும்.

(3) நெல்லிக்காய் கந்தகம் 2 விராகனிடை, கற்கண்டு 6 விராகனிடை, கஸ்தூரி 4 குன்றிமணி இவைகளை வெற்றிலைச் சாற்றில் அரைத்து. சிறு மாத்திரைகளாகச் செய்து 3 நாட்கள் காலையில் கொடுக்கவும்.



## 29. தொண்டைப்புண் (துகளி என்ற நோய்)

வாயின் உட்புறத்திலும், நாக்கிலும், தொண்டையிலும் சிறு கொப்புளங்கள் காணப்படும்.

மருந்து :—

கொப்புளங்களைக் கை விரல்களினாலே அல்லது சிறகுகளின் நுனியினாலோ ரத்தம்வரும் வரையில் நன்றாகச் சுரண்டிய பிறகு ஸாமரி உப்பு, மிளகு, ஏல அரிசி, கற்பூரம் இவற்றைத் தனித்தனியே பொடியாக்கி ஒன்றன்பின் ஒன்றாய்ப் புண்ணுள்ள இடங்களில் தடவ வேண்டும். ஒரே முறையில் குணமாகாவிடில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரையில் தினமும் தவறாமல் தடவி வரவும்.

தொண்டைக்குள் மருந்தைத் தடவவேண்டுமானால் கை விரல்களை சுத்தம் செய்து கொண்டு விரலின் நுனியில் மருந்தை பூசிக்கொண்டு தொண்டையில் விரலை நுழைத்து எல்லா புறமும் தடவ வேண்டும். அல்லது கோழியின் இறகு ஒன்றை மருந்தில் நனைத்துக்கொண்டு தொண்டையில் எல்லா இடங்களிலும் தடவவேண்டும்.

## 30. தொண்டைப்புண் (மற்றொருவிதம்)

தொண்டையில் புண் ஏற்படுவதால் இரையை உரக்கக்கூடாது. கழுத்தும் தலையும் வீங்கும். வாயில் கபம் நிறைந்திருக்கும்.

மருந்து :—

(1) வாயினுள் உள்ள கபத்தை ஓர் மரப் பட்டையால் அகற்ற வேண்டும். பின்னர் சாராயத்தின் சில துளிகள் வாயில்விடப் புண் ஆறும்.

(2) வாயுவிடங்கம் 1 குன்றிமணி எடை, மிளகு இரண்டு (எண்ணிக்கையில்) இவற்றை சாராயத்தில் அரைத்து தொண்டையிலும் வாயிலும் தடவவேண்டும்.

(3) எருமைக் கிடாரியின் சாணத்தை நன்கு உலர்த்தி அதனுடன் மிளகைச் சேர்த்து நன்றாகப் பொடிசெய்து வடிக்கட்டி வாயினுள் சில சிமிட்டுகளைப் போடவும். அப்பொடியை இரணமுள்ள பாகத்தில் தடவி, காலம் தாழ்த்தி வழக்கம் போல் ஆகாரம் கொடுக்கவும்.

(4) கொடி திராக்ஷை 5 குன்றிமணி, கரியபோளம் 1 குன்றிமணி, இவற்றை நன்றாகப் பிசைந்து அரைத்து, கபத்தை மேலே சொல்லிய படி அகற்றிய பின் வாயினுட் புறமும் தொண்டையிலும் தடவவும். 5 நாழிகைக்குப் பிறகு ஆகாரம் கொடுக்கவும்.

(5) ஒரு வெங்காயத்தின் கால்பாகம், மிளகு 4, எருமைக் கிடாரியின் உலர்ந்த சாணத்தில் சிறிது, இவற்றை அரைத்து வாயினுட் புறமும் தொண்டையிலும் தடவவும். 5 நாழிகைகளுக்குப் பிறகு ஆகாரம் கொடுக்கவும்.

## 31. நடுக்கல் வியாதி

உடல் நடுங்கும். உட்காருவதற்குக் கூடச் சக்தியிராது. ஆகாரம் சரியாக உட்கொள்ளாது. தலையைத் திருப்பித் திருப்பி நடக்கும்.

மருந்து :—

கிராம்பு 10, குங்குமப்பூ ½ விராகனிடை, கிராசகஸா விதை 10, இவற்றை இஞ்சி சாற்றில் சந்தனம் போல் நேர அரைத்து கொண்டைக்கடலை யளவில் மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி வேளைக்கு ஒரு மாத்திரையாக எட்டு நாள் இரு வேளை கொடுக்கக் குணமாகும்.

## 32. புண் (இரணம்)

(1) காசிக் கட்டி விராகனிடை 1, வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை 1, சுடப் பட்டதுருசு 1 விராகனிடை முர்தார்சிங் ½ விராகனிடை தேங்காய் எண்ணெய் ¼ சேர் இவற்றை நைவாக அரைத்து வைத்துக்கொண்டு புண்ணில் தடவவும்.



(2) காசிக் கட்டி விராகனிடை 3, வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை 3, சுட்டதுருசு விராகனிடை 2 முர்தார்சிங் விராகனிடை 1½ பூரம் விராகனெடை ½ இவற்றை வெண்ணெயை விட்டு அரைத்து புண்ணின் மீது தடவ மூன்றும்நாள் காய்ந்து விடும்.

## 33. மற்றொரு முறை

(1) புண்ணின் மீது, ஸுர்மா (Sulphide of Antimony) எனும் அஞ்சனமருந்தைப் போட்டு காற்று படாதவாறு இறுக கட்டு கட்டவும்.

(2) கறுகிய சிறகுகளின் சாம்பலை இரணத்தின் மீது தூவி விடவும்.

(3) இரண வாயில் அபிரேக் (Mica) தூளை தூவவும். அல்லது வேப்பிலையை நன்றாய் அரைத்துத் தடவவும்.

(4) காட்டாமணக்கின் சாறு எடுத்து அதனை இரண வாயில் தடவவும் இரணம் ஆறி விடும்.

## 34. புஷ்டிக்கு

மருந்து :—

(1) கோதுமை ரவை, நல்ல நெய், குங்குமப்பூ, பச்சக் கற்பூரம், பாதாம்பருப்பு 4, நெய்யில் இவைகளை நன்றாக அரைத்து தினமும் காலை நேரங்களில் ஒரு மண்டலம் வரையில் கொடுக்கவும்.

(2) வெந்தயம் ½ விராகனிடை, சீமை சீரகம் ½ விராகனிடை, திப்பிலி 2 விராகனிடை, இவற்றை ஒன்றாகக் கூட்டி கருநொச்சி இலை, முருங்கையிலை, துளசி இலை, நாயுருவியிலை கரு ஊமத்தை இலை, இவைகளில் ஏதேனும் ஒன்றின் சாற்றில் அரைத்து கடைசியில் மூலைப்பாலுடன் சேர்த்து ஓர் கொண்டைக்கடலை அளவு மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி தினம் ஒன்றாக ஒருமண்டலத்திற்குக் குறையாமல் கொடுக்கவும்.

(3) சுக்கு 1½ விராகனிடை, சீமை ஜீரகம் 1 விராகனிடை, கிராம்பு 25, திப்பிலி ½ விராகனிடை கரியபோளம் 1 உளுந்து எடை, கஸ்தூரி 4 குன்றிமணி எடை, பட்டுப்பூச்சி 4 இவற்றை தண்ணீர் விட்டரைத்து நிழலில் உலர்த்திப் பிறகு ஊமத்தை கருநொச்சி, முருங்கை, தவா எனும் சிறு திராக்ஷை, முதலிய தாவரங்களில் ஏதேனும் ஒன்றின் இலைச் சாற்றிலும், முலைப் பால் அல்லது ஆட்டுப்பால், அல்லது சாராயம் விட்டு நன்றாக அரைத்து உளுந்துப் பிரமாணத்தில் மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி தினமும் காலையில் ஒரு மாத்திரை வீதம் ஆகாரத்திற்கு முன் ஒரு மண்டலம் வரையில் கொடுக்கவும்.

## 35. பூச்சி (வயிற்றுப்பூச்சி)

மலத்துடன் கீரிப்பூச்சிகள், அல்லது தட்டைப் பூச்சிகள் விழும். மந்தமாக இருக்கும். ஆகாரம் சரியாக உட்கொள்ளாது.

மருந்து :—

(1) காசிக்கட்டியைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவும்.

(2) புகையிலைக் காம்பைத் தண்ணீரில் ஊரவைத்து அத்தண்ணீரை ஆகாரத்துடன் சேர்த்துக் கொடுக்க பூச்சிகள் இறந்து விழும்.

(3) ஊற வைத்த கொட்டைப் பாக்கு 30 குன்றிமணி எடையை, நைவாக அரைத்து ஒரு தோலா ஆமணக்கு எண்ணெயுடன் கலந்து ஊட்டவும். பூச்சிகள் வெளியாகும்.

## 36. பூச்சி, பேன், சள்ளு

மருந்து :—

வசம்பு, கற்பூரம், மஞ்சள் இவற்றைத் தூள் செய்து தண்ணீர் விட்டரைத்து உடம்பின்மீது பூச, பேன், சள்ளு முதலியன உதிர்ந்துவிடும்.



## 37. பெருக்க (உடல்)

மருந்து :—

(1) கொதிக்கும் நிலையிலுள்ள பாலில் இறைச்சியை ஊறவைத்து தினமும் காலையில் 7 நாட்கள் வரையில் கொடுக்கவும்.

(2) துளசியிலைச்சாறு ½ தோலா, ஆட்டுப்பால் ½ தோலா இவற்றை ஒன்றாகக் கலந்து அந்த கலப்புப் பாலில் மாமிசத்தை ஊற வைத்து 7 நாட்கள் வரையில் தினமும் காலையில் அந்த ஊறவைத்த மாமிசத்தைக் கொடுக்கவும்.

(3) கஸ்தூரி ஒரு குன்றிமணி எடை, கற்பூரம் 2 குன்றிமணி எடை இவையிரண்டையும் முலைப்பாலில், 1 தோலா விட்டு அரைத்து 7 நாட்கள் வரையில் தினமும் காலையில் ஊட்டவும்.

(4) நாயுருவியிலைச் சாறெடுத்து, துணியில் வடிக்கட்டி அந்த வடிகட்டிய சாற்றின் 6 துளிகளை 3 நாள் வரையில் கொடுக்கவும். இரண்டு அல்லது மூன்று நாழிகைக்குப் பின்னர் வழக்கம்போல் ஆகாரம் கொடுக்கவும்.

## 38. பருக்க (உடல்) மற்றொருமுறை

கஸ்தூரி 1 குன்றிமணி எடை, குங்குமப்பூ ஒரு குன்றிமணி எடை, கிராம்பு 1, ஏலக்காய் மணி 5, ஜாதிக்காய் 1 குன்றிமணி எடை. கோரைக்கிழங்கு 1 குன்றிமணி எடை இவற்றைப் பொடிசெய்து தண்ணீருடன் கலக்கவும். பின்னர் மாட்டுச் சாணத்தாலான வரளிகளில் தீயை உண்டாக்கி அந்த நெருப்பின்மீது ஓர் புதிய வாணலை வைக்கவும். அந்த வாணலை சூடானதும் மேலே சொல்லிய கலவையை அதில் போடவும். மருந்துக் கலவையை நன்றாக சுண்டவைத்துப் பிறகு அதனைக் கீழே இறக்கி ஆறினதும் ஆகாரத்துடன் சேர்த்துக் கொடுக்கவும். 7 நாட்கள்வரையில் கொடுக்கவும். மருந்தின் அளவு பறவைகளின் வயதையும் பருமனையும் பொறுத்தது.

## 39. வாய் (வாந்தி)

ஜீரணிக்காமல் உட்கொண்டதை வெளியே கக்கும். வாயினின்று நீர் ஊறிக்கொண்டே ஒழுகும்.

மருந்து :—

(1) ஊமத்தை இலைச் சாறெடுத்து அச்சாற்றில் 2 அல்லது மூன்று துளிகளைக் கொடுத்தால் வாந்தி எடுப்பது தடைபடும். மறுநாள் வழக்கம்போல் ஆகாரம் கொடுக்கவும்.

(2) வாலுளுவை அரிசி 5 குன்றிமணி, செந்தூரம் 1 குன்றிமணி, கரியபோளம் 1 குன்றிமணி இவற்றை எலுமிச்சை சாற்றில் அரைத்து சிறு மாத்திரைகளாகச் செய்து தினமும் காலையில் 3 நாட்கள் வரை கொடுக்கவும்.

(3) சுக்கு 4 குன்றிமணி. கற்கண்டு 4 குன்றிமணி, நவச்சாரம் 1 குன்றிமணி, கரியபோளம் ½ குன்றிமணி திப்பிலி ¼ இவற்றைத் தண்ணீர் விட்டரைத்து மாத்திரைகளாக்கி, தினமும் காலையில் ஒரு மாத்திரை விதம் கொடுக்கவும்.

---

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 1 | ஏற்பட்டு | ஏற்பட்ட |
| 29 | 21 | அப்போதய | அப்போதைய |
| 31 | 19 | உடபவானி | வடபவானி |
| 74 | 8 | தாக்குமல்லி | டிக்குமல்லி |
| 79 | 1 | முட்டிகன் | முட்டிகள் |
| 90 | 13 | நீள்......விள | நீர்விஷக் கிழங்கு |
| ,, | 14 | கோரோசனை | குரோசாணி ஓமம் |
| 107 | 14 | பாகலிகீளா | பாதலிகீளா |
| ,, | 26 | போறியா | மோறியா |
| ,, | 32 | குல்லதூரா | குல்ஹூர் |
| 111 | 4 | தண்டை | தொண்டை |
| 117 | 12 | வென்னிப்பிடி | மென்னிப்பிடி |
| 123 | 29 | சாளிக்கும் | சாணிக்கும் |

கோழிவகை. பக்கம் 3 வரி 19 வீசை விராகனிடை

101492

# Preface

101492

Among the many valuable manuscripts in the Saraswathi Mahal Library, Tanjore, dealing with various subjects are those relating to Veterinary Science. We have manuscripts on horses, elephants, cattle, birds and fowls, each a mine of information of practical value. The work published here is based on two Tamil manuscripts, one about cattle and the other about horses, supplemented by information culled from various other manuscripts on the same subject in Sanskrit and Marathi languages.

Breeding of cattle and horses, their characteristics and quality as indicated by bodily marks and treatment for their diseases are among the subjects dealt with in this work.

This work also contains recipes for the treatment of fowls.

Sri A. Krishnaswami Mahadik, the able Editor of this work, has been doing research in this section of the Library for a long time. His industry and keen interest in the subject have assembled together valuable pieces of information from various sources both from the Library and outside. Our thanks are due to him for the valuable work he has produced. We have no doubt that this book will be found very useful.

Tanjore,
24th Sep. 1950.

**S. GOPALAN.**
*Honorary Secretary,*
*Saraswathi Mahal Committee.*